
# முகை வெடித்த மொட்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/0220

# முகை வெடித்த மொட்டு

ஆசிரியர் :

நவாலியூர் நா. செல்லத்துரை பி. ஏ.

## இறை வணக்கம்

அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்.

## வாணி வணக்கம்

கல்விக்குத் தெய்வத்தாயே — நுண்ணிய
கலைக்கெலாம் கதியுமான
நல்வினை வாணிதாயே — மன்னுயிர்
நினைவிலே உறைவாய் நீயே.

வெண்ணிலா வெளியீடு

"தென்றலகம்"
56/1, கந்தர்மடம் மேற்கு,
யாழ்ப்பாணம்.

28-12-67.

விலை ரூபா 2-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாயிரம்

'பாயிரமற்றது பனுவல் அன்று' என்ற தொல்காப்பிய வரையறைக்கேற்ப நண்பர் **நவாலியூர் நா. செல்லத்துரை** அவர்கள் இந்நூலின் பாயிரத்தை நான் எழுதவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நானும் விருப்பொடு இசைந்தேன்.

நானறிந்த நண்பர் செல்லத்துரை நேற்றுவரை பழகு தற்கு இனியராய் இருந்துவந்தார். இன்றுமுதல் படிப் பதற்கும் இனியவராகிவிட்டார். 'முகை வெடித்த மொட்டு' படிப்பதற்கு இனிய நெடுங்கதை. இதன் தமிழ்நடை ஆரம்பமுதல் இறுதிவரை நம்மை ஈர்த்துச் செல்கிறது. கதையை அறியுமுன்னர், அதன் நடை யிலேயே நாம் நம்மை இழந்துவிடுகிறோம். இந் நாவ லாசிரியர் ஈழத்து எழுத்தாளர் வரிசையில் விரைவில் உயர்ந்துவிடுவார் என்பதற்கு இந்நாவல் நல்ல சான்று பகருகிறது.

இந்நாவலை நன்கு சுவைக்க விரும்புவோர்கள் இதன் ஆசிரியரைப்பற்றி அறிந்துகொள்ளுதல் அவசியம். இவர் ஒரு இலட்சிய இளைஞர். ஆகவேதான் பால முரளியைப்போன்ற, எளிதில் மறக்கமுடியாத ஒரு இலட்சிய இளைஞனைப் படைக்க முடிந்தது. இவர் ஒரு சிறந்த நாடகாசிரியர். அழகு சொட்டும் வசனங்கள் எழுதுபவர். சிறந்த நடிகர். இப் பண்புகளின் பிரதி பிம்பங்களை இந்நாவலில் காணலாம்.

இங்கு கையாளப்பட்டிருக்கும் யுக்திகள், மேடை யுக்திகள். ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவிலும் காணப் படும் புதிய திருப்பங்களும், எதிர்பாராத சம்பவங்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகனை கதையோடு பின்னிப் பிணைக்கின்றதைவிட, மேடையேற்றப்பட்டால் அவையோரை இமைகொட்டா திருக்கச்செய்யத்தக்கன என்பது நன்கு விளங்குகிறது. வாழ்க்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளைக் கோர்த் தமைத்து, அலுக்காத நெடுங்கதையாக்கிய ஆசிரி யரின் கைத்திறனும், கற்பனைத்திறனும் இந்நூலுக்கு எழிலூட்டுகின்றன. இந்நாவலின் மூலம் நமக்கு அறி முகமாகும் பாத்திரங்களின் உரையாடல்கள், மேடைக் கேற்ற நாடக வசனங்கள். நாடகமும், நாவலும் இணைந்து இலங்குகிறது இந்த இனிய நாவல்.

தற்கால வாழ்க்கையின் அலங்கோலங்களை ஆசிரியர் அழகுறச் சுட்டிக்காட்டியுள்ளார். உடல் உணர்ச்சி களுக்கும், ஒழுக்க உணர்வுகளுக்குமிடையே ஏற்படும் மோதல்களும், முரண்பாடுகளும் இங்கு நன்கு வடிக்கப் படுகின்றன. நல்லவர்களின் வாழ்விலும்,மற்றவர்களின் கறைபடிந்த வாழ்க்கை களங்கமூட்டக்கூடுமென்பது நன்கு கையாளப்பட்டுள்ளது. சுருங்கக்கூறின், சுவை யூட்டும் அம்சங்கள் நிறைந்த ஓர் நெடுங்கதையாக இந்நூல் அமைந்துள்ளது. இந்த முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியது. இத்தகு எழுத்தாளர்களை ஊக்கு வித்து, தமிழ் நூல்களின் கொலுவில் ஈழத்து எழுத் தாளர்களின் கற்பனை ஓவியங்கள் சிறப்பிடம் பெற உதவவேண்டியது, நம் நாட்டுத் தமிழன்பர்களின் கடமையாகும்.

19-12-67. **இர. சிவலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " எழுத்துலகில்.......... "

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழி படித்துக் கொண்டிருந்த காலத்தில், தமிழில் நாடகமொன்று எழுதி நடிக்க வேண்டிய சந்தர்ப்பமொன்று என்னைச் சரணடைந்தது. அந்த நாடகம் வெற்றியாய் அமைந்து போட்டிப் பரிசையும் எனக்குத் தட்டித் தந்தபோது எழுத்துலகில் புகுந்துவிட வேண்டுமென்ற ஆசையால்த் துடித்துக் கொண்டிருந்தேன்.

இந்த ஆசையின் காரணமாக நான் எழுதிய நாடகங்கள் பல. அதிலும் ஒரே காட்சியமைப்பில் திரைக்குத்திரை மூடாமல் ஓரங்க நாடகமாக ஒன்றரை மணி நேர அளவில் நான் எழுதிய நாடகங்கள் நல்ல பெயரைப் பெற்றுத் தந்தது. மேலும் மேலும் எழுதவேண்டும் என்ற ஆசை முற்றியது.

அதன்விளைவாக என் எழுத்துலக வயலில் முளைவிட்ட மற்றொரு பயிர் 'சிறுகதை'. சிறுகதை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்தால், கூடிய விரைவில் பிரசுரிக்கமாட்டார்கள் என்ற ஓரளவுண்மையும் என்னோடு ஒட்டிக்கொண்டது. முதன்முதலில் நான் எழுதிய "விடுங்கள் அவன் போகட்டும்" என்ற சிறுகதையோடு, கண்டியூரில் அந்த நாட்களில் மாத இதழாகத் திகழ்ந்த 'முத்தமிழ் முழக்க' ஆசிரியர்கள் க. ப. சிவம், கவிஞர் ஈழக்குமார் ஆகிய இருவரிடமும் சென்றேன். நல்ல மனதோடு வரவேற்று, நிறைய எழுதுங்கள். முத்தமிழ் முழக்கம் உங்களை மலையகத்திற்கு அறிமுகப்படுத்தும் என்றார்கள்.

முத்தமிழ் முழக்கம் "மலைமுரசா"க மாறியபோது க. ப. சிவம் அவர்கள் அதன் ஆசிரியரானார். மலைமுரசில் எனது சிறுகதைகள் பல அடிக்கடி வெளிவந்தனவென்றால் மலைமுரசு க. ப. சிவம் அவர்கள் என்னுள்ளத்தில் இருக்கிறார் என்று சொல்லவும் வேண்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின்னர் என்னை வரவேற்றது 'தினகரன்' இன்னும் வரவேற்றுக்கொண்டிருக்கிறது ஆகவேதான் நெடுங்கதை எழுத ஆசைப்பட்டேன். அதன் விளைவால் இரண்டு மூன்று நெடுங் கதைகள் பிறந்தனவெனினும் அச்சு என்ற மரத்திலே பூத்துக் காண்பது "முகை வெடித்த மொட்டு" த்தான். அந்த மொட்டு என்னையும் எழுத்தாளர் உலகத்திற்கு அறிமுகம் செய்கிறது.

எழுத்தாளனைப் புறம்பான ஒருவனென்றோ சாதாரணமான மனிதனை விட உயர்ந்தவனென்றோ கணித்துவிடக்கூடாது. மனித வாழ்வில் ஒட்டி ஒன்றுனவன்தான் எழுத்தாளன். என் கதையிலே வரும் பாத்திரங்களை உண்மையான வாழ்விலும் காண முடியும் என்பதற்கு வாசக அன்பர்களே சான்று பகருவார்கள். அத்தகைய பாத்திரங்களும் சம்பவங்களும் சேர்ந்த ஒரு முத்திரை தான் "முகை வெடித்த மொட்டு".

வாழ்க்கையில் ஏற்படும் ஊழல்களும். மனித உணர்ச்சி யானது மிருக உணர்ச்சியாக மாறும் சம்பவங்களும் ஒருவனை எந்த அளவில்க் கொண்டுசெல்கிறது. எதில் விழுத்திவிடுகிறது என்பதை அனுபவ வாயிலாக அறிந்தபோதுதான் "முகை வெடித்த மொட்" டை மலரவைத்தேன்.

தன் சுயநலத்தையும் கருதாமல் இன்னொருவனின் வாழ்வுக் காக அரும்பாடு பட்டுப் பொது நலத்தை நாடும் ஒரு இலட்சிய இளைஞனின் வாழ்வு, இறுதியில் எப்படி அமைகிறது என்பதை அலசி ஆராய்ந்தபோது மலர்ந்ததுதான் முகை வெடித்த மொட்டு.

அத்தகைய மொட்டு எதிர்காலச் சமுதாயத்தை விளிப் படையச்செய்து எது நறுமணம், எது கெடுமணம் என்று காட்டி நன்மை விளைவிக்குமானுல் — அந்த நன்மை நமக்கும் நன்மை பயக்கும் என்று நம்புவோமானுல், இலக்கியம் மனிதனுக்குக் கட் டாயம் தேவை, அதனுல்ப் பயனுமுண்டு என்பது புலனுகும்...

முகை வெடித்த மொட்டை அச்சேற்றவேண்டும் என்று நான் முயற்சித்தபோது யாழ்ப்பாணம் ஜோதி அச்சகத்தை எனக்கு அறிமுகப்படுத்தியதோடு மட்டும் நில்லாது, நான் கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்த காலங்களில் அச்சுப் பிழைகளையும் நல்ல முறையிலே பார்த்துத் திருத்தியவர் என் மதிப்புக்குரிய கே. டானியல் அவர்கள். முகை வெடித்த மொட்டு வெளிவருவதற்கு அவர் செய்த உதவிகள் பற்பல. அவரை என்றால் 'மறந்துவிட முடியாது' என்பதே அவருக்கென் கைம்மாறுகும்.

முகை வெடித்த மொட்டின் அட்டைப் படத்தை என் எண்ணத்தின் சாயல் தவறாமல், கருத்துக் குலையாமல் அழகாகத் தீட்டி, 'புளொக்'குகளும் செய்துதந்த என் நண்பர் ஓவியர் கலைஞானியை நான் மறந்துவிட்டால் தமிழ் உலகம் என்னை வரவேற்காது.

அடுத்ததாக, என் அன்பைப் பெற்றவர்கள் யாழ். ஜோதி அச்சகத்தார். மிக்க மரியாதையோடும் அன்போடும் பணியாற்றி அச்சுவாகனமேற்றிய அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றி. அத்தோடு மேலட்டை செய்துதந்த ஈழகேசரிக்கும் அது உரித்தாகட்டும்.

அடுத்ததாக நான் நன்றிகூறவேண்டியவர் சொற்செல்வர் இர. சிவலிங்கம் (M. A. Dip. in Ed.) அவர்கள். நான் கேட்டபோது எத்தனையோ வேலைகளுக்கு மத்தியில் என் நெடுங்கதையை வாசித்துச் சுவைத்து, பாயிரம் என்னும் முகவுரையை அணிந்துரையாகத் தந்துதவியவர் அவர். என் நெஞ்சில் அவர் என்றும் இருப்பார்.

நல்லதொரு நிலைக்கு என்னை ஆளாக்க ஆசைப்பட்டவர் என் அண்ணா. சிறு வயது தொடக்கம் என்னை வளர்த்ததோடு நின்றுவிடாது, பல்கலைக் கழகத்தில் பீ. ஏ. வரை படிக்கப் பண உதவியும், பல உதவியும் தந்தவர் என் அண்ணா என். சி. முருகேசு அவர்கள். அவர்களையும் அவரோடு சேர்ந்து எனக்கு உதவி செய்த, அவரது காலஞ்சென்ற மனைவி - என் அண்ணியையும் என் உள்ளத்தில் வைத்திருக்கிறேன்.

அத்தோடு, என் எழுத்துக் கலைக்குப் பாராட்டு வழங்கி, "முகை வெடித்த மொட்டு" எப்படியாவது புத்தக உருவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவரட்டும் என்றெல்லாம் கூறி எனக்கு ஆதரவு தந்த என் மனைவி **மகேஸ்வரி செல்லத்துரைக்கும்** என் நன்றி.

இறுதியாக, வாசக அன்பர்களே என் நண்பர்களே, எழுத்துலகில் என் ஒளிபரவ உதவிசெய்தவர்கள், செய்யவேண்டியவர்கள் நீங்கள். உங்கள் கைகளிலே என் எழுத்து. அந்த எழுத்தின் முடிவை நானாகத் தீர்மானிக்காமல் உங்கள் சிந்தனைக்கே விட்டிருக்கிறேன். முகை வெடித்த மொட்டின் இறுதியைத் தீர்மானிக்கவேண்டுமானால் முடியும்வரை சிந்தியுங்கள். சிந்தனையும் தீர்ப்புக்கூறத் தவறினால் என்னிலே பிழையைப் போட்டுவிடாதீர்கள். ஏட்டு வடிவில் வெளிவரும் முதல்முயற்சி; கன்னிப்படைப்பு இது. அதை வரவேற்று ஆதரவு தாருங்கள் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**வணக்கம்.**

அன்பு,
**நா. செல்லத்துரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இவ்வாண்டு எம்மை விட்டுப் பிரிந்த
முதுபெரும் எழுத்தாளரான
தாழையடி சபாரத்தினம்
மலரும் அரும்பான இளங்கவிஞன்
கற்கையாளன்
ஆகியோருக்கு
இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

**நா. செல்லத்துரை**

**சிரமத்திற்கு மன்னிப்புக் கேட்கிறேன்**

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 19 | உதவட்மே | உதவட்டுமே |
| 14 | 21 | தை 24 | தை 4 |
| 60 | 2 | என்று மட்டுமல்ல | என்று நான் மட்டுமல்ல |
| 62 | 1 | கைக்குழந்தை போவது | கைக்குழந்தையோடு போவது |
| 92 | 4 | ஆடிவைத்த | ஆடிவந்த |
| 133 | 12 | கொடுத்திருந் | கொடுத்திருந்தேன் |
| 138 | 16 | சித்திரவதனியு | சித்திரவதனியும் |
| 139 | 12 | செர்ல்லி | சொல்லி |
| 142 | | அத்தியாயம் 26 | அத்தியாயம் 28 |
| 143 | | வேறொருவனை | வேறொருவனை |

அச்சுப்பதிவு: ஜோதி அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 1

தப்பித்தவறித் தண்ணீருக்குள் விழுந்த வண்டின் தத்தளிப்பாகவே அந்த நபரின் உள்ளம் அடித்துக்கொண்டிருந்தது. அடிக்கடி அவளேயே பார்க்கின்ற ஒரு வெறிப்பார்வை. தன்னந்தனியனுக அவள் வந்திருப்பதைப் புரிந்துகொண்ட படியினுல்த்தான் பெருமூச்சுக் குவியலைக் கக்கிக்கொண்டிருந்தான் அடிக்கடி. அத்தோடு ஒருவகைச் செருமல். அது இயற்கைக்கு மாருன செயற்கைச் செருமல் என்பது பக்கத்திலுள்ளவர்க்குப் புரிந்திருக்குமோ என்னவோ......?

நகர்ந்து புறப்பட்ட ஆமைவேகப் புகையிரதம் முயல் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. இடையிடையே அது கிளப்பிய அசுர ஒலியும் அவலக் குரலும் அவனுடைய மனதிலே பீதியை உண்டுபண்ணி "இந்தப் பெண்ணேடு பேசினுல் நிச்சயம் உனக்கு ஆபத்து நேரிடும்", என்ற குறிப்பையும் சுட்டிச் செல்வது போன்றிருந்தது. இருந்தாலும் அவளோடு பேசாவிட்டால், அவனுடைய மனதிலே எதுவித நிம்மதியும் ஏற்படாதென்பதை அவனுடைய செயல்களிலிருந்து அறியமுடியாதா?

அவளுக்கு எதிர்நேரில் அவன். மெதுவாகத் தனது கால்களை அவளது கால்களோடு ஒட்டவைக்கும் அசுரப் பிரயத்தனத்திலே ஈடுபட்டிருந்தான். அவளது பாதங்களில் தனது பாதங்கள் படுவதில்க்கூட அவனுக்கொரு இன்பம். அதில் வெற்றி காணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்காக அவன் கையாண்ட யுக்திகள்தான் எத்தனை? மெது வாக மூடியிருந்த அந்தக் கண்களிலே நித்திரை செய்வது போன்றதொரு பாசாங்கு. புகையிரதத்தில் பிரயாணம் செய்யும் சிலரின் சேட்டைகள் இவையென்பது ஒரு சிலருக்குத் தெரியாமலா போய்விடும்?

அவளின் பாதத்திலே இவனது பாதம். தொட்டுவிட்ட மகிழ்ச்சி அவனுக்கு, ஆனால் பட்டுவிட்டதே பிறனுடைய பாதம் என்பதால் ஏற்பட்ட வெறுப்போ என்னவோ, நத்தை தனது கழுத்தைத் திடீரென உள்மறைத்துக் கொள்வதுபோல், அவளும் தனது காலை எடுத்துவிட்டாள் உடனடியாக.

அவனின் உணர்வு பளீரென்றது. ஆனாலும் நித்திரை போலவே தன்னைக் காட்டிக்கொண்டான். காரணம், பக்கத்திலிருப்பவர்களும் எதிரிலிருப்பவர்களும் தன்னைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாதே என்பதற்காகத்தான். இருந்தாலும் இது பூனையின் கண்மூடல் என்பது கண்கூடல்லவா?

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. அவனது உள்ளத்திலே ஒரு சலனம். "விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும்தான் எம் போன்றவர்களால் வெற்றியடைய முடியாவிட்டாலும் காதலில்க் கூடவா தோல்வி? காங்கேசன்துறைப் புகைவண்டி நிலையத்தில் ஏறி இவ்வளவு தூரம் வந்து இத்தனை முயற்சிகள் எடுத்தும் அத்தனையும் வீணாகிவிட்டன. பயனுள்ள நூலொன்றைப் படித்திருந்தால்க்கூட இவ்வளவு நேரத்திற்குள் கொஞ்ச அறிவாவது வளர்ந்திருக்குமே......" அவனது உள்ளம் பேசிமுடித்ததற்கும் புகையிரதம் சாவகச்சேரி நிலையத்தை அடைவதற்கும் சரியாயிருந்தது.

வெடுக்கென்று கண்களைத் திறந்து வெளியே பார்த்தான். வரப்போகும் நிலையம் சாவகச்சேரி என்பது தெரிந்திருந்தும் அவனது குற்றமுள்ள நெஞ்சு அதைப் பார்க்கவைத்தது. பக்கத்திலிருந்தவர்களில் சிலர் இறங்கிவிட்டபடியால், இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்க மூலையும் காலி. அதைக் கண்ட அவன் ஒரு மூலையில், அவள் மற்ற மூலையில். எதிர்நேரில் இருவரும். எப்பொழுது கொத்தலாம் என்றிருக்கும் பாம்பின் நிலையிலே அந்த நபர்.

புகைவண்டி மீண்டும் பறந்தது. மறுபடியும் தனது குரங்குச் சேட்டைகளில் இறங்கிவிட்டான் அவன். இடைவிடா மல் அவன் கையாண்ட லீலைகளைப் பொறுக்க முடியவில்லை அவளால். இழந்துவிட்ட பொறுமை ஆத்திரத்தை மூட்டியது. திடீரென ஒரு அறை. அவனது கன்னம் சிவந்துவிட்டது. அடியையும் அக்கறைப்படுத்தாமல் எழும்பி எங்கோ நகர்ந்து விட்டான் அந்த நபர்.

பக்கத்திலிருந்த பாலமுரளி மெதுவாக அவளைப் பார்த்த போது அவள் கதை சொன்னாள். அவனுக்கு எல்லாமே விளங்கி விட்டது. "நல்லதொரு பாடத்தை நல்லதொரு சந்தர்ப்பத்தில் நாலுபேர் மதிக்கத்தக்கதாகச் செய்திருக்கிறீர்கள். இப்படிப்பட்ட ஆசாமிகளுக்கு நீங்கள் படிப்பித்த பாடம்தான் நல்லதொரு படிப்பினையாகும். உங்கள் தைரியத்தை நான் போற்றுகிறேன்," என்றான் சிரிப்போடு.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த மற்றவர் களும் இறங்கிவிட்டார்கள். இடையிடையே அவளோடு பேச வேண்டிய சந்தர்ப்பம் பாலமுரளிக்கு.

"நீங்கள் படிப்பிக்கிறீர்களா?" தற்செயலாக அவளின் கண்கள் தன்னைப் பார்க்க நேர்ந்ததைக் கண்ட பாலமுரளியின் கேள்வியிலே சிக்கிய அவள் தனக்குள்ளாகவே சிரித்து முடித்தாள்.

"இல்லை"

"அப்படியானால் ......?

"நான் பிரத்தியேக நிறுவனமொன்றில் வேலை பார்க் கிறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியா? உங்களை ஒரு ஆசிரியை என்றுதான் நினைத்தேன்."

அதற்குமேல் பேச்சு மூச்சில்லை. அவள் நிறுத்திக்கொண்டது பாலமுரளிக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுத்ததோ இல்லையோ, தனது பெட்டியிலுள்ள பேசும்படத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தான். புகைவண்டியின் வேகம் கிளிநொச்சியை அடைந்தபோது, பேசும் படம் பெட்டிக்குள் வைக்கப்பட்டது மறுபடியும்.

"அதைக்கொஞ்சம் தருவீர்களா?" பாலமுரளியிடமிருந்து பேசும்படத்தை எடுத்துக்கொண்டாள் அவள். அதை எடுக்கும் போது பாலமுரளியின் விரல்கள் அவளது விரல்களைத் தொட்டு நின்றன. பாலமுரளி வேண்டுமென்று அப்படிச்செய்யவில்லை என்பதை அவளால் புரிய முடியாதா?

எதையோ புரட்டிப் புரட்டி அவள் வாசித்தாள். கிளிநொச்சிபோய் மதவாச்சி வந்துவிட்டது. பேசும்படம் பாலமுரளியிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டபோது நன்றியைக் கூறி முடித்தாள் அவள். சந்தர்ப்பத்தை நழுவவிடமுடியவில்லை பாலமுரளியால்.

"நீங்கள் படம் பார்ப்பீர்களா?" மெதுவாகக் கேட்டான் அவன்.

"பார்ப்பேன்," திடீரெனப் பதில் வந்தது அவளிடமிருந்து.

உரையாடல் தொடர்ந்தது.

"உங்களுக்குப் பிடித்த தமிழ்ப்படம் எது?"

"சிவாஜி கணேசன் நடிக்கும் படங்கள்தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அத்தோடு மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் படங்களையும் தவறாமல் பார்ப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானுல் சிவாஜி கணேசன் நடிக்கும் படங்கள் அத்தனையும் நல்லதென்பது உங்கள் அபிப்பிராயமா?''

"நடிகர் திலகம் சிவாஜி நடித்த சில படங்கள் மக்கள் அபிப்பிராயத்தைப் பெருவிட்டாலும்கூட அப்படங்களில் சிவாஜியின் சிகர நடிப்பைப் பார்த்தாவது பெருமைப்படலாமல்லவா?''

புற்றுக்குள் ஒடுங்கிய பாம்புபோல் பாலமுரளியின் வாய் அடங்கியது. நல்ல கருத்தொன்றை ஒருவர் சொல்லும்போது அதை ஏற்கத்தானே வேண்டும். ஏற்றுக்கொண்ட பாலமுரளி, அமைதியாயிருந்தான்.

அந்த மௌனம் குலேக்கப்பட்டது. "ஆமாம், எனக்குப் பிடித்த படத்தைப் பற்றிக் கேட்ட நீங்கள் உங்களுக்குப் பிடித்த படம் எதுவென்று சொல்லவில்லையே?", என்று அமைதியாகக் கேட்டு நின்ற அவளின் குரலினிமைக்குப் பதில் சொல்லாமலிருக்க அவனுல் முடியவில்லே. சந்தர்ப்பங்கள் ஆக்கப்பட்டபின் பேச்சுத் தொடுக்கப்படாமலிருந்தால், தனது வெற்றி நிறைவேருது என்பதைப் பாலமுரளி புரியாமலில்லே.

நான் விரும்பிய தமிழ்ப்படங்களுள் கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் "என்னதான் முடிவு", எஸ். பாலச்சந்தரின் "பொம்மை", நாடக ஆசிரியர் "சோ"வின் "பார் மகளே பார்", மக்கள் திலகம் எம். ஜி ஆரின் "நாடோடி மன்னன்'' ஆகிய படங்களேயே பெரிதும் போற்றுகின்றேன். அவை தரமான படங்கள்." பாலமுரளியை அவளால் புரிந்துகொள்ள முடிகிறது.

"நீங்கள், படத்தின் முழுச்சிறப்பையும் எடுத்துத் துலாக் கோலில் வைத்திருக்கிறீர்கள். உங்கள் ரசிப்புத் தன்மையை நான் பாராட்டுவதோடு நீங்கள் கலேயுள்ளம் படைத்தவர் என்றும் நினைக்கத் தோன்றுகிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கதையென்ருல் கருத்திருக்கவேண்டும் என்று தீர்ப்புக் கூறுபவன் நான். சாதாரண மனிதனின் ரசனையைவிட ஒரு படி உயர்ந்த ரசனையுடையவன்.” பாலமுரளியின் பேச்சிலே ஒரு கவர்ச்சியிருந்ததைக் கண்டாள் அவள்.

“உங்கள் பெயரென்ன ?”

“பாலமுரளி”

“அழகான பெயர். தென்னிந்திய இசைவல்லவர்களுள் ஒருவரான பாலமுரளியைப்போல் பாடவும் உங்களுக்குத் தெரியுமோ ?”

“சுமாராகப் பாடுவேன். ஆனுல் புகையிரதப் பிரயாண நேரங்களில் நான் பாடுவதே கிடையாது.”

“ஏன் ? மற்றவர்களின் நாவூறு உங்களில் படக்கூடா தென்று உங்கள் அம்மா சொல்லிவைத்திருக்கிருரோ ?” சிரிப் பொலி அவளின் இதழ்களைப் பிய்த்தெழும்ப அவளின் அங்கங் களும் குலுங்கி ஓய்ந்தன.

“அப்படியொன்றுமில்லை. ஆனுல், புகையிரதத்தில் பாடு வது இனிமை பயவாது என்பதால் மட்டுமல்ல, குரலும் சில விஞடிகளில் கரடுமுரடாகிவிடும் என்ற காரணத்திற்காகவுந்தான்.”

“அப்படியானுல் நான் உங்களைப் பாடக் கேட்கவில்லை. பயப்படவேண்டாம்.”

கொஞ்சநேரம் மௌனம். நிலாவொளியைப் பார்த்துச் சுவைப்பதுபோல், இருவரும் ஒருவரை ஒருவர் அறியாதவாறு ஒருவரையொருவர் பார்த்துச் சுவைத்துக்கொண்டிருந்தனர்.

“ஆமாம், என்னுடைய பெயரைத் தெரிந்துகொண்ட நீங்கள் உங்களுடைய பெயரைச் சொல்லவில்லையே.” பால முரளியின் கேள்விக்கு அவள் விடைகொடுக்கத்தானேவேண்டும் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் பெயரா? என் பெயர் பாரதி."

"பாரதியா? எடுப்பான பெயர்."

"உங்களுக்கு எடுப்பான பெயராய் இருக்கிறது. ஆனால் அது ஆண்களின் பெயராய்த் தோன்றுவதால் வெறுப்பான பெயராய் இருக்கிறது எனக்கு."

"ஏன், ஆண்களென்றால் உங்களுக்குப் பிடிக்காதோ?"

"அதற்காக இல்லை, பெண்களுக்குரிய எத்தனையோ நல்ல அழகான பெயர்கள் இருக்கும்போது எதற்காக என் பெற்றோர்கள் இப்படியான பெயரை வைத்தார்கள் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்."

"உங்கள் பெயரிலே உள்ள பொருளை நீங்கள் புரிந்திருந்தால், இப்படியெல்லாம் எண்ணவும் மாட்டீர்கள் சொல்லவும் மாட்டீர்கள்."

"அப்படியா? அப்படியானால் எனது பெயரின் பொருளைச் சொல்லுங்கள் பார்க்கலாம்?" கொஞ்சம் நிமிர்ந்து பாலமுரளியோடு ஒட்டியிருந்தாள் பாரதி. ஓடும் புகையிரதத்தில் வீசும் காற்றோடு கலக்கின்ற ஓசையானது சற்று எட்டியிருப்பவர்களுக்குக் கேளாதல்லவா? அதற்காகவே சாளரக் கதவுகளை மூடிவிட்டுப் பாலமுரளி சொல்லப்போவதைத் தான் மட்டும் கேட்கவேண்டுமென்ற துடிப்பினால் பாலமுரளியோடு ஒட்டியிருக்க நேர்ந்தது. அத்தோடு தனது பெயரைப்பற்றி யாரோ ஒருவர் சொல்லிப் புகழ்வதென்றால், யாருக்குத்தான் ஆசையிராது அதைக் கேட்பதற்கு? உற்றுக்கேட்டாள் பாரதி.

"கலைகளுக்குத் தாய் வாணி. அறிவுக்கும் வாணிதான். அந்தக் கலைவாணியின் மற்றொரு பெயர் பாரதி. அந்தப் பாரதி குடிகொண்ட உள்ளமாக உங்கள் உள்ளம் இருக்கவேண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிலும் ஆற்றலிலும் மிதக்கவேண்டும், பலராலும் போற்றப் படவேண்டும் என்பதற்காகவே உங்களேயும் பாரதி என்று பெயரிட்டார்கள் உங்கள் தாய் தந்தையர். அத்தோடு புரட்சிக் கவி பாரதியின் வாரிசாக அறிவுப் பெண்ணொருத்தி ஈழத்திலே தோன்றினுல், அதுவும் பெருமைதரும் என்றுகூட அவர்கள் நினைத்திருக்கலாமல்லவா ?"

மெல்லிய சிரிப்போடு கூறிமுடித்த பாலமுரளியை அமைதி யாகப் பார்த்தாள் பாரதி. "வாழமுடியாமல் வாழ்க்கையோடு போராடிக்கொண்டிருக்கும் எனக்குப் பெருமையாவது புகழாவது? ஓடும் இந்தப் புகையிரதத்தில் இறந்தால்கூட நிம்மதி கிடைக் கும்." சூருவளிப் பெருமூச்சை வெளியகற்றிவிட்டு மூலேயோடு சார்ந்து கொண்டாள் பாவம்.

இறக்கும் அளவுக்குத் துணிந்துவிட்டீர்களா? "பாலமுரளி யின் கேள்வியிலே தன்னேக் கண்டிக்கும் வார்த்தைகள் இழைக்கப்பட்டிருப்பதைப் புரிந்துகொண்டாள் பாரதி.

"ஆமாம். வாழவழியற்றவர்களுக்கு வேறு என்னதான் பழக்கமோ? இருந்து பலருக்குத் தொந்தரவு கொடுப்பதைவிட மடிந்து மண்ணுக்குள் உரமாகிவிடுவது நல்லதல்லவா? அந்த உரம் மரம் செடிகளுக்காவது உதவட்டுமே." பாரதியின் வார்த்தை களில் வாழ்க்கையை வெறுத்த தோரணை சுடர்விட்டது. மெதுவாக அவளேப் பார்த்தான் பாலமுரளி. "அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. பிறந்தவர்கள் என்றென்றும் வாழ்வதில்லே. இறந்துதான் ஆகவேண்டும். அது இயற்கையின் பின்னல். பின்னப்பட்டிருக்கும் இறப்பிலும் பிறப்பிலும் எல்லோரும் உருண்டு விழுகிருர்கள். ஆனுல், அந்த எல்லேமுடிவதற்குள்த் தற்கொலே செய்து கொள்வதுதான் தப்பிலித்தனமான, மன்னிக்க முடியாத பாவச் செயலாகும். அப்படித் தற்கொலே செய்து கொள்ளும் உயிர்கள்தான் உலகத்தில் தமது ஆசைகள் நிறை வேறவில்லேயே என்ற ஏக்கத்தால் ஆவியாக அலேந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக இடமில்லாமல் தங்க ஒரு நிலைக்களமில்லாமல் பேய்களாகி விடுகின்றன. இதை உணர்ந்தால் தற்கொலை என்ற சொல்லுக்கே இந்த உலகத்தில் இடமிருக்காது; அகராதியில் அதற்கொரு நிலையுமிருக்காது. புரிகிறதா பாரதி?"

"புரிகிறது. உங்கள் கருத்து எனக்குப் புதிதல்ல; பழையது. வேதாந்தம் பேசி விளையைத் தடுப்பதற்கு முயற்சிக்கும் உங்களால் என் நிலையைப் புரிந்து கொள்ளமுடியாது தான். ஏன் பிறந்தேன் என்று ஏங்கும் நிலையோடு ஒவ்வொரு கணமும் தவித்துக்கொண்டிருக்கிறேன்." மூடிய அவளின் கடையோரக் கண்கள் சிந்திய நீர்த்துளிகள் அவளின் அவல நிலைக்குச் சாட்சி கூறின. அதைக் கண்ட பாலமுரளியின் நெஞ்சிலே ஒரு பாரம்.

"உங்களுக்கு ஆட்சேபனையில்லாவிட்டால், உங்கள் சோக வரலாற்றை நான் அறியலாமா?" பாலமுரளியின் விருப்பத்தை அவளால் தட்டிக்கழிக்க முடியவில்லை. "என் தந்தை ஒரு குடிகாரன். அதனால் என் தாயையோ, என்னையோ, என் தம்பியையோ, என் தங்கையையோ அவர் நேசிப்பதில்லை. நேசிக்க அவருக்கு நேரமுமில்லை, அவசியமுமில்லை. காரணம், அளவுக்கு மீறிய குடிவெறிதான். குடி அவரை மயக்கியது. அந்த மயக்கத்தில் குடியைத்தான் அவர் காதலித்தார். அதன் விளைவு? அடியும் உதையுந்தான் கிடைத்தது என் தாய்க்கு. என்ன செய்யமுடியும் ஒரு பெண்ணால்? கற்புள்ள பெண்களுக்குக் கல்லோ முளளோ கணவன்தானே? சமாளித்து வாழ்ந்த அவள், அன்றொருநாள்...?" என்று பாரதி முடிக்கு முன் அவளது கண்களின் வரம்புடைந்து வெளிக்கிளம்பி ஓடிக் கொண்டிருந்தது நீர். அந்த ஊற்றிலே அலையடித்த சோகத்திற்கு எல்லை ஒன்று இல்லை என்றுதான் சொல்லவேண்டும்?

"என்ன நடந்தது உங்கள் தாய்க்கு?" பாலமுரளியால் அதைக் கேட்காமலிருக்க முடியவில்லை.



2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அவள் போய்விட்டாள் உலகைவிட்டு. வேதனை தாங்க முடியாமல் பிரிந்துவிட்டாள், பாவம்." சுமந்திருந்த சோகத்தை இறக்கிக் கொண்டிருந்த பாரதியைக் கண்ட பாலமுரளியின் கண்களிலே ஒரு கேள்வி...

அப்படியா ? "

" ஆம் ஆனல், இறக்குமுன் ஒன்று மட்டும் செய்துவிட்டார் என் தாயார்.

" என்னது ? "

" பருவமடைந்த பெண்ணுகையால் என்னை எனது ஒன்று விட்ட மாமாவின் கையிலே ஒப்படைத்து விட்டதுதான். தற்போது நான், எனது மாமி மாமாவோடு கொழும்பில் வாழுகிறேன். "

" தந்தை உயிரோடு வாழும்போது வேருெருவரின் வீட்டில் இருக்கும் உங்கள் நிலை பரிதாபத்திற் குரியதுதான். பிள்ளைகள் சிலரின் வீழ்ச்சிக்கு அவரவரின் தந்தைமாரும் காரணம் என்பதை உங்கள் வாழ்க்கை எனக்குக் காட்டி நிற்கிறது. இருந்தாலும் உங்கள் மாமி மாமாவோடு இன்பமாக நீங்கள் வாழவேண்டும் என்பதே எமது பிரார்த்தனை. "

" மாமி மாமாவோடு இருக்கிறேன் என்ற காரணத்தால் மேலும் ஆத்திரமடைந்த என் தந்தை என்னை ஒரேயடியாக வெறுத்துவிட்டார். "

" உண்மையாகவா ? "

" ஆமாம். அதுமாத்திரமல்ல. என் மாமாவையும் என்னையும் சேர்த்து வீண்கதையும் கட்டிவிட்டதனல் ஊராரும் உறவினருங்கூட நம்பிவிட்டார்கள். இது இப்படியிருக்கும்போது என் வாழ்க்கைச் சோகத்திற்கு வேறு என்னதான் சான்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமோ? இதை நினைத்து நினைத்து வேதனைப்படுகிறேன். எதற்காக வாழவேண்டும் என்ற துடிப்பிலே இறக்கக்கூடத் தீர்மானித்து விடுகிறேன்."

பாரதியின் குரலைப் புரிந்துகொண்டான் பாலமுரளி. "ஆமாம் உங்கள் மாமாவின் வயதென்ன?"

"நாற்பத்தாறு"

"ஒன்று சொல்லுகிறேன், கோபிக்கமாட்டீர்களே?" தலையசைத்து இல்லையென்று சைகை காட்டிய பாரதியிடம் சொன்னான் பாலமுரளி.

"ஐம்பத்தைந்து ஐம்பத்தாறு வயதுவந்த உறவினனோடு கூடத் தமது இளம் பெண்களைப் போகவிடாத காலமிது. மிகமிகப் பயங்கரமான செயல்கள் — நடக்கும் என்று கனவு கூடக் காணமுடியாத செயல்கள் நடைபெறுகின்ற காலம் என்றுதான் சொல்லவேண்டும். ஐம்பது அறுபது வயதுக் கிழவர்களே குமரர்கள்போல் நடித்து இளம் பெண்களை உறவோ நட்போ என்றும் பாராமல் கெடுத்துவிடுகிறார்கள் என்பதற்குப் அத்தாட்சிகள் இருக்கும் காலமிது. தந்தையின் காம வெறியால் மகளொருத்தி கற்பழிக்கப்பட்டாள் என்ற உண்மை பரவிய காலம். எனவே, நீங்கள் உங்கள் மாமாவோடு, அதுவும் ஒன்று விட்ட ஒருவரோடு இருப்பதை உங்கள் தந்தை விரும்பாதது பாரதூரமான குற்றமாகாது. நீங்கள் நல்ல பெண்ணாயிருக்கலாம்; உங்கள் மாமா ஏகபத்தினி விரதமுடையவராயிருக்கலாம். ஆனால், உலகத்தின் கண்களிலே......? நீங்களும் அவரும் ஒருநேரம் சிரித்துக் கதைப்பதைக் காணும் உயிர்களுக்கு அது மாமன் மருமகள் உறவாய்த் தோன்றுவதற்குப் பதிலாக, கணவன் மனைவி என்ற தொடர்பாய்த்தான் தோன்றும். எனவே, நீங்கள் உங்கள் மாமாவோடு இருப்பதை விட்டுவிட்டு வேறு எங்காவது ஒரு பெண்கள் விடுதியில் தங்குவதுதான் சிறந்தது. அதைத் தான் உங்கள் தந்தையும் வரவேற்பார். அத்தோடு உங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய கதை எக்கச்சக்கமாய்ப் பரவினுல், உங்கள் மாமாவின் குடும்பத்திலும் ஒருவேளை புயல்வீசி ஓரிரண்டு உயிர்களை அழிக்கவும் நேரிடும். எனவே, ஒரு குடும்பத்தின் பிரிவுக்கும் உயிர்க் கொலைக்கும் நீங்கள் கர்த்தாவாக இல்லாமலிருப்பது வரவேற்கத் தக்கதல்லவா ? "

" புரிகிறது. ஆனுல் நான் போய்த் தங்குவதற்கு நல்ல தொரு இடம் கிடைக்க வேண்டுமே ? "

அப்படியானுல், தற்கொலைசெய்யும் எண்ணத்தை மட்டும் நீங்கள் அடியோடு நிறுத்தவேண்டியதுதான். ஏன் தெரியுமா ? நீங்கள் தற்கொலை செய்தால், உங்கள் மாமாவுக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட உறவுதான் அதற்குக் காரணம். பாரதியைப் பற்றிக் கதையொன்று பரவிவிட்டது நாடு பூராவும். அதைத் தடுக்க முடியாமலே தற்கொலை செய்துகொண்டாள் பாரதி என்ற கதை ஊரெல்லாம் ஊசலாடும். எண்ணிப்பாருங்கள் ? "

பாலமுரளி சொன்னவற்றை வரவேற்கும் தோரணையில் அசைந்தது பாரதியின் தலை. மீண்டும் தொடர்ந்தான் பாலமுரளி.

" ஆகவே, தற்கொலை செய்வதை விட்டுவிட்டு நான் சொல்வதை மட்டும் செய்யுங்கள். ஒருவரின் சோகத்தை இன்னொருவருக்கு எடுத்துச் சொல்வதால் உள்ளத்துப் பாரச் சுமை குறைகிறது என்பது கண்கூடு. உங்களுக்குச் சோகம், துயரம், தொல்லை ஏதாவது ஏற்பட்டால், கடித மூலமாக எனக்கு எழுதி விடுங்கள், அதுவும் உங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால் தான். எனது முகவரி,

13/3, புகைபிரத ஒழுங்கை,
டி. எஸ். சேனநாயக்கா மாவத்தை,
கண்டி.

உரையாடல் முடிந்து மௌனம் நிலவிக் கொண்டிருந்தது. மலைமுகடுகளில் உறைந்த பனியின் வெள்ளை நிறத் தூய்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் சுவைத்துச் சென்றுர்களோ என்னவோ, சாளரத்தி னூடாகக் கண்களை நோட்டமிட்ட வண்ணமே யிருந்தனர். முழு நிலவின் பால்வடிவத்திலே ஒரு கரு வடிவம் தோன்றி அதன் அழகைக் குறைத்துக் கொண்டிருந்த காட்சியைப் பாலமுரளி யால் பார்க்காமல் இருந்திருக்க முடியாது. அமைதியான நில வினிலே கீச்சிடும் சத்தங்களும் கொத்துமலர் அழகும் அவனுக்குத் தென்படாமலில்லை.

கண்ணுக்குள் துளிர்த்து வந்த நித்திரையை ஒருவாறு கசக்கி எறிந்துவிட்டுக் குருநாகலை நிலையத்தில் இறங்கி, பாரதி யிடம் விடைபெறும்போது ஒருவகைச் சோகம் அவனை அணைத்து நின்றது. இரவு மணி மூன்று. சிறிது நேரத்தால் நிலையத்தை விட்டுக் கிளம்பிய புகையிரதத்தில் எதையோ எடுக்க மறந் தநினுல் சித்தப்பிரமை பிடித்தவன் போன்று சலனப்பட்ட மன தோடு, கண்டி போகும் 3-15 மணி பஸ் வண்டியில் ஏறிச் சென்றுன் பாவம்......

## அத்தியாயம் 2

சலசலத்த நீரோடையும் ஓங்கி நிமிர்ந்த மலைமுகடும் அவ னுக்கு ஆறுதல் கொடுக்கவில்லை. படர்ந்திருந்த அழகுக் கொடி களும், பரந்திருந்த மென்மைக் காற்றுங்கூட அவனது உள் ளத்தை அணைக்க முடியவில்லை. அழகு புடைக்கும் ஏரி அமைந்த கண்டி நகரைப் பார்த்து ரசிப்பதற்குக் கும்பல் கும்பலாக எங் கெங்கோ இருந்தெல்லாம் திரண்டுவரும் மக்கள் இங்கு காணும் இன்பத்தைச் சுமந்து தத்தம் வீடு திரும்புகிறுர்கள் பூரிப்போடு. ஆனுல், பாலமுரளிக்கோ அதே கண்டி நகரில் எதுவித இன் பத்தையும் காணமுடியவில்லை. வேலைக்குச் சென்றுல் அங்கும் ஒரு வெறுப்பு; வெளியே சென்றுல் தென்படும் காட்சிகளிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கசப்பு. அறுசுவை சேரவேண்டிய இடத்திலே உப்புச் சாரம் நிலைமீறிய கதைதான். ஓரிடத்தில் சில மணிநேரம் இருந்து பொழுதுபோக்க முடியாத நிலை. கடிகார முள்ளு இடம் மாறுவது போல், அவனது உள்ளம் எங்கெங்கோ மாறி மாறி அலைந்தது.

"செச்சே, அவளின் முகவரியைப் பெற்றிருந்தால் ஒரு கடிதமாவது எழுதியிருக்கலாமே? அதற்கு எதிர்மாறாக நானல்லவா அவளிடம் எனது முகவரியைக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். எதற்கும் பெண்கள் தைரியமாக ஒரு ஆணுக்கு, அவன் எவ்வளவுதான் உறவாகவோ நெருங்கிப் பழகினவனாகவோ இருந்தாலும் முதன்முதலில் கடிதம் எழுதமாட்டார்கள். இதை அன்றைக்கு யோசித்திருந்தால், அவளது விலாசத்தை எப்படியாவது சுற்றி வளைத்துப் பெற்றிருப்பேனே ? என்ன முட்டாள்த் தனம் செய்துவிட்டேன் ?" பாலமுரளியின் மனம் பேசிப்பேசி அதை மறக்கமுடியாமல் தவித்தது. தெளிந்த நீரில் கல்லொன்று விழுந்துவிட்ட சலனம். அவள் கடிதம் எழுதமாட்டாளா என்ற அங்கலாய்ப்பு. நாட்களை ஒருவாறு ஓட்டினான். அன்று அவனது கையிலே முதல்க்கடிதம்.

234/16, புதிய ஒழுங்கை,
ஹவலொக்ஸ் தெரு,
கொழும்பு - 5.
தை - 24.

அன்பின் முரளி,

இக்கடிதம் உங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறேன். சின்னப்பிள்ளை மாதிரி அழுது கண்ணீர் வடிக்க வேண்டாம். அது பார்ப்பவர்களுக்குப் புழித்துப் போய்விடும். எதற்கும் தைரியமாயிருக்க வேண்டும். தன்னந்தனியனாய்க் கொழும்பு போகிறீர்கள், கவனம். அதுவும் இரவு நேரத்தில். ஆகவே மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். கொழும்பு போனதும், போய்ச் சேர்ந்ததை எழுதுவதோடு ஏதாவது துன்பச் சுமையிருந்தால் அதையும் இறக்கி என்னிடம் அனுப்பிவையுங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பாரத்தில் ஒரு பங்காவது நீங்கட்டும். என்று அடிக்கடி கண்டிப்பு வார்த்தையில் நீங்கள் கூறிச் சென்றபடியால்த்தான் இதை எழுதும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அன்று நீங்கள் என்னைப் பிரிந்த காட்சி, இன்றும் என் நினைவைவிட்டு நீங்கவில்லை. குருநாகலையைவிட்டு வண்டி புறப்பட்டபோது உங்களது கைக் குட்டை எனக்குப் பலமுறை சைகைகாட்டிப் 'போய்விடு நிம் மதியோடு', என்றது. உங்கள் புன்னகையில் பிணைந்து அதி லிருந்தும் பிரிபடமுடியாமல் கொழும்பு வந்து சேர்ந்தேன். கோட்டை நிலையத்தில் என் மாமா என்னை வரவேற்றார். நீங்கள் கூறியதுபோல், நான் தற்போது மாமா வீட்டிலில்லை. வேறு ஒரு வீட்டில் இருக்கிறேன். மற்ற விபரங்கள் நேரில். எதுவித ஆட்சேபனையுமில்லாவிட்டால் எதிர்வரும் போயா நாளன்று காலை எட்டு மணிக்கு இங்கு வாருங்கள் உங்கள் வருகையை எதிர்பார்த்தபடி இருப்பேன்.

வணக்கம்

பாரதி

குறிப்பு: வெள்ளவத்தைக் கைத்தறி ஆலைக்கருகில்தான் எனது விடுதி...

வாசித்துமுடிந்ததும் கடிதத்தை இதழ்களாக்கித் தனது இதழ்களோடு ஒட்டிச் சுவைசேர்த்துக்கொண்டான் பாலமுரளி. பரவியிருந்த துன்பக்கோடுகள் நீங்கி, பொங்கிவடியும் இன்பக் கீறுகளாக மாற்றங்கண்டது அவன் முகம். போயா தினத்தன்று நான் போகத்தான் வேண்டும்; பாரதியைக் காணத்தான் வேண்டும் என்ற நிழல் அவனது மனச்சுவரிலே பதிந்து சிலை யாகிவிட்டது.

அன்று போயா முன்நாள். வழக்கம்போல் விடியற்காலை ஐந்து மணிக்கே நித்திரை விழித்துவிட்டான் பாலமுரளி. காலைக் கடன் கிரமமாக நடந்தேறியது. மெதுவாகப் போய்க்கொண் டிருந்த காலைப்பொழுதிலே அவனது பூபாள இசை கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவை சொட்டியபோது, மலைமுகட்டைப் பிளந்தெழும்பிய கதிரவன் எட்டிப்பார்த்துத் தன் ரசனையைக் காட்டிக்கொண்டான். வாடியிருந்த இலைகளும் துளிர்களும்கூட பாலமுரளியின் கானஇசையூற்றிலே சிலிர்த்து நிமிர்ந்து சுவைத்துக்கொண்டிருந்தன.

கலைவாணியின் பாதத்திலே தன்னைச் சேர்த்து முடித்துக்கொண்டு கம்பீர நடை தொடர்ந்த பாலமுரளியின் அலுவலக வேலைகள் யாவும் சுறுசுறுப்பாக ஓடின. அவனது அங்கங்கள் அனைத்திலும் ஒருவகை ஒளிப்பிரபை - என்றைக்குமில்லாத தேஜஸ். விடிவெள்ளி ஒளியோடு காணப்பட்ட அவனது வாயிலிருந்து மோகனமும் கீரவாணியும் இடையிடையே மெல்லிய வடிவங்கள் காட்டி மறைந்தன.

கச்சேரி அலுவலகத்திலே அன்று பாலமுரளியைப் பற்றிய பேச்சுத்தான், பலரது வாய்களில் அடிபட்டது. "சில நாட்களாகச் சோகமாயிருந்த இவன், இன்று திடீரெனப் பூரித்துக் காணப்படுகிறானே, காரணம் என்னவோ?"

"ஒருவேளை எங்கோ ஒருத்தி திடீர்த் தோற்றங் கொடுத்திருக்கலாம். அந்த ஒன்றைப் பார்த்துவிட்டதனால் வாய்த்துவிட்ட காட்சியில் கலந்திருக்கிறானோ?"

கட்டவிழ்த்துவிட்டுத் திரியும் பசுக்கள்போல், இந்தக் கண்டி நகரில் கட்டுப்பாடில்லாமல் திரியும் சில கண்ணுவிகளுள் ஒருத்தியின் வாசனை தட்டிவிட்டதுபோலும்."

"எந்த மூலையில் எதைப் பதம்பார்த்து இவ்வளவு குஷியாகவும் குதூகலமாகவும் காணப்படுகிறானோ?"

"அரிச்சுணன் பாஞ்சாலியைக் கொண்டுவந்து ஐவரோடு பங்குபோட்டதுபோல், எவன் கொண்டுவந்தவளை இவன் தட்டினானோ?" என்றெல்லாம் ஒவ்வொருவரின் இதழ்களும் நாக்கும் பேசிச் சிரித்துக்கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையோடி நண்பகல் வந்தபோது கச்சேரி அலுவலக வேலைகளை முடித்துவிட்ட பாலமுரளி தனது உள்ளத்திலே கலந்திருந்த உணர்ச்சிப் பெருக்கோடு வாடிக்கைக் கடையிலே சோறுண்டு புறப்பட்டான் கொழும்பு நோக்கி. மேற்குத் திசையை அடையும் கதிரவன் சிரிக்கும் ஒலியெல்லாம் வானத்திலே அழகு நிறம் தீட்டுவதுபோல், தான் கொழும்பு செல்வதை நினைத்து நினைத்துத் தனது உடம்பெல்லாம் பூரிப்பை வரவழைத்துக் கொண்டான் அவன்.

அகன்று நீண்ட சாலைகளும், அழகு தரும் சோலைகளும் உறங்கமுடியாமல் மக்கள் சந்தடியால் நிறைந்து காணும் கொழும்புநகர் அவனுக்குப் புதிதல்ல. சின்னவனுய் இருந்த காலத்திலும் பருவச்சூழல் அவனை அழைத்தபோதும், பல மூலைமுடுக்கெல்லாம் சுற்றி அலைந்திருக்கிருன். ஆனுலும் பாரதியின் இல்லத்தைக் கண்டுபிடிப்பதில் அவனுக்கொரு சிக்கல் ஏற்படத்தான் செய்தது.

" வெள்ளவத்தைக் கைத்தறி ஆலைக்கருகில்த்தான் எனது விடுதி " என்று தனது கடிதத்தில் பாரதி குறிப்பெழுதியிருந்தபடியால்த்தான், வெள்ளவத்தை போகும் பஸ் வண்டியில் ஏறி வெள்ளவத்தைப் பொதுச் சந்தையடியில் இறங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது பாலமுரளிக்கு.

வெள்ளவத்தைச் சந்தையடியில் இறங்கி, வெள்ளவத்தைக் கைத்தறி ஆலையைக் கண்டுபிடிப்பதற்காக எல்லா இடமும் அலைந்தான். ஒரே அலைச்சல். அலைச்சலால் ஏற்பட்ட வியர்வைத் துளிகள் நனைத்துக்கொண்டிருந்த முகத்தைத் தனது கைக்குட்டையால் அடிக்கடி துடைத்துக்கொண்டு முன்னேக்கி நடந்துகொண்டிருந்தவனின் எதிரிலே தபால்க்கந்தோர்ப் பெயர்ப் பலகை தொங்கிக்காணப்பட்டது. எதிர்பாராத விதத்திலே தென்பட்ட தபால்க்கந்தோர் அலுவலகத்துள் நுழைந்தபோது, இளங்கதிரின் வருகையால் ஓடிவரும் பனிபோல், அவனின் உடம்பிலே வியர்த்திருந்த துயரமெல்லாம் துடைத்தெறியப் பட்டுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹவலொக்ஸ் தெரு என்ருல் கொழும்பு ஐந்துதான். வெள்ளவத்தைக் கைத்தறி ஆலேயும் அதே வீதியில்த்தான் இருக்கிறது. ஆகவே நீங்கள் நாறஹேன் பிட்டியாவுக்குப் போகும் பஸ்வண்டியில் ஏறி ஐந்து சதம் கொடுத்து அந்தச் சந்தியில் இறங்கிஞல் நீங்கள் தேடும் இடத்தைக் கண்டுபிடிப்பது மிகச் சுலபம்." தபால் விநியோகத்தர் ஒருவர் மிகவும் அமைதியாக விபரம் சொன்னபோது பொதுச்சேவை செய்பவர்களின் உண்மை உழைப்பையும் அன்பையும் புரிந்துகொண்ட பாலமுரளியால் எந்த இடத்தைக் கண்டு பிடிக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்யப்பட்டதோ அதே இடம் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. ஆனுலும் தான் வந்ததைப் பாரதிக்குக் காட்டிக்கொள்ள அவன் விரும்பவில்லே. அடுத்த நாள்க் காலேதானே சந்திக்கவேண்டும் என்ற நியமனம்.

இருந்தாலும் பாரதியை ஒரு கணம் பார்த்து விடவேண்டுமென்ற துடிப்பு அவனது அங்கமெல்லாம் தொங்கிக்கொண்டிருந்தது உண்மைதான். ஆனுலும் அதைத் தட்டிக் கழிப்பதற்குக் காரணமாயிருந்தது அவனது நிலே. முகமெல்லாம், சூழ் நிறைந்த கார்மேகம்போல் நிறம் தீட்டி விட்டது. ஒரே வியர்வைக் குழம்போடு வந்திருக்கிருன். தனக்குத் தான் அதன் மணம் வீசாவிட்டாலும் பிறரின் மூக்கிலே திடீரென நாற்றம் வீசுமே? அதிலும் பாரதியிடம் அப்படி வீசிவிட்டால்...? என்பதுதான் காரணம்.

என்ன செய்வது? அன்றைக்கு அவளேப் பார்க்க முடியாதவாறு அவனேத் தடுத்துவைத்தது விதி என்றே சொல்ல வேண்டும். ஆகவேதான் கொ:.வல-:.பாம் வீதி செல்லும் 116ம் இலக்க பஸ் ஏறிக் கோட்டை சென்று ஹோட்டல் ஆனந்த பவானில் அறை எடுத்துத் தங்கிய அவனுக்கு வேறு எதிலும் புலன் செல்லவில்லே. பாரதியின் கடிதத்தை மட்டும் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டிருந்ததோடு கொழும்பு ஐந்திலுள்ள ஹவலொக்ஸ் தெருவிலமைந்த 234/16ம் இலக்க வீட்டையும் நினைத்துக் கொண்டிருந்தான் சுவையோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 3

**கொ**ழும்பு 5ந்தில் உள்ள ஹவலொக்ஸ் தெருவில் மக்கள் சந்தடியும் நடமாட்டமும் குறைவில்லாமல் இருந்தபோதும் 234/16ம் இலக்க வீடு அமைந்திருந்த புதிய ஒழுங்கையில் மட்டும் மக்கள் வாடை அவ்வளவாகக் காணப்படவில்லை. ஆனால் 234/16ல் மட்டும் ஏகப்பட்ட கும்பல். எல்லாம் பெண்கள் கூட்டம். அங்குள்ள மாடிப் படிகளில் ஏறி இறங்கி நடமாடிய பலர் இளங் குமரிகளாகவே தென்பட்டனர். புதிய ஒழுங்கையால் செல்லநேர்ந்த ஒவ்வொருவரும் 234/16ஐ ஒரு தடவை பார்க்காமலப் போனதே கிடையாது. அதிலும் வாலிபக் கண்கள் அந்த இல்லத்தை இடையிடையே வட்டமிட்டன. தேனிருக்கும் இடத்தில் எறும்புகள் இடமெடுக்கும் என்று சொல்லுவார்களே, அதே போல்த்தான். ஆனால், பாதுகாப்பான இடத்திலே வைக்கப்பட்ட தேனை எறும்புகள் எப்படி அடையமுடியாதோ, அதே போன்றே 234/16ல் காணப்பட்ட இளங்குமரிகளும் காவல் பெற்றிருந்தனர். அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு மேற்றனொருத்தியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆகவேதான், ஒவ்வொரு குமரிகளிடமும் எதை எதையோ சொல்லி மிரட்டிக் கொண்டிருந்தாள் அவள். விழி பிதுங்கிப் பயத்தோடு ஒட்டியிருந்த அந்த இளம் வாலைகள் மிக்க துரிதமாகத் தமது தையல் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர் என்றாலும் அந்தத் துரிதத்திலே நுணுக்கங்கள் பல பூத்துக் காணப்பட்டன. ஏராளமான கவுண்கள், கதிரை மேசைக்குரிய விரிப்புகள், தலையணை உறைகள், ஆண் பெண் குழந்தைகளுக்குரிய உடுப்புகள் யாவும் குவிந்துகொண்டேயிருந்தன. பார்த்தால் ஆசைவரும் விதத்தில் தைக்கப்பட்டவை. இலங்கையில் தயாரிக்கப்பட்ட கைத்தறி ஆலைத் துணிகளில் ஈழத்துத் தையல்க் கலையும் சேர்ந்து அழகு புடைத்துக்கொண்டிருந்தது. 234/16ல் பிரத்தியேகத் தையல் நிறுவனம் நடத்தும் செல்வி லேக்காவுக்கு ஒரே குதூகலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது முகத்திலும் உடம்பிலும் நனைந்து குளிர்ந்து கொண்டிருந்த அந்தப் புன்னகைக் கோடுகள் அதற்குச் சான்று காட்டி நின்றன.

" பாரதி! நாளைக் காலையில் இவைகளை எடுத்துச்சென்று 'ஃபைன் ஸ்ரிச்' புடவைக் கடையில் கொடுத்துப் பணம் வாங்க வேண்டும் " என்றாள் லேக்கா தனது தடித்த குரலில்.

பாரதிக்கோ முள்ளேறிக் கால் கடுத்தது போன்ற உணர்வு. " நாளை போயா மிஸ் " பயமேறிய உள்ளத்தோடு கூறினாள் பாரதி.

" கடைக்குப் போகத் தேவையில்லை. அவர்களது வீட்டுக்குப் போனால் போதும் " கூறிமுடித்த லேக்காவின் நடையிலொரு பூரிப்பிருந்தது. நாளைக் காலையில் ஏராளமான பணத்திற்கு உரிமையாகும் நடையும் கனமும் அது. அதைக் கவனித்த பாரதியின் மூச்சு மேலெழுந்து லேக்காவின் பின் முதுகைப் பதம்பார்த்துத் திரும்பியது.

திடீரெனத் திரும்பினாள் லேக்கா. " மறந்துவிட்டேன் பாரதி. உன் ஒன்றுவிட்ட அண்ணன் நாளை வருவதாகக் கூறியது எனக்கு ஞாபகத்துக்கு வரவில்லை. இப்போதுதான் நினைத்தேன். நாளைக்கு நானே போய்வருகிறேன். அத்தோடு வேறு அலுவல்களும் பல இருக்கின்றன. எனவே நீ உனது ஒன்றுவிட்ட அண்ணனோடு பேசிக்கொண்டிருக்கலாம். " லேக்காவின் ஞாபக சக்தியைத் திருப்பிவிட்ட இறைவனை ஒரு கணம் வணங்கி நிமிர்ந்த பாரதி தனக்குள்ளாகச் சிரித்துவிட்டு வேலைகளைக் கவனித்தாள். " அரசாங்க அலுவலகமென்றால் இன்று அரை நேரம். அதிலும் சில கந்தோர்களில் தலைமைப் பீடத்திடம் சாட்டுச் சொல்லிவிட்டுப் பகல் பன்னிரண்டுக்கே புறப்பட்டு விடலாம். ஆனால் இங்கே......? " அவளது மனம் மெதுவாகப் பேசிமுடித்தபோது நேரம் ஓடி மாலை ஆறாகிவிட்டது. வேலை முடித்த இளங்குமரிகள் அனைவரும் தத்தம் வீடு திரும்பும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சென்றுவருகிரோம் மேற்றன் ", என்ற குரல் கிளப்பிச் சென்று விட்டார்கள். பாரதி தற்போது தனிமையில். சிந்தனையால் சுருட்டப்பட்ட பாரதிக்கு அன்றைய உணவும் உறக்கமும் அரை குறைதான். மறுநாள்க் காலை பாலமுரளி வருவானு என்ற எண்ண அலைகளால் தாக்கப்பட்டு நொந்த உடம்புக்குப் பூரண மான நித்திரை இருக்க முடியாதுதானே? ஒருவிதமாகக் கழிந்து விட்டது அந்த இரவு.

காலைக்குரல் கிளப்பிய புள்ளினங்களும் இளங்கதிர்வீச்சும் பாரதியைத் துயில் எழுப்பின. துடித்தெழுந்த அவளின் வேலைகள் யாவும் துரிதமாக நடைபெற்றுமுடியும்போது நேரம் 7-45. அன்றைக்குப் போயா நாளாகையால் வேலைசெய்யும் பெண் களைக் கவனிக்கவேண்டிய மேற்றன் பதவியிலிருந்தும் விடுபட் டிருந்தாள். இன்று அவள் எதிர்பார்த்திருப்பது வேலைக்கு வர வேண்டிய பெண்களையல்ல; ஆனுல் பாலமுரளியை. அன்று தான் வந்த அதே புகைவண்டியில் பாலமுரளி பிரயாணம் செய்தபோது அவனேடு பேசவேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற் பட்டதை நினைத்து நினைத்துச் சிரித்துக்கொண்டாள் அவள்.

" பாலமுரளி கறுப்புத்தான். ஆனுல் அழகான ஆண்மகன். கார்வண்ணக் கண்ணனை அச்சடித்த படங்களில் மட்டுமே காண முடிகிறது. ஆனுல் இந்தப் பாலமுரளியை நேரடியாகக் காணும் பாக்கியமே எனக்கு ஏற்பட்டுவிட்டது. என்ன அழகு. சுருள் சுருளாகக் காணப்படும் அவரின் கேசம் எந்தப் பெண்ணைத் தான் மயக்காது. அத்தோடு அந்த மென்மை இதழ்ச் சிரிப் பொன்று போதுமே எனக்கா உனக்கா என்று பெண்கள் பலர் அடிபடுவதற்கு. அதுமட்டுமா? பாலமுரளி பேசும் தமிழ்நடை.... ? எவ்வளவு அழகாகவும் சுவையாகவும் இருக்கிறது. சுவையான இலக்கியங்களில் மட்டுமே தமிழ்நடையின் அழகைக் கண்டேன். ஆனுல் பேசும் தமிழ்நடையில் ஒயில்வீசும் அழகை, இந்தப் பாலமுரளியிடந்தான் கேட்டிருக்கிறேன். இன்று வருவார்தானே? வரட்டும், " என்று சொல்லி முடித்ததற்கும் காலை மணி எட்டாவ தற்கும் சரியாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி உடுத்திருந்த சேலையில் சாம்பல் நிறப் புள்ளிகள் அழகுதீட்டியிருந்தன. அதற்கு ஏற்றுற்போல், நிறம் தீட்டிய சட்டை. அத்தோடு சாம்பல் நிறச் செருப்பும் சாம்பல் நிறக் கைக்குட்டையொன்றும் அவளின் அழகுக்கு அழகு பூசின. நாற்காலியொன்றிலிருந்து எதையோ வாசித்துக் கொண்டிருந்த போதும், பாலமுரளியின் நினைப்பு நிறைந்த அவளது கண் களும் உள்ளமும் கையிலிருந்த ஏட்டில் கவனம் செலுத்தவில்லை.

"பாரதி!" ஓசைகேட்டுத் திகைத்து நிமிர்ந்தாள் பாரதி. தடித்த அந்தக் குரல் அவளுக்குப் பாலமுரளியின் நினைவைத் தட்டிவிட்டது.

"பாரதி, நான் போய்வருகிறேன். தற்செயலாக நீர் வெளியே போக நேர்ந்தால், வாசல்க் கதவைப் பூட்டிவிட்டுச் சமைத்துக் கொண்டிருக்கும்படி சமையல்க்காரியிடம் சொல்ல வேண்டியதுதான். மறக்கவேண்டாம்." தலையசைத்த பாரதி லேக்காவைப் பின்தொடர்ந்து 'கார்' வரைக்கும் சென்று திரும்பி வாசலோடு சார்ந்து நின்றுள். அந்த நிலையைவிட்டு உள்ளே செல்வதற்கு அவளால் முடியவில்லை.

உறங்கியிருந்த நேரம் ஓடிக்கொண்டிருந்தது வேகமாக. நிம் மதியற்றுக் காணப்பட்ட பாரதி, எங்கெங்கோ அலைந்து சென்ற சிந்தனையைத் திருப்பி ஒன்றுசேர்த்துத் தனது உள்ளத்தோடு ஒட்டிவிட்டு, மூலையொன்றில் முடங்கிக்கொண்டாள். முன்னம் ஒரேயொரு வேதனையோடு இருந்தபோது கொஞ்சமாவது ஆறுதல் கிடைத்திருந்தது. ஆனுல் இப்போது...? இன்னுமொரு வேதனை யைத் தானுகவே சுமந்து வைத்திருக்கும் அவளுக்கு வேதனைச் சுமை இரண்டாகி விட்டதனுல், இதற்கு முன்னம் கிடைத்த கொஞ்சநேர ஆறுதல்கூட இப்போது இருக்கவில்லை. பத்து மணித் தேநீர் முக்காலியில் ஆறிக்கிடந்ததைக்கூட அவளால் பார்க்க முடியவில்லை. பார நெஞ்சத்தின் நினைவெல்லாம் அடங்கி நித்திரையாகிவிட்டாள் ஏழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாரதி, பாரதி,", திடுக்கிட்டெழுந்த பாரதி கண்களைக் கசக்கி முடித்தாள். "ஒன்றுவிட்ட உன் அண்ணன் போய் விட்டாரா?" செல்வி லேக்காவின் கேள்விக்குப் பதில் கூறித் தானே முடிக்கவேண்டும்?

"இல்லை மிஸ், அவர் இன்று வரவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை."

"அப்படியா? அவசிய வேலை ஏதாவது இருந்திருக்கும். அதனால்த்தான் வரவில்லைப் போலும். சரி, சாப்பாட்டை ஆயத்தப் படுத்தினால் சாப்பிடலாம். நேரம் ஒன்று."

பாரதியின் கால்கள் நடக்காமல் நடக்கின்றன. காரியம் கெட்டுவிட்டதென்ற மனப்பாரம். மூட்டை யொன்றை முதுகிலே ஏற்றிவிட்ட சுமை.

"பாரதி," திரும்பிய லேக்கா மெதுவாகக் கூப்பிட்டுச் சொன்னாள் பாரதியிடம். "இன்றைக்கு 'லிபர்ட்டித் தியேட்ட'ரில் நல்லதொரு படம். "மை ஃபெயர் லேடி". றெக்ஸ் ஹரிசன் மிகத் திறமாக நடித்திருக்கிறாராம். மூன்று மணிக் காட்சிக்குப் போகவேண்டும். சீக்கிரம் சாப்பிட்டுப் புறப்படுவோம் இரண்டு பேரும்."

செல்வி லேக்காவை எதிர்த்துப் பாரதியால் எதுவுமே சொல்லமுடியவில்லை; சொல்லவும் மாட்டாள். காரணம்? வேலையற்றிருந்த பாரதியை - ஒன்பதாம் வகுப்புவரை படித்து விட்டு வீட்டிலிருந்த அவளை பாரதியின் மாமனுடைய சிபாரிசினால் தனது தையல் நிறுவனத்தில் மேற்றன் வேலையாக்கியது செல்வி லேக்கா என்பதால்த்தான். அப்படிப்பட்டவளை எதிர்க்க முடியாத பாரதி பகலுணவை முடித்துக்கொண்டு காரில் ஏறிப் படம் பார்க்கச் சென்றுவிட்டாள். ஆனாலும் அவளது உள்ளம் படத்தைச் சுவைப்பதற்குப் பதிலாகப் பாலமுரளியின் நினைவையே சுவைத்துக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 4

நெற்றியில் காயங்களோடு கச்சேரி அலுவலகத்தில் பால முரளியைக் கண்ட அனைவரும் அவனிடம் விபரம் கேட்டன ரென்றாலும் ஏதோ சில சாட்டுக்கள் சொல்லிச் சமாளித்து விட்டான் அவன். நெற்றியில் இரண்டு மூன்று இடங்களில் பிளாஸ்டர் ஒட்டியிருந்தது. வலதுகைப் பெருவிரல் தவிர்ந்த ஏனைய நான்கிலும் இடதுகை மணிக்கட்டிலும் ப(b)ண்டேஜ். சோகம் பூசிய முகத்தோடும் பாரம் நிறைந்த நெஞ்சோடும் அன்றைய பொழுதைப் போக்கினான் பாலமுரளி.

இனிக்காத இரவும் சிரிக்காத பகலுமாக நாட்கள் ஓடின. அவனது வாழ்வில் அன்றைக்குத்தான் ஒரு மகிழ்ச்சி. சூறாவளிக் காற்றினால் அள்ளப்பட்டு மறைந்துபோகும் குப்பை கூளங்கள் போல், அவனுக்கு ஏற்பட்ட காயங்கள் மாறிக் கட்டுகள் அவிழ்ந்து விட்டனவென்றால் அவனது வாழ்க்கையில் மகிழ்ச்சியென்பது பெருக்கெடுக்காதா என்ன? அதுமாத்திரம் அவனது மகிழ்ச் சிக்குக் காரணமாயிருக்கவில்லை. பாரதியிடமிருந்து வந்த மற்றக் கடிதமும் அதற்கு ஏதுவாயிருந்தது. "சிறகெடுத்துப் பறக்கும் சிட்டாயிருந்தாலாவது அவளைப் போய்ப் பார்த்திருக்கலாமே. போயும் போயும் இறக்கையற்ற மனிதனாகப் பிறந்ததினாலல்லவா இத்தனை அவஸ்தை. அடங்கியிருந்த சோகம் அங்கங்களனைத் திலும் நஞ்சுமாதிரி ஊறி அவனை அலங்கோலப் படுத்தியபோது அவனது மகிழ்ச்சியால் என்னதான் செய்யமுடியுமோ? பால முரளி எழுதத் தொடங்கினான்.

133, புகையிரத ஒழுங்கை,
டி. எஸ். சேனநாயக்கா மாவத்தை,
கண்டி.

பாரதி,

இன்று உங்கள் மடல்பெற்றேன். பெற்றபோது மகிழ்ச்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கிலே மிதந்திருந்தேனேதவிர பூரித்த நெஞ்சோடு அதை வாசிக்கவில்லே. பாறியிருக்கும் சோகநெஞ்சில் ஏறியிருந்து வாசிக்கிறேன். என் வரவை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து, அந்த ஏமாற்றத்தினுல் ஏக்கமடைந்து, அந்த ஏக்கத்தினுல் துன்பமடைந்து, துன்பத்தின் காரணத்தால் நோய்படைத்த உள்ளத்தோடு இருப்பதாக எழுதியிருந்தீர்கள். நான் அதை மறுக்கவில்லே. உண்மையாயிருக்கும் என்பதில் எனக்கு ஐயமுமில்லே. ஆனுல், என் நிலேயைக் கேள்வியுற்றிருந்தீர்களானுல்......?

அன்று தங்களேக் காணவேண்டுமென்பதற்காக, போயா முன்தினம் மாலே ஐந்தாறு மணிபோல் கொழும்பு வந்து கோட்டையிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்தேன். அடுத்த நாள்க்காலே **7-30** மணிக்கு எழுந்து காலேக் கடன்களே முடிக்கும்போது மணி **8-30** ஆகிவிட்டது. **8-00** மணிக்கு என்னேக் காணத் துடிப்பீர்களே என்ற நினேவும் என்னேவிட்டகலவில்லே. பஸ்ஸில் ஏறினுல் ஒன்பது பத்து மணியாகிவிடும் என்ற நினேப்போடு ஒரு ராக்ஸியில் ஏறினேன். கொஞ்சம் விரைவாகப் போகவேண்டும் என்று மெதுவாகச் சொல்லி முடித்தேன். அவ்வளவுதான், மின்வேகத்தில் பறந்த அந்த ராக்ஸி, அதே பாதையால்ச் சென்றுகொண்டிருந்த மற்றெரு ராக்ஸியை விலக்கியபோது எதிரிலே தென்பட்ட தந்திக் கம்பத்தோடு படார் என்று மோதியது. "ஐயோ", என்றேன். அவ்வளவுதான் தெரியும். சில மணி நேரங்கள் கழித்து எனக்கு அறிவு தெளிந்தது. பக்கத்திலிருந்த ஒருவர் விபரம் சொன்னுர். ராக்ஸி புரண்ட இடத்துக்கு அருகில் தனது கடையிருந்தபடியால் எங்கள் இருவரையும் தனது காரில் ஏற்றிக்கொண்டு பொது வைத்தியசாலேக்கு வந்ததையும், இப்போதுதான் அறிவு தெளிந்து சாரதியும் நானும் கண்திறந்ததையும், பலமான காயங்களாயிருந்தாலும் இனி நாங்கள் பயப்படத்தேவையில்லே என்று வைத்தியர்மார் கூறிவிட்டார்கள் என்பதையும் விளக்கியபோது அவரின் நல்ல பண்பையும் அன்பையும் என்னுல் புரியமுடிந்தது என்றுலும் வைத்தியசாலேக் கட்டுப்பாட்டுக்குள் இருந்தபோது, மனித வர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திடம் அகப்பட்டுச் சிறகு துண்டிக்கப்பட்ட சிறைக் கூண்டுக் கிளியின் நிலையாகி நின்றேன் என்பதையும் நான் மறக்கவில்லை. பாரதியைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை என் மனதிலே கொடிவிட்டுப் படர்ந்திருந்தது உண்மைதான். ஆனால், நாம் நினைத்தபோது மழை இறங்குவதில்லை. கார்மேகம் கூடும்போது தான் வானம் வழங்குகிறது. அப்படித்தானே பாரதி? வைத்தியர் மாரின் உத்தரவுப்படி நாலு நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கி, ஐந்தாம் நாள் மாலை கண்டி திரும்பினேன். இப்போது கொஞ்சம் தேவையில்லை. கட்டுகள் யாவும் அவிழ்த்துவிட்டேன் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை அறியத்தரும் அதே வேளையில் காலை எட்டு மணிக்குக் கட்டாயம் காத்திருப்பேன் வாருங்கள் என்று எழுதியிருந்த தங்களின் சொல்லை அன்று காப்பாற்றமுடியாத பாலமுரளியாகிவிட்டேன் என்பதையும் சொல்லாமலிருக்க முடிய வில்லைப் பாரதி.

"காலத்தை நம்மால் வெல்ல முடியாது;
காலமே நம்மை வென்றுவிடுகிறது."

என்பதை என் வாழ்வு எனக்குக் காட்டிவிட்டது. இதை நீங்கள் நம்புவீர்களோ என்னவோ? உங்கள் அழைப்பை இம்முறையாவது பூர்த்திசெய்யலாம் என்ற ஆவலோடு எதிர்வரும் போயா உங் களைச் சந்திக்க வருவேன். மற்றவை நேரில்.

அன்பு,
**பாலமுரளி.**
**10/1**

கடிதத்தைக் கட்டிலே சேர்த்துவிட்டு விடுதிவந்த பாலமுரளியை வட்டமிட்ட எண்ணமெல்லாம் பாரதியைப் பற்றியதுதான். ஒரு பெண் தானகவே எழுதுவது அபூர்வமாயிருக்கும்போது, பாரதி கடிதமெழுதித் தன்னைவரச் சொல்லியும் தன்னால் போகமுடிய வில்லையே என்ற மனத்தாங்கல். அன்றிரவு பாலமுரளி தங்கி யிருந்த வீட்டிலே பெரிய குதூகலம்; ஒரே கலகலப்பு அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறை தவிர்ந்த மற்ற எங்கு பார்த்தாலும் சிரிப்பொலியும் 'சிகரெட்' புகையும், குடிவெறியும் கும்மாளமுமாகவே காட்சியளித்தது. அது ஒரு தமிழ் வீடு. யாழ்ப்பாணத்திலிருந்து வந்து குடியேறியவர்கள். ஆங்கில நாகரீகமே உலகம்; அதுவே சொர்க்கம் என்ற நினைப்போடு அதன் உச்சியிலே ஏறி விளையாடிக்கொண்டிருப்பவர்கள். பிறந்த நாள் வைபவங்களில் நன்றாக 'ஜாலி' பண்ண வேண்டுமென்பதே அவர்களது நோக்கம். பியரும் சாராயமும், உப்புச் சோடாவும் பொரியல் மீனும் அன்றைய வைபவத்தைக் கோலப்படுத்திக்கொண்டிருந்தன. 'பைலா' நடனங்களும் 'ருவிஸ்ட்' ஆட்டங்களும் குடிவெறிப் போதையால் நிலையிழந்து காணப்பட்டன. குமரிகளோடு குமரர்களும் நடுத்தர வயதினரும் மாறி மாறிக் கட்டிப் பிடித்து ஆடியபோதும், மணம் முடித்த பெண்களோடு அவரவர் கணவன்மாரும் அந்நிய வாலிபர்களும் முறைமாறி ஆடியபோதும் பாலமுரளியின் வெறியுள்ளம் ஒருமுறை வெளியே ஓடி மறுமுறை திரும்பிவந்து அடங்கிநின்றது. இரவு மணி ஏழு. நடைபெற்றுக்கொண்டிருந்த கோலத்தைக் காணச் சகிக்காத பாலமுரளி வேலைக்கு உறங்குவதற்காகக் கட்டிலில் சாய்ந்தபோது திடீரென வந்த தந்திச்செய்தி ஒன்று அவனைத் திக்காடவைத்தது.

தந்தியையும் எடுத்துக்கொண்டு உடனடியாகப் புறப்பட்ட அவனுக்கு நேரத்திற்குப் பஸ் கிடைத்தது மாபெரும் மகிழ்ச்சியென்றுதான் சொல்லவேண்டும்......

## அத்தியாயம் 5

" இதற்காகத்தான் இவ்வளவு அவசரமாகத் தந்தியடித்துக் கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு என்னை வரவழைத்தீர்களா?"

" ஆம் மகனே. எனக்கும் வயது அறுபது. இதற்குமேல் எத்தனை ஆண்டுகளோ, மாதங்களோ, நாட்களோ? அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் என் ஆசையொன்றிருக்கிறதே அதை நீ நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே அவசரம் வரும்படி உனக்குத் தந்தி கொடுத்திருந்தேன்." தங்கவடிவின் உள்ளத்தைப் பாலமுரளியால் புரிந்துகொள்ளமுடியாதா என்ன? மெதுவாகச் சிரித்து விட்டுச் சொன்னுன் அவன்.

" அம்மா, என்னுடைய அப்பாவின் தங்கைமகள் சித்திர வதனியைப்பற்றி முன்பெல்லாம் அடிக்கடி சொல்லுவீர்களே. அவளை உனக்குத்தான் திருமணம் செய்துவைப்போம். பால முரளிக்கும் சித்திரவதனிக்கும் நல்ல பொருத்தம். வயதுப் பொருத்தத்தோடு அழகுப் பொருத்தமும் உண்டு. முறைப்பெண். உன் இரத்த உறவான மாமியின் ஒரேயொரு செல்வம்" என் றெல்லாம் கூறுவீர்களே அம்மா. அந்தப்பெண்ணை மணம் முடிக்க நீ தயாரா என்றுதானே கேட்கப்போகிறீர்கள்?"

" மகனே..."

" அம்மா, உங்கள் ஆசியை நான் பெறவேண்டுமானுல், உங்கள் சம்மதத்தோடுதான் மணம் முடிக்கவேண்டும். சித்திர வதனிக்கும் பாலமுரளிக்கும் திருமணம் நடக்கவேண்டுமென்பது தான் உங்கள் விருப்பமென்ருல் அதைத் தட்டிக் கழிக்க நான் விரும்பவில்லை; அதுவே தெய்வசித்தம் என்று கருதுகிறேன். எனவே உங்கள் ஆசையின்படியே சித்திரவதனிக்கும் எனக்கும் திருமணம் நடைபெறுவதற்கான ஒழுங்குகளையெல்லாம் ஆயத்தம் செய்யுங்கள்" பேசிமுடித்துவிட்டு மௌனியானுன் பாலமுரளி.

ஆனுல் தங்கவடிவின் கண்களிலே நீர்த்துளிகள் படை யெடுத்துக்கொண்டிருந்தன. அவற்றை மெதுவாகத் தனது விரல் களால் துடைத்தெறிந்த பாலமுரளியின் கண்கள்கூடக் கலங்கி அழுதுநின்றன.

தங்கவடிவு கதை சொன்னுள்: " மகனே, மூன்று கிழமைக்கு முன் நானே ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவுதான் பாலமுரளிக்கும் சித்திரவதனிக்கும் திருமணம் நடைபெறக்கூடாதென்ற எனது முடிவு.

தங்கவடிவு முடிக்குமுன், "அம்மா", என்ருன் பாலமுரளி. "ஏனம்மா, தமது மகளைப் பாலமுரளிக்குத் தரமுடியாதென்று சொல்லிவிட்டார்களா மாமா மாமி?" இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை தங்கவடிவு. மௌனத்தையே கடைப்பிடித்தாள்.

"அம்மா, ஏனம்மா பேசாமலிருக்கிறீர்கள்? எம்மிடம் சொத்தில்லையா, படிப்பில்லையா, இல்லையென்ருல் உழைப் பில்லையா? சொந்த மருமகனுக்குத் தமது மகளைக் கொடுக்க முடியாதென்று மாமா மாமி சொல்லிவிட்டார்களென்ருல் அதற் கொரு காரணம் இருக்கக்கூடாதா என்ன?"

பாலமுரளியின் பொல்லாத கேள்விக்குப் பதில் சொல்லத் தங்கவடிவால் முடியவில்லை. அடிபட்ட நாகம்போல் அவள் நினைவற்றுக் கிடந்தாள்.

"ஏனம்மா மௌனம்? என் கேள்விக்குப் பதிலே இல்லையா?" மீண்டும் மீண்டும் பாலமுரளியின் கேள்வி அதுவாகவேயிருந்தது.

"முடியாதென்று நான்தான் சொல்லுகிறேன் மகனே. அவர்களல்ல .."

"அம்மா"

"அதற்கொரு காரணமும் இருக்கத்தான் செய்கிறது தம்பி"

"அப்படியானுல் சொல்லுங்கள் அம்மா காரணத்தை"

"வேண்டாம் மகனே. உன் தாயின்மேல் ஆணையாகக் கேட்கிறேன். காரணத்தை மட்டும் வேண்டாதே. காலம் வரும் போது அதை நானே சொல்லிவிடுகிறேன். அதுவரை நீ பொறுத் திருக்கத்தான் வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கவடிவின் ஆணையை மீறமுடியாத பாலமுரளி நீரில் விழுந்து கரையேறத் துடிக்கும் எறும்பின் நிலையிலே தத்தளித்துக்கொண்டிருந்தான். அந்த இரவே கண்டி புறப்படவேண்டும் போலிருந்தது...

" மகனே இந்த இரவே நீ புறப்படுவதைப்பற்றி எனக்கு எதுவித ஆட்சேபனையுமில்லை. உன் நலனுக்காக நீ போகத் தான் வேண்டும். அவசரமில்லாமல் லீவு எடுத்து உன் வருங் காலத்தைப் பாழாக்கிக் கொள்ளாதே. நானும் இன்றோ நாளையோ... ; அதற்குமுன் உன் திருமணத்தைக் கண்டு களிக்க வேண்டும் என்பதே எனது ஒரே ஆசை. எனக்கிருப்பது நீ ஒருத்தன் தான். உன் அப்பாவும் நானும் சேர்ந்து எமது சொத்தெல்லாம் உனக்கே எழுதிவிட்டோம். ஆனபடியால், பொருளைப் பற்றி எந்தவித கவலையும் உனக்கு வேண்டியதில்லை. அழகான வீடு, பொருள் வளமுள்ள காணி, தேங்காயும் மாங்காயும், வாழையும் பலாவும் போதுமே நீ உழைக்காமலிருந்து சாப்பிடுவதற்கு. ஆனால், எல்லாம் இருந்தும் எங்கள் ஊரில் உறவில் உனக்கொரு பெண்ணில்லையே என்ற கவலைதான் எனக்கு "

" அம்மா... "

" ஆனபடியால்த்தான் சொல்லுகிறேன் மகனே, நீ விரும்பிய எந்தப் பெண்ணையும் கொண்டு வந்து எனக்கு அறிமுகம் செய்துவை. ஆனால், தமிழ்ப் பெண்ணாகவே இருக்கட்டும், அவளையே உனக்கு மனைவியாக்கி என் அன்புக்குப் பாத்திரமான மருமகளாக்கிவிடுகிறேன்."

தங்கவடிவு சொன்ன இத்தனை வார்த்தைகளும் போதுமே பாலமுரளியைச் சொர்க்கத்தில் சேர்க்க. எல்லாம் அவனுக்குக் கனவுலகமாகக் காட்சியளித்தது. அடுத்துவரும் போயா நாள் வரை தாயோடு தங்குவதென்ற முடிவுக்கு வந்துவிட்டான். நாட்கள் ஓடின. ஒவ்வொரு நாளும் அவனது தாய் கூறிய வார்த்தைகளே அவனது நினைவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய விருப்பத்தைத் தட்டாமல், தனக்குக் கலி யாணம் செய்துவைக்கத் தனது தாய் சம்மதித்ததை ஆச்சரியத் திலும் ஆச்சரியமென்றே கருதினான். ஆதிசைவக் குடும்பமொன்று, அதிலும் அந்தஸ்தில் மிக மிக உயர்ந்து விளங்கிய பரம்பரை, வயலும் வளவும் சொந்தமாக வைத்து ஆளும் இனம், தனது உறவு விட்டு இனம்விட்டு எங்காவது ஒரு தமிழ்ப் பெண்ணைப் பார்த்துச் சொல் அவளையே கட்டாயம் கட்டிவைப்போம் என்று சொல்லுகிறதென்றால், ஆச்சரிய வியர்வைகள் படராதா என்ன ?

" சித்திரவதனி என்னைக் கலியாணம் செய்வதை எதற்காக அம்மா விரும்பவில்லை...... ஏதோ ஒரு காரணம் இருக்கிறது என்று சொன்னாரே என் தாயார், அதை எப்படியாவது அறியத் தான் வேண்டும். அம்மாதான் வேண்டாமென்றாரா இல்லை யென்றால் மாமா மாமிதான் என்னை வேண்டாமென்றார்களா, அதுவுமில்லையென்றால் சித்திரவதனிக்குத்தான் என்னைப் பிடிக்க வில்லையோ ? கண்டி திரும்புமுன் காரணத்தை அறியாமல் விட மாட்டேன் " என்ற சிந்தனையில் மூழ்கி ஒருவாறு நித்திரையாகி விட்டான் பாலமுரளி.

## அத்தியாயம் 6

**பா**லமுரளி யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது அடி மரத்தைப் பெயர்த்துவீசும் சூறுவளி படையெடுத்துக் கொண் டிருந்தது. ஒரு மணி நேரம் வரை அது வீறடித்து முடித்த போதுதான் பாலமுரளியின் உள்ளத்திலும் சில கேள்விகள் வீறடித்தன.

" சித்திரவதனிக்கும் எனக்கும் திருமணம் நடைபெறுவதை எதற்காக அம்மா விரும்பவில்லை. அதற்கான காரணத்தை ஏனோ மறைக்கவேண்டும்," என்றெல்லாம் அலைஅலையாக எழுந்த கேள்விகளுக்கு விடை காண வேண்டுமே ? மெதுவாக எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றான் அவன். "வேளைக்கே படுத்துறங்கியிருக்கும் உன் அம்மாவுக்குத் தெரியப்படாது" என்றது மனம். விரைவாக நடந்தான். சூறாவளியின் வேகத்தோடு நடந்துகொண்டிருந்த அவனின் உள்ளத்திலும் ஒரு வேகம்.

சித்திரவதனியின் வீட்டை அடையும் போது இரவு நேரம் ஒன்பது முப்பதாகி விட்டது. கதவு பூட்டிக் கிடந்தது. "ஏன் பூட்டிக் கிடக்கிறது கதவு; ஒருவேளை, எங்காவது போயிருப் பார்களோ மாமா மாமி? போவதானால் ஏதாவது படம் பார்க்கச் சென்றிருப்பார்கள். ஆனால், சூறாவளி வீசிய இந்த நேரத்தில் எப்படித்தான் துணிந்து சென்றார்களோ? ம்...... சூறாவளி தொடங்கும்போது இரவு எட்டரைதானே. ஆனால் படம் தொடங் கும் போது மணி ஆறு முப்பது தானே? சரி சரி......, எதற்கும் இன்னுமொரு அரை மணி நேரம் பார்க்கலாம். பத்து மணிக்கும் வராவிட்டால்......?"

மனத்தோடு பேசிமுடித்துவிட்டுக் கதவோடு ஒட்டி நின்றான் பாலமுரளி. திடீரென ஒரு மின்னல் அவனது கண்களை ஊடறுத் துச் சென்றது. ஏறெடுத்தான் வானத்தைப் பார்ப்பதற்காக. ஒரே இருள். சூழ்நிறைந்த கார் மேகம் மழையைக் கொட்டிக்கொண் டிருந்தது. கடுமையான வெள்ளம். ஓடியநேரம் இரவு பத்தரை யைக் காட்டிநின்ற போது பாலமுரளி திகைத்தான். கொட்டும் மழையில் நனைந்துபோகவேண்டிய நிலையேற்பட்டது. அவனது முழு உடம்பும் நனைந்து ஒரே தண்ணீர்க்குளம்.

தங்கவடிவுக்கு எதுவுமே சொல்லாமல் படுத்துறங்கிய பால முரளியைத் தங்கவடிவு துயில் எழுப்பும்போது காலை மணி எட்டு. அவளுக்கு ஒரே ஆச்சரியம். அதற்குக் காரணமில்லாமலில்லை. பாலமுரளிக்கு 101ல் காய்ச்சல் ஏற்பட்டதென்றால் அவளுக்கு ஆச்சரியம் வராதா என்ன? ஒரு 'பில்' டிஸ்பிறின், ஒரு போத்தல் பேயாவா இரண்டும் பாலமுரளியின் காய்ச்சலை ஓரள வுக்குக் குறைத்துவிட்டபோதும் தங்கவடிவின் மனதிலே நிம்மதி யேற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஆமாம், உனக்கு எப்படி மகனே காய்ச்சல் வந்தது? மத்தியானம் வெய்யிலில் அலைந்துவிட்டுக் குளித்தாயா? இல்லா விட்டால் எங்காவது போய் மழைத்துளியில் நனைந்தாயா?"

பாலமுரளி பேசவில்லை. ஆனாலும் தங்கவடிவோ விடவில்லை. காய்ச்சல் வந்த காரணத்தை அறியத் துடித்தாள் அவள்.

பாலமுரளியின் தலையசைந்தது. " நேற்றிரவு நான், சித்திர வதனியின் வீட்டுக்குப் போயிருந்தேன். அவர்கள் அங்கில்லை. வீடு பூட்டிக்கிடந்தது. சிறிதுநேரம் அங்குநின்று அவர்களது வருகைக்காகக் காத்திருந்தபோது திடீரெனக் கொட்டும் மழை யொன்று பெய்தது. மணி பத்தரை. மழை விடும்வரை காத் திருந்தால் நீங்கள் ஒருவேளை எழும்பி என்னைக் காணாது ஏங்கித் தவிப்பீர்களே என்ற நினைவோடு மழையில் நனைந்தபடி வந்தேன். அதுதான் காரணமம்மா", என்று சொல்ல முடிந்ததா அவனால்?

" இல்லையம்மா," என்ற குறிப்பை மட்டும் காட்டிவிட்டு மௌனியானான் பாவம்.

" ஒருவேளை நேற்றுப் பெய்த திடீர் மழையினால் ஏற்பட்ட சுவாத்திய மாற்றமோ? இல்லையென்றால் எதற்காகக் காய்ச்சல் வரவேண்டும்?" என்று கூறிய தங்கவடிவு வைத்தியரிடம் போகப் புறப்பட்டாள் பாலமுரளியோடு.

பாலமுரளிக்கு ஒரே பயம். " டொக்டர் திடீரென ஏதாவது குறுக்குக் கேள்விகளைக் கேட்டு உண்மையைத் தெரிந்து கொண்டால், எனது இரகசியம் அம்மாவுக்கு அம்பலமாகிவிடுமே," என்ற மனப்பீதி. டொக்டரிடம் உண்மையைச் சொன்னால்த் தானே எதற்கும் நல்ல மருந்துகொடுத்து நோயை மாற்றமுடியும் அவரால். சில நோயாளிகள் தமது உண்மையான வருத்தத்தை மறைப்பதினால்த்தான் டொக்டர்மார் சிலரால் சில நோய்களைத் தீர்க்க முடியாமல்ப்போய்விடுகின்றது, என்பது எனக்குத் தெரியாதா என்ன? " எதற்கும் உண்மை சொல்வதே சிறந்தது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உறுதியோடு நடந்ததைக் கூறினன் பாலமுரளி. அவன் ஆங்கிலத்தில் சொன்னவற்றைத் தங்கவடிவால் புரிந்துகொள்ள முடியவில்லை.

" டொக்டர், அம்மாவுக்கு மட்டும் இந்த உண்மை தெரியக் கூடாது. தெரிந்தால் ஏச்சுத்தான் கிடைக்கும் " என்று பால முரளி ஆங்கில வார்த்தைகளைக் கக்கியபோது வாய்விட்டுச் சிரித்து விட்டார் டொக்டர். தாய்தந்தையரின் அன்புக்கு அடங்கி நடக்கும் பிள்ளைகளின் பெருந்தன்மை அவருக்குப் புலப்பட்டது.

தங்கவடிவும் பாலமுரளியும் வீடுதிரும்பினர்கள். வழியிலே மக்கள் சந்தடியும் கலகலப்பும் வழிப்போக்கர்களைக் கவர்ந்து கொண்டிருந்தன. எல்லோர் வாய்களிலும் சூருவளியைப் பற்றிய பேச்சுத்தான். இரைச்சலைக் கக்கிக்கொண்டிருந்த அந்தச் சூரு வளியின் அட்டகாசம் பல வீடுகளை உடைத்துவிட்டதையும், பல சுவர்கள் இடிந்துவிழுந்ததினல் பால்மணம் மாருத சிசுக்கள் சில அதன் அட்டகாசத்திற்குப் பலியானதையும், சில மரங்க ளின் கிளைகள் முரிந்து விழுந்து வீதியிலே போய்க்கொண்டிருந்த நாலைந்து பேருக்குச் சேதம் விளைவித்ததையும், பயன்தந்து கொண்டிருந்த பல வாழைமரங்கள், மாமரங்கள், பலாமரங்கள், முருங்கைமரங்கள் யாவும் முரிந்ததினல் அந்தப் பயன் வீணகிப் போய்விட்டதையும் பற்றி அலசிக்கொண்டிருந்தனர்.

" என்ன கொடுமை என்ன அக்கிரமம்," என்றனர் சிலர்.

" நாட்டில் அமைதி குலைந்து, தங்களுக்குள் தாங்களே அடிபட்டு ஒரு சிலர் நசுக்கப்படுவதைப் பொறுக்காமல்த்தான் இயற்கைகூட அவர்களைப் பழிவாங்க முனைந்துவிட்டது." என்றனர் சிலர்.

" அதற்காக ஏதுமறியாத சில பாலகர்களைக் கூடவா பழிவாங்க வேண்டும் இந்த இயற்கை ?" என்றனர் வேறு சிலர்.

" அப்படிப் பழிவாங்கப்படும்போதுதான் அட்டூழியஞ்செய்யும் அக்குழந்தைகளின் பெற்ருேரோ உறவினரோ அதை உணர்ந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது தீய, கொடிய, மனிதத்தன்மைக்கு அப்பாலப்பட்ட மிருகச் செயல்களை இனிமேலாவது செய்யமாட்டோம் என்று வாக்குத் தத்தம் செய்கின்றனர்," என்றனர் இன்னும் சிலர்.

" ஒன்றுமறியாத பல ஏழைக் குடும்பங்களின் குடிசைகள் சுவர் இடிந்து விழுந்ததினால் சில உயிர்கள் நம்மைப் பிரிந்து விட்டனவே" என்றனர் மற்றுஞ் சிலர்.

' ஒன்றுமறியாத சில சிசுக்களின் உயிரைப் பறிப்பதற்கு எப்படித்தான் இந்த இறைவனுக்கு மனம் வந்ததோ," என்றனர் இரக்க சிந்தையுடைய பலர்.

" எனது வீட்டுக்கூரை எங்கு போனதென்றே எனக்குத் தெரியவில்லை. சென்ற ஆண்டு கட்டின அமெரிக்கன் 'ஃபஷன்' வீடு. இனி அதற்கும் ஒரு செலவு ஏற்பட்டுவிட்டது," என்றனர் இன்னுமொரு சாரார்.

" பயன் தந்துகொண்டிருந்த கனிமரங்கள் முறிந்ததினால் இரண்டாயிரம் ரூபா மட்டில் நட்டமாகிவிட்டது," என்றழுதனர் கமக்காரக் கூட்டத்தினர்.

இப்படியே பலவாறு பேசிக் கூட்டம் கூடிய மக்களிடம் சூறுவளியின் அட்டகாசத்தையும், தீயவர்களுக்கும் கள்ளவழியில் பணம் சம்பாரிக்கும் சிலருக்கும் போதித்த பாடத்தையும் அறிந்து கொண்டு வீடு சேர்ந்தான் பாலமுரளி தனது தாயோடு. வீடு சேர்ந்து கட்டிலில் படுத்திருந்த பாலமுரளியை வட்டமிட்டன பாரதியின் நினைவுகள். எழுதத் தொடங்கினுன் உடனடியாக.

4, மணல் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

பாரதி,

யாழ்நகரிலிருந்து இக்கடிதத்தை வரைகிறேன். சென்ற முறை ஏமாற்றியதுபோல் ஏமாற்ருமல் இந்தப் போயாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவ்விடம் வருவதாக முடிவு செய்திருந்தேன். ஆனுல் அம்மா விடமிருந்து வந்த திடீர்த்தந்தி என்னை யாழ்நகர் வரச்செய்து விட்டது. என்ன செய்வது ?

" காலத்தை நம்மால் வெல்லமுடியாது
காலமே நம்மை வென்றுவிடுகிறது ",

இந்த முறையும் அதற்கு நான் பலியாகிவிட்டேன். அடுத்த போயா உவ்விடம் வர முயற்சிக்கிறேன். எனக்காகக் காத்திருக்கவும்.

அன்பு,
**பாலமுரளி.**
**1/2**

கடிதத்தைக் கட்டிலே சேர்த்துவிட்ட பாலமுரளி அடுத்து வரும் போயாவை எதிர்பார்த்திருக்கிருன் பாரதியைச் சந்திக்க என்பதை மறுக்கமுடியுமா ?

## அத்தியாயம் 7

முறுக்கேறிய கதிர்களோடு வானத்திலே ஒளியேற்றிக் கொண்டிருந்தான் சூரியன். காலை மணி எட்டு செல்வி லேக்கா தனது காரில் ஏறி வெளியே போய்விட்டாள். மேற்றன் பாரதியின் முகத்திலே ஈயாடவில்லை. பாலமுரளி வந்துசேரும்வரை அவள் மனதிலே சாந்தி இல்லை. கடவுளை வேண்டிக்கொண்டாள் ஒவ்வொரு விஞடியும்.

" பாலமுரளிக்கு எதுவித ஆபத்தும் நேரக்கூடாது. சென்ற முறை நடந்ததெல்லாம் இந்தமுறை நடக்கக்கூடாது. உனக்கு எத்தனை தேங்காய் வேண்டுமானுலும் உடைத்துவிடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனுல் பாலமுரளியை மட்டும் சிக்கலுக்குள் ஆக்கி என் உள்ளத்தை உடைத்துவிடாதே "

அவளது பிரார்த்தனை வெள்ளத்திலும் ஏதோ ஒரு சலனம். மெதுவாக மணியைப் பார்த்தாள். அவள் அணிந்திருந்த கைக் கடிகாரம் எட்டைடந்து காட்டிநின்றது.

" பாரதி, பாரதி!" தன்னைக் கூப்பிடும் ஓசை கேட்டு நிமிர்ந்த பாரதியின் நேரிலே பாலமுரளி. என்ன செய்வதென்று தெரிய வில்லை அவளுக்கு. "நீங்களா?" என்ருள். "ஒன்றும் உங்க ளுக்கு ஆகிவிடவில்லையே" என்றது அவளது பெண்மைக் குரல்.

பாரதியின் அக்கறையுள்ளத்தை உணர்ந்து கொண்டான் பாலமுரளி.

" இல்லைப் பாரதி, நீங்கள் மட்டும் சுகந்தானே ?" என்ருன் அமைதியாக.

" சுகந்தான் ; ஆனுல் உள்ளத்திலே முறுக்கேறியிருக்கும் சோகக் கயிறுதான் இன்னும் அறுந்துவிடவில்லை. " என்ற குறிப்பு வெளிப்பட்டது பாரதியிடமிருந்து.

" வாருங்கள். எனது அறையிருக்கிறது. அங்கிருந்து பேசலாம் .. " சொல்லிவிட்டு மாடிப்படிகளில் ஏறித் தனியறை யொன்றுள் நுழைந்த பாரதியைப் பின்தொடர்ந்தான் பாலமுரளி.

" ஆமாம். இந்த வீட்டிலிருக்கும் லேக்காவைப்பற்றிச் சொல்லுகிறேன் நேரில் என்று எழுதியிருந்தீர்களே, அவரைப் பற்றி அறியலாமா ?"

" செல்வி லேக்கா ஒரு சிங்களப்பெண். மிக்க நல்லவள். மற்றவர்களுடைய நிலையறிந்து நடக்கக்கூடிய ஒருத்தி. சேர்ந்த வர்களுக்கு உயிரையும் கொடுக்கக்கூடியவள் ; உயர்ந்த குண முள்ளவள். அவளது தையல் நிறுவனத்தில் வேலைபார்க்கும் பெண்கள் அனைவரும் நல்ல மனதோடு உழைத்து இந்த நிறுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்திற்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அவளது உயர்ந்த குணத்திற்கு வேறு சான்றுகளும் வேண்டுமா? உயர்ந்த குணமுள்ளவள் என்பதோடு மட்டும் நிறுத்திவிடுவதற்கில்லை. அதற்கேற்றாற்போல் அழகியுந்தான். மாதுளை நிறந் தீட்டிய மேனி என்றால்கூட அது கற்பனையாகாது. பார்ப்பதற்கு முப்பது முப்பத்திரண்டு வயதுப் பெண்போலவே காட்சியளிக்கும் அவள் இன்னமும் மணம் முடிக்கவில்லை என்பதுதான் ஒரேயொரு குறை."

"ஏன் மணம்முடிக்கும் நோக்கமே அவளுக்கில்லையோ?"

"இல்லையென்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், அவரின் வயது இப்போது நாற்பத்தைந்து." பாரதியின் வார்த்தைகளை ஆமோதித்தான் பாலமுரளி. "ஆண்களென்றால் நாற்பத்தைந்தென்ன, ஐம்பதில்கூட அவர்களின் ஆண்மை கொஞ்சமாவது இருக்கத்தான் செய்கிறது. ஆனால், பெண்களுக்கு நாற்பத்தைந்து வயது வந்துவிட்டால் அவர்களிடம் பெண்மை அற்று, அதற்குப்பதிலாக வெறுமைதான் நிலவும். ஏதோ ஆயிரத்தில் ஒரு பெண் மட்டும் நாற்பத்தைந்து நாற்பத்தாறு வயதில் பிள்ளையைப் பெறும் பிராப்தத்தோடு காணப்படுகிறாள். அப்படித்தானே பாரதி?"

"உலகத்தை ஏறி இறங்கிப் பார்க்கும் ஆண்களைவிடவா எமக்கு அதிகம் தெரியப்போகிறது?"

"சரிசரி அதுபோகட்டும். இங்கு ஆண்களே இல்லையா?"

"இல்லை"

"அப்படியானால் இரவு நேரத்தில் தற்செயலாக ஒரு ஆண் உள்ளே புகுந்துவிட்டால்...?"

"ஆபத்துத்தான்"

"அதற்காகத்தான் பெண்ணுக்குத் துணை தேவை; துணையில்லாமல் வாழமுடியாது என்கிறார்கள் வலிமை நிறைந்த ஆண்கள். புரிகிறதா பாரதி."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிகிறது. ஆனுல், ஆண்களில் எல்லோரையும் வலிமை நிறைந்தவர்கள் என்று சொல்லிவிடாதீர்கள். சில பயந்தாங் கொள்ளிகளும் பதுங்கி நடுங்கும் அப்பாவிகளும் இருக்கத்தானே செய்கிருர்கள்."

அவர்களுக்குப் பதிலாகத்தான் செல்வி லேக்கா போன்ற தைரியசாலிகளும் பெண்களுள் இருக்கிருர்கள் என்று சொல்லப் போகிறீர்களா பாரதி ?"

"செல்வி லேக்கா உண்மையிலே எவருக்கும் பயப்படாத ஒருத்திதான். ஏன் தெரியுமா? அன்ருெரு நாள் ஒரு கள்வன் திடீரென இந்த வீட்டுக்குள் புகுந்தபோது நாமெல்லாம் நடுக்கத் தால்க் குளறிவிட்டோம். ஆனுல் செல்வி லேக்கா மட்டும் துப் பாக்கியை எடுத்து மேல்நோக்கிச் சுட்டதுதான் தெரியும். கள்வன் எந்தப்பக்கத்தால்ப் பறந்தானே தெரியாது......"

"நல்லது. அந்தக் கதையை விட்டுவிட்டு நமது உரை யாடலுக்கு வருவோம் பாரதி......" உரையாடல் இடம்பெற்றது. தனது வாழ்க்கையைச் சொல்லி முடித்தாள் பாரதி. கண்கள் இரண்டும் கலங்கி நின்றன. சோகத்தின் உச்சியிலே ஆடிக் கொண்டிருக்கும் பாரதியைப் புரிந்துவிட்டான் பாலமுரளீ......

"அப்படியா பாரதி. உங்கள் சோகவரலாற்றையும் குடும்பத் தொல்லையையும் என்னுல்ப் புரியமுடிகிறது. வாழ்க்கையென்ருல் பசுமைநிறைந்த புல்த்தரையாக என்றைக்கும் இருக்கமுடியாது என்பது கண்கூடு. கல்லும் காலைக் குத்தும் முள்ளும் நிறைந் தடர்ந்த காட்டு நிலமாக உங்கள் குடும்பம் இருப்பதைக்கண்டு நான் பரிதாபப்படுகிறேன். ஆனுல் அதற்கான பரிகாரம்தான் தேடமுடியவில்லை. என்ன செய்வது ? இறையோ இயற்கையோ நம்மைத் தண்டிக்கும்போது அத்தண்டனையைப் பெற்றுத்தாஞக வேண்டும்." சோகத்தோடு பேசிமுடித்தான் பாலமுரளி......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தண்டனையைப் பெறவேண்டியவள் என்பதனால்த்தான் இப்போது ஆறியிருக்கிறேன் கொஞ்சமாவது. என் எழுத்து எப்படியோ அப்படியே நடக்கட்டும்," பாரதியின் நம்பிக்கையை வரவேற்றான் பாலமுரளி.

" பாரதி, தலைவிதியும் காலமும் நம்மை ஆட்டிப்படைக்கிறது என்பதை நான் மட்டுமல்ல நீங்களும் அனுபவிக்கிறீர்கள். எனவே அழாமல் ஆகவேண்டியதைக் கவனிக்கவேண்டியதுதான் நமது பொறுப்பு." பாலமுரளி உறுதி கூறியபோது பாரதி தனது கண்ணீரைத் துடைத்தெறிந்தாள்.

" ஆமாம், நீங்கள் என்னோடு பேசுவதைக்கண்டு யாராவது சந்தேகித்தால் ......?" மெதுவாகக் கேட்டான் பாலமுரளி.

" அதற்காகத்தானே அடிக்கடி கடிதம் எழுதி உங்களை வரும்படி கேட்டிருந்தேன். புரிந்திருக்க வேண்டிய நீங்களே இப்படிக் கேட்டால்......?" புதிரைக் கிளப்பிவிட்டாள் பாரதி.

" புரிந்திருக்கவேண்டிய நான் என்றீர்களே, எனக்கென்றால் நீங்கள் சொல்வது புரியவில்லைப் பாரதி."

அப்படியானால் புரியவைக்கவேண்டும் என்கிறீர்களா ?

' ஆமாம்...... "

" சொல்லுகிறேன். உங்களுக்கு யாராவது சிநேகிதிகள் இருக்கிறார்களா ?" கேட்ட கேள்விக்குப் பதில் கூறாமல் இதழில் ஏற்றிய சிரிப்பை மட்டும் கக்கிக் கன்னத்தை வீங்கவைத்த பாலமுரளியின் பதிலுக்காகக் காத்துநின்றாள் பாரதி.

" சொல்லத்தான் வேண்டுமா பாரதி? "

" அதற்காகத்தான் கேட்கிறேன்." அப்படியானால் சொல்லு கிறேன். சிநேகிதிகள் எனக்குப் பலர் இருக்கிறார்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன ?" பாரதியின் அவலக் குரலும் கனத்த நெஞ்சும் பாலமுரளியை ஒரு குலுக்கிக்குலுக்கி நிமிர்த்தியது.

"அடேயப்பா இந்தப் பெண்களின் குணமே ஒரு தினுசு தான். சிநேகிதிகள் என்றால் காதலிகள் என்பது பொருளல்லவே. யார் யாரில் அன்பாயிருக்கிறோமோ அத்தனை பேரும் சிநேகிதிகள் தான். அர்த்தத்தை நன்றாகப் புரியாமல் ஏனோ இப்படி முகத்தை முளம் நீட்டித் திசை திருப்ப வேண்டும் தெரியவில்லை."

"கேலிப்பதில் கேட்க நான் வரவில்லை. உண்மையைக் கேட்கவே விரும்புகிறேன். சொல்லுங்கள், உங்களுக்கு யாராவது ...... ?"

"யாராவது... ம்... பாரதி !... பாரதி !! ஏன் இந்த மௌனம் ? சொல்லுங்கள் மீதியை".

"சொல்லுகிறேன்... உங்களுக்கு... உங்களுக்கு..." பாரதி யால் வார்த்தைகளை இழுக்க முடிந்ததே தவிர இறுதிக்கு வர முடியவில்லை.

பாரதி இழுத்த தோரணை புரிந்துவிட்டது பாலமுரளிக்கு. அவன் ஆண். அதிலும் பருவக் காளை. விளங்காதா என்ன ?

"நானே சொல்லிவிடுகிறேன் பாரதி... எனக்கொரு காதலி யிருக்கிறாள்...

என்ன ?

"அவள் பெயர்... அவள் பெயர்...... ?

"சொல்லுங்கள்... அவள் பெயர், அவள் பெயர்... ஏன் நிறுத்திவிட்டீர்கள் ?"

"நிறுத்தத்தான் வேண்டும் பாரதி. எதையும் நான் ஆலோசித்துத்தான் சொல்லவேண்டும். அடுத்த போயா உங்களைச் சந்திக்கவருகிறேன். அப்போது என் பதிலை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். நான் வரட்டுமா ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" புரிகிறது. இந்த நொண்டியை எப்படிப் பெண்கொள்ள முடியும்... இவளா என் மனைவியாகவேண்டும்? என்பதுதானே உங்கள் சிந்தனை "

" பாரதி... "

" அழகற்ற இவளுக்கு நான் கணவனாக இருக்கமுடியுமா? போயும் போயும் இந்த நொண்டிப் பெண் பாரதி என்னைக் காதலிப்பதற்கு என்ன தகுதியுடையவள்? என் பக்கத்தில் நின்று பேசுவதற்கே அருகதையற்ற இவள் என்னைப் பார்த்து இப்படிக் கேட்கிறாளே; என்ன தைரியம், என்ன துணிச்சல்? என்று நினைக்கிறீர்களா? "

பாரதியின் நீண்ட சொற்பொழிவைக் கேட்டு ஒரு கணம் திகைத்து நின்றானே தவிர, பாலமுரளியால் பேசமுடியவில்லை. எதைச் சொல்வதென்றே அவனுக்குப் புரியவில்லை. நிமிர்ந்து பார்த்தான் பாரதியை.

பாரதியின் கண்களிலே ஊற்றுநீர். படையெடுத்துக் கன்னத்துப் பக்கங்களை வீங்கவைத்த அந்த ஊற்றுநீர் அவனையும் கலக்கிநின்றது... " பாரதி, உங்கள் எண்ணம், ஆவல், உறுதி இவைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லையே பாலமுரளியால் என்று நினைக்காதீர்கள். என்னால் உங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனாலும் எனக்கு ஒரு கிழமை அவகாசம் தர வேண்டும். " மெதுவாகக் கூறிமுடித்தான் பாலமுரளி.

" உங்கள் விருப்பத்தை நான் தடைபோடமுடியாது. ஆனால் ஒன்றுமட்டும் சொல்லுகிறேன். இதுவரை எந்த ஆண்மகனையும் நான் விரும்பியது கிடையாது. உங்களைத்தான் முதன்முதலில் விரும்பியிருக்கிறேன். அதற்குக் காரணம், அன்று நான் வந்த புகைவண்டியில் என்னைக் கண்டு பல அறிவுரைகள் வழங்கி அன்புமொழி பேசினீர்கள்; எனது துயரத்தையும் துன்பத்தையும் ஆற்றித் தேற்றினீர்கள் என்பதற்காகத்தான். அன்றுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களிடம் என் மனதைப் பறிகொடுத்தேன். இனி உங்கள் சித்தம். போய்வாருங்கள்."

விடைபெற்றுச் செல்லும்போது பாரதியின் பிறந்த தேதியை யும் பெற்றுச்சென்ருன் பாலமுரளி. அவனையே பார்த்துநின்ற பாரதி அடுத்த போயா வரப்போகும் பாலமுரளியின் பதில் எது வாக இருக்கும் என்பதை மட்டுமே சிந்தித்திருக்கிருள் என்ருல் அது பொய்யாகுமா?

## அத்தியாயம் 8

**நா**ட்கள் ஓடிக்கொண்டிருந்தன. அன்று போயா முன் நாள். நேரம் நண்பகல் ஒன்று. கச்சேரி அலுவலகத்தில் தனது வேலைகளையெல்லாம் முடித்துவிட்ட பாலமுரளியின் எண்ணத்திலே பல சிக்கல்கள். பாரதிக்கு என்ன விடைகொடுக்க வேண்டும்? சாதகமாகவா பாதகமாகவா என்ற முடிச்சோடு போராடிக்கொண் டிருந்தான் அவன். "நாளைக் காலை எட்டு மணியளவில் எனது வரவைக் கட்டாயம் எதிர்பார்த்திருப்பாள் பாரதி" என்ற எண்ணம் அவனை விட்டகலவில்லை. 'சரி சரி, எதற்கும் முதலில் கொழும்பு புறப்படுகிறேன். இன்னும் பல மணி நேரம் இருக் கிறதுதானே? அந்த நேரத்தில் எனது முடிவு ஒரு உறுதிக்கு வரட்டும்", என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டான் கொழும்பு நோக்கி.

மூன்று மணி நேரம் ஓடிக்கொண்டிருந்தது கண்டி - கொழும்பு பஸ். நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தி ஓடவேண்டிய நேரமெல்லாம் ஓடிக்கொண்டிருந்த அந்த பஸ்ஸின் ஒரு மூலையில் பாலமுரளி...... ஏறுகின்றவர்களையோ இறங்குகின்றவர்களையோ கவனிக்கமுடியாத வகையில் அவனை ஆழ்த்திவிட்டது பெரிய தோர் சிந்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை மணி நாலு முப்பது... நண்பகல் ஒன்றரை மணிக்குக் கண்டியை விட்டுப் புறப்பட்ட அந்த வண்டி கொழும்பு நிலையத்தை அடைந்ததும் பாலமுரளி இறங்கிக் ஹோட்டல் ஒன்றுக்குள் புகுந்தான். தங்கியிருந்த அந்த இரவு முழுவதும் ஒரே சிந்தனை. "ஆம் அல்லது இல்லை என்று ஒரு நொடியில் சொல்லக்கூடிய பதிலுக்காக எத்துணை சிந்தனை" என்றது அவனது உள்ளம். உள்ளத்தோடு போராடி முடித்து நித்திரை யாகிவிட்ட பாலமுரளியை வைகறைப் பொழுது நித்திரை விழிக்கச் செய்தது. நேரம் ஓடிக் காலை எழு அடித்து முடிந்தது. காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஹவலொக்ஸ் தெரு வந்தடைந்த போது நேரம் எட்டரை.

பாரதியின் கண்களிலே பாலமுரளி. "வந்துவிட்டீர்களா?"

வந்துவிட்டேன். ஆமாம், செல்வி லேக்கா இல்லையா?"

"வெளியில் போய்விட்டார். மாலை ஆறு மணிக்குத்தான் வருவார்."

"அப்படியா?"

"வாருங்கள், அறையில் இருந்து பேசலாம்..."

பாரதியைப் பின்தொடர்ந்த பாலமுரளி அங்கிருந்த கதிரை யில் அமர்ந்து கொண்டான். பாரதி அவனுக்கு எதிர்நேரில்.

ஆமாம், என்ன முடிவோடு வந்திருக்கிறேன் என்று சொல்ல முடியுமா பாரதி?"

என் நினைவுக்கு ஏற்றுல்ப்போல் உங்கள் முடிவைத் திருப்பு வதற்கு நான் என்ன இறையா இயற்கையா?"

"எனக்கொரு காதலி இருக்கிறுள் என்று சொன்னேனே அன்று. அவளின் பெயரைத்தான் சொல்லப்போகிறேன் இன்று."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நல்லது. சொல்லுங்கள். என் வாழ்க்கையை நினைத்துப் பூரிப்படையாவிட்டாலும் உங்கள் இன்பத்தைக் கேட்டாவது களிப்படைகிறேன். சொல்லுங்கள்."

" சொல்லுகிறேன். அதற்கு முன் கொஞ்சம் குளிர்ந்த நீர் தாருங்கள். தாகம் எடுக்கிறது."

பாரதி நெல்லிரசம் கொடுத்தபோது அதை எடுத்து பருகித் தனது தாகத்தைத் தீர்த்துக்கொண்ட பாலமுரளி " இது தோலை கட்டி நெல்லிரசமா ?" என்ருன்.

" ஆம் " என்று தலையசைத்த பாரதி " உங்கள் காதலியின் பெயரைச் சொல்லுங்கள் " என்ருள்.

" என் காதலியின் பெயர், சொன்னுல் அதிர்ச்சியடைய மாட்டீர்களே ?"

" இல்லை. அந்த அளவுக்கு என்னை நான் கல்லாக்கிக் கொண்டேன். விறைத்திருக்கும் என் உள்ளத்தில் அதிர்ச்சி தரக்கூடிய எதுவும் வேலைசெய்யமுடியாது. சொல்லுங்கள் " பாரதியைப் புரிந்துகொண்டு சொன்னுன் பாலமுரளி.

" என் காதலியின் பெயர் ரதி..."

" ரதியா ? மிக்க நல்லது. மன்மதனின் ரதிபோலவே உங்கள் வாழ்க்கையிலும் அந்தப் புண்ணியவதி ரதியாக வாழட்டும், என்று வாழ்த்துகிறேன், என்றெல்லாம் சொல்லிவிட பாரதியால் முடியவில்லை. எப்படி முடியும் அவளால்? என் காதலியின் பெயர் பாரதி " என்றுதான் பாலமுரளி சொல்லுவான் என்ற நினைப்பிலே நீந்திக்கொண்டிருந்த அவளால் அதைச் சொல்ல முடியாதுதானே ?

பாலமுரளி சொன்ன ரதி என்ற பெயர் பாரதியைத் திக்காட வைத்ததோ என்னவோ, தலை மட்டும் மெதுவாக அசைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் விருப்பம்போல் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள். அப்போதுதான் கணவன் மனைவி இரண்டுபேரும் ஒன்றுபட்டு வாழலாம். அப்படி இல்லாத வாழ்க்கையென்ருல் துண்டுபட்டுத் தான் தீரும். ஆகவே என்னை மறந்துவிடுங்கள் இனி. நானும் உங்களை மறக்க முயற்சிக்கிறேன்" என்ற தலையசைப்பாகவே அது காணப்பட்டது. நிமிர்ந்து பார்த்தாள் பாலமுரளியை.

பாலமுரளியின் வார்த்தைகள் தொடர்ந்து வந்தன. "கேளுங்கள் பாரதி. என் ரதியை — என்னை விரும்பிய அந்த ரதியை வெறும் ரதி என்று சொல்வதைவிட, இசையிலே சிறந்த ரதி, பண்ணிலே வல்ல ரதி, இந்த மண்ணிலே நல்ல ரதி, என்று சொல்வதே மிக மிகப் பொருத்தமாகும்." என்ருன்.

அத்தனை வார்த்தைகளையும் கேட்டபோது எப்படி யிருந்திருக்கும் பாரதிக்கு? தன்னுல் விரும்பப்பட்ட ஒரு ஆடவன், தன் முன்னிலையில் வேறு ஒரு பெண்ணைப்பற்றி வர்ணிக்கிருன், புகழுகிருன், அவளின் பெருமையைச் சொல்லுகிருன் என்ருல், எப்படியிருக்கும் அந்தப் பெண்ணுக்கு?

அந்த நிலையில்த்தான் பாரதி... பூமியே பிளவுபட்டு உயிரினங்கள் பல அதன் பிடிக்குள் இரையாகியதுபோல், பாரதியின் உடம்பு பிளவுபட்டு உயிரே பறிபோனது போன்ற தொரு பிரமை. அவளின் தலை சுழன்று தூக்கி வீசப்பட்டு அந்த இடத்தில் இறந்திருந்தால்க்கூட, பாலமுரளியின் அருகில் இறந்தேனே என்ற ஒரு திருப்தியோடு இறந்திருப்பாள் பாவம், ஆனுல், அந்த நிலைக்கு ஆளாகவும் அவளால் முடியவில்லை. இறக்கவும் முடியாமல் இன்பத்தை அனுபவிக்கவும் முடியாமல் இரண்டுக்கும் நடுவிலே வேதனைப்பட்ட பாரதியை ஏறெடுத்துப் பார்த்த பாலமுரளி,

"பாரதி, பண்ணிலும் புகழிலும் நிறைந்த அந்த **ரதி** — கலைகளின் தெய்வமான அந்த ரதி என் உடம்பிலும் உயிரிலும் ஏற்கனவே பாதியாகிவிட்ட **பா... ரதி**" என்று சொன்னபோது தூக்கிவாரிப்போட்டது பாரதிக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இதோ, என் எதிர்நேரில் இருக்கிறுளே அதே பாரதிதான் " என்று பாலமுரளி மறுபடியும் சொன்னபோது பாரதி அப்படியே சிலையாகிவிட்டாள். "நானு?" என்ற கேள்வி புறப்பட்டது அவளது வாயிலிருந்து.

" ஆம்...... இந்தப் பாரதிதான் " என்று பாலமுரளி உறுதி கூறியபோது பாரதியின் கண்களிலே ஒருவகை ஆனந்தம் நிழலாடிக் கொண்டிருந்தது. அத்தோடு ஒரு பார்வை. குறிவைத்த இலக்கைப் பதம்பார்த்த அம்பாக மாறிய பாரதியின் கண்கள் பாலமுரளியின் கண்களைத் தைத்து நின்றன. அவளால் பேச முடியவில்லை. இன்ப உணர்ச்சியெல்லாம் பெருக்கெடுத்து நரம்பெல்லாம் ஊறி ஓட, தனது பாதத்திலே விழுந்திருந்த பாரதியை மெதுவாகத் தூக்கி அணைத்துத் தன் மார்போடு தழுவிக் கொண்டான் பாலமுரளி. உணர்ச்சி ஓடிய அங்கங்கள் அனைத்திலும் இன்பம் ஓடிக்கொண்டிருந்தது. இருவரும் கொஞ்ச நேரம் வரையொருவர் மறந்திருந்தனர். அமுதோடு அமுதுண்ட உயிர் நிலை. விஞடிகள் மறைந்த பின்புதான் பாலமுரளிக்கு நினைவு வந்தது.

" இங்கு யாருமே இல்லையா பாரதி?"

" இருக்கிருள் இந்த வீட்டு வேலைக்காரி."

" தற்செயலாக அவள் இங்கு வர நேர்ந்தால்...?"

" வரமாட்டாள். இது எனது பிரத்தியேக அறை. என் ஒன்றுவிட்ட அண்ணன்தான் நீங்கள் என்று முன்னமே உங்களைப் பற்றிச் சொல்லி வைத்திருக்கிறேன். உங்களையும் என்னையும் யாருமே சந்தேகிக்க மாட்டார்கள்."

" கெட்டிக்காரிதான். பாரதி, இனிமேல் நான் உன்னை..."

" நீங்கள் என்று கூப்பிடமாட்டேன்; நீ என்றுதான் அழைக்கப் போகிறேன், என்றுதானே சொல்லப்போகிறீர்கள்? "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம் அதைத்தான் சொல்ல வாயெடுத்தேன் பாரதி. அதற்குள்..."

"நானே முந்திக்கொண்டேன்."

"சரி சரி. அது போகட்டும். இனிமேல் நீ என்னை எப்படி அழைக்கவேண்டும் தெரியுமா?"

"தெரியும்... அத்தான் என்று. போதுமா?"

"சபாஷ்! நான் நினைப்பதையே நீயும் நினைக்கிறாய் பாரதி. இந்த நேரத்தில் ஔவையாரின் பாடல்தான் எனது நினைவுக்கு வருகிறது.

"...எஞ்ஞான்றும் காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்..." என்றார் அந்த அம்மையார். நமது வாழ்க்கையிலும் அது எப்படி உண்மையாகிறதென்று பார்த்தாயா?"

"உண்மையத்தான் உண்மை." "பாரதி, இன்றைக்கு எப்படியாவது படமொன்று பார்க்கவேண்டும். தடையுண்டா?"

"இனி உங்கள் விருப்பத்தை எப்படியத்தான் நான் தடை போட முடியும்?"

"உனக்கு விருப்பமில்லாவிட்டால் பார்க்காமலே விட்டு விடுவோம் பாரதி."

"இல்லை அத்தான். எனக்கும் பார்க்கத்தான் ஆசை. இன்று பார்ப்போம். எமது முதல் இணைப்பின் நினைவுச் சின்னம் இதுவாகட்டும்."

"நல்ல முடிவு பாரதி "லோட் ஜிம்" என்ற ஆங்கிலப் படம் பார்க்கவேண்டும். பீற்றர்-ஓ-ரூல் மிகத் திறமாக நடித்திருக்கிறாராம். புறப்படு. போய் எங்காவது ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுப் பகல் "மற்றினி" பார்க்கலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி அத்தான். நீங்கள் இருந்து கொள்ளுங்கள் நான் முகம் கழுவிவிட்டு வருகிறேன்."

" அப்படியானல் கடிதத்தாள் ஒன்றுதா பாரதி. அம்மாவுக்கு இப்போதே ஒரு கடிதம் எழுதிப் போடுகிறேன் எனது முடிவு பற்றி."

"கடிதத்தாளைக் கொடுத்துவிட்டு முகங்கழுவிவரச் சென்ருள் பாரதி. பாலமுரளியின் பேனு எழுதத் தொடங்கியது.

13/3, புகையிரத ஒழுங்கை,
டி. எஸ். சேனநாயக்கா மாவத்த,
கண்டி.

அன்புள்ள அம்மா,

உனக்குப் பிடித்தமான ஒரு தமிழ்ப் பெண்ணைப் பார்த்துச் சொல் அவளையே உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்; என்று சொன்னீர்கள் அன்ெருரு நாள். அந்தச் சொல்லை நான் நிறைவேற்றப் போகிறேன். எனக்குப் பிடித்தமான ஒரு பெண்ணைத் தேடிவிட்டேன். யாழ்ப்பாணத்துப் பெண் கொழும்பில் இருக்கிருள். பெயர் பாரதி. அழகுள்ள பெண். ஆனல் அவளது இடது பாதம் நன்ருக வழங்காது. அதற்குக் காரணமாய் அமைந்தவர் அவளின் தந்தை. அவள் குழந்தையாயிருந்த காலத்தில் அவளது குடிகாரத் தந்தை குடிவெறி மயக்கத்தால் குழந்தை பாரதியை உதைத்துத் தள்ளிவிட்டார். அதன் காரணமாக அலுமாரியோடு அடிபட்ட குழந்தை பாரதியின் இடது பாத நரம்பொன்று பழுதாகிவிட்டது. வைத்தியம் செய்தும் பயனளிக்கவில்லை. பதிலாக அவளது பாதம் நொண்டியாகிவிட்டது. இது ஒன்றுதான் அவளிலே காணப்படும் குறை. ஆனலும் அழகிதான். அந்த அழகைவிட என்னைக் கவர்ந்தது அவளது குணம். அன்ெருருநாள் என்னைத் தெரியவருவதற்குமுன், நான் சென்ற அதே புகைவண்டியில் அவளும் பயணஞ்செய்ய நேர்ந்தது. அவளுக்கு எதிர்நேரில் இருவர். ஒருவன் அவளோடு சில சில்லறைச் சேட்டைகள் செய்தான். அதைப் பொறுக்காத அவள் அவனை அறைந்துவிட்டாள் கன்னத்தில். அதன்பிறகு



7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நானும் அவளோடு பேசநேர்ந்தது. இந்த நிகழ்ச்சி ஒன்றே போதும் அவளின் குணத்தை எடைபோட. இரண்டு மூன்று தடவை கொழும்பு சென்று அவளோடு பேசினேன் அம்மா. எனக்கு அவளை மிகமிக நன்ருகப் பிடித்துவிட்டது. அவளுக்கும் என்னில் நல்ல விருப்பம். அழகைவிட அவளது குணம்தான் எனக்கு நன்ருகப் பிடித்திருக்கிறது. அவளுக்கு இருபத்தி யிரண்டு வயது. எனக்கு முப்பது. குணப் பொருத்தத்தோடு வயதுப் பொருத்தமும் உண்டு. மிகமிக நல்லவள். இந்த விருப்பத்தைத் தெரிவிக்கவே இக் கடிதத்தை எழுதுகிறேன்... மற்றவை அடுத்த மடலில்.

அன்பு மகன்,
பாலமுரளி.
7/2

கடிதத்தை எழுதி முடித்தபோது பாரதியும் அறைக்குள் காலடி வைத்தாள். "அத்தான், எழுதிமுடித்துவிட்டீர்களா?"

"ஓ... முடித்துவிட்டேன். இதோ பார் உன் மாமிக்கு நான் எழுதிய மடலை?" மடலை வாசித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்த போது பாரதியின் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் ஊற் றெடுத்தது.

"பாரதி, உன் குணம்தான் என்னை இந்த முடிவுக்கு ஆக்கி யிருக்கிறது. உன் குணம் என்றைக்கும் இப்படியே இருக்க வேண்டும் என்பதுதான் எனது பிரார்த்தனை" பேசிமுடித்தான் பாலமுரளி.

"அத்தான் இதைச் சாப்பிட்டுக்கொண்டிருங்கள், நான் ஐந்து நிமிடங்களில் புறப்பட்டு வருகிறேன்."

"என்ன இது, கொய்யாப்பழமா?"

அசைந்த பாரதியின் தலையிலே பதிலுமிருந்தது.

"ஆமாம், என்ன இது பாதியாயிருக்கிறது. எச்சில்ப் படுத்திய கனிதான் சாப்பிடப்போகிறேனு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கேலியைவிட்டுவிட்டுச் சாப்பிடுங்கள் அத்தான். "

" எச்சில்ப்படுத்தியதென்றால் எனக்கு வேண்டாம் "

" நான்தான் எச்சில்ப்படுத்தினேன். சாப்பிடுங்கள் அத்தான் "

பாலமுரளியின் வாயில் கொய்யாக்கனி. பாரதி " தயார் " என்றாள் பாலமுரளியைப் பார்த்து.

கருத்து ஒட்டிய சோடிகள் புறப்பட்டனர். சூடேறியிருந்த மேனிகள் இரண்டும் தென்றற் காற்றின் மென்மையிலே ' ஜில் ' என்று குளிர்ந்துகொண்டிருந்தன.

அன்றைய ஹோட்டல் உணவு பாரதிக்குப் பரம திருப்தி. ஒரே வகையான சாப்பாட்டைச் சதா சாப்பிட்டுப் புளித்துப் போன அவளது வாய்க்கு அன்றைய ' நூடுல்ஸ் ' மிக அற்புத மாக அமைந்திருந்தது. " தமிழரின் அறுசுவைச் சாதத்தைவிடச் சீனரின் ' நூடுல்ஸ் ' மிக்க சுவை சேர்ந்தது " என்ற எண்ணம் உதயமாகிக் கொண்டிருந்தபோது, " புடிங் " வந்துவிட்டது மேசைக்கு. " இதுவும் ஒரு தனிச் சுவைதான். பிறநாட்டு உணவுவகைகளில் சில நம்நாட்டு உணவுவகைகள் சிலவற்றை விட எவ்வளவோ சிறந்தவை. ஆனால் எப்பொழுதும் அவற்றைச் சாப்பிட்டுச் சுவைக்க முடியாதவர்களாய் இருக்கிறோமென்றால் ஏராளமான பணம் வேண்டும் என்பதுதான் காரணம்." மன துக்குள் முளைவிட்ட எண்ணத்தோடு எழுந்த பாரதி பின் தொடர்ந் தாள் பாலமுரளியை. ஒட்டி உராய்ஞ்சியபடி அமர்ந்திருந்த பால முரளியையும் பாரதியையும் ஏற்றிச் சென்ற ' ராக்ஸி ' றியோத் தியேட்டரை வட்டமிட்டு நின்றது. " நல்ல படம். பீற்றர்-ஓ-ரூல் மிக நன்றாக நடித்திருக்கிறார். அற்புதமான நடிகன்."

" சுமாரான படம். பீற்றர் - ஓ - ரூலுக்காக ஒருமுறை பார்க்க லாம்."

" மை ஃபெயர் லேடியின் தரமளவு இல்லைத்தான். இருந் தாலும் பரவாயில்லை. பார்க்கக்கூடிய படம்தான்." ஒவ்வொரு வரும் தத்தம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு சென்றபோது பாரதியும் பாலமுரளியும் மட்டும் பூனைப் பதுங்கலோடு சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிக்காத நெஞ்சோடு பாரதியிடம் பாலமுரளி விடைபெற்றுக் கொண்டபின் பிரியாத கொடி பிரிவதுபோன்ற உணர்ச்சியோடு தனது விடுதியில் காலடி வைத்தாள் பாரதி. அவளின் வருகைக் காகக் காத்துக்கிடந்த அவசரத் தந்தி அவளைச் செல்வி லேக்கா விடம் ஓடவைத்தது.

"பாரதி, ஏதோ அவசரம் என்றபடியால்த்தான் தந்தி வந் திருக்கிறது. நீ போகவேண்டியதுதான் பாக்கி. இதோ பார் அவசரத் தந்தி." என்று சுட்டிக்காட்டிய செல்வி லேக்காவிடம் விடைபெற்றுக்கொண்டு கோட்டை நிலையத்திற்குச் சென்ற பாரதி, புகைவண்டியில் ஏறியிருந்து எதை எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தபோது ஆவேசக்குரல் கிளப்பிச் சென்றுகொண் டிருந்தது அந்தப் புகைவண்டி.

## அத்தியாயம் 9

**வீ**ங்கிப் புடைத்த கன்னங்களிலே வெடித்திருந்த கண் ணீர்த் துளிகள் அத்தனையும் வேதனையென்ற வேருன்றி நின்றன. புலம்பி அழுது புன்னகையிழந்து நின்ருள் வளர்மதி. வானத்து வளர்மதியாகவல்ல, தேய்மதியாகி வளரமுடியாமல்த் தத்தளித்த அவளின் துயர வேரை மாற்றி அமைப்பது சுலபமான காரியமா?

வளர்மதியின் வேதனையைப் பார்த்த பாரதியின் நெஞ்சத் திலே ஒரு பாரம். "இவ்வளவு மிருகத்தனமானவரா எனது மாமா?" நெற்றியில் ஏறியிருந்த அவளது கண்களிலே ஆத்திரக் கேள்வியொன்று திடீரெனக் குதித்து நின்றது.

"ஆம். உன் மாமா மிருகத்தனமானவர்தான். ஆன படியால்த்தானே இந்த வயதில்க்கூட என்னேடு குடும்ப வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற இச்சை உன் மாமாவுக்கு." மீறிவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரின் எல்லேக்கும் தொல்லேக்கும் வளர்மதியால் அணே கட்ட முடியவில்லே. விம்மி விம்மி அழுதாள் பாவம்.

பாரதிக்கோ ஆத்திரம் அளவுகடந்துவிட்டது. "செச்சே, இவ்வளவு கொடிய காம உணர்ச்சியுடையவர்கள்தான் ஆண்க ளென்ருல், இந்த உலகத்தில் திருமணம் செய்யாமலிருப்பது தான் பெண்கள் செய்யக்கூடிய பெரும் நன்மை. தத்தம் வெறியுணர்ச்சியின் விளேவாக நேரமோ சந்தர்ப்பமோ அறியாமல், எத்தனேயோ ஆண்கள் தமது மனேவிமாரோடு கூடுவதன் காரண மாகத்தானே அந்தப் பெண்மணிகளின் உடல் தளர்ந்து, பெல னழிந்து குடும்பங்களே சிதைந்துவிடுகின்றன. எதற்காக இந்த ஆண்வர்க்கம் இதை அறியவில்லேயோ?" கக்கிவிட்ட ஆத்திரப் பெருமூச்சை வாளத்துக் காற்ருேடு கலக்கவிட்ட பாரதியின் வார்த்தைகளில் மட்டுமல்ல; பார்வையிலும் கனல்.

ஆறு குழந்தைகளேப் பெற்றெடுத்த வளர்மதியின் துயரைப் பார்த்துச் சகிக்கமுடியவில்லேப் பாரதியால். வளர்மதி மிகவும் மெலிந்திருக்கிருள். அவளது கடைசிக் குழந்தை பிறந்து இன்னும் ஆறு மாத காலம் பூரணமாகவில்லே. "அறுவை வைத்தியம் செய்து இக்குழந்தையை எடுத்தபடியால், ஆறுமாதங்கள் நல்ல ஓய்வும் ஆறுதலும் எடுக்கவேண்டும்; அப்பொழுதுதான் ஒடிந்து போன உமது உடல் உரம்பெற முடியும்" என்று வைத்தியர்கள் சொன்னதைப் பாரதிக்கு வளர்மதி கூறியபோது. வளர்மதியின் நிலே ஈக்கில் கிழித்தெடுத்த ஓலேயாகி நின்றது.

வளர்மதியின் கணவன் மதன்மோகன் அவளோடு கோபித் துக்கொண்டு மட்டும் சென்றிருந்தால், வளர்மதியின் கண்களிலே செங்கோடுகள் நிறந்தீட்டியிருக்க முடியா. கோபித்துக்கொண்டு போயிருந்தால் எப்படியாவது வருவார்தானே, என்னேத்தான் மறந்தாலும் குழந்தைகளேயுமா மறக்கப் போகிருர். அப்படி மறந்தாலும் ஒருசில நாட்கள் அல்லது இரண்டு மூன்று கிழமைகள் தானே. நான்காவது கிழமை தாளுக வந்துவிடுவார்" என்ற எண்ணத்தோடு நாட்களே ஓடவைத்திருப்பாள் வளர்மதி. கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணீர்விடவேண்டிய அவசியங்கூட ஏற்பட்டிருக்காது. ஆனல் நடந்தது வேறு...... வளர்மதியைப் பிள்ளைப்பேறுக்காக யாழ்ப்பாணம் அனுப்பிவைத்த மதன்மோகன் அவளை முற்றிலுமாக வெறுத்துவிட்டான்; யாழ்ப்பாணம் வருவதையே நிறுத்திவிட்டான் ஒரேயடியாக.

இதை எண்ணியபோதுதான் பாரதியின் கண்கள்கூடக் கனலாகி நின்றன. "ஐய்யையோ என்ன கொடுமை இது. நினைக்கும்போது நெஞ்சில் கற்பாறை ஏற்றப்படுகிறதே. இதுவா மனித உலகம்?. பகுத்தறிவு வர்க்கம்? பகுத்தறிவைப்பெருத உயிர்களைத்தானே மிருகங்கள் என்று பெயரிட்டழைக்கிறேம். ஆனல் உயிரினங்களில்கூட ஒரு சில, தமது பேடைகளை எவ்வளவு அன்பாக நேசிக்கின்றன; பாதுகாக்கின்றன என்ருல் உண்மையில் அவைதாம் பகுத்தறிவு படைத்தவை. குறிப்பிட்ட ஒரு காலத்தில்த்தானே நாய்போன்ற உயிரினங்கள்கூடக் காம உணர்ச்சியால் உந்தப்படுவதை நாம் காணுகிறேம். ஆனல் இந்த ஆண்களுக்குத்தானு இடைவிடாத காமவெறி? பகுத்தறிவு அற்றவைகள் மிருகங்கள் அல்ல; காமம் வீங்கிப் புடைத்த ஆணினங்கள்தான்." ஆத்திரத்தை அடக்கிவைக்க முடியவில்லை பாரதியால். அது அடிக்கடி வெளிவந்துகொண்டிருந்தது. "மதன் மோகனைக் கண்டிப்பதோடு மட்டுமல்ல; அவனை வழக்கு மன்றத்திலே நிறுத்தி ஊர் அறிய நாடறிய அவமானப்படுத்த வேண்டும், வளர்மதியின் வாழ்வைச் செழிக்கவைக்கவேண்டும்." என்ற எண்ணத்தின் விழிம்பிலே போராடிக்கொண்டிருந்தாள் அவள்.

நாற்பத்து ஐந்தாவது வயதை முடித்து நாற்பத்தாருவது ஆண்டிலே கால் வைத்திருக்கும் வளர்மதியை - ஆருவது குழந்தையைப் பெற்றெடுத்த இந்த நாற்பத்தாருவது வயதோடு அவளது பெண்மை முற்றிலும் அற்று, தாய்மை மட்டுமே நிலவுகிறது என்ற நிலையை அறிந்தும் உணராத மதன்மோகனின் செயல் தமிழ்ப் பண்புக்கென்ன.? மனித அறத்திற்கே மாருனது என்பதை அவளால் ஊகிக்க முடிகிறது.

விடுதியில் தங்கியிருக்கும் என்னைக் காண்பதற்கு எத்தனையோ தடவைகள் வந்திருக்கிருர் மாமா. இருந்தாலும் யாழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணத்திற்கு உங்களை அனுப்பிவைத்தபின் ஒருமுறையாவது உங்களை வந்து பார்க்கவில்லை என்ற விபரத்தை இன்றுவரை மாமா எனக்குச் சொல்லவில்லையே." என்ருள் பாரதி.

"அவர் எப்படிச் சொல்லுவார் பாரதி. தன் குணத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்ட யார்தான் முன்வருவார்கள்"..

"நீங்களாவது இதைப்பற்றி எனக்கு வேளைக்கு அறிவித்திருக்கலாமே மாமி?"

"எப்படி அறிவிக்க முடியும். இது குடும்ப விஷயம். அதிலும் இன்று வருவார் நாளை வருவார் என்ற நினைவோடும் உறுதியோடும் இருந்தேனே தவிர முற்றிலுமாக என்னையும் பிள்ளைகளையும் வெறுத்துவிடுவார் என்று கனவுகூட நான் கண்டிருக்க முடியாதே."

"புரிகிறது மாமி. குடும்ப இரகசியத்தை மறைத்துத்தான் வாழவேண்டும் என்ற கற்பரசிகளின் பண்பை நான் மெச்சுகிறேன். ஆனாலும் நிலைமை நீடித்துவிட்டது. இனியும் அவர் தானுகவே வருவார் என்று சொல்வதில் எதுவித உண்மையுமில்லை. நாமாக ஏதாவது முயற்சியெடுத்தாலேயொழிய அவர் தாமாக வரவேமாட்டார்" என்று பாரதி சொன்னபோது வளர்மதியின் கண்களில் ஊற்றெடுத்துக் கிணருகி நின்றது கண்ணீர். அதைத் துடைத்தெறிந்தாள் பாரதி.

"இன்னும் ஓரிரண்டு வாரங்கள் மாமி. அதன்பின் பாருங்கள் என்னுடைய மாமா உங்கள் காலடியில் வந்து வணங்கிநிற்காவிடில் நான் பாரதியாக இருக்கமாட்டேன். உங்களை அழவைத்துக் கண்ணீர் வடிக்கச்செய்து வேதனைப்படுத்திய அவரே வேதனையடையப்போகிருர்.

"அரசன் அன்றறுப்பான்
ஆண்டவன் நின்றறுப்பான்"

என்பதற்குப் பதில் சொல்லாமல்ச்சென்ற மனிதர் இந்த உலகத்தில் இல்லை மாமி. அந்த நிலை இப்போது மாமாவுக்கும் ஏற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கிறது. நாளைக்கே கொழும்பு செல்கிறேன். சென்றதும் முதன் முதலில் மாமாவின் கந்தோருக்குள் புகுந்து எல்லாவற்றையும் அலசியபிறகுதான் நிம்மதி. அதுவரை பொறுத்திருங்கள். வீணுக அழுதழுது வேதனைச் சேற்றைப் பூசிக்கொள்ளாதீர்கள். காலம் உங்களுக்கு உதவும் மாமி."

"காலம் எனக்கு உதவும்வரை கவலையில்லாமல் எப்படி இருக்கமுடியும் பாரதி. கவலையென்ற கதவுக்குத்தானே சாவியொன்றைத் தந்து அதைத்திறந்து வாழச்சொல்லிப் போயிருக்கிருர் உன் மாமா", என்று பதில் உரைத்தாள் வளர்மதி.

மரத்தின் கிளைகளிலே சிக்கியிருக்கும் கொடிகள் போல, வளர்மதியின் உள்ளத்திலும் அங்கங்களனைத்திலும் சிக்கியிருந்த துன்பம் அவளை மேலும் பேசவைத்தது.

"பருவம் வந்த வயது தொடக்கம் கொழும்பில் எம்மோடு வாழ்ந்திருக்கிருய் நீ. அந்த நாட்களில் உன்னில் உயிரையே வைத்திருந்தார் உன் மாமா. நீ கேட்டதெல்லாம் வாங்கித் தந்த அந்த ஒன்றே அதற்குச் சாட்சி. ஆகவே நீ சொல்வதையும் கேட்பதையும் அவர் தட்ட மாட்டார்; கட்டாயம் ஏற்பார், செய்வார் என்ற உண்மை எனக்குத் தெரியும். ஆனபடியால்த் தான் சொல்லுகிறேன் பாரதி. மறந்துவிடாமல் உன் மாமாவைக் கண்டு என் நிலையைச் சொல். என் புனர்வாழ்வுக்கு வழியமைக்க வேண்டும். என் குழந்தைகளும் நானும் வாழவேண்டும் என்பதற்காகவே அவசரத் தந்தி கொடுத்து உன்னை யாழ்ப்பாணம் வரச் செய்தேன்," என்றெல்லாம் தன் துயரைக் கக்கி நின்ருள் பாவம்.

"சொல்லுகிறேன் மாமி. உங்கள் நிலையை நான் புரிந்து கொண்டேன். பெண்ணொருத்தியை மற்ரெரு பெண்ணுல்த்தான் அறிந்துணர முடியும் என்று கூறுகிருர்கள் அனுபவசாலிகள், உண்மை தெரிந்தவர்கள். எதற்கும் நாளை கொழும்பு செல்கிறேன். கவலைப்படாதீர்கள்"... மாமியாரைத் தேற்றி விட்டுச் சிந்தனையிலாழ்ந்த பாரதி மறுநாள்க்காலை யாழ்தேவியில் புறப்பட்டாள் கொழும்பு நோக்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 10

**பா**ரதி கொழும்பு திரும்பிய நாலாவது நாள். காலை மணி ஏழடித்தோய்ந்தது. "மிஸ், இன்று அரை நேர லீவு வேண்டும். அவசரமாக என் மாமாவைக் காணவேண்டியிருக்கிறது" என்று சொல்லி லீவு பெற்றுக்கொண்டு சென்ற பாரதி வெளிக்கிளம்பிய போது காலை எட்டாகிவிட்டது.

பஸ்வண்டிகள் யாவும் நிறைந்து காணப்பட்டன. காலை நேரம். அலுவலகங்களுக்கும் பாட சாலைகளுக்கும் மற்றும் வேலைத் தளங்களுக்கும் செல்வோரை ஏற்றுச் செல்லும் பஸ் வண்டிகளாகவே அவை காட்சியளித்தன. அதிலும் பாரதி செல்ல வேண்டிய பஸ்வண்டியில் ஏகப்பட்ட கும்பல். ஓரிரு பஸ் வண்டிகளை அவள் தவறவிட்டுவிட்டாள். காரணம், அவற்றில் இடமில்லாமல்ப் போனதுதான். மணி ஒன்பது. இனியும் நின்றால் பயனில்லை, என்ற நினைவோடு நின்றவள் அடுத்துவரும் பஸ்ஸில் எப்படியாவது ஏறத்தான் வேண்டும் என்று முடிவுகட்டினாள். அடுத்த பஸ் வருவதைத் தெரிந்துகொண்ட அவள் ஏறுவதற்காகக் கொஞ்சம் முன்னுக்குச் சென்று நிறுத்துச்சைகை காட்டிய போதும் பஸ் வண்டி நிற்கவில்லை. அவளுக்கோ பெரும் ஏமாற்றம். பெருமூச்சின் எல்லையிலே அவள். ராக்ஸி ஒன்றில் ஏறிச் செல்லலாமென்றால் அதையும் தடுத்துநின்றது சில எண்ணங்கள். "முன்னமென்றால் தனியொருத்தியாக வாழ்ந்தேன். எப்படிச் சென்றாலும் கவலையில்லாமல் இருந்தது. ஆனால் இன்று...? ஒருவருக்கு அடிமையாகப் போகிறேன். எனவே ராக்ஸியொன்றில் தனியாகச்சென்றாள் பாரதி என்று எப்படியோ கதையொன்று அடிபட்டால், பாலமுரளி ஆறுதலோடும் நிம்மதியோடும் இருக்க மாட்டான். ஆகவே ராக்ஸியில் ஏறும் எண்ணத்தை அடியோடு எறிந்துவிட்டுப் பஸ்ஸில் போவதுதான் உத்தமம்" என்று மனம் பேசிமுடித்தபோது பஸ்வண்டியும் நிலையத்தை நாடியது. ஒருவிதமாகச் சமாளித்து ஏறிக்கொண்டாள் பாரதி. ஒரே கூட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதற்கே இடமில்லே. பக்கத்தில் இருந்த நடுத்தர வயதினர் ஒருவர் எழும்பித் தானிருந்த இடத்தைப் பாரதிக்குக் கொடுத்த போது 'நன்றி' சொல்லிவிட்டு உட்கார்ந்தாள் அவள்.

பஸ்வண்டி கோட்டையை அடைந்தது. அதினின்றும் இறங்கிய பாரதி எடுக்கவேண்டிய மற்ற பஸ்ஸில் ஏறிக் கல்விக் கந்தோரை அடைந்தாள். மணி பத்து. "என்ன சொல்ல வேண்டும் மாமாவுக்கு" என்ற சிந்தனை அவளது நெஞ்சிலே... "நாற்பத்தாறுவது வயதை எட்டிப் பிடித்துப் பெண்மையை இழந்துவிட்ட மாமியோடு உடலுறவை ஏற்படுத்த முடியாது என்ற ஒரேயொரு காரணத்தை வைத்துக் கொண்டு மாமியை யும் பிள்ளைகளையும் வெறுப்பது முறையல்ல" என்று எப்படிக் கூறமுடியும் என்ருல்? வேறு ஏதாவது காரணம்தான் காட்ட வேண்டும் என்று சிந்தித்து முடிவுக்கு வந்த பாரதி மெதுவாக நுழைந்தாள் கல்விக் கந்தோர் அலுவலகத்துள்.

அங்கு ஏகப்பட்ட கூட்டம். அதிலும் பெண்கள்தான் அதிகம். குமர்ப்பெண்கள் பலர் மதன்மோகனைச் சுற்றி நின்றனர். எல்லோரும் தமது பள்ளிக்கூட அலுவலாக வந்திருக்கிருர்கள். என்பதைப் புரிந்துகொண்டாள் பாரதி. அன்று போயா முன் நாள். என்றைக்குமில்லாதபடி அன்றைக்கு அதிகமானேர் வந்திருந்தனர். வந்திருந்த பாரதியைக் கவனிக்கவில்லை மதன்மோகன். வேறு பெண்ணெருத்தியின் இடம் மாற்ற விஷயத்தைப்பற்றி அவன் அலசிக்கொண்டிருந்ததே அதற்குக் காரணம்.

மதன்மோகனைச் சுற்றி நின்ற பெண்கள் ஒவ்வொருவராகக் கலைந்து சென்றனர். மதன்மோகன் தற்போது தனிமையில. திடீரென வந்த கல்வி அதிகாரியின் அழைப்பை ஏற்று உள்ளே சென்ற மதன்மோகன் எப்போது வருவான் என்ற சிந்தனை பாரதிக்கு. மணி பதினென்று. பாரதியின் பெருமூச்சு அடிக்கடி 'செச்சே' என்ற நிலையில்.

நேரம் பதினென்றரை... மதன்மோகன் தனது இருப்பிடத் திற்கு வந்து சேர்ந்ததும் 'வணக்கம் மாமா' என்ருள் பாரதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைத்து நிமிர்ந்த மதன்மோகன் "வணக்கம் பாரதி. ஏனிந்தத் திடீர் வருகை?" என்ருன் ஆச்சரியக் குரலில்.

உரையாடல் தொடர்ந்தது. மதன்மோகன் மூச்சுப் பேச்சின்றிக் காணப்பட்டான். "பிள்ளைப் பேறுக்காக மட்டுமல்ல, எனது மூத்த பெண்குழந்தையைச் சுண்டிக்குளிப் பெண் பாடசாலை விடுதியில் சேர்த்துவிட்டபடியால்தான் உனது மாமியையும் யாழ்ப்பாணம் அனுப்புகிறேன். அது மட்டுமல்ல; எனது மற்றக் குழந்தைகளும் யாழ்ப்பாணத்தில் படிக்கவேண்டும். அங்குதான் நல்ல கல்விநிலையங்கள் இருக்கின்றன என்றும் சொன்னீர்கள். அத்தோடு வீணுக இந்தக் கொழும்பு நகரிலே நூற்றுக்கணக்கில் வீட்டுவாடகை கொடுப்பதால் அதுவும் மிச்சம். ஏனென்ருல் யாழ்ப்பாணத்தில் எமக்குச் சொந்த வீடு உண்டு. இந்தக் காரணங்கள் பலவற்றைச் சிந்தித்துத்தான் உனது மாமியை யாழ்ப்பாணம் அனுப்புகிறேன் என்றும் சொன்னீர்கள். ஆனுல் உங்கள் போக்கு மாறிவிட்டதாக அறிகிறேன். குழந்தை பெற்றபோது கூடத் தந்தியடித்திருந்தாராமே மாமி, அதற்காவது செவிசாய்த்தீர்களா? அப்போதுதான் போக வசதி இல்லையென்று வைத்துக் கொள்வோம். அடுத்து வந்த போயா நாளாவது போய் உங்கள் குழந்தையைப் பார்த்திருக்கலாமே. ஏன் போய்ப்பார்க்கவில்லை. மாமி என்ன கள்ளக் கணவனை வைத்திருக்கிருள் என்று எண்ணிவிட்டீர்களோ? இல்லையென்ருல் எதற்காக நீங்கள் போகவில்லை... குழந்தை பிறந்த நாலாவது மாதம் போனீர்களாம். ஏதோ உங்கள் இருவருக்கும் ஏற்பட்ட பிணக்கினுல் 'இனிமேல் வரமாட்டேன்' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டு வந்தீர்களாமே... என்ன காரணம்? 'கட்டிலுக்கு மட்டுந்தான் துணைவி, காலம் ஏறிவிட்டால் அவள் கிழவி' அப்படித்தானே மாமா உங்கள் விளக்கம்." ஆத்திரக்கோடுகளைத் தனது முகத்தினுலே வரைந்து காட்டிய பாரதியைப் புரிந்துகொண்டான் மதன்மோகன்.

இந்த நேரத்தில் தனது உள்க்கருத்தை ஆதரித்துப் பேசி வளர்மதியிடம் போகாமலிருப்பதற்கு இதுதான் காரணம் என்ருல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிவரை பாரதி போராடியே தீருவாள் என்ற நினைவு மதன் மோகனுக்கு.

"பாரதி ஏதோ நடந்தது நடந்து விட்டது... இந்த மாதம் லீவு எடுக்க முடியாது. சற்று முன்புதான் கல்வி அதிகாரி கூப்பிட்டுச் செய்யவேண்டிய பல வேலைகளுக்குக் கட்டளை பிறப்பித்து விட்டார். அவைகளையெல்லாம் செய்துமுடிக்க வேண்டும். இல்லையென்றால் இங்கு நான் வேலைசெய்ய முடியாது. எனவே அடுத்த மாதம் லீவு எடுத்துக்கொண்டு வளர்மதியையும் பிள்ளைகளையும் போய்ப் பார்த்து வருகிறேன். நீ போ," என்ற மதன்மோகனின் சொல்லில் ஓரளவு நிம்மதி கண்ட பாரதி கல்வி அலுவலகத்தைவிட்டு வெளியேறினாள்.

பாரதி போனதையோடு கடிதமொன்றை எழுதிமுடித்த மதன்மோகன் பகல்ச் சாப்பாட்டுக்காக வெளியே சென்றபோது அக்கடிதத்தைக் கட்டிலே சேர்த்தான். "நாளைக் காலை வளர்மதி யிடம் கிட்டும் இக்கடிதம்" என்ற நினைப்பு அவனது நெஞ்சிலே நிறைந்திருந்தது.

## அத்தியாயம் 11

கல்விக் கந்தோர்,
கொழும்பு.
12-2

வளர்மதி, எமது வீட்டுக்குள் எது நடந்தாலும் அது நமக்கு மட்டுமே தெரியவேண்டும் என்று மட்டுமல்ல நீ கூட முன்னொரு காலம் எனக்குச் சொன்னது என் நினைவைவிட்டு நீங்கவில்லை. அதை மறுபடியும் ஞாபகப்படுத்துவதற்காகவே இதை எழுது கிறேன். உனக்கும் எனக்கும் இடையில் ஏதோ பிணக்கு ஏற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதால் உன்னையும் குழந்தைகளையும் நான் வெறுத்துவிட்டேன் என்பதைப் பாரதிக்கு நீ அறிவித்திருக்கிறுய் என்று நம்புகிறேன். பாரதி இங்கு வந்து அதைப்பற்றி அலசியபோதுதான் அந்த உண்மையை என்னுல் ஊகிக்கமுடிந்தது. ஒன்று சொல்லுகிறேன் வளர்மதி, இனிமேல் மட்டும் இந்தப் பிழையை நீ விட்டுவிடாதே. எமது குடும்பம், எமது சச்சரவு இவையாவும் எமக்கு மட்டுமே தெரியட்டும். உன் கணவனின் முதல் எச்சரிக்கை.

இப்படிக்கு,
மதன்மோகன்.

கடிதத்தை வாசித்துவிட்டுக் கண்ணீர்விட்டாள் வளர்மதி. அன்பு வார்த்தைகளையும் உறுதி மொழிகளையும் காதல் வடிவத்திலே எழுதவேண்டிய கணவன், அன்ெருரு காலம் அதை எழுதியனுப்பிய கணவன் இன்று இப்படி எழுதியிருக்கிருரே, எச்சரிக்கையாக மட்டும் வரைந்திருக்கிருரே என்று எண்ணிய போது அவளது உள்ளத்திலே சஞ்சலம் உருவெடுத்தது. "எல்லா ஆண்களும் இப்படித்தானு? தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் மட்டும் இன்பமாக உருக்கமாகப் பேசி, அவற்றைப் பூர்த்திசெய்ய முடியாத ஒரு காலம் வரும்போது எச்சரிக்கையோடும் எரிச்சலோடும்தான் நடமாடுவார்களா," என்ற நினைவு அவளை ஆட்டிப்படைத்தது. ஒருவிதமாக மனதைத் தேற்றி விட்டு மறுகடிதத்தை வாசித்தாள்.

234/16, ஹவலொக்ஸ் தெரு,
கொழும்பு - 5.
13-2

அன்பு மாமி,

கொழும்பு திரும்பிவந்த நாலாவது நாள், அதாவது அந்தப் போயாவுக்கு முன்நாள் மாமாவின் கந்தோருக்குப் போனேன். விஷயத்தை நேரடியாகக் கூருமல் சுற்றிவளைத்துச் சொல்லி விட்டேன். என் சொற்களில் சூடு இருந்ததை அவர் அறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியால்த்தான் மௌனம் சாதித்ததோடு அடுத்தமாதம் எப்படி யாவது உங்களையும் பிள்ளைகளையும் வந்து பார்ப்பதாக உறுதியும் தந்துவிட்டார். மாமி. இனிக் கவலைப்படவேண்டாம். இறைவன் உங்களைக் கைவிடமாட்டார். என்ற நம்பிக்கையோடு முடிக்கிறேன். பிள்ளைகளுக்கு என் நலம் தெரிவிக்கவும்.

அன்பு மருமகள்,
பாரதி.

வளர்மதிக்கு விஷயமெல்லாம் புரிந்துவிட்டது. "பாரதி போயிருக்கிருள். நன்ருக அவரை வைதிருக்கிருள். அதற்காகவே கட்டாயம் அடுத்த மாதம் போகிறேன் என்று சொல்லித் தந்திரமாக அவளை அனுப்பிவிட்டு எனக்கு எழுதியிருக்கிருர் எச்சரிக்கும் தோரணையில். ஆகவே சூட்டோடு சூடாக நான் கொழும்பு போவதுதான் நல்லது. பாரதியையும் கூட்டிக்கொண்டு ஒரு தடவை கல்விக் கந்தோருக்குச் சென்ருல் எல்லாம் நன்மை யாக முடியும். இல்லையென்ருல் ஆறின கஞ்சியாகி எல்லாம் பழசாகிவிடும். இவர் எழுதியிருக்கும் பாணி எனக்குப் புரியாதா என்ன? இப்படி எழுதினுல்த்தான் பாரதிக்கு இனிமேல் எதுவுமே இவள் சொல்லமாட்டாள் என்ற முடிவோடு தீட்டியிருக்கிருர் கடிதம். ஆகவே கடிதத்தின் எச்சரிக்கையை அலட்சியப்படுத்தி விட்டுக் கொழும்பு செல்வதுதான் உகந்தது; என்ற நினைவோடு கொழும்பு புறப்பட்டாள் வளர்மதி.

கொழும்பு அவளுக்குப் புதிதல்ல; ஆனுல் கைக்குழந்தை போவதுதான் அவளுக்குப் புதிது. எனவேதான் தனது மூத்த மகனையும் துணைக்கழைத்துக்கொண்டு போகவேண்டி நேர்ந்தது. பக்கத்துவீட்டுக்காரரிடம் மற்றக் குழந்தைகளைப் பொறுப்புக் கொடுத்துவிட்டுத் தான் கொழும்பு சென்ருள் அவள். போகு முன் பாரதிக்குத் தன் வருகையை அறிவிக்கவேண்டியிருந்தது. காலை யாழ்தேவியில் புறப்பட்ட அவள் பகல் மூன்று மணிபோல் பாரதியின் வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தாள். வளர்மதியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளையும் கோட்டை நிலையத்தில்ச் சந்தித்துக் கூட்டிச் சென்ற பாரதி, செல்வி லேக்காவின் அனுமதியோடு அவர்களைத் தனது அறையிலே தங்கவைத்தாள்.

மறுநாள்க் காலை பாரதியையும் வளர்மதியையும் அவளது குழந்தைகள் இருவரையும் ஏற்றிக்கொண்டு சென்ற ராக்ஸி கல்விக்கந்தோரைச் சேரும்போது நேரம் பத்து. வளர்மதியையும் குழந்தைகளையும் வெளியே இருக்கச் செய்துவிட்டுத் தான் மட்டும் உள்ளே சென்ற பாரதி திரும்பி வரும்போது ஒருவகைச் சோகத்தினுல் போர்த்துக் காணப்பட்டாள். அவளது முகத்திலே ஈயாடவில்லை. கண்களில் சோகம் கலந்து நஞ்சேறியிருந்தது. அங்கங்களில்க்கூட ஒரு சோர்வு.

அதைக்கண்ட வளர்மதியின் முகத்திலும் ஒரு மாற்றம். விஷயம் அறிந்தாள் வளர்மதி. "என்ன செய்வது என் தலையெழுத்து. இன்றோடு எல்லாம் தீர்ந்துவிடும், துன்பத்தின் எல்லை மாறி இன்பத்தின் சாயலாக உருப்பெறும் என்றுதான் எண்ணி வந்தேன் பரதி. ஆனுல் எனது துர்ப்பாய்க்கியம் உனது மாமா இங்கு இல்லாமல்ப்போனது. ஒரு கிழமை லீவில் நிற்கும் அவரை இனியும் பார்க்கமுடியாது. அவர் இருக்கும் இடத்திற்குப் போகலாமென்ருல் அதுவும் தமக்குத் தெரியாதென்று கூறிவிட்டார்கள் கல்விக் கந்தோரில் உள்ளவர்கள். ஒரு கிழமை தங்கலாமென்ருல் எனக்கு முடியாத காரியம். பிள்ளைகளைத் தவிக்கவிட்டு வந்திருக்கும் நான் ஒரு நாளுக்குமேல் தங்க முடியாது. எனவே நான் போகிறேன பாரதி... எதற்கும் நீ தான் இனி உதவி. உனது கெட்டித்தனமும் திறமையுமே என்னை வாழவைக்க வேண்டும். இல்லையென்ருல் உயிர் வாழ்ந்தும் சதா மடிந்துகொண்டிருக்கும் ஒரு வளர்மதியையும் அவளின் குழந்தைகளையுந்தான் பார்க்க முடியும் இந்த உலகத்தால்," என்று வளர்மதி கூறியபோது அவளது கண்களில் பெருக்கெடுத் தோடிக்கொண்டிருந்தது செந்நீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக்கண்ட பாரதியும் அழுதுவிட்டாள். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. ராக்ஸி ஒன்றில் புறப்பட்டனர் பாரதியின் இல்லம் நோக்கி. நண்பகல் யாழ்தேவி எடுக்கவேண்டும் என்ற வளர்மதியை பாரதி மறிக்கவில்லை. வளர்மதியின் மகனிடம் ஐம்பது ரூபா கொடுத்த பாரதி, வளர்மதியையும் குழந்தைகளையும் யாழ்தேவியில் ஏற்றி யாழ்ப்பாணம் அனுப்பிவிட்டு வீடு திரும் பினள் சோகத்தோடு. அவளது மனதிலே ஆறுதல் இல்லை. பிரிந்த குடும்பமாக வளர்மதியின் குடும்பம் இருக்கக்கூடா தென்பது அவளது ஆசை. எப்படியாவது ஒரு வழி செய்ய வேண்டும் என்ற நினைப்பிலே துடித்துக்கொண்டிருந்த அவள் கடிதம் ஒன்றெழுதிப் பாலமுரளிக்கு அனுப்பிவிட்டுத் தனது வேலைக்ளைக் கவனித்துக் கொண்டிருந்தாள் பாலம்.

## அத்தியாயம் 12

**பா**லமுரளியின் கையிலே அன்று இரண்டு கடிதங்கள். எங்கெங்கிருந்து வந்த கடிதங்கள் என்பது அவனுக்குப் புரிந்து விட்டன. "தாய்க்குப்பின் தாரம்" என்பதை அவன் வெறுக்கவு மில்லை மறுக்கவுமில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வந்த கடிதமே முதலில் வாசிக்கப்பட்டது.

4, மணல் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
21 - 2

அன்புள்ள மகன்,

நீயெழுதியிருந்த கடிதம் வாசித்தேன். பாரதி என்ற பெண்ணை நீ விரும்பியிருக்கிருய் என்பது புரிகிறது. பாரதி குணமானவள். அந்தக் குணமே என்னைக் கவர்ந்தது என்றெல் லாம் சுட்டிக்காட்டியிருந்தாய். அதை நான் வரவேற்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிருந்தும் குணத்திலே கோணலாக இருக்கும் ஒருத்தியைவிட, அழகிலே வெறுமையிருந்திருந்தாலும் குணத்திலே குன்றாக நிற்கும் ஒருத்தி உனக்கு மனைவியாக வருவதையே நானும் விரும்புகிறேன். பாலமுரளியின் மனைவி அழகிதான், ஆனால் நடத்தை கெட்டவள் என்று ஊர் தூற்றிப் பறைசாற்றப்படுவதை விட, அழகில்லாவிட்டாலும் பாலமுரளியின் மனைவி குணத்திலே தங்கந்தான், வைரந்தான் என்று உலகம் சொல்வதையே நாம் விரும்பவேண்டும். எனவே பாரதி குணத்திலே குன்றாக, வைரமாகத் தங்கமாக விளங்குவது உண்மையென்றால் அந்தப் பாரதி உன் மனைவியாக வருவதை நான் ஆதரிக்கிறேன்; என் பூரண ஒத்துழைப்பையும் தருகிறேன்.

நிற்க, "குணத்தோடு அழகும் வாய்ந்தவள்தான் பாரதி. பொதுநிற அழகி. ஆனால், அவளது இடது பாதம் தான் ஊனம். நடக்கும்போது நொண்டி நொண்டித்தான் நடக்கிறாள்; என்றாலும் அதுபற்றி நான் கவலைப்படவில்லை. காரணம், நொண்டி யென்பதற்காக எல்லோரும் வெறுத்துவிட்டால், யாரம்மா அவளைத் திருமணம் செய்வது? அப்படித் திருமணம் செய்யாமல் அவள் இருந்தால் அவளது பெண்மையும் தாய்மையும் எப்படி நிலைக்க முடியும்? ஆண்களாகிய நாம் இதை உணர்ந்தால் இப்படியான நிலையிலிருக்கும் பல பெண்களுக்கு வாழ்வு கிடைக்குமே. எனக்கொரு தங்கையோ, தமக்கையோ இப்படி யிருந்திருந்தால்......? இவைகளையெல்லாம் நன்றாகச் சிந்தித்து அலசியபின்புதான் பாரதியை நான் விரும்புகிறேன்" என்றெல் லாம் எழுதியிருந்தாய்.

மகனே, ஒரு தந்தையின் குடிவெறி காரணமாக ஒரு மக ளுக்கு ஏற்பட்ட தீமையைப் பாரதியில் மட்டுமல்ல, பாரதியைப் போன்ற பல இளம் பெண்களிலும் காணமுடிகிறது. ஆனபடி யால்த்தான் மணம் முடித்துக் குழந்தைகளுக்குத் தந்தையாகின்ற வர்கள் குடிவெறியையோ, கூடாத நடத்தையையோ உடனடி யாக விட்டுவிடவேண்டும் என்று அனுபவசாலிகளும் அறிஞர்



9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் கூறிவைத்திருக்கிருர்கள். தாய் என்ற முறையில் உன்னே யும் ஒன்று கேட்கிறேன். மகனே, நீ மட்டும் குடித்துவெறித்துப் பழகாதே. இன்றிருக்கும் பாலமுரளியாகவே என்றும் இருக்கவேண்டும். சரிதானே? அதுபோக, இன்னுமொன்று... நீ எழுதியிருந்ததுபோல், அடுத்து வரும் போயா காலே யாழ் தேவியில் உனது சின்னம்மாவின் மகன் ஈஸ்வரனேடு புறப் பட்டுக் கொழும்பு வருகிறேன். கோட்டையில் என்னே வந்து கூட்டிக்கொண்டு போ. பாரதியை நேரில் பார்த்தால்தான் என் மனம் ஆறுதலும் திருப்தியுமடையும். சரிதானே? மற்றவை நேரில்.

இப்படிக்கு,<br>
உன் அன்புத் தாயார்,<br>
தங்கவடிவு.

கடிதத்தை வாசித்துவிட்டு மெதுவாகச் சிரித்தான் பால முரளி. "அம்மா, உனக்குத் தெரியாதா உன் மகனே. வளர்ந்து முப்பதாவது வயதை எட்டிப்பிடித்திருக்கிறேன். இன்றுவரை குடித்திருக்கிறேனு? "பாலமுரளி குடித்ததைக் கண்டேன்" என்று யாரிடமிருந்தாவது குறை வந்திருக்குமா? எத்தனேயோ வைபவங்களுக்குச் சென்று கலகலப்பாகப் பேசிக் களித்திருக் கிறேன். ஆனுல் அங்கு குடிவகையென்று கருதப்படும் எந்தப் பானத்தையாவது தொட்டுச் சுவைத்திருக்கிறேனு? இல்லேயம்மா இல்லே. சத்தியமாகச் சொல்லுகிறேன்; உங்கள்மேல் ஆணே, ஒருபோதும் நான் குடிக்கமாட்டேன், கூடாத நடத்தையில் இறங்கமாட்டேன். போதும்தானே தாயே" என்ற சத்தியம் தாயில்லாமலே நிறைவேறியது.

பாரதியைப் பார்க்கவேண்டுமென்பதற்காக இந்த வயதில்க் கூடத் தனது தாய் பிரயாணம் செய்ய எத்தனித்திருப்பதை நினேத்தபோது மகிழ்ச்சிக்கடல் அவனே அணேத்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அதிஷ்டம் நிறைந்தவள்தான் பாரதி என்று சொல்லிக் கொண்டே மற்றக் கடிதத்தை வாசித்தான்.

234/16 புதிய ஒழுங்கை,
ஹெவலொக்ஸ் தெரு,
கொழும்பு - 5.

அன்பு அத்தான்,

உங்களோடு பல விஷயங்கள் பேசவேண்டியிருப்பதால் அடுத்து வரும் போயா மறக்காமல் வரவும். உங்கள் வருகை மிக மிக அவசியம். ஏமாற்றிவிடாதீர்கள். காலை எட்டு மணி தொடக்கம் உங்களுக்காகக் காத்திருப்பாள் இந்த பாரதி என்பதை உங்களுக்கு வற்புறுத்திச் சொல்லவேண்டியதில்லை என்று நம்பு கிறேன். இங்கு நான் சுகமாயிருக்கிறேன். அதுபோன்றே உங்கள் நலத்திற்காக இறைவனை வேண்டுகிறேன். வேறு புதின மில்லை; மற்றவை நேரில்.

வணக்கம்.

அன்புக் காதலி,
பாரதி.
22-2

"கையெழுத்துக்குப்பின் தேதி போடும் என்னுடைய முறை யைத்தான் பாரதியும் இப்போது பின்பற்றுகிருள். கருத்து ஒருமிக்க வேண்டும் என்ற காதலர் இலக்கணத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு," என்று தன் மனதுள் கூறிக்கொண்ட பாலமுரளி, கடிதத்தை மூடிவைத்துவிட்டுத் தனது வேலைகளைக் கவனித்தான்.

நேரம் மாலை ஏழரை. தாய்க்கும் பாரதிக்கும் எழுத வேண்டிய வற்றை எழுதி முடித்துக் கடிதங்களைக் கட்டிலே சேர்த்துவிட்டு இரவுச் சாப்பாட்டை உண்டு விடுதி திரும்பியவனை உறக்கம் அணைத்துக்கொண்டபோதும், அடுத்துவரும் போயா நாளன்று பாரதியிடம் செல்லவேண்டும் என்ற துடிப்பு மட்டும் அணைந்து விடவில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 13

மாரிகாலப் பூண்டுகளும் செடிகளும் வளரும் வேகத்திலே ஓடிக்கொண்டிருந்தன நாட்கள். நிம்மதியற்றுக் காணப்பட்டாள் பாரதி. நஞ்சேறி நீலம் பாரித்திருந்த கிழங்குபோலவே சோக மேறிப் பாரித்திருந்தது அவளின் முகம். "மாமிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போய்விடுமா?" ஆணி யடித்த சிந்தனை அவளது உள்ளத்தில். பாலமுரளி அன்று வருவது தெரிந்துங்கூட அவளது அங்கங்களிலே அவ்வளவு பூரிப்பில்லை. கடும் மழையில் நனைந்து ஒதுங்கும் பறவையைப் போல் ஒரு மூலையில் ஒதுங்கிக்கொண்டாள் பாவம். சிந்தனைக் குறிப்பு எழுதிய கண்களோடு அவள் காணப்பட்டபோதுதான் "பாரதி! பாரதி!!" என்று கூப்பிடும் ஓசை கேட்டது. மெது வாக எழுந்து ஓசை வந்த எதிரே கவனத்தைச் செலுத்திய பாரதியின் கண்களிலே, பாலமுரளி. நேரம் ஒன்பது.

அழகான சூட் அணிந்து அலாதியான தோற்றத்தோடு வந்திருக்கிறான் அவன். முப்பது வயது மாப்பிளைதான். வீங்கி யிருந்த கன்னங்களினுள்ளே பொதிந்திருந்த புன்னகையைப் பாரதியின் முகத்திலே பரவவிட்டுக்கொண்டிருந்த பாலமுரளியின் காதற்கண்களும் அழகுக்கு அழகு செய்துகொண்டிருந்தன.

அத்தானை வரவேற்பதிலே பாரதிக்கொரு தனி அலாதி இருக்கத்தானே வேண்டும். சோகத்தை ஒருவாறு மறைத்துக் கொண்டு தனது பிரத்தியேக அறைக்குள் நுழைந்தாள் அவள். "அமருங்கள் அத்தான்." பாரதியின் சொற்கள் கொடுத்த இனிமையிலே பாலமுரளிக்கு ஒரு தனிப் பெருமை. கதவு மூடப் பட்டது. விநாடிகள் மறைந்து மணித்தியாலம் வடிவங்காட்டிய தென்றால் அவர்களின் உரையாடல் எதைப்பற்றியதாயிருந் திருக்குமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுதான் அத்தான் கதை. என் மாமியின் சோகத்தை மாற்றி வாழ்க்கைப் பயணத்தைத் தொடரவைக்கவேண்டும் என்ற நினைப்புக் கடலிலே நீந்திக்கொண்டிருக்கிறேன். நீங்கள்தான் இதற்குத் துணைபுரிய வேண்டும்."

மூடியிருந்த கதவைத் திறந்துவிட்ட பாரதியின் வார்த்தைகளைப் பாலமுரளி புரியாமலில்லை. "சிந்தனைக் கறைபடிந்த உனது மாமியின் உள்ளத்தையும் உன்னுடைய நெஞ்சத்தையும் என்னால் புரியமுடிகிறது பாரதி. உன் மாமியின் சோகநெருப்பை அணைப்பதற்கான பெருவெள்ளம் எம்முடைய கையிலிருப்பதை நான் மறுக்கவில்லை. வாழ்க்கையென்னும் மலையோடு போராடிவிட்டு, அந்தப் போராட்டத்தில் வெற்றிகாண முடியவில்லையே என்பதற்காக அதன் உச்சியிலிருந்து வீழ்ந்து தன்னை மாய்த்துக் கொள்ளவிருக்கும் உனது மாமியின் நிலையை உணர்ந்த பின்னும் நிம்மதியின் நிழலிலே நாம் குடியிருப்பது பெருந்தவறு பாரதி பெருந்தவறு."

"உண்மையத்தான் உண்மை. ஆனால், எங்கள் குடும்பத்தில் உறவோ தொடர்போ இல்லாத உங்களையும் எங்களது சோகத்தில் பங்கு கொள்ளும்படி கேட்கும் என்னை நானே நோக வேண்டும் அத்தான்."

"பாரதி, ஆதியிலே தோன்றிய ஒருத்தன் ஒருத்தியின் முயற்சியிலே தோன்றியதுதான் மனிதவர்க்கம். அப்படிப் பிறந்து வளர்ந்த அந்த இனமே காலவோட்டத்தில் வளர்ந்து கிளையாகிக் கொம்பாகி மலராகிக் கனியாகி இன்று பற்பல மரங்களாகி நிற்கின்றது. இந்த உண்மையை என்றைக்காவது உணரத்தான் வேண்டும். அதன் பிறகாவது மனிதன் ஓரினம், ஓர் குலம் என்ற உணர்வு வேரூன்றி, யாழ்ப்பாணத்தான் வேறு, மட்டக்களப்பான் வேறு, மலைநாட்டான் வேறு, திரிகோணமலையான் வேறு, இந்தியத்தமிழன் வேறு, மலேயத் தமிழன் வேறு எனப்படும் வேற்றுமை நஞ்சு அடியோடு மறைந்து, உலகம் ஒருயிரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்த ஊற்று என்ற ஒற்றுமைப் பிஞ்சு வெளிக்கிளம்பி வளர்ச்சி காணும்; மனித வர்க்கத்தில் உயர்ச்சியும் தோன்றும். அதுமாத்திரமல்ல " யாதும் ஊரே யாவரும் கேளிர்," என்ற பரந்த பண்பும் உண்மையாகிவிடும். புரிகிறதா பாரதி ?"

" இனம்பேசி உயிர்கொல்லும் அறிவிலிகளுக்கும் அரைவிழி களுக்கும் சவுக்கடி கொடுக்கும் விளக்கமத்தான்."

" அப்படிப்பட்டவர்களுக்குச் சவுக்கடியும் சாட்டையும் என்று வது ஒருநாள் கிடைக்கத்தான் போகிறது என்பதற்கு நிமித்தங்கள் பல தோன்றியிருப்பதை இந்த நூற்றாண்டில் யாரால்த்தான் மறுக்கமுடியுமோ ? பாரதி, ஒன்று சொல்லுகிறேன், நான் உனக்குச் சொந்தமில்லையென்றோ, நீ எனக்கு இனமில்லை யென்றோ பிரித்துக்காட்டும் மனப்பான்மையை மட்டும் பிய்த் தெரித்துச் சாம்பலாக்கிவிடு."

" அத்தான், உங்கள் புது விளக்கமென்னும் ஒளியிலே நடக்கப்போகும் நான் இனி வேறல்லவே. ஒன்றே குலம் என்ற தத்துவத்தைப் பின்பற்றவேண்டும் என்று ஊட்டி நிற்கும் உங்கள் உயிரிலும் உடலிலும் நான் பாதி என்பதை எவராலும் மறுக்க முடியாது. போதுமா அத்தான்."

" சொல்லிவிட்டால் மட்டும் போதாது பாரதி. செயலிலும் ஈடுபடவேண்டும். அப்போதுதான் இந்தப் பாலமுரளியில் நீ பாதியாக இருக்கமுடியும் ; பாதி என்று பயமில்லாமல் சொல்லவும் முடியும். "

" அப்படியானால் நான் என்னதான் செய்யவேண்டும் என் பதைச் சொல்லுங்கள் அத்தான்."

" பாரதி, சாதியென்றும், மதம் என்றும் கோத்திரமென்றும் வேற்றுமை பார்க்கும் என் அம்மாவே என் திருமணத்திற்குச் சம்மதித்துவிட்டார் என்றால், அதைவிட என் வாழ்வில் வேறு என்னதான் ஆனந்தமாயிருக்கமுடியுமோ ? சொல் பாரதி ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியின் நெஞ்சிலே பனிக்கட்டி உறைவதுபோன்றதொரு குளிர்ச்சி. "அத்தான், அப்படியானால் உங்கள் அப்பா ?"

உருண்டுவந்த துக்கத்தை ஒருவாறு மறைத்துக்கொண்டு பதில் சொன்னான் பாலமுரளி. "நான் சின்னவனாயிருந்தபோதே என் அப்பா இறந்துவிட்டாராம். அதனால்தான் எழுதுவினைஞர் சோதனை படித்துவிட்டுக் கந்தோரில் வேலைபார்க்கிறேன். "உன் அப்பா இருந்திருந்தால் உன்னை ஒரு டொக்டர் வரை படிப்பித்திருப்பார்" என்று அம்மா அடிக்கடி சொல்லுவார். என்ன செய்வது? அப்பாவை இழந்த நான் அம்மாவின் அணைப்பிலும் அன்பிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். வேறு யாருமே எனக்கில்லை. அப்படியிருப்பவர்களென்றால் எனது சொந்த மாமா மாமி குடும்பந் தான். அதாவது எனது அப்பாவின் தங்கை குடும்பம். ஆனால் அவர்களும் எம்மோடு அவ்வளவு உறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும் பாரதி."

"காரணம் என்னத்தான்..."

"அது எனக்குத் தெரியவே தெரியாது பாரதி"

"வேறு உறவினர்களே இல்லையா அத்தான் ?"

அப்படியிருப்பதாக எனக்கு அறிமுகப்படுத்தவில்லை என் அம்மா. இந்த நிலையில் என் அம்மாவும் இறந்துவிட்டால்...?"

பாலமுரளியைப் புரிந்து கொண்ட பாரதி அவனின் துயரைப் பொத்தி விட்டாள். "அடுத்த மாதமே எமது திருமணம் நடை பெறட்டும் அத்தான். என் மாமாவுக்கு உடனடியாகக் கடிதம் எழுதி எல்லா ஒழுங்குகளையும் செய்விக்கிறேன்." பாரதி சொல்லி முடிக்குமுன் திடீரெனக் கிளம்பிவந்தது பாலமுரளியின் கேள்வி யொன்று.

"உன் அப்பாவுக்கும் உடன் பிறந்தவர்களுக்கும் அறிவிக்க வேண்டாமா பாரதி ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பாவுக்கு அறிவிக்கவேண்டிய அவசியமே இல்லை அத்தான். வேண்டுமென்றால் என் உடன் பிறந்தவர்களுக்கு அறிவிக்கிறேன். அவர்கள் மட்டும் வரட்டும்."

"இல்லைப் பாரதி. அப்படி நினைப்பதே தவறு. என்னதான் இருந்தாலும், அவர் உன் தந்தை. உன்னை உருவாக்கியவர். அவர் தவறுவிட்டாலும் அதை மன்னிக்கவேண்டியவர்கள் நாங்கள். எதற்கும் அவரைக் கலந்தாலோசிக்கவேண்டியது உன் கடமை."

பாரதியின் மௌனம் அந்த நேரத்திலும் அதிகாரம் செலுத்திக்கொண்டிருந்தது. "பெற்ற தகப்பனைக் கூப்பிட வேண்டுமென்ற துடிப்பில்லாத மகள் என்று மாத்திரமல்ல, உன் மாமாவையும் உன்னையும் சேர்த்துக் கட்டிய கதையெல்லாம் உண்மை. ஆனபடியால்த்தான் தகப்பனைக் கூப்பிடாமலே கலியாணம் செய்துகொண்டாள் பாரதி" என்று சொல்லி உலகம் உன்னைப் பழிக்கும். நினைத்துப்பார்..."

தலையசைத்த பாரதியின் சம்மதத்தைப் புரிந்துகொண்ட பாலமுரளி அவளை மெதுவாக அணைத்துத் தட்டிக்கொடுத்துவிட்டு, அன்று தாய் தனக்கு எழுதியிருந்த கடிதத்தைக் காட்டினன்.

பாரதிக்கு ஆச்சரியமெடுத்தது. புன்னகை அவளது இதழ்களில் விளையாடிக்கொண்டிருந்தன. மகிழ்ச்சிக் குறிப்பெழுதிய கண்களால் அவளை நோட்டமிட்ட பாலமுரளி, "பாரதி, நான் போய் அம்மாவை அழைத்துவருகிறேன், நீ ஆயத்தமாயிரு" என்று சொல்லியவாறே கோட்டை நிலையத்திற்குச் சென்றுன் உடனடியாக.

பாலமுரளி சென்ற திசையைப் பார்த்துக்கொண்டிருந்தன பாரதியின் கண்கள். அதைத் திருப்பி எடுக்க அவளால் முடியவில்லை. ஏதோ ஒரு சக்தி அவளைத் தடுத்து நின்றது. ஒருவாறு சமாளித்துவிட்டுத் தனது அறைக்குள்ளே சென்ற பாரதி சமையல்க்காரியிடம் எதையோ சொல்லிவிட்டுத் தனது வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள் துரிதமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. மாலை மணி இரண்டு முப்பது போல் தங்கவடிவும் ஈஸ்வரனும் பாலமுரளியோடு பாரதியின் விடுதிக்குச் சென்றனர். பாரதியைத் தங்கவடிவுக்கும் தங்க வடிவைப் பாரதிக்கும் அறிமுகம் செய்துவைத்த பாலமுரளி "இவன்தான் எனது சிறிய தாயாரின் மகன் ஈஸ்வரன். யாழ்ப் பாணம் பரி. யோவான் கல்லூரியில் எட்டாம் வகுப்புப் படிக் கிருன்" என்ருன். பகல் உணவு பரிமாறப்பட்டபின், பாரதியும் தங்கவடிவும் மனம்விட்டுப் பேசினர். பொது நிறம் படைத்த பாரதியின் அழகிலும் அப்போதைய குணத்திலும் திருப்தியடைந் தாள் தங்கவடிவு பேசவேண்டிய யாவும் பேசி முடிந்தன. நேரமோ ஐந்தாகியபோது பாரதியிடம் விடைபெற்றுக்கொண்டு கண்டி புறப்பட்டான் பாலமுரளி தாயோடும் ஒன்றுவிட்ட தனது தம்பி ஈஸ்வரனோடும்.

அவர்களை வழியனுப்பிவைத்த பாரதி உடனடியாக எழுதத் தொடங்கினுள் தனது மாமனுருக்கு. "எனது திருமணம் பற்றி அலசுவதற்காகவே நீங்கள் வரவேண்டும். உங்கள் வருகையைக் கட்டாயமாகக் காத்திருப்பேன், வரத்தவறவேண்டாம்", என்று எழுதியிருக்கிருள் என்ருல், மதன்மோகன் வந்துதானே ஆக வேண்டும்?

## அத்தியாயம் 14

**பா**ரதியும் மதன்மோகனும் உரையாடிக் கொண்டிருந்தார் கள். "பாலமுரளி உன்னை விரும்பிக்கொண்டான், நீயும் பால முரளியைத் திருமணம் செய்வதாக உறுதிப்படுத்திக்கொண்டாய்" என்று மதன்மோகன் சொன்னபோது பாரதி மெளனம் சாதித்துக் கொண்டாள்.

உன்னுடைய இருபத்திரண்டு வயதும் பாலமுரளியின் முப்பது வயதும் மிகப்பொருத்தம் என்பதை நானும் வரவேற்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனுல், உன் தந்தையின் விருப்பம்..." என்று மேலும் தொடர்ந் தான் மதன்மோகன்.

அதைப்பற்றித்தான் நானும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் மாமா. "உனது தகப்பனுரின் ஆசியோடுதான் உனது திருமணம் நடைபெறவேண்டும" என்று அவர் மட்டுமல்ல, என்னைப் பார்ப் பதற்காக இங்கு வந்து சென்ற அவரின் தாயார் தங்கவடிவும் கூறிச் சென்றிருக்கிருர். இந்தக் கருத்தை அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டார்களென்பதால்த்தான் உடனடியாக யாழ்ப்பாணம் போய்வாருங்கள் என்று உங்களை நான் வற்புறுத்துகிறேன்," என்ருள் பாரதி.

"அப்படியானுல் நீயும் என்னேடு வந்தால் எல்லாம் சுலப மாக முடியும் என்று நினைக்கிறேன். இல்லையா பாரதி?" என்ற மதன்மோகனை ஆதரிக்கவில்லை அவள். "எனது தகப்பனுருக்கு என்னைப் பிடிக்கவே பிடிக்காது என்பது உங்களுக்குத் தெரிந் ததுதானே. என்னையும் என் குடும்பத்தையும் அடியோடு வெறுத் தவர் அவர், என்பதும் அறிவீர்கள். எனவே, எனது தகப்பனுரிடம் எனக்காக நீங்கள் தூதுபோய் என் நிலையைக் கூறி எனது திருமணம் அடுத்த மாதம் நடைபெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்யவேண்டுமென்பதே எனது முதல் வேண்டுகோள்.

"நிற்க, ஸ்ரீதனம் எதுவுமே வேண்டாம் என்பது அவரின் கொள்கை. அத்தோடு திருமணமும் இரகசியமாகநடக்கவேண்டும், வீண்செலவும் ஆடம்பரமும் கூடாது என்பதும் அவர்களது பேரவா. நம்மைப் பொறுத்த அளவிலும் அது மிக மிக நல்லது என்பது உங்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். ஆகவே எப்படி யாவது லீவு எடுத்துக்கொண்டு உடனடியாக யாழ்ப்பாணம் போய் வாருங்கள். அப்பாவை எந்தமுறையிலாவது சமாதானப்படுத்தி இதற்கு இணங்கவைக்கவேண்டியது உங்கள் கடமை... உங்கள் மூளை இதில் வெற்றிகாணத் தவறுமென்று கண்டால் எங்காவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மூளையொன்றைக் கடன் வாங்கியாவது எடுக்கும் எங்கள் விஷயத்தில் வெற்றிபெற்றுத் தரவேண்டுமென்று சிரம் தாழ்த்தி வேண்டிக்கொள்கிறேன் மாமா.

"அத்தோடு யாழ்ப்பாணம் போனல் மாமியையும் பிள்ளைகளை யும் பார்க்கத் தவறக்கூடாது இதுவும் மிக மிக முக்கியம்... எனது திருமணம் எவ்வளவு கட்டாயமோ அவ்வளவு கட்டாயம் மாமியோடும் குழந்தைகளோடும் நீங்கள் பேசப்போவது" என்று பாரதி சுட்டிக் காட்டியபோது மதன்மோகன் சிறிது சிந்தித்தான்.

"சரி பாரதி, இன்றிரவே யாழ்ப்பாணம் போகிறேன். உன் அப்பாவின் சம்மதத்தை எப்படியென்று அறிந்தபின் தந்தியடிப் பேன் உன் வருகை அங்கு அவசியமாயிருந்தால். இல்லை யென்றல் நேரடியாக வந்து சொல்லுகிறேன்."

பாரதியிடம் விடை பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணம் சென்ற மதன்மோகன் பாரதியின் வீட்டுக்குச் சென்றன் நேரடியாக. "இல்லை அத்தான் நீங்கள் எப்படியாவது பாரதியின் திருமணத் திற்கு ஒப்புத் தருவதோடு அத்திருமணத்தில் முக்கிய பங்கெடுக்க வேண்டிய கடமையும் உங்களையே சாரும் என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டியவனுயிருக்கிறேன்." என்று அவன் கூறியதைக் கேட்ட தில்லைநடேசர் கொஞ்சநேர மௌனம் சாதித்தார்.

எங்கும் அமைதி குடிகொண்ட அந்த நேரத்தில் மதன் மோகனின் பார்வை மட்டும் அடிக்கடி தில்லைநடேசரில் விழுந்து கொண்டிருந்தது. தில்லைநடேசர் என்ன பதில் சொல்லப்போகிருர் என்ற அங்கலாய்ப்பு அவனுக்கு.

"ஏனத்தான் மௌனம்? பதிலைச் சொல்லுகள்." என்றிழுத் தான் மதன்மோகன்.

"இல்லைத்தம்பி, பாரதியைப் பொறுத்தமட்டில் நான் எதுவுமே சொல்வதற்கில்லை. இத்துணை காலமும் தகப்பன் ஒருவன் இருக்கிருனே என்று அவள் நினைத்துப் பார்த்ததே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. ஆனபடியால்த்தான் சொல்லுகிறேன். அவளைப் பற்றிக் கவலையே இல்லை. மகள் ஒருத்தி இறந்துவிட்டாள் என்ற ஆறுதலோடு இருப்பேன்" என்றார் தில்லைநடேசர்.

' அப்படிச் சொல்லாதீர்கள். ஏதோ சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அவளை அப்படி ஆக்கிவிட்டது. அன்று உங்களை அவள் வெறுத்திருக்கலாம். ஆனால் இன்று அவள் அப்படியில்லை. உங்களைக்கண்டு ஆசீர்வாதம் பெற்றபின்பே திருமணம் செய்ய வேண்டும்; தந்தையின் ஆசி இல்லாத திருமணம் நிறைவு இல்லாத திருமணம் - கறைபடியும் திருமணம் என்ற கருத்துடையவள்" என்றான் மதன்மோகன்.

"இதை அவள் முன்னமே நினைத்திருக்கலாமே. எதற்கும் ஒரு தந்தை அவசியம் என்று அன்றைக்குக் கருதியிருந்தால், இன்றைக்கு மூன்றும் ஆள் தேவையில்லாமலிருந்திருக்குமே அவளது திருமணம் பற்றிப் பேசுவதற்கு. அது மாத்திரமல்ல; எனது ஆசியும் கிடைத்திருக்கும்" என்று சில உண்மைகளை வெளியிட்ட தில்லைநடேசரை ஒருவாறு சமாதானப் படுத்த வேண்டும் என்பதே மதன்மோகனின் ஒரே ஆசை. பல வழிகள் அவனால் கையாளப்பட்டன. இரண்டு மணிநேர உரையாடல். இடைவிடாமல் பேசிக்கொண்டிருந்தார்கள் இருவரும். தில்லைநடேசரின் கோபத்தையும் ஆத்திரத்தையும் அறிந்துகொண்டான் மதன்மோகன். "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்பதற்கிணங்கவே நடந்துகொள்ள வேண்டியிருந்தது. தில்லைநடேசருக்குப் பதில் கொடுக்கும் போதெல்லாம் மிக அமைதியாகவும் சாந்தமாகவும் காணப்பட்டான் அவன். தில்லைநடேசரின் மனம் இன்னும் சரியாகத் திருப்பப்படவில்லை. ' சரி சரி எதற்கும் கந்தர் மடம் போய்ப் பாலமுரளியின் தாயாரைக் கண்டு சம்மதம் கேட்க வேண்டும். அதற்குமுன் பாலமுரளி எமது குலத்தவனா என்ற உண்மையை ஆராயவேண்டும்" என்றார் தில்லைநடேசர்.

"பாலமுரளி எமது குலத்தவனாயிராமல் வேறு குலத்தவனாயிருந்தால் என்னத்தான் செய்வீர்கள்?" என்றிழுத்தான் மதன்மோகன்.

"அப்படியானல் நான் அவனை விரும்பமாட்டேன்"

"பாரதி விரும்பினல்... ?"

"என்னை இதில் தொடர்பு படுத்தாமல், வெறுத்துவிட வேண்டியதுதான் பாரதி செய்யவேண்டிய மீதி".

"அப்படிச் சொல்லாதீர்கள் அத்தான். பாலமுரளி எந்தக் குலத்தவனுயிருந்தாலும் தமிழன்தானே ?"

"அப்படியானல் நீயும் சேர்ந்துதான் இதற்கான ஒழுங்குகளை யெல்லாம் செய்துவைத்திருக்கிறய் என்று நம்புகிறேன்."

"இல்லை அத்தான், பாரதியின் விருப்பம் நிறைவேறுவதைத் தான் நானும் விரும்புகிறேன். அவளது பெண்மை பாழாகக் கூடாது."

"அதற்காக இனம், மதம் இவைகளைப் பார்க்காமல் விடுவதா ?"

"பாலமுரளி ஒரு தமிழன் ; நன்ருகப் படித்தவன் ; உத்தி யோகம் பார்க்கின்றவன் என்ற தராதரங்களே போதும் பாரதியை அவனுக்கு மணம் முடித்துக் கொடுப்பதற்கு", என்ற மதன் மோகனின் வார்த்தைகளைத் தில்லைநடேசர் இனியும் ஏற்பதாக இல்லை.

என்ன செய்வதென்ற யோசனை மதன்மோகனுக்கு. "ஒரே யொரு வழி, அவசரத்தந்தி கொடுத்துப் பாரதியை உடனடியாக வரவழைப்பதுதான். அவள் வந்து தகப்பனேடு பேசினல், ஒரு வேளை அவர் மனம் மாறினலும் மாறலாம். பல ஆண்டு காலமாக அதாவது, ஒன்பது பத்து ஆண்டுகளாகப் பாரதி இங்கு வராம லிருந்ததும், தந்தையென்ற நினைவோ உடன் பிறந்தவர்கள் என்ற எண்ணமோ இல்லாமலிருந்ததும் அத்தானுக்குக் கோபத்தை மூட்டியிருக்கிறது. நான்கூட எத்தனை தடவைகள் பாரதிக்குக் கூறியிருக்கிறேன் யாழ்ப்பாணம் போய்வா என்று; கேட்டாளா? மறுத்துவிட்டாள் ஒரேயடியாக. அதனல்த்தானே அத்தானுக்கு இவ்வளவு வெறுப்புத்தட்டிவிட்டது பாரதியில். அதை மறுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமா ? எனக்கொரு மகளிருந்தால், நான் கூட இந்த நிலையில்த் தான் இருந்திருப்பேன். என்னை வந்து மன்னிப்புக் கேட்கும் வரை நான் ஆறமாட்டேன் ; மகளென்று சொல்லவும் மாட்டேன்" என்ற நினைவு அவனுக்கு.

"சரி அத்தான். யோசித்துக் கூறுங்கள். நாளை வருகிறேன்," என்று சொல்லி வெளிக்கிளம்பிய மதன்மோகன் நேரடியாகத் தபால்க் கந்தோருக்குச் சென்று பாரதிக்கு அவசரத்தந்தி கொடுத்து விட்டுச் சென்றான் வளர்மதி வீட்டிற்கு. போகும்போதெல்லாம் அவனது மனதிலே ஒரு சலனம்... பாரதி நாளைக் காலையில் இங்கு வந்து தகப்பனோடு பேசும்போது என்ன நடக்குமோ என்ற ஏக்கம்... ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு நடந் தவன், "பாரதி வரட்டும், என்ன முடிவென்பதை நாளைக்குத் தெரிந்துகொள்ளலாம்" என்று சொல்லிக்கொண்டே சென்றான்.

## அத்தியாயம் 15

**வெ**ட்டுப்பட்ட வளர்மரத்தினின்றும் சீறிப்பாயும் நீர், கழி யாகி உறைவதுபோல், பாரதியின் கண்ணீர்த் துளிகளும் குவிய லாக நிறைந்தன. பாரதி அழுதாள். முன்பெல்லாம் கவலை படர்ந்திருந்த அவளது கண்களிலே இப்போது கண்ணீர் படிந் திருந்தது. கடந்த இரவு கொழும்பிலிருந்து திடீரெனப் புறப்பட்டு வந்தபடியினால் தூக்கம் கலைந்திருந்த விழிகளிலே துக்கமும் கலந்திருந்தது. ஒரே சிவப்பு மயம். அத்தோடு ஒருவகை ஆத்திரம்.

"உங்கள் குடியும் வெறியும்தானே என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது. தகப்பனைவிட்டுப் பாரதி பிரிந்திருக்கிறாள் என்று உலகம் பேசிக்கொள்கிறதென்றால் அதற்குக் காரணம் யார்? என் அம்மா என்னை மாமாவிடம் ஒப்படைத்தார் என்றால் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்காக? நொண்டிப் பெண்ணாக, மற்றவர்களின் பழிப்புக்கும் சிரிப்புக்கும் காரணமாக அமைந்திருக்கிறாள் பாரதி என்றால் யார் அதற்குப் பொறுப்பாளி? உயிரோடு ஒரு தந்தை இருந்தும் அந்தத் தந்தையை இதுவரை காலமும் காணவிரும்பாமல் ஒரு மகள் இருந்திருக்கிறாள் என்றால் அது ஏன்? களிப்பிலே குடி கொண்டு இன்ப நினைப்பிலும் விழிப்பிலும் நிலைகொண்டு வாழ வேண்டிய நான் கண்ணிலே நீர்கொண்டு வாழுகிறேன் என்றால் யார் அதற்குக் குற்றவாளி? நினைத்துப் பாருங்கள். உடன் பிறந்த சகோதரங்களையே பார்க்கமுடியாமல், விடஞ்செறிந்த நாகம்போல் ஒதுக்குப்புறமொன்றில் எங்கோ வாழுகிறேன் என்றால் அதற்கு ஜவாப்தாரி யார்? நன்றாகச் சிந்தியுங்கள். அந்தச் சிந்தனையின்பின் கேளுங்கள் உங்கள் உள்ளத்தை.... கேட்டு விட்டுத் தாருங்கள் உங்கள் கருத்தை," என்று துடுக்கோடும் ஆத்திரத் துடிப்போடும் தனது தந்தையைக் கேட்டு நின்றாள் பாரதி.

பாரதி இப்படிப் பேசுவாள் என்று எவருமே எதிர்பார்க்க வில்லை. மேடையில் முழங்குகின்ற சோகப் பாத்திரமொன்று நடிப்பதுபோன்ற நிலை. ஒரு மூலையில் அவள். அவளினருகே அவளது சகோதரங்கள். கண்ணீர் சிந்தும் அவர்களின் பக்கத்திலே மதன்மோகன். மதன்மோகனின் அருகிலே தில்லைநடேசர்.

தில்லைநடேசருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பாரதியின் அர்த்த புஷ்டியான பேச்சு அவரை மயக்கி விட்டதா என்றுகூட நினைக்கத் தோன்றும்... சாதாரணமாக எல்லோரையும் எதிர்த்துப் பேசும் அவர், பாரதியை இன்று எதிர்க்காமலிருப்பாரா என்ன?

ஆனால், இன்று அவரது வாழ்க்கையிலே ஒரு புதுமாற்றம். பாரதி பேசியதை எதிர்த்து எதுவுமே பேசமுடியாதவராய் இருந்தார். அதற்குக் காரணம் தன்னைத்தானே உணர்ந்ததுதான். தன்னைத்தான் உணரவேண்டி வந்ததற்குக் காரணம் குடிவெறி யில்லாததுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக அவர் குடிக்கும் நேரம் காலை ஏழு அல்லது அதன்பின். ஆனால் இன்று... ? காலை ஐந்து ஐந்தரை மணிக்கே பாரதி கொழும்பிலிருந்து வந்து பேச்சுத் தொடர்ந்துவிட்டாள். அத்தோடு வந்ததும் வராததுமாகத் தனக்கு ஏற்பட்ட அனைத்துக்கும் தில்லைநடேசர்தான் காரணம் என்று மறைமுகமாகவும் கூறிவிட்டாள். ஆகவேதான் குடிக்கும் சந்தர்ப்பம் அவருக்குச் சரிவரவில்லை.

எல்லாவற்றிற்கும் காரணமாக அமைந்தவர் நீங்கள் அப்பா. அதனால்த்தானே இந்த நிலை எனக்கு ஏற்பட்டது. இல்லையென்றால் உங்கள் விருப்பத்திற்கும் வேண்டுகோளுக்கும் இணங்கத் திருமணம் செய்திருப்பேனே. நீங்கள் தேடிய வரனை எனது கணவனாக்கியிருப்பேனே ? இப்படி அழுது புலம்பி எனது கலியாணத்திற்குச் சம்மதம் தாருங்கள் என்று கதறிக் கெஞ்சவேண்டிய நிலையொன்று ஏற்பட்டிருக்காதே. சொல்லுங்கள் அப்பா இனியாவது பதிலை." என்று கேட்ட பாரதியை எதிர்க்காமலிருக்கிறார் தில்லைநடேசர் என்றால் குடிக்காததுதான் காரணம்.

" அப்பா, உங்கள் ஆசி இல்லாமல் என்னைக் கலியாணம் செய்யத் தன்னால் முடியாது என்று சொல்லிவிட்டார் பாலமுரளி. தாய் தந்தையரின் ஆசி இல்லாமல் கலியாணம் செய்யக்கூடாது என்பது அவரின் கொள்கை. ஆகவே உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன் அப்பா. சொல்லுங்கள் உங்கள் பதிலை", என்று கூறித் தனது பாதத்திலே விழுந்திருந்த பாரதியை மெதுவாகத் தூக்கியெடுத்தார் தில்லைநடேசர். தந்தையும் மகளும் ஒருவரையொருவர் பார்த்து நின்றனர்.

இருவர் கண்களிலும் நீர்ப்பெருக்கம். அந்தப் பெருக்கத்திலே பரிதாபம் பூத்திருந்தது. குளமாகி வடிந்தொழுகிய கண்ணீர்த் துளிகளிலே ஒருவரையொருவர் உணர்ந்த நிறைவு காணப்பட்டது.

" மகளே " என்றார் தில்லைநடேசர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா" என்றுள் பாரதி. பாரதியின் கண்ணீரைத் துடைத்து அவளைத் தேற்றிக்கொண்டிருந்தார் தில்லைநடேசர்.

எல்லோர் கண்களிலும் இப்போது ஆனந்தக்கண்ணீர்... நிலைமை மாறி நிறைவு ஏற்பட்டபோது ஆனந்தக்கண்ணீர் பெருகத்தானே வேண்டும்.

"தன்னுடைய மூளை வேலை செய்துவிட்ட" தென்ற பெருமை மதன்மோகனுக்கு.

"எங்கள் அக்காவும் அப்பாவும் மறுபடியும் ஒன்றுசேர்ந்து விட்டார்கள்" என்ற களிப்பு, பாரதியின் சகோதரர்களுக்கு.

"என் மகள் என்றைக்கும் எனது மகள். அப்பனும் மகளும் பிரிந்திருக்கிறுர்கள் என்று சொன்ன உலகத்தின் வாயை இன்று தொடக்கம் மூடிவிட்டோம்" என்ற எக்காளம் தில்லைநடேசருக்கு.

"என் எண்ணம் நிறைவேறிவிட்டது. என் மனம் நாடிய மணவாளன், மனங்கொண்ட மாளிகை அந்தப் பாலமுரளி. என் அப்பாவின் ஆசியும் கிடைத்துவிட்டபின் இனி எதற்காக இந்தக் கண்ணீர்த்துளிகள்" என்ற நினைப்பு பாரதிக்கு.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. தில்லைநடேசரும் மதன்மோகனும் பஞ்சாங்கத்தையே புரட்டிக்கொண்டிருந்தார்கள். ஒன்றும் சரியாகப் பிடிபடவில்லை. அடுத்த வீதியிலுள்ள சாத்திரியார் வீரப்பிள்ளையிடம் சென்றனர் விபரமறிவதற்காக.

சாத்திரியார் வீரப்பிள்ளை முகூர்த்தம் சொன்னுர். "நல்ல நாள். நீங்கள் போய் இதுபற்றிப் பேச்சுத் தொடுப்பது வெற்றியாய் முடியும் என்ற பூரண நம்பிக்கை எனக்கு. தவறவிடாதீர்கள். இறைவனின் ஆசியும் எனது ஆசியும் உண்டு. போய் வாருங்கள்" என்றுர்...

கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்டு வீடு திரும்பினுர் தில்லைநடேசர். மதன்மோகன் அவரோடு செல்லவில்லை. வளர்மதியிடம் சென்றுன் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள்க் காலே. மணி எட்டு. மதன்மோகனும் தில்லைநடேசரும் அலாதியாகப் புறப்பட்டனர். இலேசான புன்னகை அவர்கள் இதழ்களிலே ஓடிக்கொண்டிருந்தது.

அவர்களை வழி அனுப்பிவைத்தவர்கள் பாரதியும் அவளது சகோதரங்களுந்தான். "ஆண்டவரே! எல்லாமே நல்ல முறையில் நடைபெறவேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர் பாரதியின் சகோதரர்கள் இருவரும்.

"அம்மா! என் எண்ணம் நிறைவேற நீங்களே துணை," என்ருள் பாரதி, இறந்த தனது தாயின் படத்தருகே சென்று.

விடைபெற்றுச் சென்று தங்கவடிவின் வீட்டிலே காணப்பட்டனர் தில்லைநடேசரும் மதன்மோகனும். "அப்படி இப்படி என்று அலசிப் பார்த்தபோதுதான், நீங்கள் எனக்குச் சொந்தம் என்று தெரியவந்தது" என்று தில்லைநடேசர் கூறியபோது சிரித்து நின்ருள் தங்கவடிவு.

"ஏதோ தெய்வாதீனமாக ஒருவரையொருவர் விரும்பிக் கொண்டனர்" என்று தில்லைநடேசர் மறுபடியும் கூறியபோது, "திருமணங்கள் தெய்வத்தால் நியமிக்கப்படுகின்றன" என்பது இதற்காகத்தான் என்ருன் மதன்மோகன்.

"அது போகட்டும். ஸ்ரீதனம் எதுவுமே எடுக்காமல் கலியாணம் செய்யச் சம்மதிக்கிறீர்களே, அதற்கான காரணத்தை அறியலாமா?" என்று கேட்ட தில்லைநடேசருக்குப் பதில் சொன்னுள் தங்கவடிவு.

"எனது மகனுடைய பிடிவாதம் அது. "உழைத்து என்னுடைய மனைவியைக் காப்பாற்றக்கூடிய தைரியமும் உறுதியும் என்னிடம் இருக்கும்போது, எதற்காக அம்மா ஸ்ரீதனம்? படித்து உத்தியோகம் பார்க்கும் நாங்கள் ஸ்ரீதனம் ஸ்ரீதனம் என்று அலைவதனுல்தானே பல தமிழ்ப் பெண்கள் கன்னிகழிக்க முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமல் காலங்கடத்துகிருர்கள். இதை நினைத்துத்தான் ஸ்ரீதனம் எடுப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்... ஸ்ரீதனம் எடுக்கவேண்டியவர்கள் நாங்களல்ல, உழைப்பில்லாமல் - உழைப் பிருந்தும் ஊதியம் போதாமல் ஏழைகளாய்த் தொங்கிக்கொண் டிருக்கும் ஆண்கள்தான். அப்படிப்பட்டவர்களுக்குச் ஸ்ரீதனம் கொடுத்தால் அந்தப் பணத்தைக்கொண்டு சிறு தொழிற்சாலை யொன்றை நடாத்தி வேலை வாய்ப்பில்லாதவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுப்பதோடு உள்நாட்டு உற்பத்தியையும் பெருக்கி அவர்களும் அவரவர் குடும்பத்தோடு நல்ல முறையில் செந்தழிப் பாக வாழலாமல்லவா? இதற்காகத்தானம்மா எம்போன்ற உழைப் பாளிகள் ஓரளவு நல்ல வருவாயுள்ள உத்தியோகத்தவர்கள் ஸ்ரீதனம் வாங்காமலிருப்பது உத்தமம் என்று நான் கருதுகிறேன். சரிதானே அம்மா என் வாதம்'' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டான் அவன். அவனுடைய நல்ல காரணத்தைத் தட்டிக் கழிக்காத தாய் நான். எனவேதான் "உன் விருப்பம்போல் எதையும் செய்கிறேன் மகனே'' என்று கூறிவிட்டேன்'' என்று முடித்தாள் தங்கவடிவு. எதற்கும் அடுத்த மாதம் இருபத்தெட் டாம் தேதி நல்ல நாள். பௌர்ணமித் திங்கள் கலியாணத் திற்குரிய சிறப்பு நாள் என்று சாத்திரி வீரப்பிள்ளையும் கருது கிருர்கள். பஞ்சாங்கத்தையும் புரட்டிப் பார்த்துவிட்டேன்'' என்ருர் தில்லைநடேசர்.

தங்கவடிவின் விருப்பமும் அதுவாக அமைந்திருந்தது போற்றத்தக்கதுதான். மதன்மோகனும் தில்லைநடேசரும் வேறு பல விஷயங்களையும் அலசி விடைபெற்றுச் சென்றபோது பால முரளியின் விடுதி விலாசத்தையும் பெற்றுக்கொண்டனர் என்ருல் கண்டிபோகும் நோக்கமாகத்தானே இருக்கவேண்டும்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 16

**அ**ன்று போயா நாள்க் காலே. மணி ஏழு. பாலமுரளி யின் விடுதியிலே காலடிவைத்த தில்லைநடேசரும் மதன்மோகனும் தம்மை அறிமுகம் செய்துவைத்தார்கள் பாலமுரளிக்கு.

"நேற்று அம்மாவின் கடிதம் கிடைத்தது. என்னைப்பார்க்க நீங்கள் விரும்புவதாக எழுதியிருந்தாள் அம்மா. ஆனுல், இங்கு வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை." என்ருன் பாலமுரளி.

"எதிர்பாராமல் நடைபெறும் சம்பவங்கள்தான் சுவை பயக் கின்றன என்பது அனுபவத்தின் அர்த்தம். எனவே எங்கள் சந்திப்பும் இனிமை பயக்கட்டும்," என்ருன் மதன்மோகன்.

"உங்களுடைய அம்மாவிடம் விலாசத்தைப் பெற்றுக் கொண்டுதான் இங்கு வந்தோம். குருணகலேயிலிருந்து எம்மோடு பஸ்ஸில் வந்த ஒருவர் இந்த இடத்தைக் காட்டித் தந்தபோது சிரமமில்லாமலே இங்கு வந்தோம் தம்பி," என்ருர் தில்லைநடேசர்.

"கடவுள் சித்தமாக எல்லாம் நன்மையாகவே முடிந்து விட்டது" என்ருன் மதன்மோகன்.

"சரி சரி, வாருங்கள். காலேக் கடனே முடித்துவிட்டுப் பேசுவோம்," என்ற பாலமுரளிக்குச் செவிசாய்த்துச் சென்றனர் இருவரும். காலே உணவுக்காகப் பாணும் பட்டரும் ஜாமும் பரிமாறப்பட்டது. அத்தோடு நல்ல காப்பி... உண்டு முடித்த பின் உரையாடல் தொடங்கியது.

"மிகவும் அமைதியான முறையில்த்தான் எமது திருமணம் நடைபெறவேண்டும் என்பது எனது எண்ணம்," என்ருன் பால முரளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நிச்சயம் ஒத்துவருவோம் தம்பி. ஸ்ரீதனம் என்ற சொல்லே இந்தத் திருமணத்தில் இருக்கக்கூடாது என்று தீர்ப்புக்கூறிய உங்களை என் மகள் பாரதியின் தெய்வமென்றே கூறவேண்டும். ஆகவே, நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதுவே நடைபெறும்," என்று மரியாதைப் பண்போடு கூறினர் தில்லைநடேசர்.

பங்குனி மாதம் இருபத்தெட்டாம் தேதி நல்ல நாள்; சுப முகூர்த்த வேளை. அன்றைக்குத் திருமணம் நடைபெறலா மென்பது எமது விருப்பம் மட்டுமல்ல; உங்கள் அம்மாவுக்கும் அதுவே விருப்பம்" என்ருன் மதன்மோகன்.

" அந்த நாளைப்பற்றி அம்மாவும் எனக்கெழுதிவிட்டாள் அம்மாவை மீறி எதுவித நல்ல காரியத்தையும் நான் செய்த தில்லை. எனவே அடுத்த மாதம் இருபத்தெட்டாம் தேதி எமது திருமணம் நடைபெறட்டும்," என்ருன் பாலமுரளி.

" ஆகட்டும் தம்பி. இப்போது புறப்படுங்கள் கொழும்பு போய்ப் பாரதியைச் சந்தித்துவருவோம்" என்று தில்லைநடேசர் கூறியபோது பாலமுரளி அதை எதிர்க்கவில்லை. மூவரும் கொழும்பு புறப்பட்டனர்.

பாரதியின் விடுதியில் மூவருக்கும் அன்று நண்பகல் உணவு. முத்துச்சம்பாச் சாதமும் கோழி இறைச்சியோடு உருளைக்கிழங்குப் பொரியலும், லீக்ஸ் கோவா போன்ற மரக்கறி வகையும் சலாட், அப்படம் இவற்றோடு கோழிக்கால் சூப்பும் உணவாகின. சிங்கள வீடாயிருந்தாலும் பாரதியின் தமிழ்க் கைவண்ணமும் சேர்ந்ததால் அன்றைய உணவிலே அறுசுவை கலந்திருந்தது. இன்பமாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள் மூவரும்.

" செல்வி லேக்கா என்று சொன்னுயே பாரதி, அந்தப் பெண் இங்கு தங்குவதே இல்லையா?" என்று இடைக் கேள்வி யொன்றை வெளியிட்ட தில்லைநடேசருக்குப் பதில் சொன்னுள் பாரதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனிலை ! போயா நாளில் மட்டும் வெளிக்கிளம்பி விடுவாள். காலை எட்டு மணிக்குமுன் புறப்பட்டால் இரவு எட்டு மணிக்குத்தான் வீடு திரும்புவார். சில போயா நாட்களில் மட்டும் பகல் ஒரு மணிக்குமுன் வந்துவிடுவார். இதுதான் அப்பா செல்வி லேக்காவின் கதை."

"ஆமாம், நீ எப்படி இங்கு மேற்றனுகினுய் பாரதி."

"எல்லாம் மாமாவின் அருள்தானப்பா..."

"அப்படியா மதன்மோகன்?"

"ஆம் அத்தான்! செல்வி லேக்கா இதற்குமுன் ஆசிரியை யாய்க் கடமையாற்றிக் கொண்டிருந்த ஒரு கலைப்பட்டதாரி. அதாவது இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பீ. ஏ. பட்டம் பெற்றவர். ஆசிரியையாயிருந்த காலத்தில் அடிக்கடி கல்விக் கந்தோருக்கு வருவார் சம்பள, இடமாற்ற விஷயங்களுக்காக. இதனுல் எனக்கும் அவருக்கும் பழக்கமேற்பட்டது. இந்த ஆசிரியத் தொழிலில் பிச்சைச் சம்பளம் பெறுவதோடு அடிக்கடி கல்விக் கந்தோருக்கு வந்து நேரத்தை வீணுக்குவதைவிட, தையல் நிறுவனம் ஒன்று போடப்போகிறேன் என்று அன்ருெருநாள் கூறினுர் என்னிடம்... பாரதிக்கு ஏதாவது ஒரு வேலை கொடுக்கும்படி நான்தான் கேட்டேன். கல்விக் கந்தோரில் தேவைப்பட்ட உதவிகளை அன்று அவருக்காக நான் செய்தபடியால்த்தான் இன்று பாரதிக்கு மேற்றன் வேலை கிடைத்தது" என்று முடித்தான் மதன்மோகன்.

"பாரதி அதிர்ஷ்டசாலிதான்" என்று கூறிவிட்டு மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார் தில்லைநடேசர். எல்லோருக்கும் உணவு பரிமாறிய பாரதியின் முகத்திலே புதுப்பொலிவு பரந்திருந்தது. சோழமன்னனின் அவையிலே அம்பிகாபதிக்குச் சாதம் பரிமாறிய அமராவதியின் நிலையிலே பாரதி.

ஒருவிதமாகச் சாப்பிட்டு முடித்தனர் மூவரும். பாலமுரளியின் முகத்திலே வியர்வைத்துளிகள் முத்துப் பதித்தன. புடிங் மேசைக்கு வந்துவிட்டது. மகளின் சமையல்கலைக்குப் பாராட்டு வழங்கினுர் தில்லைநடேசர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பாலமுரளி யோகஞ்செய்தவன் " என்றுன் மதன்மோகன்.

" தம்பி பாலா, உங்களோடு சில வார்த்தைகள் பேச வேண்டும் தனிமையில். இப்படி வரமுடியுமா ?" என்று சொல்லிக் கொண்டு புதிய ஒழுங்கைக்குச் சென்ற தில்லைநடேசரைப் பின் தொடர்ந்தான் பாலமுரளி.

" மாமனும் மருமகனும் என்னதான் இரகசியம் பேசப் போகிறுர்களோ ?" என்றுன் மதன்மோகன்.

" எதிர்கால உறவுகள். எதையாவது பேசட்டும் " என்ற பாரதி கதையை வேறுபக்கம் திருப்பிவிட்டாள்.

" ஆமாம், நீங்கள் எதற்காக மாமியோடு கோபித்தீர்கள் என்பதை இப்போதாவது சொல்லமுடியுமா மாமா ?"

" யார் சொன்னுர்கள் நான் வளர்மதியோடு கோபித்தேன் என்று ? உனது திருமணம்பற்றிப் பேசப்போனபோதுகூட உனது மாமியைப் பார்க்காமலா வந்தேன். முதன்முதலில் உன் வீட்டுக்குப்போய் அத்தாளுேடு எல்லாவற்றையும் பேசி முடித்துக்கொண்டு கொக்குவில் போய் வளர்மதியோடுதானே தங்கியிருந்தேன். உன் மாமி உனக்கு எழுதவில்லையா ?"

" எழுதியிருந்தார். ஆனுல், உண்மை அன்பு இல்லாமல் ஏதோ கடமைக்காகப் பார்ப்பதுதான் கூடாத பழக்கமென்கிறேன்."

" வளர்மதி மூட்டியிருக்கிருள் கடிதமூலமாக என்று நம்பு கிறேன் பாரதி."

" மூட்டவில்லை. உண்மையைத்தான் காட்டியிருக்கிருர்கள். இனிமேலாவது சொல்லுங்கள். மாமியை எதற்காக நீங்கள் வெறுக்கவேண்டும் ?"

" உனது திருமணம் நடைபெற்று முடிந்ததும் எல்லாமே கூறுகிறேன் விபரமாக. அதுவரை என்னைத் தொந்தரவுபடுத் தாதே பாரதி", என்று மதன்மோகன் கண்டிப்பான வார்த்தை யில் சொல்லிநிறுத்தியபோதுதான் தமது இரகசியப் பேச்சு வார்த்தைகளையும் முடித்துவிட்டு உள்ளே புகுந்தனர் தில்லை நடேசரும் பாலமுரளியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன இரகசியம் பேசினீர்கள் அப்பா?" என்றாள் பாரதி.

"ஒன்றுமில்லை. கலியாணங்கள் எப்படி நடைபெறவேண்டும், கந்தர்மடத்து மஹால் வீதியிலும் யாழ்நகரத்துக் கோயில் தெருவிலும் வைபவங்கள் எப்படி இருக்கவேண்டும் யார்யார் அழைக்கப்படவேண்டும் என்பவற்றை அலசி முடித்ததோடு கலியாணச் செலவுத் தொகையை மாமாவே தருவதாகவும் கூறுகிறார்" என்றான் பாலமுரளி சிரித்தபடி. உரையாடலை முடித்துக்கொண்டு கண்டி புறப்பட்டனர் மூவரும்.

பாரதி தற்போது தனிமையில். பூரிப்பு இழையோடிய அங்கங்களோடு காணப்பட்டாள் அவள். "பாலமுரளியைக் கண்டு பேசியபோது என் துயரத்தை வெளிப்படுத்தி, வரலாற்றைக் கூறியபடியால்த்தானே என்னை அவர் விரும்பியிருக்கிறார். பரிதாபப்படும் உள்ளத்தில் காதல் வேர்விடுகிறது என்பது பாலமுரளியைப் பொறுத்தமட்டில் நன்றாகப் பொருந்திவிட்டது. என்னில் பரிதாபமும் அனுதாபமும் காட்டினார். அதன் விளைவு நான் அவருக்கு மனைவியாகப்போகிறேன். அவர் என் தெய்வம். தெய்வம் மனித உருவில் இருக்கிறது என்பதைச் சிலர் ஒப்புக்கொள்வதற்குக் காரணம், அவரவர் வாழ்வில் ஏற்படும் அனுபவம் தான்" என்ற நினைப்போடு இருந்தாளோ என்னவோ, ஆனால் "அடுத்தமாதம் இருபத்தெட்டாம் தேதிதான் எனது நாள்", என்று சொல்லிக்கொண்டிருந்தாள் என்பதே உண்மையிலும் உண்மை.

## அத்தியாயம் 17

"கலியாணங்களென்றால் இப்படித்தான் நடக்கவேண்டும். நகைக்கடையிலே கொடியும் தாலியும், கச்சேரியிலே திருமணப் பதிவு, வீட்டிலே சிறியதொரு சொற்பொழிவு. சுருக்கத்திலும் அழகு இருப்பதைக் காண்கிறோம். இதைவிடுத்து ஐயாயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுயிரம் என்று ஏராளமான பணத்தை இரண்டு மூன்று நாள்ச் செலவுக்காக ஒதுக்கி, புதிய தம்பதிகளையும் தூங்கவிடாமல்க் கெடுத்துவிடும் பாணியில் நடைபெறும் திருமணங்கள் யாவும் ஒழிக்கப்பட்டால், செலவு செய்யப்படாமலிருக்கும் அந்த ஐயா யிரமும் ஆறுயிரமும் போதுமே சிறியதொரு தொழிற்சாலை நடத்தி வேலையில்லாமலிருக்கும் பலருக்கு வாய்ப்பைத் தேடிக்கொடுக்க, உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கிப் பிறநாட்டாரிடம் கை யேந்திப் பிச்சை கேட்பதைத் தடுக்க" என்ருர் பாலமுரளியின் திருமணத்தில் சொற்பொழிவாற்ற வந்த சமாதான நீதவான் சுந்தரேசர் அவர்கள். பொருத்தம்பற்றி அவர் பேசும்போது, 'நாட்டிலே நடைபெறும் காதல் கலியாணங்கள் பொருத்தமற்ற தாய்க் காணப்படுவதற்குக் காரணம், அவரவர் வயதிலே காணப் படும் வேற்றுமை என்பதை எவருமே மறுக்கமுடியாது.

இருபத்தைந்து வயதுடைய காளை ஒருவன், அதே வய துடைய அல்லது தன்னைவிட ஓரிரண்டு வயது மேற்பட்ட ஒருத்தி யைக் காதல் திருமணஞ்செய்து வாழும்போது பல சிக்கல்கள் அவனது வாழ்வின் பிற்பகுதியில் ஏற்படுகின்றன. மணம் முடித்த அவர்களின் வாழ்க்கையில் இருபது ஆண்டுகள் ஓடிவிட்டபின் அந்த மணமகள் நாற்பத்தைந்து வயதை எட்டிப்பிடித்துப் பெண்மையை இழந்துவிடுகிருள். ஆனுல், அந்த ஆணே, நாற் பத்தைந்து நாற்பத்தாறு வயதுடையவனுய் வளர்ந்தபோதும், சிற்றின்பப் பிரியனுக இன்னும் பத்து ஆண்டுகள் குடும்ப வாழ்க்கை நடத்தக்கூடிய சக்தியுடையவனுயிருப்பான் என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. எனவேதான் அந்த ஆண் வேறு ஒரு பெண்ணைக் களவாக நாடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இதைத்தான் பொருந்தாத திருமணம் என்ற பட்டியலில் சேர்க்கவேண்டியிருக்கிறது. ஆகவே, ஆண் ஒருவரின் வயது பெண்ணைவிட எட்டு அல்லது பத்து அதிக மானதாயிருக்கவேண்டும். அதுதான் சிறந்த திருமணம். அங்கு தான் குடும்பப் பிளவும் கலேவும் ஏற்படுவதில்லை என்றெல்லாம் பழங்காலத்தார் அறிந்தபடியாலன்ருே எட்டு அல்லது பத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது மூத்த ஒருவனைப் பெண்ணுக்கு வரனாக்கியிருக்கிறார்கள். வேதாகமத்தில்க்கூட ஆபிரகாமுக்கும் அவனது மனைவி சாராளுக்கும் வயது வேற்றுமை பத்து என்பது தெளிவாகக் காட்டப் பட்டுள்ளது ஆபிரகாம் அறுபது வயதாயிருந்தபோது சாராள் ஐம்பது வயதுப் பெண்ணாக இருந்ததை நாம் பார்க்கிறோம். இதையே இன்றைய நாமும் பின்பற்றவேண்டும்.

இன்னுமொரு வகையான திருமணம் நடைபெறுவதையும் நாம் அவதானிக்கவேண்டும். பதினைந்து பதினாறு வயதுப் பெண்ணொருத்தியை நாற்பது நாற்பத்தொரு வயது ஆணொருவனுக்குக் கலியாணம் என்ற நினைவில் கட்டிவைப்பதுதான். இதன் விளைவையும் எண்ணிப்பாருங்கள். இருபது ஆண்டுகள் கழித்து அந்தப்பெண் முப்பத்தைந்து முப்பத்தாறு வயதை அடையும் போது அவளது கணவனோ அறுபது அறுபத்தொரு வயதை அடைந்துவிடுகிறான். இதன் காரணமாகத்தான் அந்தப் பெண்ணின் வாழ்வில் விபச்சாரம் செய்யும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஆக்கப்படுகிறது. இதுவும் பொருந்தாத திருமணத்தில்த்தான் அடங்குகிறது.

எனவே, இத்தகைய பொருந்தாத திருமணங்கள் நடைபெறுவதையும் விபசாரங்கள் ஏற்படுவதற்கு வழியமைக்கப்படுவதையும் தடுக்கவேண்டியது இளம் உள்ளங்களின் மாபெரும் கடமையாகும். அதை இன்று செய்துகாட்டிய பாரதியையும் பாலமுரளியையும் நான் பாராட்டுகிறேன். நல்ல பொருத்தமுள்ள திருமணத்திற்கு இவர்களின் இணைப்பு ஒரு எடுத்துக்காட்டு. பாரதியின் இருபத்திரண்டு வயதும் பாலமுரளியின் முப்பது வயதும் மிகமிகப் பொருத்தமானவை. எனவேதான் காதலுக்குக் கட்டாயம் கண்ணிருக்கவேண்டும். பார்வையையும் பகுத்தறிவையும் நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும் என்று வருங்கால இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நிற்க, பாரதியும் பாலமுரளியும் கருத்தொருமித்து ஆதரவு பட்ட இன்பத் தம்பதிகளாக வாழவேண்டும், செல்வமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுச் சீரடையவேண்டும், நாலுபேர் மத்தியிலே நனிசிறக்க வளரவேண்டும் என்று வாழ்த்தி என் சிற்றுரையை முடிக்கு முன், இப்படிப்பட்ட நல்லதொரு முயற்சிக்கு என்னை அழைத்துக் கௌரவித்தமைக்காகவும் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். வணக்கம்."

பெரியார் சுந்தரேசர் (சமாதான நீதவான்) வாழ்த்தொலி வழங்கியபின் பாலமுரளியின் நண்பர்கள் பலரும் பாரதிக்கு அறிமுகமான சிலரும் தாம்தாம் தயாரித்துக் கொண்டுவந்த திருமண வாழ்த்துப் பத்திரங்களை வாசித்து, பாலமுரளியிடம் அன்பளிப்பாய்க் கொடுத்தனர். இருகரங்கூப்பி நன்றி அறிவித்த லோடு அவற்றைப் பெற்றுக்கொண்டான் பாலமுரளி.

இதன்பின்னர் வந்தவர்களுக்கு சிற்றுண்டியும் குளிர்பான மும் வழங்கப்பட்டன. வந்த கூட்டம் மிகச் சிறிய கூட்ட மென்றாலும் வந்த அத்தனைபேரும் கலகலப்பாகப் பேசிக்கொண் டிருந்தனர். பாலமுரளியோடும் பாரதியோடும் பேசிக்கொண் டிருந்தார் பெரியார் சுந்தரேசர். "ஏதோ சில அறிவுரைகள் வழங்குகிறார் பெரியார்", என்று பேசிக்கொண்டனர் அங்கு வந்தவர்கள்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. எல்லோரும் தத்தம் வீடு சென்று உறங்கிவிட்டனர். பல ஆண்டுகளுக்குப்பின் அன்று தான் தனது வீட்டிலே தங்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது பாரதிக்கு. அதுவும் தனிமையிலல்ல; உரிமைச் சுடரோடு. மெதுவாக பால முரளியைப் பார்த்தாள் அவள். அவனது பார்வையிலே ஒரு உறவு மின்னிக்கொண்டிருந்தது. மனமும் நினைவும் ஒத்துநின்ற புதுத் தம்பதிகளைக் கோத்துவைக்கும் உறவு அவர்களை மெத்தைக்கு அழைத்துச்சென்றது.

விளக்குச் சுடரின் ஒளியினிலே ஏதோ ஒரு கலகலப்பு. மெல்லிய சிரிப்பினூடே ஒரு பார்வை. நேரம் ஓடிக்கொண் டிருந்தது. முற்றிப் பழுத்திருக்கும் பப்பாளியின் நிறந்தீட்டிய நிலாவொளியின் பார்வையினால் வெட்கம் பூத்துவிட்ட பாரதி, சிறிது நேரத்தால் தேன்இழந்த பூவாக வாடியிருந்தாள். விளக் கின் ஒளி அணைந்து அமைதிஇருள் பரவிக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 18

**நா**ட்களோடி வாரங்களாகி, வாரங்களோடி மாதங்களாகி, மாதங்கள்மாறி ஆண்டொன்று மலர்ந்திருந்தபோது பாரதியின் முதல்க் குழந்தை வெண்ணிலா பூவிலேயிருந்து வெளிவந்த அழகுப் பிஞ்சாகக் காணப்பட்டாள். டி. எஸ். சேனநாயக்கா மாவத்தையிலுள்ள புகையிரத ஒழுங்கையில் மாத வாடகை ரூபா எழுபத்தைந்து கொடுத்தெடுத்த வீட்டில் வெண்ணிலா பிறந்த போது, பாலமுரளியின் நண்பர்கள் பலர் வந்து வெண்ணிலா வுக்குப் பரிசுப் பொருள்களும் காசுத்தாள்களும் கொடுத்ததோடு பாரதியையும் பாலமுரளியையும் வாழ்த்திச் சென்றனர்.

ஈழத்துத் தேன்குறிஞ்சி மலையினிலே கல்லிலெடுத்த மாணிக்கமும் மற்றும் இரத்தினமும், புத்தளக் கடலிடையே குளித்தெடுத்த எழில் முத்தும் வேறு பல அணிமணியும் அழகு படுத்திய தேக்குமரத் தொட்டிலிலே ஆடிவைத்த வெண்ணிலா வின் சிரிப்பிலும் சினத்திலும் தனது தனிமைதனை மறந்திருந் தாள் தங்கவடிவு.

"பாட்டியென்ற பாய்க்கியம் பெற்றிருக்கிருள் என் அம்மா, தாய் என்ற தனிப்பேறு பெற்றுவிட்டாள் என் பாரதி, தந்தை என்ற புதுப்பெருமை சேர்த்திருக்கிறேன் நான்" என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் மிதந்திருந்த பாலமுரளிக்கு நாட்களெல்லாம் குதூகல மாய் ஓடின.

வலையைப் பூரணமாக்கிய சிலந்தியின் நிலையிலே அவன். "அன்பும் பண்புமுள்ள மனைவியைப் பெற்றதனுலன்றே அமுத சுரக்கும் பெண் குழந்தையொன்றைப் பெற்றிருக்கிறேன்," என்று பூரித்திருந்தான் அல்லும் பகலும்.

வேலைமுடித்து வீடுவந்துவிட்டாலப் போதும், வெண்ணில வின் முகத்திலே தூசிகூட விழுவதற்கு இடமில்லாதபடி, எச்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தங்களைப் பரப்பிவிடுவான் பாலமுரளி. சிற்சில நேரங்களில், அவனுடைய கூர் மீசைபட்ட அந்த வெண்ணிலவின் தேன் கன்னங்கள் திடீரென்று அழுது ஓயும்.

"கொஞ்சுவதற்கு ஒரு எல்லை வேண்டும் மகனே. அடிக்கடி உன் எச்சில்பட்டு வருத்தம் வரக்கூடாது உன் பிள்ளைக்கு." என்று தங்கவடிவு சுட்டிக்காட்டும்போதுதான் ஓரளவு மௌனமாயிருப்பான்; அடிக்கடி கொஞ்சுவதை நிறுத்தியுங்கொள்வான் தற்காலிகமாக.

காலம் ஓடி மறைந்துகொண்டிருந்தது. அது வெண்நிறமாகவும் பொன்னிறமாகவும் பாலமுரளிக்குக் காட்சிதந்தபோதும், பாரதிக்கோ அதே காலம் கறுப்பாகவே மாறியிருந்தது. பெருக்கெடுத்த கண்ணீர்த்துளிகள் அவளது கன்னத்திலே. எந்த நேரமும் ஒருவகை விம்மல். தன்னிலையை நினைத்து நினைத்து வேதனைப்பட்டுக்கொண்டிருந்தாள் அவள்.

"நான் பெற்ற செல்வத்தை எனது தோளிலும் மார்பிலும் அணைத்துக் காக்க இயலாத தாயாகிவிட்டேனே," என்ற துயரம் ஒரு பக்கமும், கணவனின் உணர்ச்சிகளைத் திருப்திப்படுத்த முடியாத மனைவியாகிவிட்டேனே என்ற பெருங்கவலை மறுபக்கமுமாயிருந்த பாரதிக்கு எல்லாமே இருள்மயம்.

"பாரதி, என் வெறி உணர்ச்சிகளைப் பூர்த்திசெய்யமட்டுந்தான் நான் உனக்குக் கணவனுயிருக்கிறேன்," என்று நினைத்துத்தானே சதா கண்ணீர் வடிக்கிறுய்? ஒன்று சொல்லுகிறேன் பாரதி, என்றைக்கு உன்னை என் இல்லக்கிழத்தி உடலிலும் உயிரிலும் பாதி என்று முடிவு கட்டினேனே, அன்றைக்குத் தொடக்கம் நான் உனக்கு வெறியுணர்ச்சிக் கணவனுக மட்டுமல்ல, வாழ்நாளெல்லாம் உனக்கு ஏற்படும் இன்ப துன்பங்களிலும் பங்கெடுத்துப் பூரிப்படையும் அன்புணர்ச்சிக் கணவனுகவும் இருப்பேன என்று முடிவும் செய்துவிட்டேன் என்பது உனக்குத் தெரியாத என்ன?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அத்தான் !"

" பாரதி, நீ என்ன சொல்லப்போகிருய் என்பது எனக்குத் தெரியாதென்று நினைக்கிருயா? ஊரும் உறவும் பெற்றெடுத்த தந்தையும் என்னை வெறுத்தபோதும், மாமாவோடு என்னைச் சேர்த்துக் கட்டிவைத்த கதையொன்றின் காரணமாக இனத்திலும் உறவிலும் மணம் முடித்துத் தர முடியாது என்று பெற்ற தந்தையும் உற்ற உறவினரும் வெறுத்துத்தள்ளியபோதும், எனது இடது பாதம் ஊனம் என்ற காரணத்தால், பேசிவந்த திருமணங்கள் தடைபட்டுவிட்டன என்ற உண்மைதனை அறிந்தபோதும், நீங்கள் என்னைக் காதலித்து எனக்கு வாழ்வு தந்தீர்கள். என் கண்ணீரைத் துடைத்தீர்கள் என்பதைத்தானே? அதைப்பற்றி இனியும் சொல்லாதே பாரதி. கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன வசனங்கள். ஏதாவது புதிதாய்ச்சொல், காது குளிரக்கேட்டு வாய் இனிக்க ரசிக்கலாம்" சரிதானே பாரதி?" என்று பாலமுரளி சொல்லி முடிப்பதற்குள் கண்ணீரில் வெள்ளமெடுத்தாள் பாரதி.

" நீங்கள் எவ்வளவுதான் சொல்லி என்னைத் தேற்றினுலும் என் கண்ணீர் வற்றினுல்த்தானே அத்தான்?" பெருக்கெடுத்த பாரதியின் கண்ணீரைத் துடைத்தெறிந்த பாலமுரளியின் கைகள், அவளது தளிர்இலைக் கன்னங்கள் இரண்டையும் தடவி நின்றன.

" பாரதி, மிருக உணர்ச்சி படைத்தவன் பாலமுரளி என்று உலகம் என்னைத் தூற்றக்கூடாது. உன் நோய்மாறி மறுபடியும் எழுந்து நீ நடமாடும் வரை, என் உணர்ச்சியை வேறு எங்குமே சிந்தாமல் கட்டுப்படுத்தும் சக்தி எனக்குண்டு. கவலைப்படாம லிருக்கவேண்டியதுதான் உன் பொறுப்பு. உன்னை நான் பார்க்கும் ஒவ்வொரு நேரமும் நீ மகிழ்ச்சிப் பூரிப்போடு காணப்படவேண்டும். அப்போதுதான் எமது உறவுப் பரிசான வெண்ணிலாவின் ஒளியை நம்மால்ச் சுவைக்கமுடியும். புரிகிறதா பாரதி?"

மெல்லிய உள்ளம் படைத்த பாலமுரளியின் தேற்றல்மொழி பாரதிக்குப் புரியாதா என்ன? மெதுவாக அவனைப் பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வேரிலே உருவாகிய சாந்த மரம் தனது கணவன் என்பதை அவளால் உணரமுடிந்தது. பாலமுரளியின் சிரித்த கண்களி லுள்ளே தனது நிழல் தெரிந்தபோது, பாலமுரளியின் உள்ளத் திலே தான் இருப்பதை ஊகித்துக்கொண்டாள் அவள்.

கண்ணீர் ஒருவாறு அடங்கியது. கவலை மறைந்த அவளது கன்னங்களிலும் அங்கங்களிலும் மின்னிக் கொண்டிருந்தது ஒரு மகிழ்ச்சிக்கோடு... அந்தக் கோட்டின் ஒளியிலே பாலமுரளியின் பூரிப்பைக் கண்டாள் பாரதி...

"பாரதி, உன் கவலையெல்லாம் இனி அடியோடு பறக்க வேண்டும் என்பதே என் ஒரேயொரு வேண்டுகோள்... செய் வாய்தானே? என்று பாலமுரளி தன் மனைவியைத் தேற்றித் கொண்டிருந்த அதே நேரத்தில்தான் வளர்மதியின் கடிதமொன்று மணியடித்தது.

"அத்தான், எப்படியாவது நீங்கள் போய் என் மாமாவின் நிலையறிந்து அவரின் போக்கை மாற்றி என் மாமியின் வரண்ட வாழ்க்கையை வளப்படுத்த உதவுங்கள். இதுவே நீங்கள் எனக் குச் செய்யப்போகும் மாபெரும் உதவி அத்தான்" என்று பாரதி சொன்னபோது பாலமுரளி சில உண்மைகளை எடுத்துக்காட்டினன் பாரதிக்கு.

"பாரதி, உன் மாமியை உனது மாமா வெறுத்ததற்குக் காரணம் அவர்களின் வயதிலே ஏற்பட்டுள்ள வேற்றுமை என் பதையும் நாம் மறுக்கக் கூடாது."

"என்னத்தான் சொல்லுகிறீர்கள்?"

"அன்று எமது திருமண வைபவத்திலே பேசிய இளைப் பாறிய ஆசிரியரும், சமூகத் தொண்டனும், சமாதான நீதவானு மாகிய பெரியார் சுந்தரேசர் என்ன சொன்னர் என்பது நினைவி லிருக்கிறதா? ஒரே வயதுடைய — அல்லது ஓரிரு வயதுக்கு மூத்த அல்லது இளைய ஆண் பெண் திருமணம் எத்தகைய பொருத்த மற்றது என்பதைச் சுட்டிக்காட்டினரா இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" காட்டினுர் அத்தான்... நினைவிருக்கிறது."

உன் மாமாவின் வயது நாற்பத்தாறு... உன் மாமிக்கு இப்போது நாற்பத்தாறு புரிகிறதா பாரதி ?"

"புரிகிறது அத்தான்."

"நமது நாட்டின் பெண்மை நாற்பத்தைந்து நாற்பத்தாறு வயதோடு வெறுமையாகிவிடுகிறது; ஏதோ ஆயிரத்தில் ஒன்று மட்டும் ஐம்பது வயதில்க்கூடப் பிள்ளைப்பெறும் பிராப்தத்தோடு காணப்படுகிருள் என்று நானும் உனக்குச் சொல்லியிருக்கிறேன் அன்ெருரு நாள். நினைவிருக்கிறதா ?"

" தெரியும் அத்தான் "

" ஆகவேதான் 'ஒரு கணவன் தன் மனைவியைவிட எட்டு அல்லது பத்து வயது மூத்தவனுயிருக்கவேண்டும், அதுவே சிறந்த பொருத்தம்" என்று பெரியார் சுந்தரேசர் சொன்னதை நானும் ஆதரிக்கிறேன் " என்ருன் பாலமுரளி.

" பயப்படவேண்டாம் அத்தான். அலுமாரிக்குள் எனது குறிப்பிருக்கிறது. எடுத்துப்பார்த்து என் வயதைக் கணித்துக் கொள்ளுங்கள் ", என்ருள் பாரதி.

" என் வாழ்வு சிறப்பாக மலரவேண்டுமென்பதற்காகத் தானே அன்ெருருநாள், திருமணத்திற்கு நான் சம்மதம் தரு முன் உன்னுடைய பிறந்த தேதியையும் பெற்றுச் சென்றேன். மறந்துவிட்டாயா பாரதி ? குணப் பொருத்தத்தோடு வயதுப் பொருத்தமும் காணப்பட்ட படியினுல்த்தானே இத்திருமணம் நடைபெறச் சம்மதம் தெரிவித்தேன். புரியாதா ?"

" அப்படியா அத்தான் ?"

" ஆகவே என்னைப்பற்றிக் கவலையே இல்லை... என் வாழ்வு சிறப்பாக மலரும் என்பதில் எள்ளளவு ஐயமுமில்லை. ஆகவே உன் மாமியின் வாழ்வுக்காக நாளை கொழும்பு போகிறேன் " என்று கூறிப் பாரதியை மெதுவாக அணைத்தெடுத்துத் தூக் கத்தை வரவழைத்துக்கொண்ட பாலமுரளி நேரமோடி அடுத்த நாள் மலர்ந்ததும் கொழும்பு புறப்பட்டான் இன்பமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 19

"உங்களைப் பார்க்கத்தான் என்னை அனுப்பியிருக்கிருள் பாரதி."

"அப்படியா? என்ன சொல்லி அனுப்பியிருக்கிருள்."

"ஓரிரண்டு வார்த்தைகளில் பேசி முடியாதவை. ஆனபடியால் உங்கள் வீட்டுக்குப் போய்ப் பேசுவதுதான் நல்லதென்று அபிப்பிராயப்படுகிறேன்." பாலமுரளியின் கருத்தைப் புரிந்து கொள்ள முடியுமா மதன்மோகனுல்?

"பாரதியின் மாமியை ஊருக்கு அனுப்பிவிட்டபடியினுல், தற்போது சிங்கள வீடொன்றில் வாடகைக்கு அறையொன்றெடுத்துத் தங்கியிருக்கிறேன் தம்பி."

"தெரியும். அறையிலிருந்து பேசலாமென்று நம்புகிறேன். போகலாமா?" பாலமுரளியைத் தட்டிக்கழிக்க முடியவில்லை மதன் மோகனுல்.

கல்விக் கந்தோரிலிருந்து புறப்பட்ட கார் பறந்தது விடுதி நோக்கி. விடுதி நிறையப் பெண்கள். எழுபது வயதுத் தகப்பனைவிட வேறு ஆண்துணையில்லாத குடும்பம் என்பதையும் வெவ்வெறு துறைகளில் வேலைசெய்யும் நாலு ஆண்கள் இரண்டறைகளில் வாடகை கொடுத்துத் தங்கியிருப்பதையும் மதன் மோகன்மூலம் அறிந்துகொண்ட பாலமுரளிக்கு மதன்மோகன் அங்கிருப்பது பிடிக்கவில்லையென்றுலும், அதை அவன் காட்டிக் கொள்ளவில்லை.

"மாமியை நீங்கள் ஊருக்கு அனுப்பியதைப்பற்றி உங்களைக் குற்றஞ் சாட்டுகிருள் பாரதி."

"குற்றஞ்சாட்டுகிருளா? அவளை எதற்காக ஊருக்கனுப்பி வைத்தேன் என்பதைப் புரிந்துகொண்டா பேசினுள்?" மூக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிய கோபத்தை வெளிக் காட்டிய மதன்மோகனை அறிந்து கொண்டான் பாலமுரளி.

"அன்றொருநாள் யாழ்ப்பாணத்திற்குப் போகவேண்டிய சந்தர்ப்பமொன்று பாரதிக்கு ஏற்பட்டபோது எல்லா விபரங்களையும் மாமி சொன்னதாக என்னிடம் கூறியிருக்கிருள் பாரதி." உண்மையை ஒளிக்காமல் இறக்கிவிட்ட பாலமுரளியை ஒரு கணம் நிமிர்ந்து பார்த்துத் தலையசைத்துக்கொண்டான் மதன் மோகன்.

"அதைப்பற்றி அலசுவதற்காகத்தான் உங்களை அனுப்பி வைத்தாளோ பாரதி?"

"ஆமாம்; பல வேலைகளுக்கு மத்தியில் வந்திருக்கிறேன். மாமியின் கண்ணீரை நீங்கள்தான் துடைக்கவேண்டும் என்பதை உங்களிடம் நேரடியாகச் சொல்லிவிட்டு வரும்படி என்னை அனுப்பியிருக்கிருள் பாரதி. வயதில் குறைந்த இவன், எனக்குப் புத்திமதி சொல்ல வந்துவிட்டானே என்று கோபிக்காதீர்கள். சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டபடியினுல்த்தான் சொல்லுகிறேன். உங்கள் மனைவியின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. நாற்பத்தைந்து வயது முடிந்து நாற்பத்தாறு வயது தொடங்கிய காலம். இந்த வயதில் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுச் சிற்றின்பத்தை அனுபவிக்கும் பெண்மையை இழந்தவர் உங்கள் மனைவி. ஆகவே அவரோடு கோபிப்பது அவ்வளவு அழகல்ல. எதற்கும் ஆண்களாகிய நாம்தான் ஓரளவுக்கு எம்மை அடக்கிப் பழகவேண்டும், என்று நானும் அபிப்பிராயப்படுகிறேன்."

"நீங்கள் சொல்வதை என்னுல் புரிந்துகொள்ள முடியாதென்று நினைக்கவேண்டாம் தம்பி. ஆனுல் பாரதியின் மாமி இந்தத் தண்டனையைப் பெறவுந்தான்வேண்டும் என்பதையும் உங்களுக்குச் சொல்லிவைக்கிறேன். வளர்மதியைக் காதலித்து நான் கலியாணம் செய்யவில்லை. அவளின் பெற்ருேரும் என் பெற்ருேரும் கூட்டுச்சேர்ந்து செய்துவைத்த திருமணம். பொருத்தமற்ற வயதுகள் இரண்டு கலியாணம் செய்வதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்ற தவறை உங்களுக்கும் சுட்டிக்காட்டுகிறேன். ஒரு பெண்ணின் வயது ஆணின் வயதைவிட எட்டு அல்லது பத்து வரை குறைந்திருக்கவேண்டும். ஆகவே எனக்கும் வளர்மதிக்கும் வயதுப்பொருத்தம் சிறிதேனும் இல்லையென்று சொல்வதோடு, ஒரு ஆண்மகனுல் ஐர்பத்தைந்து வயது வரைக்கும் சிற்றின் பத்தை அனுபவிக்கமுடியும் என்பதையும் எனக்கு இப்போது நாற்பத்தாறுதான் என்ற உண்மையையும் கூறிவைக்கிறேன்" ஆத்திர நங்கூரத்தைப் பாய்ச்சித் தனது பேச்சை நிறுத்தினுன் மதன்மோகன். அதைக்கேட்டுச் சும்மா இருப்பானு பாலமுரளி? ஏதையாவது சொல்லவேண்டுமே?

"இருந்தாலும் நீங்......கள்......"

"இருந்தாலும் என்று இழுக்கக்கூடாது தம்பி. எல்லா விரல்களும் ஒரேவிதமானவையல்ல. மனித வர்க்கத்தில் பல தினிசு. வெவ்வேறு கணையில் பிறந்த உணர்ச்சிகள்."

"அதற்காக ஒரு பெண்ணை முற்றிலும் வெறுத்துவிடுவது அவ்வளவு அழகல்ல."

"அப்படிச் சொல்லக்கூடாது பாலா. வளர்மதியின் தண்டனை மிகமிகச் சரியானது. ஏன் தெரியுமா? வளர்மதிக்கு என்னைக் கலியாணம் பேசும்போது என் வயது அவளுக்குத் தெரியாமலில்லை. இரண்டுபேரும் ஒரே ஆண்டில் பிறந்து ஒரே பாடசாலையில் படித்துவந்தவர்கள். அவளைவிட ஒன்பது மாதத்திற்கு மூத்தவன் நான். நான் பிறந்தது மாசி மாதம். அவள் பிறந்தது அதே ஆண்டு கார்த்திகை மாதம். 'தன்னுடைய வயது என்னுடைய வயதோடு பொருந்தாது என்பதை உணர்ந்தாவது இந்தக் கலியாணத்தை அவள் மறுத்திருக்கவேண்டும்; வெறுத்திருக்கவேண்டும். அதைவிடுத்து, பெற்றோரின் சம்மதத்தினுலும் வற்புறுத்தலாலும் பொருந்தாத திருமணத்திற்கு ஆளாகிய இவள், இனியாவது அலசிப்பார்க்கட்டும் தன் தவறை."

"பொருந்தாத வயதுகள் திருமணம்செய்வதை நானும் பலமாக ஆட்சேபிக்கிறேன். ஒரு ஆணின் வயது பெண்ணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதைவிட எட்டு அல்லது பத்துவரை அதிகமாக இருக்க வேண்டும் என்பதுதான் எனக்கும் விருப்பம். ஆனால், உங்களைப் பொறுத்தவரை, திருமணம் செய்தபோது நீங்களும் ஒரு தவறை இழைத்துவிட்டீர்கள் என்றும் சொல்லுகிறேன்."

பாலமுரளியின் வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்குற்றான் மதன்மோகன்.

"என்ன? நான் தவறு இழைத்தேனா?"

"ஆம். ஏன் தெரியுமா? நீங்கள் திருமணம்செய்யும் வளர்மதி அம்மாளின் வயது இவ்வளவு என்று தெரிந்தும், நீங்கள் அவரைக் கைப்பிடித்ததுதான். நீங்களாவது உங்கள் தாய் தந்தையரிடம் உண்மையைச் சொல்லிப் பொருந்தாத இந்தத் திருமணத்தை நிறுத்தியிருக்கலாமே? உங்கள் பெற்றோரின் வற்புறுத்தலுக்கு எப்படி இணங்கினீர்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை."

பாலமுரளியின் தகுதிவாய்ந்த தர்க்கத்தை மதன்மோகனால் எதிர்க்கமுடியுமா என்ன?

"பெற்றோரை எதிர்த்து வாதாடி, நீதியைச் செயல்ப்படுத்தக்கூடியவர்கள் ஆண்கள் என்பதோடு ஒரு சில பெண்களைத் தவிர மற்றைய எல்லாப் பெண்களும் தமது தாய்தந்தையரின் கட்டளைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அடிமைப்பட்டு வாழ்ந்து தாய் தந்தையரின் திட்டத்தையே திருமண விஷயத்திலும் அமுலாக்குபவர்கள் என்ற உண்மையை மறைக்க முடியுமா?"

பாலமுரளி சுட்டிக்காட்டிய உண்மை மதன்மோகனுக்குத் தெரியாதா என்ன? கொஞ்சநேர அமைதிக்குப்பின் பேசினான் மதன்மோகன்.

'என் தாயார் மரணப்படுக்கையில் இருந்தநேரம், மரணத்தைத் தடுக்கவும் முடியாமல் அதனோடு செல்லவும் முடியாமல் திண்டாடியபொழுது என்றுதான் சொல்லவேண்டும். "என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனின் மகள் வளர்மதியை நீ திருமணம் செய்தால்த்தான் என் ஆவி நிம்மதியாய்ப் பிரியும் மகனே. என் கடைசி ஆவல் இதுதான். அது நிறைவேருவிட்டால், என் ஆவி வேதனை அடையும். தங்க ஒரு நிலைக்களனில்லாமல் பேயுருவில் அலையும். பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த உன் அம்மா கேட்கிருள். என்ன விடை மகனே? சொல்" என்று கேட்ட என் தாயின் இறுதி ஆசையைப் பூர்த்தி செய்து அவரின் ஆவியை உலைய விடாமல்த் தடுப்பதற்காகவே "வளர்மதியை என் மனைவி யாக்குவேன்" என்று வாக்குக் கொடுத்தேன் அம்மாவிடம். அடுத்தநாளே யாழ்க் கச்சேரியில் திருமணப் பதிவை முடித்துத் தம்பதிக்கோலத்துடன் என் தாயாரின்முன் காட்சி கொடுத்த போது எம்மை வாழ்த்திய அந்தத் தாயார் அடுத்தநாள் விடியற் காலையில் நிம்மதியோடு காலமாகினுர். கவலை குடிகொண்ட அந்த நேரத்திலும் என் தாயின் ஆவி நிம்மதியடைந்தது என்ற களிப்பும் இணைந்து நின்றது தம்பி."

மதன்மோகனின் நொண்டி நியாயத்தை பாலமுரளியால் ஏற்கமுடியவில்லை. உலகத்தை அலசி ஆராயும் அவனுக்கா பேசத் தெரியாது?

"அப்படியானுல் வளர்மதி அம்மாளை இப்போது கைவிட்ட உங்கள் செயலைக் கண்டு உங்கள் தாயாரின் ஆவி என்ன நினைக்கும், எப்படி நிம்மதி கொள்ளும் என்று எண்ணுகிறீர்கள்? கேலிக் கேள்வியொன்றைப் பயபக்தியோடு பின்னிக்கேட்டான் பாலமுரளி.

நான் திருமணம் செய்த பின்பு நிம்மதியடைந்த என் தாயா ரின் ஆவி ஒரு நிலைக்களத்தில் சேர்ந்துவிட்டது. ஆனபடியால் அது இப்போது அலையும் எங்கள் நிலையைக் கண்டு கவலைப்படும் என்று சொல்வதற்கில்லைத் தம்பி."

மதன்மோகன் ஒருவாறு சமாளித்தபோதும், பாலமுரளிக்குத் திருப்தி ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன இருந்தாலும் வளர்மதியம்மாள் உங்களுக்கு மனைவி தான். நீங்கள் அவருக்குக் கணவன்தான். ஆகவே பிளவு ஏற்பட்ட உங்கள் குடும்ப மரத்தை பொறுமை என்ற பசையினுல் பொருத்தி, வளர்க்கவேண்டிய அவசியம் உங்களுடையது என்பதை என்னுல சொல்லாமல் இருக்க முடியாது. பாரதியின் கருத்தும் இதுதான்."

பாரதியின் கருத்தோ உங்கள் கருத்தோ என்னுல் ஏற்க முடியாது என்பதுதான் முடிவு. அழுத்தமாக இனியும் சொல்ல வேண்டியதில்லை என்று நம்புகிறேன்.

மதன்மோகனின் பிடிவாதத்தைத் தெரிந்துகொண்ட பாலமுரளிக்கு, மண்டையை இரும்பு பதம்பார்த்த நிலையாயிருந்தது. மெதுவாகக் கேட்டான்.

"அப்படியானுல் நீங்கள் இனி யாழ்ப்பாணமே போவதில்லையா?"

"போவதில்லை என்று முடிவுகட்டிவிட்டேன்."

"உண்மையாகவா?"

"உண்மையாகத்தான். தம்பி பாலா, பச்சையாகச் சொல்லுகிறேன் என்று நினைக்க வேண்டாம். வரண்டிருக்கும் வளர்மதியோடு இருப்பதைவிட இங்கு தனிமையில் இருப்பதையே நாடுகிறேன்."

"அப்படியானுல் உங்கள் குழந்தைகளைப் பற்றிய அக்கறையே உங்களுக்கில்லையா?"

"என் உணர்ச்சியெல்லாம் அடங்கி வரண்ட மனிதனுக, நானும் ஆக்கப்பட்டபின் அவர்களைப் போய்ப் பார்க்கிறேன். அதுவரை இந்த ஊரவனுக – கொழும்பு வாசியாக இருப்பதென்ற முடிவு செய்திருக்கிறேன்."

"அப்படியானுல் உங்கள் மனைவி பிள்ளைகளுக்கு வேண்டிய உணவு உடைகளுக்கு...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்கள் எங்குமே போகவேண்டியதில்லை. என்னுடைய சம்பளத்தில் ரூபா நூறு நூற்றைம்பது அனுப்புகிறேன் மாதம் மாதம். அதுபோதும் உணவுக்கும் செலவுக்கும். அவர்கள் தமது சொந்த வீட்டில் இருப்பதால், வீட்டு வாடகை கொடுக்க வேண்டியதில்லை. அத்தோடு வளவில் தெங்கு மரங்கள், பலா மரங்கள், மா மரங்கள், வாழை மரங்கள், புளிய மரங்கள் போன்றவை பயன் தருவதால், அவற்றின் வருவாயும் உண்டு. கவலைக்கு அவசியமே இருக்கமுடியாது தம்பி."

"நீங்கள் சொல்லும் செல்வங்கள் எவ்வளவுதானிருந்தாலும், ஒரு மனைவிக்கருகில் அவளது கணவன் இருப்பதைப்போல் செல்வம் வேறு எதுவுமே இல்லை என்பதை யாவரும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்."

"**பெண்ணுக்குக் கணவன் உயிர்ச்செல்வம் அச்செல்வம் மண்வளர் செல்வத்துள் மேல்**" என்று புதுக் குறள் பாடும் கற்புடைய மங்கையரைக் காணும் காலம் இது என்பதை மணம் முடித்த பின்புதான் நானும் உணருகிறேன்."

"எவ்வளவுதான் வேதாந்தம் பேசினாலும் என் பிடிவாதத்தை மாற்றமுடியாது தம்பி. வளர்மதியோடு பிரயோசனமற்ற வாழ்வு வாழ்வதைவிடத் தனிமையே மேல்."

"ஒன்று கேட்கிறேன், கோபிக்கமாட்டீர்களே ?"

"கேட்கலாம்"

"உங்கள் மனைவியோடு வாழ்வதனால் பிரயோசனம் எதுவுமே இல்லையென்று கூறும் நீங்கள் இங்குமட்டும் எப்படித்தான் உங்களை அடக்கித் தனிமையில் வாழப்போகிறீர்களோ தெரியவில்லை ?"

"அதைப்பற்றி யாரும் கவலைப்படத்தேவையில்லை. எனக்குத் தெரியும் எதை எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று ?" மதன்மோகனின் ஆத்திரம் கோபுரம் ஏறிவிட்டதைத் தெரிந்துகொண்டான் பாலமுரளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அப்படியானல் நான் போய் வருகிறேன். பாரதிக்கு ஏதாவது சொல்லவேண்டுமென்ருல், கூறுங்கள்."

இங்கு நடந்தவைகளே போதும் என்னைப்பற்றி அவள் தெரிந்துகொள்வதற்கு..."

பாலமுரளி விடைபெற்றபின் தனக்குள்ளாகச் சிரித்துக் கொண்டான் மதன்மோகன். என்னைப் பார்ப்பதற்கு இனிமேல் யாருமே வரமாட்டார்கள். நல்ல பதில் கொடுத்தனுப்பியிருக் கிறேன் முட்டாள்களுக்கு" என்ற கருத்துப் புகை அவனது சிரிப்பிலே சுருள்விட்டுச் சென்றது.

அடுத்தநாள் மதன்மோகனின் வாழ்விலே ஒரு புதுத் திருப் பம். அந்த நாளை நினைத்தபோது குதூகலம் அவனைத் தூக்கி யெறிந்தது மெத்தையில். குஷியாகப் போய்வீழுந்த அவனைத் தூக்கத்தின் சாயல் பற்றிக்கொண்டபோது துயில் கொள்ளாம லிருக்க முடியுமா அவனல்?

## அத்தியாயம் 20

**ம**றுநாள்க் காலை வழக்கறிஞர் ஒருவரின் வீட்டிலே மதன் மோகனும் வாசநாயகியும் அழகே உருவெடுத்துக் காணப்பட் டார்கள். அவர்களின் பதிவுத் திருமணம் நடைபெற்று முடிந்த போது பகல் நேரம் பதினென்று முப்பதாகிவிட்டது. பதிவுத் திருமண ஒப்பந்தத்தில் சாட்சிகளாய்க் கைச்சாத்திட்ட அமர சிங்காவும் குணசேகராவும் புதுத் தம்பதிகளுக்குக் கிறீன்லட்ன்ஸில் விருந்துகொடுத்து விடைபெற்றனர். அவர்கள் இருவரும் சென்ற பின்பு, வாசநாயகியை அழைத்துக்கொண்டு மட்டக்குளியிலுள்ள புதிய வீட்டுக்குள் நுழைந்த மதன்மோகனுக்கு எல்லாமே புதி தாகத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத்திஎடுக்கும் தோரணையில் அங்கு காணப்பட்ட இரண்டு நடுத்தர வயதுப் பெண்கள் மதன்மோகனுக்குக் குங்குமமிட்டு, வாழ்த்துப்பா பாடி அவனை வலம்வந்தனர். மதன்மோகனுக்கு ஒரே ஆச்சரியம். ஆனால் வாசநாயகியின் முகத்திலே புன்னகை இதழ்கள்.

இதே நேரத்தில் தோற்றங்கொடுத்தாள் வாசநாயகியின் தாயார். அந்தத் தாயின் கண்களிலே காத்திருந்த புன்னகை புதுத் தம்பதிகளின் கண்களிலே பளீரென்றது. மெதுவாக நிமிர்ந்து பார்த்தான் மதன்மோகன். அறுபத்தைந்து வயதுக் கிழவி. குடுகுடு வயதிலும் உற்சாகமாகக் காட்சியளிக்கும் அவள் தன்னை முத்தமிட்டபோது அதே முத்தத்தை வேறு யாரோ ஒருத்தியிடம் தான் பெற்ற உணர்வொன்று தனது உணர்ச்சி யிலே ஆடிக்கொண்டிருந்ததை அவனால் உணரமுடிந்தது. சடங் காசாரங்கள் அத்தனையும் முடிவுற்று நேரம் ஓடியபோது, புது மஞ்சத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டனர் தம்பதிகள்

" வாசா, இறைவனோ இயற்கையோ எம்மை என்றைக்குமே இப்படி வைத்துவிட்டால்... ? "

" நானும் அதைத்தான் வேண்டுகிறேன் அத்தான் "

" உண்மை வாசா. கடவுளின் வரத்தால் மார்க்கண்டேயர் என்றைக்கும் பதினாறு வயதுக் காளையாக வாழ்ந்தார் என்று கூறுகிறது புராணம். அது உண்மையானால் நீயும் நானும் இதே வயதிலிருந்து மாறாமல் குடும்பத் தம்பதிகளாய் மலர அதே இறைவன் அருள்புரியமாட்டானா என்ன ?"

" அது எப்படி முடியும் அத்தான் ? "

" அப்படி நினைத்துப்பார்க்கிறேன் வாசா"

" அத்தான், முப்பத்தைந்து வயதை எட்டிப்பிடித்த எனக்கு இனித் திருமணமே இல்லையென்றுதான் முடிவுகட்டியிருந்தேன். ஆனால், அன்றொருநாள் என்னை நீங்கள் கண்டபோது... "

"மிகுதியை நான் சொல்லுகிறேன் வாசா, உன்னை அன்று கண்டபோதே நான் என்னைப் பறிகொடுத்தேன். நீ போட்டிருந்த கண்ணாறைச் சட்டையினூடாகத் தெரிந்த உன் மேனியழகு என்னை ஒரு கணம் மயக்கிநின்றது. அத்தோடு உனது கண்ணிலே தீட்டியிருந்த மையும், நடையிலே காட்டியிருந்த ஒயிலும் என் மயக்கத்திற்கு மெருகு கொடுத்தன. அதனால்த்தான் உன்னைக் கண்ணால் அழைத்தேன். அழைப்பை ஏற்று நீயும் வந்தாய். பேச்சுத் தொடுத்தேன், என்னை நீ புரிந்துகொண்டாய். அதன்பின் பற்பல நாட்கள் பொதுப் பூங்காவிலும், சினிமாக் கொட்டகைகளிலும் உறவாடினோம். இன்றோ உன்னைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு வந்துவிட்டேன் நான். இல்லையா வாசா?"

"அத்தான், நீங்கள் என்னைத் திருமணம் செய்வீர்களென்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. ஏன் தெரியுமா? உங்களைப் பார்க்கும்போது முப்பது வயது மதிக்கத்தக்க காளையாகவே தோற்றமளிக்கிறீர்கள். அத்தோடு கம்பீரமான நடை. மடிப்புக் குலையாத உடை. இப்படிப்பட்ட ஒருவருக்கு முப்பத்தாறு வயதான நான் எங்கே என்றுதான் முடிவுகட்டியிருந்தேன். ஆனால் நீங்கள் உங்கள் உண்மை வயதைச் சொன்னபோது, கேலிக்குச் சொல்லுகிறீர்கள் என்றே நினைத்தேன், அத்தான். ஆனால்..."

"வாசா, என் வயது நாற்பத்தாறு என்ற உண்மை தெரிந்தும் என்னை நீ மணக்கச் சம்மதம் தெரிவித்தாய். இன்னும் ஏழெட்டு ஆண்டுகளுக்காவது உன் பெண்மை மலரட்டுமே என்ற நோக்கம் எனக்கு. கணவனில்லாமல் பெண்ணொருத்தி வாழ்வது கடினம் என்பதையும் புரிந்துகொண்டபின்தான் என் மனம் உன்னை நாடியது. இன்னும் வேண்டுமா விளக்கம்?"

"போதும் அத்தான் போதும்" என்று சொல்லி முடித்து ஓடிவந்த மெல்லிய சிரிப்பைத் தனது இதழ்களிலே சேர்த்துநின்ற வாசநாயகியை அலாதியாக அணைத்துக்கொண்டான் மதன் மோகன். பொல்லாத கதைகளையும் வேண்டாத செயல்களையும் காணவைத்த இரவாக ஓடிக்கொண்டிருந்தது அந்த இரவு. தம்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பார்வையிலே ஏராளமான உணர்ச்சி. வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த அந்த உணர்ச்சியை ஓரிடத்தில் அடைத்துவிட்டபின் இரவின் மயக்கத்தைத் தட்டிக்கழிக்க முடியாமல், மெத்தையில் துயின்றெழுந்தனர் அந்தத் தம்பதிகள்.

காலையோடிக்கொண்டிருந்தது. கடன்களெல்லாம் முடித்துக் கொண்டு உலாவச் சென்ற புதுத்தம்பதிகள் பத்துமணிப் படக் காட்சியால் ஈர்க்கப்பட்டனர். "மதர் இந்தியா", ஹிந்திப்படமாயிருந்தாலும் மிகச்சிறந்த படம். சுனில் டட் - நர்க்கீஸ் சோடி தமது திறம் ஏற்றி நடித்த படம் என்று பேசிக்கொள்கிறார்கள். போகலாமா அத்தான் ?"

"ஓ... தாராளமாக. இனிமேல் உன் சொல்லைத் தட்டிக் கழிக்க முடியாதல்லவா ? அப்படித் தட்டிக் கழித்துவிட்டால், என்மேல் உனக்கு வெறுப்பு ஏற்படும். அப்படியான நிலை வந்துவிட்டால், வாழ்க்கையில் சுவைசேர்க்க முடியாது வாசா. நினைத்துப் பார். கணவன் மனைவியென்றால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கவேண்டும். அதிலும் மனைவிமார், கணவனின் மனநிலை அறிந்து எதற்கும் தம்மைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் இன்பம் கொழிக்கும். அதை விடுத்து, மனைவியின் சொல்லுக்கு, சிற்சில விஷயங்களிலாவது செவிசாய்க்காது எதிர்க்கும் கணவனும், அந்தக் கணவனின் எண்ணத்திற்கு வளைந்து கொடுக்காத மனைவியும், குடும்ப வாழ்க்கையில் பிரிவைத்தான் காணுவார்கள். இல்லையா வாசா"? சொல்லிவிட்டு மெதுவாகச் சிரித்த மதன்மோகன் முன்னொரு தடவை மணம்முடித்து அதனால் ஏற்பட்ட அனுபவத்தைத்தான் சொல்லுகிறான் என்பதைப் புரியமுடியுமா வாசநாயகியால்?

படம் முடிந்து வெளியேறிச் சென்ற தம்பதிகள் தமது வீடு சென்றனர். நோய் என்ற சாட்டில் ஒரு கிழமை லீவு எடுத்து இன்பம் கழித்த மதன்மோகன் வேலைக்குத் திரும்பிய போது வாசநாயகியின் நினைவிலே பொழுதைப் போக்கத் தொடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினுன். பகலெல்லாம் மனதைக் கட்டி வாழ்ந்த அவனுக்கு இரவெல்லாம் இன்பம். ஒரே குஷி. மணம் முடித்த மூன்ருவது மாதம். வாசநாயகி கதை சொன்னுள். "இன்னும் சில மாதங்களால் நீங்கள் தந்தையாகப் போகிறீர்கள் அத்தான்", என்றவள் உண்மையை விளக்கியபோது, அவளை உற்றுப் பார்த்தான் மதன்மோகன்.

'ஏனத்தான் அப்படி உற்றுப் பார்க்கிறீர்கள்" என்ற கேள்வி வாசநாயகியின் இதழ்களிலே பரவிநின்றது.

"அப்படியாளுல், நாலைந்து மாதங்களுக்கு உன்னேடு குடும்ப வாழ்க்கையில் தொடர்பு வைக்கக் கூடாதென்று சொல்லாமல் சொல்லிவிட்டாய். இல்லையா வாசா?"

"வாசநாயகியின் தலையசைந்து, "உண்மைதான், இல்லையென்ருல் உருவெடுத்த கருவொன்று சிதைந்துவிடும் அத்தான்." என்றது சைகையில்.

"உண்மை வாசா, இதைச் சிலர் உணராதபடியிஞல்த்தான் சில இடங்களில் கருச்சிதைவு ஏற்படுகிறது. ஆகவே கருத்தரித்த தனது மனைவியோடு நாலைந்து மாதங்கள் வரை ஒரு கணவன் கூடுவது ஆபத்து என்று கூறிவிட்டார்கள் நல்ல அனுபவசாலிகள்."

வார்த்தைகளை முடித்துவிட்டு வாசநாயகியை அணைத்துக் கொண்டான் மதன்மோகன். நாட்கள் ஓடின. அன்ருெருநாள் தனது அலுவலக முகவரிக்கு வந்திருந்த கடிதத்தைப் பிரித்தான் ஆவலோடு.

13/3 புகையிரத ஒழுங்கை,
டி. எஸ். சேனநாயக்க மாவத்தை,
கண்டி.

அன்புள்ள மாமா,

இந்தக் கடிதம் தங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் உண்மையை எழுதித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே தீர்க்கவேண்டும் என்பதால் எழுதுகிறேன். மாமியின் நிலை மிகவும் வருந்தத்தக்க பருவத்தை அடைந்துவிட்டது. ஆறு குழந்தைகளோடு கணவனின் துணையுமின்றி வாழும் ஒரு தாயால் என்ன செய்யமுடியும் என்று நினைத்துப்பாருங்கள்? மாமிக்குச் சொந்த வீடு இருக்கிறது என்பது உண்மைதான். அந்த வளவில் சிறியதொரு வருவாய் உண்டென்பதுவும் பொய்யல்ல. இருந் தாலும் ஆறு குழந்தைகளுக்கும் தாய்க்கும் அதுபோதுமா என்று அலசிப்பாருங்கள். குறைந்தது மாதா மாதம் ரூபா இருநூறுவது வேண்டாமா? சென்ற மூன்று மாதங்களாக நீங்கள் என்ன அனுப்பினீர்கள் என்று நினைத்துப் பாருங்கள். ஒரு சதங்கூட உங்களிடமிருந்து போகவில்லை மாமிக்கு. எந்தப் பெண்ணேடு சுற்றி எவளுக்குப் பணம் கொடுத்து வாழவைக்கிறீர்களோ எனக்குத் தெரியாது. ஆனல் மாமியை ஏன் நீங்கள் கவனிக்க மறுக்கிறீர்கள் என்றும் கேட்காமலிருக்க முடியவில்லை. ஆறு குழந்தைகளும் தாயும் தற்கொலை செய்வதா? இல்லையென்றுல் பட்டினியால் மடிவதா? என்பதற்குப் பதிலையும் நீங்களே எழுதி அனுப்புங்கள்.

நிற்க, உங்களைத் தேடி என் கணவர் அன்று வந்தபோது, மாமியின் நிலையைக் குறித்து நீங்கள் சொன்ன மிருகத்தனமான பதிலை அவர் புரியாமலில்லை. உங்களைத் தேடி அடுத்த நாளும் அலுவலகத்திற்குச் சென்றிருந்தார். இரண்டு நாள் லீவில் வந்தவர் உங்களோடு பேசி மாமியின் சோகநிலையை மாற்றவேண்டும் என்பதற்காகவே துடித்தார். முதல்நாள் பேச்சுவார்த்தையில் பய னில்லை என்பதற்காகவே அடுத்தநாளும் சென்றிருந்தார். மாலை மூன்று மணிபோல். மெடிக்கல் லீவில் நிற்பதாக அலுவலகத்தார் அறிவித்தார்களாம். விடுதியில் இருப்பீர்கள் என்ற நினைவோடு அங்கும் காலடிவைத்தார். விடுதியைவிட்டு விலகிவிட்டதாகச் சொன்னுராம் அந்த வீட்டுக்காரர். அங்குள்ள உங்கள் நண்பர் களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்றுல், இவர் சென்ற நேரத்தில் அவர்களும் இல்லை. எனவே கண்டி திரும்பிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவேதான் இக்கடிதத்தை எழுதுகிறன், உங்கள் பதிலும் நிலேயும் அறிய. மற்றவை அடுத்த மடலில்.

அன்பு மருமகள்,
திருமதி பா. பாலமுரளி.
8-8

கடிதத்தை வாசித்தபின் மதன்மோகனின் சிந்தனேயிலே பல கிளேகள் வெடித்து வளர்ந்தன.

" இவளுக்கு இன்றைக்கே பதில் எழுதுகிறேன். எனது கடிதம் கிடைத்ததும் என்னே அவள் புரிந்துகொள்ளட்டும்; அதன் பிறகாவது எனது விவகாரங்கள்பற்றி விசாரிக்காமலிருக்கட்டும்" என்ற நினேவோடு கடிதத்தை எழுதிக் கட்டிலே சேர்க்கும்போது, " நாளேக் காலேயில் இக்கடிதம் அவளது கையில்க் கிடைக்கும்; படிப்பாள் என் எண்ணத்தை, நன்ருகப் படிக்கட்டும்" என்ருன் மனதுக்குள்.

## அத்தியாயம் 21

கல்விக் கந்தோர்,
கொழும்பு.
8 / 8

பாரதி,

உன் மடல் பெற்று வாசித்தேன். அதில் காணப்பட்டவைகள் அத்தனேயும் அறிவுரைகள் என்பது எனக்குப் புரிகிறது. ஆனுல், உன்னுடைய அறிவுரைகளே ஏற்பதா விடுவதா என்ற பிரச்சனேயில் நான் இல்லே, என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்வதோடு, என்னே நீ நன்ருக அறிந்திருக்கிருய், பருவமடைந்த பெண்ணுக நீ என்னேடு இருந்தபோது எனது பிடிவாதத்தை முற்றிலும் உணர்ந்திருக்கிருய் என்பதையும் உன்னிடம் சொல்லிவைக்க விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க, பணம் அனுப்பாதபடியினல் வளர்மதி கஷ்டம் அடைகிருள் என்பதாக்க் காட்டியிருந்தாய். அதை நான் மறுக்கிறேன். வங்கியிலே அவளது பெயரில் வைப்புச் சேர்த்திருக்கும் பணத்தை மாதாமாதம் எடுத்துச் செலவுசெய்தால் எதுவித கஷ்டமும் ஏற்படாது என்பதை இனியாவது அவள் அறியட்டும். நானும் இடைக்கிடை அனுப்பிக்கொண்டேயிருப்பேன்.

மற்றது, கண்ட கண்ட பெண்களோடு நான் அலேவதையோ, அவர்களுக்காகப் பணத்தைச் செலவுசெய்வதையோ கேட்பதற்கு நீயோ உனது கணவனே ஆளல்ல.

இன்னுமொன்று, நீயோ உனது கணவனே எனது குடும்ப வாழ்வில் குறுக்கிடுவதை நான் வெறுக்கிறேன். பிரியும் குடும்பமாகவோ ஒட்டும் வாழ்வாகவோ எனது குடும்பம் காணப்படுகிறதென்ருல் அது எமக்குள்ள பிரச்சனேயே அல்லாமல் மற்றவர்களுக்குத் தெரியவேண்டிய பிரச்சனேயுமல்ல; தீர்க்கவேண்டிய சிக்கலுமல்ல. எனவே எனது விஷயத்தில் இனிக் குறுக்கிடாமல் இருப்பதே மேல் என்று ஆணித்தரமாகக் கூறுகிறேன். அப்படிக் குறுக்கிட்டால் உனது குடும்பம்தான் குலேயும் என்பதையும் கட்டாயப்படுத்திச் சொல்லிவைக்கிறேன். அவ்வளவுதான்.

உனது ஒன்றுவிட்ட மாமா,
மதன்மோகன்

எச்சரிக்கும் தோரணேயில் மதன்மோகன் எழுதியிருந்த மடலே வாசித்த பாரதியின் நீரோடைக் கண்களின் தடைகளே உடைத்து வெளியேறிப் பாய்ந்தன நீர்த்துளிகள். பாரதி அழுதாள். அவளது கண்களிலே ஒட்டியிருந்த முத்துநீரை மெதுவாகத் துடைத்தெறிந்துவிட்டு அவளே அப்படியே அணேத்துக்கொண்டான் பாலமுரளி. அந்த அணேப்பிலே சிக்கிய பாரதி பேசினுள். " அத்தான், ஓராண்டு காலமாக இந்தப் படுக்கையில் நடைப்பிணமாக இருக்கும் என்னே நீங்கள் கொன்றுவிட்டு..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி முடிக்குமுன் அவளது வாயை மூடிவிட்ட பாலமுரளி யின் ஆத்திரம் சுடர்விட்டுச் சினந்து கொண்டிருந்தது. "என்ன துணிச்சலோடு கூறுகிறாய் பாரதி."

"துணிச்சலோடு தான் கூறுகிறேன் அத்தான். என்னைக் கொன்றுவிட்டு வேறொரு பெண்ணை மணந்து கொள்ளுங்கள்." இதைக்கேட்ட பாலமுரளியின் மேனியிலே நெருப்புப் பொறி சுட்ட வேதனை வடுக்கள் பொங்கிக்கொண்டிருந்தன.

"என்ன கொடுமை பாரதி என்ன கொடுமை" என்றெல் லாம் பாலமுரளியால் கேட்காமலிருக்க முடியவில்லை.

"கொடுமை ஒன்றை இழைத்துவிட்ட படியினால்தான் கூறுகிறேன் அத்தான். ஓராண்டுகாலமாகப் படுக்கையில் இருக் கும் என்னோடு குடும்பவாழ்க்கையை நடத்தமுடியாமல் இருக் கிறீர்களென்றால் அந்தக்கொடுமையை இழைத்தவள் நான்தானே? ஆனபடியினால்தான் சொல்லுகிறேன் அத்தான், என்னைக் கொன்றுவிட்டு வேறொருத்தியை மணந்துகொள்ளுங்களென்று." இதைக்கேட்டு மெதுவாகச் சிரித்துச் சொன்னான் பாலமுரளி.

"பாரதி, சிற்றின்பம் ஒன்றுக்காகத்தான் பாரதியை மணந் தான் இந்த பாலமுரளி என்று நல்லறிஞர்கள் என்னைத் தூற்ற வேண்டும் என்பதுதான் உனது எண்ணமா? சொல் பாரதி சொல்..."

"அத்...தான்"

"குடும்பமென்பது சிற்றின்பம் மட்டுமல்ல பாரதி. குடும்ப மென்ற மரத்திலே சிற்றின்பமென்பது ஒரு கிளைதானே? அந்தக் கிளையில்லாமலும் இந்தக் குடும்பம் இனி வாழும் என்பது தெரி யாதா உனக்கு?"

"அத்தான்"

"பாரதி, சிற்றின்பம் எனக்குத் தேவையாயிருந்தபோது உன்னை நான் மணந்தேன். அதனால் இன்பம் முளைத்தது; குடும்ப மரம் வளர்ந்தது ஆனால் இன்றோ சிற்றின்பம் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் இன்பமுமல்ல; மரமுமல்ல. அந்தச் சிற்றின்பம் குடும்பமரத்தின் ஒரு கிளைதான், என்பதை மறந்துவிடாதே பாரதி."

பாலமுரளி சொன்ன மனித வார்த்தையில் தன் உள்ளத்தை உருக்கிநின்ற பாரதியின் கண்களிலே ஆனந்தக்கண்ணீர் உருவெடுத்தாடிக் கொண்டிருந்தது.

"அத்தான், என் மாமாவைப் போன்ற காமவெறியர்கள் நடமாடும் இந்த மண்ணிலே உங்களைப்போன்ற உத்தமர்களும் வாழுகிறார்களென்றால், அதைவிடப் பெருமை இந்த நாட்டுக்கும் நங்கையர் குலத்திற்கும் வேறு என்னதான் வேண்டுமோ?"

"பாரதி, மனிதன் என்பவன் தனது வேண்டாத உணர்ச்சிகளை வேண்டாத நேரத்தில் கட்டியாளப் பழக வேண்டுமே தவிர, அந்தப் பொல்லாத உணர்ச்சிகளுக்குள் தன்னைக் கட்டிவிடக்கூடாது. உணர்சிகளுக்கான சந்தர்ப்பமும் காலமும் சரிவரும்போதும் ஒத்துவரும்போதும்தான் அந்த உணர்ச்சிகளை வெளிவிட வேண்டுமேயல்லாமல் காலத்தையும் சந்தர்ப்பத்தையும் உணர்ச்சிகளுக்காக ஆக்கிவிடக்கூடாது. இதை உணராதபடியினால்தான் பல காளையர் வெறிபிடித்துத் தெருத்தெருவாக அலையவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஊர்சுற்றும் காமப்பித்துக்கள் என்று பெயர் கேட்கவும் நேரிடுகிறது. புரிகிறதா பாரதி?"

"புரிகிறது அத்தான் உங்கள் தத்துவம். இதை நானும் நீங்களும் புரிந்தால் மட்டும் போதாது. எல்லோருமே புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் என் மாமியைப் போன்ற பெண்கள் தொல்லையும் கண்ணீரும் அனுபவிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது."

"பயப்படாதே பாரதி. உன்னுடைய மாமியின் துயரை நான் துடைக்கிறேன் வெகு சீக்கிரம்."

"எப்படி முடியும் அத்தான்? வானத்துக் கதிரவன்போல் வெளிப்படையாகக் கூறியிருக்கிறாரே மாமா, என்னுடைய குடும்ப





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகாரங்களில் மட்டும் நீயோ, உன் கணவனோ குறுக்கிட வேண்டாம்" என்று. "அப்படிக் குறுக்கிட்டால் உனது குடும் பத்துக்குத்தான் ஆபத்து" என்றும் எழுதியிருக்கிறார். அப்படி யிருக்கும்போது நீங்கள் குறுக்கிடுவதால் ஏதாவது ஆபத்து நேரிடலாம். உங்களுக்கு ஏதாவதொரு தீங்கு நேர்ந்தால், என்னால் உயிர் வாழவே முடியாது. இது சத்தியம் அத்தான் சத்தியம்; என்று சொன்ன பாரதியின் நிலையிலே கண்ணீர்த்துளிகள் தேங்கி நின்றன. மெதுவாக அவற்றை அகற்றிவிட்டுச் சொன் னான் பாலமுரளி.

"பாரதி, உன் மாமா அப்படி எழுதியதற்குக் காரணம் என்ன தெரியுமா? நாம் அதில் குறுக்கிடாமலிருப்போம், தான் எதையும் செய்யலாம், கேட்பதற்கு எவருமே இருக்கமாட்டார்கள் என்பதனால்தான். அதற்குப் பயந்து நாம் பேசாமலிருக்கக் கூடாது. எதற்கும் உன் மாமாவின் நிலையை ஒருக்கால் அறியத் தான் வேண்டும். ஆகவே அடுத்தமாதம் உன் மாமாவுக்கு அறிவிக்காமலே அவரது கந்தோருக்கும் விடுதிக்கும் சென்று விபரம் அறிவதென்று முடிவுசெய்துவிட்டேன். சரிதானே பாரதி."

"நீங்கள் தான் உண்மையிலே பொதுநலத் தொண்டன் அத்தான். இல்லையென்றால், நீங்களாகத் தேடியலைந்து, வர னொருவனைக் கண்டுபிடித்துப் பக்கத்து வீட்டுப் புதுமலருக்கு மணம்முடித்து வைத்திருப்பீர்களா? அத்தோடு புதுமலரின் உற்ற தோழி புன்னகையின் கணவனை மறுபடியும் ஒற்றுமையாக்கிக் கொண்டு வந்து புன்னகையோடு வாழவிட்டிருப்பீர்களா?"

"உண்மை பாரதி உண்மை." "ஆம் அத்தான், அதைப் பற்றிக் கேட்கவேண்டுமென்றிருந்தேன், புன்னகையைப் பிரிந்து சென்றாரே அவளின் கணவன் திங்கள்ச்செல்வன், அதற்குக் காரணம் என்னத்தான்?"

'அது மிகப்பெரிய கதை பாரதி. புன்னகை, திங்கள்ச் செல்வனை மணம் முடிக்குமுன்பே புதுமலரின் உற்ற தோழியாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாள் அதனுல் இருவரும் இரவு ஒரு மணிவரை தூங்குவதே கிடையாது. மற்றவர்கள் இரவு பத்து அல்லது பதிஞெரு மணிக்குத் தூங்கிவிடுவார்கள். ஆனுல் இந்த இரண்டுபேரும் ஒரே விழிப்பு. திடீரெனக் கதைகேட்கும், இடையிடையே மௌனம் நிலவும். இருவரும் பருவம் முற்றிய பெண்கள். இவர்களுக்கு இரவு பன்னிரண்டொரு மணிவரை என்ன பேச்சு, என்ன உறவு என்பதை அவதானித்த புன்னகையின் தாயாருக்கு இவர்களின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. கணவன் மனைவி உறவு போலல்லவா இவர்கள் பழகுகிருர்கள் என்று தெரிந்ததும் புன்னகையைத் திங்கள்செல்வனுக்கு மணம் முடித்துக் கொடுத்தாயிற்று. ஆனுல் மணம் முடித்த பின்பும் புன்னகையால் புதுமலரின் உறவை ஒதுக்கிவிட முடியவில்லை. அதே பழக்கம், அதே உறவு. அதே தொடர்பு. திங்கள்ச்செல்வன் வேலைக்குப் போய் மாலை ஐந்து மணிக்கு வீடு திரும்புவான். புன்னகையோ அதுவரை புதுமலரோடுதான் இருப்பாள்."

" அத்தான், அப்படியானுல் புன்னகை தன் கணவனுக்கோ தனக்கோ சமைப்பதே கிடையாதா ?"

" அதற்கிருக்கிருர் புன்னகையின் தாயார். மணம் முடித்த தயது புது மகள்மாரை நோகவிடக்கூடா தென்பதற்காக எத்தனையோ தாய்மார் இப்படித்தான் சமைப்பார்கள்... புன்னகையின் தாய் மட்டும் விதிவிலக்கா ?"

" ம்··· அத்தான் "

" வேலைவிட்டுத் திரும்பிய திங்கள்ச்செல்வன் கூப்பிட்ட பின்புதான் புன்னகை வீட்டுக்கு வருவாள். சிற்சில நேரங்களில் இரவு வேலைக்குத் திங்கள்ச்செல்வன் போகநேர்ந்தால், புன்னகை அந்த இரவு புதுமலரோடுதான்."

" திங்கள்ச்செல்வனுக்குப் பிடித்திராதே அத்தான்."

" புன்னகையைப் பலதடவை எச்சரித்தான். ஆனுலும் அது பயன்தரவில்லை. அவளை விட்டுப் பிரிந்துபோக நேர்ந்துவிட்டது திங்கள்செல்வனுக்கு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியா அத்தான் ?"

"உண்மை பாரதி. இதுகண்டு மனமுடைந்த புன்னகையின் தாயார் என்னிடம் சேதி சொன்னார். கதைகேட்ட என் மூளை வேலைசெய்தது அபாரமாக. புதுமலருக்கு ஒரு வரன் பார்த்து விஷயத்தை முடித்து, பிற ஊரிலே அவளை வாழ்க்கை நடாத்தும் படி ஆக்கிவிட்டால்...., என்று நினைத்தேன். எல்லாமே சுலப மாக முடிந்துவிட்டது."

"அப்படியா அத்தான்"

"பின் என்னென்று நினைக்கிறாய்? இப்படி நடந்தபோது தான் புன்னகை தன்னை உணர்ந்தாள். தானாகவே போய்த் திங்கள்ச்செல்வனின் பாதத்தில் விழுந்து சரண்கேட்டாள். அவ ளின் பரிதாப நிலையறிந்து இணங்கினான் திங்கள்ச்செல்வன். இப்போது அவர்கள் இணைபிரியா இன்பத் தம்பதிகள். புரிகிறதா பாரதி உன் அத்தானின் சாமர்த்தியம் ?"

"அத்தான், உண்மையில் உங்களுக்குத்தான் சமாதான நீதவான் என்ற ஜே. பி. பட்டம் பொருந்துமேயல்லாமல், நாலு மந்திரிகளை வரவழைத்து நாற்பது மாலைகள் போடும் சிலருக்கல்ல", என்று அமைதியாகக் கூறிமுடித்த பாரதியின் கேலித் தென்ற லிலே பாலமுரளியின் புன்னகை மொட்டு மலர்ந்து நின்றபோது வீரிட்டு அழுது கண்விழித்துக் கொண்டது வெண்ணிலா. அவ ளைத் தூக்கித் தனது மடியில் வைத்துச் செல்லங் கொஞ்சிக் கொண்டிருந்தான் பாலமுரளி. பாரதியின் கண்களிலே அந்தக் காட்சி ஏற்படுத்திய குளிர்ச்சியைக் குறிஞ்சிநிலத் தென்றலோ அருவியோகூட அவளுக்குக் கொடுத்திருக்க முடியாது.

"என்றைக்கும் இப்படியே இருக்கவேண்டும். இதே அன்பு தான் இந்தக் குடும்பத்தில் அந்தம் வரை நீடிக்கவேண்டும்", என்ற வேண்டுகோளைக் கடவுளிடம் சமர்ப்பித்த பாரதியின் ஆனந்தக் கண்ணீர் கட்டுக்கடங்கவில்லைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் ஓடிக்கொண்டிருந்தது. பாரதியின் வேண்டுகோளின் படி மதன்மோகனின் நிலையறிவதற்காகக் கொழும்பு சென்றான் பாலமுரளி. ஆனால் எதிர்பாராத ஆச்சரியமொன்று அங்கே நடைபெறவிருப்பதை அவனால் அறியமுடியுமா?

## அத்தியாயம் 22

"இதுதான் தம்பி நடந்தது. எப்படியாவது இதை மாற்ற வேண்டும். இல்லையென்றால் நானும் இறக்க இந்தக் குடும்பத்தின் பெயரும் இறந்துவிடும். நீதான் எனக்கு உதவிபுரியவேண்டும் என்று கெஞ்சிக் கேட்கிறேன். நீ என் பேரன். என் மகனின் மகன். அந்த முறையில், உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லுவேன் தம்பி."

"புரிகிறது தாத்தா புரிகிறது"

"திடீரென ஏற்பட்ட இந்த நோய்க்கு என்ன செய்யலாம் என்று ஏங்கித் தவித்த நெஞ்சோடு யாராவதொரு வைத்தியரைப் பார்க்கலாமென்றுதான் வந்தேன். வழியில் என்னைக் கண்ட நீ அடையாளம் தெரிந்துகொண்டாய். எனக்கோ உச்சியில் குளிர் ஏற்றிய மகிழ்ச்சி. அதனால்த்தான் வேறெங்கும் செல்ல விடாமல் உன்னை உடனடியாக அழைத்துவந்து விபரமெல்லாம் சொல்லிவிட்டேன். இனி நீதான் ஒரு வழி கூறவேண்டும் மகனே?"

"கயிலைநாதர் கதை சொன்னபோது, அதிர்ச்சி வேகத்தைத் தணிக்கமுடியவில்லை பாலமுரளியால். உங்கள் குடும்பத்திற்கு இந்தக் கெதியா? சித்திரவதனிக்கு இப்படியும் ஒரு சோதனையா? என்னால் நம்பமுடியவில்லையே" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அதே நிலையில்த்தான் நானும். எனது கண்களையும் என்னால் நம்பவேமுடியவில்லை. நேற்றுக்காலை நித்திரைவிட்டெழுந்தவளின் நிலையைக் கண்டதும் அதிர்ச்சியடைந்துவிட்டேன் தம்பி," என்று கயிலைநாதர் சொன்னபோது பெருமூச்சுக் குவியலை வெளியகற்றிய பாலமுரளியின் தேகம் ஒருக்கால் சிலிர்த்து நிமிர்ந்தது.

இரண்டுபேருமாக இதுபற்றி அலசினார்கள்.

" அப்படியானால் சித்திரவதனியை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கவேண்டியதுதான் பாக்கி. இந்த நோயை மாற்றக்கூடிய நல்ல வைத்தியர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள்."

" அப்படியா தம்பி "

" உண்மை தாத்தா. சித்திரவதனியை அங்கு கொண்டு செல்வதுதான் சிறந்தது. ஆகவே புறப்படுங்கள். இன்றைக்கே யாழ்ப்பாணம் போய் வைத்தியர் கணேஷலிங்கத்தைக் காண வேண்டும். "

" தம்பி, வரவேண்டும் என்னோடு. இங்கிருந்து இருநூற்று நாற்பத்திநான்கு மைல் தூரம் சித்திரவதனியைக் கூட்டிக் கொண்டு தனியனாக எப்படிப் போகமுடியும் என்று எண்ணிப் பார். தேகசுகத்தோடு இருக்கும் பெண்ணாக இருந்தால் நான் கவலைப்படமாட்டேன். ஆனால் அவளோ நோயாளி. அதுவும் கொடுமையான நோய். இந்த நிலையில் தனியனாக அவளையும் கூட்டிக்கொண்டு இந்த எண்பதாவது வயதிலே போவதென்றால்... ?"

" புரிகிறது தாத்தா. சரி, புறப்படுங்கள் இரண்டுபேருமாகப் போகலாம். நான் வந்த வேலையை அடுத்த முறையாவது கவனிக்கிறேன். "

" ஆம் தம்பி. எனக்காக நீ வரத்தான்வேண்டும். மற்றெந்த வேலையையும்விட இதுதான் முக்கியமானது."

" அப்படியானால் இரவுப் புகையிரதத்தில் போவதே நல்லதென்று அபிப்பிராயப்படுகிறேன். "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வேண்டாம் தம்பி. கார் ஒன்று வாடகைக்கு அமர்த்திப் போவதுதான் சிறந்தது."

" உங்கள் எண்ணம் அதுவானுல் எனக்கொரு ஆட்சேபனை யுமில்லைத் தாத்தா. ஆனுல் வீண் செலவென்று நினைத்தேன்."

" தேவைக்குச் செலவுசெய்வது ஒருபோதும் வீணுகாது. வீம்புக்குச் செலவுசெய்வதுதான் வீணுகும்."

" உண்மை தாத்தா. நான் அதை வரவேற்கிறேன்."

" சரி தம்பி. இனிப் புறப்படவேண்டியதுதான் பாக்கி. நான் போய்க் கார் ஒன்று கொண்டுவருகிறேன். அதற்கிடையில் நீ புறப்படு. அதோ மேல் கால் கழுவ, அந்தக் குளிக்கும் அறை இருக்கிறது. கழுவிக்கொண்டு புறப்படு. நான் உடனடியாக வந்துவிடுகிறேன்."

கயிலைநாதர் அவசரம் அவசரமாக நடந்தார். தனது மகள் சித்திரவதனியின் நோயை மாற்றி, எங்காவது நல்ல வரனொருவனைத் தேடி அவளுக்கு மணம் முடித்துக் கொடுக்க வேண்டும், அந்த வரனும் ஒரு டொக்டராக அல்லது எஞ்ஜினிய ராக வாய்த்துவிடவேண்டும் என்பதையே நோக்கமாகக்கொண்ட கயிலைநாதர் விரைவாக நடப்பதில் என்னதான் தவறு? நிமி டங்கள் பல மறைந்தன. வாசலருகே வந்துநின்றது கார் திடீ ரென இறங்கிய கயிலைநாதர் தேவையான உடுபுடவைகளையும் அடுக்கி எடுத்தபின் பாலமுரளியிடம் எதையோ சொல்லிவிட்டுச் சித்திரவதனி இருந்த அறையைத் திறந்து சித்திரவதனியைக் காரில் ஏற்றினுர் பாலமுரளியின் உதவியோடு.

" சித்திரவதனிக்கு எப்படி இந்த நோய் ஏற்பட்டது, என்ன சந்தர்ப்பம் அவளை இந்த நிலைக்கு ஆளாக்கியது இந்த இருபத் தோராவது இளம் வயதில், இப்படி ஏற்பட்டுவிட்டதே சித்திர வதனிக்கு." என்ன கொடுமை இது. எப்படியாவது இவளது நோயை மாற்றச் செய்யவேண்டும். அதன்பின் ஒருவனது கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளைக் கொடுத்துவிட்டால் நிம்மதி. இல்லையென்றால் இவளது பெண்மை வீணாகி ஒரு சந்ததியே அழிந்துவிடும்" என்ற சிந்தனையுள்ளத்தோடு போய்க்கொண்டிருந்த பாலமுரளியிடம் கேட்டார் கயிலைநாதர்.

"தம்பி, சித்திரவதனியின் நோயை அந்த வைத்தியரால் மாற்றமுடியுமென்று நினைக்கிறாயா ?"

"பல நோயாளிகளை மாற்றியிருக்கிறார் வைத்தியர் கணேஷ லிங்கம். ஓரிரண்டு பேர்களை மாற்றமுடியவில்லையென்பதற்காக அவர் சிறந்த வைத்தியர் அல்ல" என்று சொல்லிவிடமுடியாது தாத்தா. மேற்கொண்டு நடப்பது அவரவர் யோகத்தையும் பாவத்தையுமே பொறுத்தது."

"கடவுள் சித்தம் எதுவோ அது நடக்கட்டும் தம்பி," என்றார் கயிலைநாதர்.

"காலத்தை நம்மால் வெல்லமுடியாது. காலமே நம்மை வென்றுவிடுகிறது," என்பதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன் தாத்தா" என்றான் பாலமுரளி.

நடுத்தர வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது கார். பற்பல யோசனைகள் பாலமுரளியையும் கயிலைநாதரையும் வட்டமிட்டுக் கொண்டிருந்தபோது யாழ்ப்பாணத்தின் சாயல் தோற்றங் காட்டியது.

சித்திரவதனியை வைத்தியர் கணேஷலிங்கத்திடம் ஒப் படைத்துவிட்டுத் "தாத்தா" என்றான் பாலமுரளி.

"நீங்களும் இங்குதான் தங்கவேண்டும். அப்படியென்றால்த் தான் சித்திரவதனிக்குத் தேவையானவற்றை அந்தந்த நேரங் களில் கொடுத்துதவலாம். அது மாத்திரமல்ல, நீங்களும் இங்கு தங்கியிருந்தால், டொக்டரும் கூடுதலான அக்கறை எடுப்பார். என்ன தாத்தா நினைக்கிறீர்கள் ?"

'உன்னுடைய நல்லறிவை எதிர்க்க நான் விரும்பவில்லைத் தம்பி. நல்ல காரணத்தைக் காட்டியிருக்கிறாய் சித்திரவதனிக்குத் துணையாக நிற்பதுதான் எனக்கும் விருப்பம். ஆனால் இங்கு தங்குவது பற்றி..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாக இழுத்த கயிலைநாதரை மேலும் பேசவிடாமல் தடுத்துவிட்டான் பாலமுரளி. "வைத்தியரிடம் உங்கள் நிலையைப்பற்றிக் கூறிவிட்டேன். நீங்கள் இங்கு தங்குவதைப்பற்றி அவருக்கு எதுவித ஆட்சேபனையுமில்லை."

"அப்படியா தம்பி."

"ஆமாம். ஆகவே நீங்கள் இங்கே தங்கியிருங்கள். காங்கேசன்துறை நல்ல இடம். மாலை நேரங்களில் காற்றுவாங்கக் கடற்கரையிருக்கிறது. எதற்கும் கவலைப்படவேண்டியதே கிடையாது. நான் இன்று கண்டிக்குப்போய் இன்னொரு நாள் வருவேன்.'

"சரி தம்பி. இதோ, கொழும்பிலுள்ள எனது வீட்டுச் சாவிகள். கொழும்பு போக நேரும்போது வீட்டையும் கவனித்து வா. பெரும் உதவியாயிருக்கும்.

சாவியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்ட பாலமுரளி, மதன்மோகனின் நிலையை அறியவில்லையே என்ற நினைவோடும் சித்திரவதனிக்கு இப்படி ஏற்பட்டுவிட்டதே என்ற மனத்தாங்கலோடும் போய்க்கொண்டிருந்தான் கண்டி நோக்கி.

## அத்தியாயம் 23

"அன்று சித்திரவதனியின் பிறந்த நாளானபடியால் வீட்டில் இரவிரவாக ஒரே குதூகலம். இரவு மணி ஒன்பதாகி விட்டது. திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறினால் வெள்ளவத்தை முழுதும் ஒரே இருள்மயம். மின்சாரவிளக்குகள் எல்லாம் அணைந்துநின்றன. சந்தர்ப்பத்தைச் சமாளிப்பதற்காகக் கொழுத்தப்பட்ட நாலைந்து மெழுகுவர்த்திகளில் எப்படி ஒளிசுடரும்? அந்த வீட்டிலே காணப்பட்டது மங்கிய ஒளி. பிறந்த நாள்க் கொண்டாட்டத்திற்கு அத்தகைய ஒளி போதுமா என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ரோமாக்ஸ்சைக் கொழுத்திக்கொண்டிருந்தார் சித்திர வதனியின் தகப்பன். அதற்குப் பக்கத்தில் சித்திரவதனியின் தாய். காற்றுப் போதாதென்ற நினைப்பில் மேலும் கொஞ்சக் காற்றடித்தபோது 'படீர்' என்று வெடித்தது பெற்ரோமாக்ஸ்.

உடைந்து துண்டுகளாகிச் சிதறிய கண்ணாடித் துண்டுகள் சித்திரவதனியின் தாய் தகப்பனின் முகத்திலும் கழுத்திலும் பட்டு, நன்ருக வெட்டிவிட்டதோடு. பெற்ரோமாக்ஸ்சின் 'ராங்' கும் வெடித்ததால், சித்திரவதனியின் தாய்தந்தையரின் உடையில் நெருப்பும்பிடித்து உடலும் எரிந்துவிட்டது. இருவரையும் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றதுதான் பாக்கி. இருவரும் வழியிலே கண்மூடிவிட்டார்கள்" என்று கயிலைநாதர் சொன்ன விவரங்களைத் தனது தாய்க்கும் மனைவிக்கும் பாலமுரளி சொன்னபோது எப்படியிருந்திருக்கும் அவர்களின் நிலை.

பெற்ரோமாக்ஸ் வெடித்ததுபோலவே அவர்களின் உள்ளங்களும் வெடித்தன. "ஐயோ, இப்படியும் அவலமாக மடிய வேண்டுமா அந்த உயிர்கள்? இறைவனுக்குக் கண்ணே யில்லையா?" என்ருள் தங்கவடிவு.

"நினைக்கும்போதே நெஞ்சு வெடிக்கிறது மாமி. இவ்வளவு அவலமாக இறப்பதற்கு அப்படி என்ன கொடுமையைத்தான் அவர்கள் இழைத்துவிட்டார்களோ?" என்று பேசிக்கொண்டாள் பாரதி.

"தமது ஒரேயொரு செல்வம் சித்திரவதனியின் மங்கள விழாவைக் கண்டு களிக்கமுடியாதபடி அந்த உயிர்களை எடுத்து விட்டானே இறைவன்," என்று நெஞ்சு துடிக்கக் கூறினுள் தங்கவடிவு.

எல்லோர் கண்களிலும் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. பாலமுரளி சொன்ஞன். 'தம்பி உன்னையோ உனது தாயையோ, சித்திரவதனியின் பிறந்தநாள்க் கொண்டாட்டத் திற்கு நாம் வரவழைக்கவில்லையென்ருலும் இந்த நேரத்தில் சித்திர வதனிக்கு உதவிசெய்ய முன்வந்த உன்னுடைய பெருந்தன் மையை நான் பாராட்டுகிறேன்" என்ருர் தாத்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனுல் அதைப்பற்றி எதுவித வார்த்தையும் நான் கூற வில்லை அம்மா... சித்திரவதனிக்கு வேண்டிய உதவிகளைச் செய்து டொக்டர் கணேஷலிங்கத்திடம் ஒப்படைத்தேன். தாத்தா கண் ணீர் வடித்தார். "ஏன் தாத்தா அழுகிறீர்கள்" என்றேன். "சித்திரவதனியை நினைத்துத்தான்" என்ருர். "கவலைப்படாதீர் கள். வெகுவிரைவில் சித்திரவதனியின் நோய் மாறிவிடும்" என்றேன். "நீ செய்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேனே தெரியாது தம்பி," என்ருர் தாத்தா. "அப்படி யொன்றும் நான் பிரம்மாதமாகச் செய்துவிடவில்லை. உங்களோடு ஒன்றுகூடி வந்தது மாத்திரம்தான்" என்றேன். 'நீ வராமல் இருந்திருந்தால் சித்திரவதனியோடு வழியிலே கஷ்டப்பட்டிருப் பேன். நீ இருந்தபடியால், ஒரு விதமாகக் கொண்டுவந்து சேர்த்தேன். இல்லையென்ருல் வேதனை தாங்க முடியாமல் ஒருவேளை இறந்தாலும் இறந்திருப்பேன்," என்ருர் தாத்தா. "அப்படி யெல்லாம் சொல்லக்கூடாது தாத்தா. கடவுள் சித்தம் ஒன்று இருக்கிறதே அதுவே நிறைவேறும்" என்று கூறிவிட்டு வெளி யேறினேன் நான்" என்று முடித்தான் பாலமுரளி அமைதியாக.

கதைகேட்ட தங்கவடிவு நிலையிழந்தாள். "ஒன்றுவிட்ட என் அண்ணனும் என் மைத்துனியும் இறந்ததுமட்டுமல்ல, சித்திர வதனிக்கும் இந்தக் கொடுமை நேர்ந்துவிட்டதே என்று நினைக்கும் போது இந்த உலகமே எனக்கு வெறுத்துவிட்டது மகனே" என்ருள் கண்ணீரோடு.

"என்னம்மா செய்வது. என் அப்பாவின் ஒரேயொரு தங்கையும் அவரின் கணவரும் அவர்களின் ஒரேயொரு மகள் சித்திரவதனியும் இந்த நிலைக்கு ஆக்கப்படுவார்களென்று நாம் கனவுகூடக் கண்டிருக்க முடியாது.

"காலத்தை நம்மால் வெல்லமுடியாது
காலமே நம்மை வென்றுவிடுகிறது" என்பதை என் வாழ்வில் மட்டுமல்ல, மற்றவர்களின் வாழ்க்கையிலேற்படும் அனுபவத்திலிருந்தும் அறிகிறேன். இறைவன் சித்தம் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றல், அதை அவர்களால் வெல்ல முடியாதம்மா. அனுப வித்துத்தாஞகவேண்டும்."

காலத்திலும், கடவுளிலும் நல்ல பற்றும் நம்பிக்கையும் கொண்ட பாலமுரளி, அமைதியாகச் சொன்னதைக்கேட்ட தங்க வடிவின் கண்களிலே ஓடிய நீர் வற்றிக்கொண்டிருந்தது.

'மகனே, துன்பம் வரும்போது அவை அத்தனையும் அடுக்கி அடுக்கி வருவதனுல் எவ்வளவாகப் பாதிக்கப்படுகிருன் ஒரு மனிதன் என்பதை நினைத்துப்பார்."

மனிதனைப் பிணித்து ஆட்டிப் படைக்கும் துன்பத்தின் கொடுமையைப் பல சந்தர்ப்பங்களில் கண்டதனுலன்ருே அதன் விஸ்வரூபத்தைத் தங்கவடிவால் இன்று உணர முடிகிறது.

"அம்மா, துன்பம் வரும்போது அது அடுக்கி அடுக்கி வருகின்ற உண்மையைத்தான்,

"ஆவின மழைபொழிய இல்லம்வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமைசாவ
மாவீரம் போகுதென்று விதைகொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரேவரத்
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந்தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமைகேட்கக்
குருக்கள்வந்து தட்சணைகள் கொடுஎன்ருரே."

என்று அழகாக உணர்ந்தெழுதியிருக்கிருர் எமது இராமச்சந்திரக் கவிராயர் அவர்கள்.

"உண்மை அத்தான். ஆனபடியால்த்தான் "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்று எழுதிவைத்திருக்கிருர்கள் நம் பழந்தமிழர்," என்று பாலமுரளியை ஆமோதித்தாள் பாரதி.

"உண்மை மருமகளே. நம்மை ஆட்டிப்படைக்கும் துன்பம் வரும்போது நாமே அசைந்துவிடுகிருேம்," என்ற தங்கவடிவை எதிர்த்துச் சொன்னுன் பாலமுரளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" துன்பம் வரும்போது சிரிக்கவேண்டுமேயல்லாமல் நடுங்கக் கூடாதம்மா.

" இடுக்கண் வரும்போது நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல் "

என்று வள்ளுவர் சொல்லுகிறார் என்றால் அதை நினைத்துப் பாருங்கள். துன்பம் என்பது கறையான் போன்றது. கொஞ்சங் கொஞ்சமாக மரத்தை அரித்து அதை இல்லாமலாக்கிவிடும் கறையான்போல் துன்பமும் நம்மைக் கொஞ்சங் கொஞ்சமாக அரித்து நம்மை அழித்துவிடும் தன்மை வாய்ந்தது. ஆகவேதான் அதைக்கண்டு கலங்கவோ நடுங்கவோ கூடாது சிரிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது அப்படியானால்த்தான் முடிவில் இன்பம் காணலாம் என்ற கருத்தை இரண்டே இரண்டு வரிகளில் அற்புதமாகப் புகுத்தியிருக்கிறார் வள்ளுவர்."

பாலமுரளி கூறிமுடிக்கும்போது வீரிட்டாள் வெண்ணிலா. அவளைத் தூக்கித் தன் மடியில் இருத்திய பாலமுரளியின் வாயிலே தாலாட்டு ராகம் நீலாம்புரி அழகுகாட்டிக் கொண்டிருந்தது. தங்க வடிவு எழுந்து உள்ளே சென்றாள் குழந்தைக்குப் பால் கொண்டு வருவதற்காக.

" அத்தான் மாமாவைப் பார்த்தீர்களா ?" என்று கேட்ட பாரதிக்கு விபரமெல்லாம் சொன்ன பாலமுரளி, கல்விக் கந்தோருக்குப் போகப் புறப்பட்டபோதுதான் கயிலைநாதரைக் கண்டதாகக் கூறிவிட்டு " அடுத்த கிழமை எப்படியாவது போய்ச் சந்திக்கிறேன் பாரதி " என்றான்.

பாலமுரளி சொல்லி முடிக்கும்போது வெண்ணிலாவின் உணவும் வந்துவிட்டது. அதே நேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த அவசரத் தந்தியொன்று பாலமுரளியைத் திக்காட வைத்தது.

" சரி பாரதி, எதற்கும் யாழ்ப்பாணம் போய் வருகிறேன். வெண்ணிலா கவனம் " என்று கூறிவிட்டுப் புறப்பட்ட பாலமுரளி மறுநாள்க் காலையில் யாழ்நகரை அடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 24

"இனியும் என்னுல் பொறுக்கமுடியாது தம்பி. பொறுக்கும்வரை பொறுத்தேன். அந்தப் பொறுமைக்கு ஒரு எல்லேயும் கண்டுவிட்டேன். தம்பி, நீ கட்டாயமாக - அவரிடம் போ. போய் என் குடும்பத்தின் நிலேயைச் சொல்லு. அவர் இங்கு வந்து எம்மோடு தங்குவதையே நாம் விரும்புகிருேம். அப்படி வர முடியாவிட்டால், மாதாமாதம் அனுப்பும் பணத்தையாவது ஒழுங்காக அனுப்பச்சொல்லு தம்பி. தைக்கொருமுறை வைகாசிக்கொருமுறை அனுப்புவதால் நாங்கள் படும் கஷ்டத்தையும் எடுத்துச்சொல். ஒழுங்காகப் பணத்தை அனுப்பிவிட்டு எந்தத் தெருக்கூத்தையும் அவர் செய்யட்டும். என் தலேவிதியைமட்டும் நான் நொந்துகொண்டிருப்பேன். அதைவிட மேலாக என் உயிரையே போக்கிவிட்டால்க்கூட நிம்மதியாயிருக்கும் தம்பி..."

"அப்படியெல்லாம் வீணுக உயிரை மாய்த்துவிடாதீர்கள். தற்கொலேசெய்வது பெரும் பாவம். அதைவிடப் பாவம் உங்கள் குழந்தைகளே அனுதைகளாக்கிவிட்டுச் செல்வது. எனவே, தற்கொலேசெய்யும் எண்ணத்தை மட்டும் கைவிட்டுவிடுங்கள். நான் போய் அவரின் நிலேயை அறிவதோடு உங்கள் நிலேயையும் எடுத்துச் சொல்லுகிறேன் கவலேப்படாதீர்கள்."

"இதற்காகத்தான் தம்பி அவசரத்தந்தி கொடுத்திருந்தேன் உன்னே வரும்படி. என் குழந்தையின் நிலேயைப்பார். "குழந்தைக்கு நெருப்புக் காய்ச்சல். மிகக் கடுமை. உடனடியாக வாருங்கள்" என்று அவசரத் தந்தியடித்தும் வராத ஒருவரென்ருல், இவரைப்பற்றி உலகம் தவருகச் சொல்வதில் என்ன பிழை இருக்கிறது, என்று நினைக்கிருய்?

நெருப்புக் காய்ச்சலோடு அவஸ்தைப்பட்டுத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கும் இந்தக் குழந்தைக்குப் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் தகப்பன் இருந்தால், எவ்வளவு ஆறுதலாயிருக்கும் எனக்கு? இவரின் செய்கையை நினைக்கும்போது எனக்கே வெட்கமாயிருக்கிறதென்றால் அடுத்தவர்களுக்கு எப்படியிருக்குமோ?

இவரின் நடத்தையைப்பற்றிக் கொழும்பிலிருக்கும் எனது உறவினர் சிலர் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். சொந்தக் கார் ஒன்று வைத்திருப்பதால் அந்தக்காரில் ஊர் சுற்றுவதும், கட்டவிழ்த்துவிட்டுக் கண்டபடி சுற்றியலையும் சில இளங் குமரிகளை அதில் ஏற்றிக்கொண்டு கொழும்பு வீதியெல்லாம் படையெடுப்பதும்தான் உங்கள் கணவருக்கு வேலையாகிவிட்டது என்றெல்லாம் அவர்களின் கடிதமூலம் அறிவதைக் கேட்டுச் சகித்துக் கொண்டுதானிருக்கிறேன் தம்பி. இதையெல்லாம் எண்ணும் போது ஏனிந்த வாழ்க்கை என்ற வெறுப்புத் தட்டிவிடுகிறது. ஆனாலும், எனது குழந்தைகள் அனாதைகளாகித் தெருவிலே அலையநேரிடும், பிச்சைக்காரராகி ஓடெடுக்க நேரிடும் என்ற நினைவினால்த்தான் வாழாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்." என்று தன் பரிதாப நிலையைச் சொல்லிக் கண்ணீர் வடித்த வளர்மதிக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிய பாலமுரளியிடம் மறுபடியும் சொன்னாள் வளர்மதி. "தம்பி, பாரதியின் திருமணம் பற்றிப் பேசவந்தபோது இந்த வீட்டில் இரண்டு நாட்கள் தங்கினார். ஆனால் தகப்பன் என்ற பாசத்தைத் தனது பிள்ளைகளிடமோ, கணவன் என்ற அன்பை என்னிடமோ அவர் காட்டவில்லை என்றால் எமது நிலை எப்படியிருந்திருக்கும் என்று எண்ணிப் பார் தம்பி. இப்படியும் ஒரு கணவன் எனக்கு. அவருக்கொரு மனைவி நான்." என்றாள் அழுகையோடு.

இதற்கெல்லாம் காரணம், உங்கள் இருவருக்குமிடையே காணப்படும் பொருந்தாத வயதுதான். பொருத்தமற்ற இரண்டு வயதுகள் மணம் முடிப்பதனால் ஏற்படும் கோளாறு. அதனால்த் தான் உங்கள் வாழ்க்கை இயந்திரம் இடையிலே நின்றுவிட்டது." என்று சொல்ல முடிந்ததா பாலமுரளியால்? எப்படிச் சொல்ல முடியும் இந்த உண்மையை வளர்மதியிடம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கவலைப்படாதீர்கள். அடுத்த கிழமை எப்படியாவது கொழும்பு செல்கிறேன். இன்று போயா நாள். இன்றிரவு நான் புறப்படவேண்டும் கண்டிக்கு... அதற்கிடையில் காங்கேசன் துறை சென்று டொக்டர் கணேஷலிங்கத்தைப் பார்த்துவிட்டு வருகிறேன் " என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் பாலமுரளி.

அவனது சிந்தனையிலே ஒரு பாரம். பாரதியின் மாமியார் வளர்மதிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போய் விடுமா என்ற கேள்வி அடிக்கடி நெஞ்சிலே ஏற்றப்படும்போது பாரம் அங்கு ஏருதா என்ன ?

வைத்தியர் கணேஷலிங்கத்தின் வைத்தியசாலையில் பால முரளியை வரவேற்ருர் கயிலைநாதர். " சித்திரவதனி குணமாவ தற்கு இன்னும் இரண்டு மூன்று மாதங்களாலும் செல்லலாம் " என்று கூறியிருக்கிருர் டொக்டர் கணேஷலிங்கம். ஏதோ இனி இறைவன் சித்தம் தம்பி. மனிதனுல் ஆகக்கூடியது ஏதாவது இருந்தால், அது காலத்தைப் பொறுத்ததுதான், என்பதை எனது வாழ்விலும் காணுகிறேன், என்று சொன்ன கயிலைநாதரிடம் விடைபெற்ற பாலமுரளி, முதலில் தனது மாமனுர் தில்லைநடேச ரிடமும் அதன்பின் வளர்மதியிடமும் சென்ருன். வளர்மதியின் குழந்தைகளிடம் ரூபா ஐம்பதைக் கொடுத்துவிட்டுக் கண்டி சென்ற போது சோகம் அவனைச் சூழ்ந்துநின்றது.

அடுத்த கிழமை எப்படியாவது கொழும்பு சென்று மதன் மோகனைச் சந்தித்து வளர்மதியின் துன்பநிலைக்கொரு எல்லை வரைந்து துன்பத்தைத் துடைப்பதென்ற முடிவினுல் ஆட்டிப் படைக்கப்பட்ட பாலமுரளிக்குக் கொழும்பு செல்லும் நாளும் நெருங்கிவந்ததென்ருல் அவன் புறப்படத்தானே வேண்டும் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 25

" நீங்கள் கேட்பது செந்தில்க்குமரனைப் பற்றித்தானே ?"

" இல்லை. நான் கேட்பது மதன்மோகனைப்பற்றி. சென்ற தடவை கண்டியிலிருந்து இங்கு நான் வந்தபோது இந்த விடுதியில்த்தான் தங்கியிருந்தார். அவரைப் பார்த்துப் பேசுவதற்காகவே அவரது கந்தோருக்குச் சென்றேன். இன்று வரவில்லையென்று பதில் சொன்னார்கள் கந்தோர் அதிகாரிகள். அதனால்த்தான் இங்கு வந்தேன், விசாரித்துப் போவதற்காக."

" எந்தக் கந்தோருக்குப் போனீர்கள் அவரைப்பற்றி விசாரிப்பதற்கு ?"

" கல்விக் கந்தோருக்கு... "

" கல்விக் கந்தோருக்கா ?"

" ஆமாம் "

" கல்விக் கந்தோரில் வேலைசெய்யும் எவருமே இந்த விடுதியில் தங்கியதில்லை "

" உண்மையாகவா ?"

" ஆமாம். நாம் குறிப்பிடும் செந்தில்க்குமரன் என்ற பேர்வழி ஏதோ ஒரு தமிழ்ப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்."

" அப்படியா ?"

" ஆமாம். அவர் நாலைந்து மாதங்களுக்கு முன்புதான் வாசநாயகி என்ற பெண்ணை மணந்தார்."

இதைக்கேட்ட பாலமுரளியின் உடம்பெல்லாம் ஊசிகுத்திய வேதனை. அவனால் வாய்திறந்து பேசமுடியவில்லை. அமரசிங்காவும் குணசேகராவும் கதை சொன்னார்கள். " அந்தப் பெண்ணை அவர் மணம் முடித்தபடியினால்த்தான் இந்த விடுதியை விடவும் நேர்ந்தது," என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த விடுதியில் தங்கிய தமிழர் ஒரேயொருத்தர்தானே. வேறு எந்தத் தமிழனும் தங்கவில்லை என்றுதானே இந்த வீட்டுச் சொந்தக்காரர்கூடச் சொல்லிவிட்டார். அப்படியானல் இங்கு தங்கியிருந்த அந்த ஒரேயொரு தமிழன் பாரதியின் மாமன் மதன்மோகனுய்த்தானிருக்கவேண்டும். ஆனல் அவரின் பெயரிலும் அவர் வேலைசெய்யும் இடத்திலும்தானே சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ம்... ஒருவேளை இப்படியிருக்கலாமோ?

முன்னமே தனக்குக் கலியாணம் நடந்தேறியதை மற்றவர்கள் அறியக்கூடாதென்பதற்காகத் தனது பெயரைச் செந்தில்க் குமரன் என்றும் வேலைசெய்யும் இடத்தைத் தமிழ்ப் பாடசாலையென்றும் மாற்றியிருந்தால்...? இருக்கலாம். எதற்கும் நாளைக் காலை அவரது அலுவலகத்திற்குப் போனல் எல்லாமே தெரிந்துவிடும்," என்ற நினைவோடு வெளியேறிய பாலமுரளி அமரசிங்காவுக்கும் குணசேகராவுக்கும் நன்றிகூறிச் சென்ருன் விரைவாக.

கொழும்பிலேயுள்ள கயிலைநாதரின் வீட்டில் கழிந்தது அவனது அன்றைய பொழுது. அடுத்தநாள்ப் பகல் பத்து மணி போல் பாலமுரளியும் மதன்மோகனும் சந்தித்துக்கொண்டார்கள் கல்விக் கந்தோரில்.

"நீங்கள் மறுமணம் செய்துகொண்டதாக ஊரில் ஒரு வதந்தி... அது..."

"வதந்திதானு உண்மைதானு என்பதை அறியவேண்டுமென்றுதானே என்னிடம் வந்திருக்கிறீர்கள். இல்லையா பாலா?"

"ஆமாம். அதற்காகவே பாரதியும் என்னை அனுப்பிவைத்தாள்."

"முன்னமே அவளை எச்சரித்திருக்கிறேன், எனது குடும்ப விஷயத்தில் குறுக்கிடவேண்டாமென்று. அதன்பின்னும் எதற்காக அவள் குறுக்கிடவேண்டும் என்றுதான் கேட்கிறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தலையிடாமல் இருக்கமுடியாத விஷயம். நீங்கள் மறுமணம் முடித்தது உண்மையானால் இரண்டு பாரதூரமான குற்றங்களுக்கு ஆளாகிவிட்டீர்கள் என்றும் சொல்லத்தான் வேண்டும். ஒன்று, உங்கள் மனைவியின் வாழ்வைப் பறித்தீர்கள். மற்றது இன்னொரு பெண்ணை ஏமாற்றுகிறீர்கள். "

இதைக்கேட்டதும் "பாலமுரளி" என்றான் மதன்மோகன் சினத்தோடு. ஆத்திரக்கனல் மதன்மோகனின் அங்கமெல்லாம் வீசிக்கொண்டிருந்தது. இவ்வளவு காலமும் நீங்கள் என்று மரியாதைப் பண்போடு பாலமுரளியை அழைத்த மதன்மோகன் அந்தப் பண்பையும் இப்போது இழந்துவிட்டான். ஆனபடியால்த் தான், "பாலமுரளி என் கோபத்தைக் கிளறாதே உன்னை எச்சரிக்கிறேன்," என்றான். அவனின் உடம்பெல்லாம் ஒரு நடுக்கம். ஆத்திரத்தின் சாயல்தான் அந்த நடுக்கம் என்பதைப் பாலமுரளி புரியமாட்டானா என்ன ?

மதன்மோகன் திருமணம் செய்ததைப்பற்றி அமரசிங்காவும் குணசேகராவும் கூறியதன் உண்மையை அறியவேண்டும் என்ற நோக்கோடுதான் பாலமுரளி இப்படித் திரிக்கிறான் என்பதை மதன்மோகனால் புரியமுடியுமா ? அதனால்த்தான், "நான் எந்தப் பெண்ணையும் முடிப்பேன், எதையும் செய்வேன். யாருமே கேட்கவேண்டியதில்லை" என்றான் ஆணித்தரமாக.

"அப்படியானால் உங்கள் இருப்பிடத்தையாவது நான் அறியலாமா ?"

"நீ அன்றொருநாள் வந்தாயே அதே விடுதிதான்"

"அங்கு போய்த்தான் உங்களைப்பற்றி விசாரித்தேன், நீங்கள் மறுமணம்செய்து நாலைந்து மாதங்கள் என்பதாகவும். உங்கள் மறுபெயர் செந்தில்க்குமரன் என்பதாகவும், தமிழ்ப் பாடசாலையொன்றில் ஆங்கில ஆசிரியராய்க் கடமையாற்றுகிறீர்கள் என்பதாகவும் அமரசிங்கா, குணசேகரா மூலம் அறிந்து வந்தேன்" என்று பாலமுரளி சொன்னதைக்கேட்ட மதன்மோகன் திகைத்து நின்றான் ஒரு கணம். இடியொன்றினால் தாக்கப்பட்ட நாகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னில. ஆத்திரம் சூடேறிய உடலிலே மௌனம் குடிகொண்டது. அதைக்கண்ட பாலமுரளி போவதற்கு விடைபெறுவதற்குமுன், "உங்கள் முகவரியைத் தெரிந்துகொள்ளலாமா ?" என்முன். ஆனலும் மதன்மோகனு கொடுப்பான் ? மறுத்துவிட்டான் முடிவாக. முகவரியைப் பெறமுடியவில்லையே என்ற சுமையோடு போய்க்கொண்டிருந்த பாலமுரளி தனது இரண்டாம் நாள் இரவையும் கயிலைநாதரின் வீட்டில் கழித்துவிட்டு மூன்றும் நாள் மாலை கல்விக் கந்தோரின் வாசலில் ஒளிந்துநின்ருன் மதன்மோகனின் வரவுக்காக. மணி நாலு முப்பது. அலுவலகத்தைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தார்கள் எல்லோரும்.

பாலமுரளிக்குத் 'திக்' அடித்தது. மதன்மோகன் வந்திருக்கிருனு என்ற கேள்வி நிறைந்த நெஞ்சு. அடிக்கடி லீவெடுக்கும் அவன் இன்றைக்கும் லீவு எடுத்திருக்கிருனே என்ற சபல எண்ணத்தோடு நுழைந்தான் கல்விக் கந்தோருக்குள்.

"அரைநாள் லீவெடுத்துக்கொண்டு வேலைக்கே போய்விட்டார் மதன்மோகன். நாளை வருவதுபற்றி எம்மால் எதுவுமே சொல்லமுடியாது," என்று கல்வி அலுவலகத்தில் வேலைசெய்யும் எழுதுவினைஞர் ஒருவர் சொன்னபோது திகைத்து நின்ருன் பாலமுரளி.

"மதன்மோகனின் முகவரியைத் தெரிந்து கொள்ளலாமா" என்ருன் அமைதியாக.

"அந்த முகவரி எமக்குத் தெரியாது" என்ற பதிலையும் கேட்டுக்கொண்டு கண்டிசென்ற பாலமுரளிக்கு மனதிலே நிம்மதி தோன்றவில்லை. ஒரே சிந்தனை... எல்லாம் பாழாகிவிட்டதே என்ற நினைப்பு. மதன்மோகனுக்குத் தெரியாமல் மதன்மோகனின் பின்னல் சென்று அவன் மறுமணம் செய்துகொண்ட உண்மையை அறியவேண்டுமென்ற எனது எண்ணம் பாழாகிவிட்டதே" என்ற நினைப்போடு கண்டிபோய்ச் சேர்ந்தான் பாவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 26

" இவ்வளவு ஏமாற்றுக்காரரா எனது மாமா?"

" ஏமாற்றுக்காரர் என்று சொல்வதைவிட, புதியதொரு சொல்லை ஆக்கினுல்த்தான் அதன் அர்த்தம் சிறக்கும் பாரதி, பார்த்தாயா? உலகத்தை அலசி ஆராயும்போது எத்தனை போர்வை களைத் திறந்து உள்ளிருக்கும் நாற்றங்களைக் காணமுடிகிற தென்று?"

" புரிகிறதத்தான் புதிர் "

" உன் மாமா எப்படிப்பட்டவர் என்று இப்போதுதான் தெரிகிறது."

அத்தான் நம்மால் இனி எதுவுமே செய்யமுடியாது மாமி யின் கண்ணீரைத் துடைக்கலாமென்ற நினைவினுலும் துடைக்க வேண்டுமென்ற துடிப்பினுலுந்தான் வாக்குறுதி கொடுத்திருந் மாமிக்கு. ஆனுல்... ?"

" கவலைப்படாதே பாரதி. காலம் இன்னும் கரைந்துவிட வில்லை. காலத்திற்குப் பலியாகாமல் தாம் நினைத்ததையே சாதித்த மனிதர்களை வரலாறு கண்டதில்லை. காலத்திற்கு அவர்கள கணக்குக் கொடுத்துத்தானுக வேண்டும்.

" காலத்தை நம்மால் வெல்ல முடியாது

காலமே நம்மை வென்றுவிடுகிறது," என்பது தெரி யாதா உனக்கு? ஆகவே கவலைப்படாதே " என்று பாரதியைத் தேற்றினுன் பாலமுரளி.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. மதன்மோகனேயும் அவனது லீலைகளையும் அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டார்கள் பாரதியும் பாலமுரளியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்கள் சில மறைந்தன. அன்று பாரதியின் தந்தை தில்லைநடேசரும் அவளின் சகோதரங்கள் இருவரும் வந்திருந்தார்கள். அவர்கள் இன்று வந்திருப்பது முதலாவது தடவையல்ல. பல சந்தர்ப்பங்களிலும் கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்வதற்காகவும் அன்றும் வந்திருக்கிறார்கள் என்றாலும் முகம் மலர்ந்து அவர்களை வரவேற்றான் பாலமுரளி.

தில்லைநடேசர் இப்போது குடிப்பதையும் வெறிப்பதையும் கைவிட்டிருக்கிறார் என்பதையும் தனது பிள்ளைகளைக்கூட அன்பாகக் கவனிக்கிறார் என்பதையும் அங்கு வந்திருந்த பிள்ளைகள் மூலம் அறிந்த பாலமுரளியும் பாரதியும் குதூகலப்பட்டார்கள். அத்தோடு மட்டும் அவர்கள் நிறுத்தவில்லை. அந்த மூவரையும் ஒரு மாத காலத்துக்குக் கண்டியில் தங்கவும் வைத்தார்கள்.

ஒரு மாத காலம் அங்கு தங்கிய தில்லைநடேசருக்குப் பாரதியின் நிலை துன்பத்தை அளித்தது. துன்பத்தில் வீழ்ந்து சுழியோட முடியாமல் தத்தளித்தார் பாவம்.

"இன்னும் கொஞ்சக் காலம் வரைதான். அதன்பிறகு எல்லாமே நன்மையாக முடியும். பாரதி எழும்பி நடக்கவும் செய்வாள், என்று சொல்லிவிட்டார் டொக்டர். ஆகவே பாரதியைப் பற்றி நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை மாமா," என்று பாலமுரளி சொன்னதைக் கேட்ட தில்லைநடேசர் ஓரளவு நிம்மதியடைந்தார்.

அவரது பொழுதெல்லாம் பாரதியின் குழந்தையோடு கழிந்தது. தில்லைநடேசரோடு நன்றாகப் பழகினாள் வெண்ணிலா. அவரின் கன்னங்களை அடிக்கடி வருடி, அந்த மென்மை நகங்களால் அவருக்குக் காயங்கள் ஏற்படுத்திவிடுவாள் அவள். எப்பொழுதும் சிரிப்போடு காணப்படும் வெண்ணிலா நித்திரைவிட்டெழுந்ததும் தாத்தாவையே நாடுவாள்.

"குழந்தையும் தெய்வமும்
கொண்டாடும் இடத்திலே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உண்மை புலப்பட்டது தில்லைநடேசருக்கு. வெண்ணிலா இல்லாமல் தாத்தாவும், தாத்தா இல்லாமல் வெண்ணிலாவும் வாழ முடியாது என்ற நிலையை எல்லோரும் ஊகித்துக்கொண்டார்கள்.

ஒரு மாத காலம் ஓடி மறைந்தது. வெண்ணிலாவைப் பிரிந்துசெல்ல முடியவில்லையே தில்லைநடேசரால் வெண்ணிலா விடம் காணப்பட்ட தாத்தாப்பற்றும் அவளது மழலை நிறைவும் அவரைக் கவர்ந்துவிட்டன. அவளை மறக்க முடியாத நிலை. எந்த மகளை அன்றொரு காலம் வெறுத்தாரோ அதே மகளின் குழந்தை அவருக்குக் கரும்பாகிவிட்டது; இல்லை உடம்பில் உயிராகி நின்றது என்றே சொல்லவேண்டும்.

வெண்ணிலா இல்லாமல் தன்னால் இருக்கமுடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டார் தில்லைநடேசர். இருந்தாலும் தனது சின்ன மகளோடும் மகனோடும் இங்கு ஒரேயடியாகத் தங்குவது அவ் வளவு நல்லதில்லை என்ற எண்ணமும் அவரை வட்டமிடச் செய்தது.

பாலமுரளி தனது மருமகனாய் வந்தபோதும் என்றைக்கும் அந்த வீட்டில் இருந்து தண்டச்சோறு சாப்பிடுவதை அவர் விரும்பவில்லை. எனது சொந்த மகனது குடும்பமாயிருந்தால் கவலையில்லை. உழைத்துக் குடும்பம் நடத்துபவன் மகன்தானே அவனைப் பெற்று வளர்த்துப் படிப்பித்து ஆளாக்கிய என்னைப் பார்க்கவேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறதுதானே. ஆகவே இறக்கும் இறுதிவரை அவனோடு இருக்கலாம் என்று சொல்லிவிட. ஆனால், இந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரை பாலமுரளிதானே உழைப்பவன். என் மகள் பாரதி துணைவிதானே ? ஆகவே இவர்க ளோடு இருந்து தண்டச்சோறு சாப்பிடுவது அவ்வளவு நல்லதல்ல. அத்தோடு எனது பிள்ளைகளின் பாடசாலைத் தொடக்கமும் நெருங்கிவிட்டது. மார்கழிமாத லீவென்றபடியால்த்தான் இங்கு இவ்வளவு நாட்களும் தங்கமுடிந்தது. எனவே போவதே மேல். வெண்ணிலாவைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை எழுந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தமுறை வருவேன்,'' என்றெல்லாம் எண்ணிக்கொண்டு யாழ்ப்பாணம் போவதற்கு விடைகேட்ட தில்லைநடேசரைத் தடுத்துவிட்டான் பாலமுரளி.

''மாமா, நீங்கள் இன்றைக்குப் போகவேண்டாம். யாழ்ப் பாணம் போய்வரவேண்டிய அவசியமொன்று ஏற்பட்டிருக்கிறது எனக்கு. இதோ பாருங்கள் என் தாத்தா கயிலைநாதரின் தந்தியை. ''எப்படியாவது வா உடனடியாக,'' என்று அவசரத்தந்தி கொடுத் திருக்கிறார் தாத்தா,'' ஆகவே நான் புறப்படவேண்டும் அவசர மாக, என்று விளக்கிய பாலமுரளியைப் புரிந்துகொண்டார் தில்லைநடேசர்.

''சரி தம்பி, எதற்கும் புறப்படுங்கள். நீங்கள் வந்தபின் தான் நான் யாழ்ப்பாணம் போகவேண்டும்'' என்று தில்லைநடேசர் சுமுகமான பதில் சொன்னபோது பாலமுரளி ஆனந்தப்பட மாட்டானா என்ன ?

வேண்டிய உடுபிடவைகள் யாவையும் எடுத்துக்கொண்டு தாயிடமும் பாரதியிடமும் விடைபெற்ற பாலமுரளி இறுதியாக வெண்ணிலாவிடமும் விடை கேட்டான். சிரிப்பொலியோடும் மழைத் துண்டுகளோடும் விடை கொடுத்தாள் வெண்ணிலா. அவளின் பசுமைக் கன்னங்களையும் தளிர் இலை மேனியையும் தனது முத்தவெள்ளத்தால் நிரப்பிவிட்டுப் புறப்பட்ட பாலமுரளி காங்கேசன் துறையைப் போய்ச் சேர்ந்தபோது, நேரம் காலை ஆறுகி விட்டது...

## அத்தியாயம் 27

''சித்திரவதனியின் மனநோயை மாற்றி அவளின் ஞாபக சக்தியைத் திருப்பிவிட்ட மனநோய் வைத்தியர் கணேசலிங் கத்தைக் கடவுளாகப் போற்றிவிட்டுப் புறப்பட்டார் கயிலைநாதர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடகைக் காரைக் கொண்டுவந்து வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்த பாலமுரளி, "உங்களை என்றைக்கும் மறக்க முடியாது டொக்டர். தெய்வமாகி எங்கள் உள்ளங்களிலெல்லாம் வீற்றிருக்கிறீர்கள்," என்று சொன்னபோது, மெதுவாகச் சிரித்து நின்றார் வைத்தியர் கணேஷலிங்கம்.

"பெறமுடியாத ஒன்றை ஒருவன் பெற்றுத்தரும்போது அவனைக் கடவுள் என்று போற்றுகிறது உலகம். என்னையும் அந்த நிலையில் ஆக்கிவிட்டீர்கள். ஆனால் நான் கடவுளல்ல. கடவுளின் துணைகொண்டு வைத்தியம் செய்யும் ஒருவனென்றே சொல்லவேண்டும். சித்திரவதனியை வேளைக்கே கொண்டுவந்த படியால்த்தான் இவரின் மனநோயைச் சொற்பகாலத்தில் மாற்ற முடிந்தது. எனவே நீங்கள் போற்றவேண்டியது என்னையல்ல; கடவுளை" என்று வைத்தியர் கணேஷலிங்கம், முடித்ததும் சிரித்துவிட்டு விடைபெற்றனர் மூவரும். பாலமுரளியின் பக்கத்தில் கயிலைநாதரும். கயிலைநாதரின் பக்கத்தில் சித்திரவதனியும் அமர்ந்தபோது கிளம்பியது கார்.

"தாத்தா, கொழும்பிலுள்ள உங்கள் வீட்டிற்குப் போக நேர்ந்தது அன்றொரு நாள். இரண்டு இரவுகள் அங்கு தங்க வேண்டியிருந்ததால், தங்கிவிட்டு மூன்றாம் நாள்த்தான் வீட்டுக்குத் திரும்பினேன்," என்றான் பாலமுரளி.

"மிக்க நன்றி தம்பி," என்றார் கயிலைநாதர்.

"கொழும்பில் தங்குவதற்கு உங்கள் வீடு கிடைத்ததைப் பற்றி எனது பாரதிக்கு பெரும் மகிழ்ச்சியென்றுதான் சொல்ல வேண்டும் தாத்தா."

"அப்படியா தம்பி. ஆமாம் சித்திரவதனியின் மனநோய் பற்றி உனது மனைவிக்கும் தாய்க்கும் தெரியுமா பாலா?"

"தெரியும் தாத்தா. சித்திரவதனியின் மனநோய் இப்போது மாறிவிட்டது என்று கேள்விப்பட்டால் அம்மாவும் பாரதியும் துள்ளிக்குதிப்பார்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மைதான் தம்பி. அவர்களைப் பார்க்கவேண்டுமென்று நானும் ஆசைப்படுகிறேன். ஆனுல்..." என்றிழுத்தார் கயிலை நாதர்.

"ஒன்று செய்யலாமா" என்றுன் பாலமுரளி.

"என்னென்று சொல்லு தம்பி" நேரடியாகக் கண்டிக்குப் போய் அங்கு ஒரு கிழமை தங்கிவிட்டு அதன்பின் கொழும்புக்குப் போகலாம். கொழும்பு செல்லவேண்டிய அவசியம் எனக்கும் இருக்கிறது. என்ன நினைக்கிறீர்கள் தாத்தா?"

"அப்படியென்ருல் சரி தம்பி. எதுவித ஆட்சேபணையும் எனக்கில்லை."

"ரொம்ப நன்றி தாத்தா".

"தம்பி, கண்டிபோகும்படி சொல்லு சாரதியிடம்."

"சாரதியிடம் முன்னமே சொல்லிவிட்டுத்தான் உங்களிடம் சம்மதம் கேட்டேன், தாத்தா."

"ரொம்பச் சாமர்த்தியசாலி தம்பி நீ"

இதைக்கேட்டு மெதுவாகச் சிரித்த பாலமுரளியும் சித்திர வதனியு, கார் ஓடிக்கொண்டிருந்த வேகத்தையே கவனித்தார்கள்.

கண்டி நோக்கி ஓடிக்கொண்டிருந்தது கார். எட்டு மணிநேர ஓட்டம். தங்கவேண்டிய இடத்தில் தங்கி ஓடவேண்டிய நேர மெல்லாம் ஓடிக்கொண்டிருந்த கார் பாலமுரளியின் வீட்டருகே நின்றது.

மூவரும் இறங்கிவிட்டார்கள். காரின் வாடகையைக் கொடுத் துக் காரை அனுப்பிவிட்டு பாலமுரளியோடு வீட்டுக்குள் காலடி வைத்தார் கயிலைநாதர். சித்திரவதனி பின் தொடர்ந்தாள்.

தில்லைநடேசரையும் பாரதியையும் அவளது சகோதரர்களை யும் கயிலைநாதருக்கும் சித்திரவதனிக்கும் அறிமுகம் செய்து வைத்தான் பாலமுரளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தபோது வெண்ணிலாவை தூங்கவைத்துவிட்டு வந்துகொண்டிருந்தாள் தங்கவடிவு.

" மாமி " என்றாள் சித்திரவதனி. அவளது கண்களிலே நீர் மல்கி நின்றது. அதை மெதுவாகத் துடைத்தெறிந்துவிட்டுச் சித்திரவதனியை அணைத்துக்கொண்டாள் தங்கவடிவு. ஒன்று சேராத குடும்பங்கள் ஒன்று சேரும் பாய்க்கியம் கிடைத்ததை நினைத்தபோது தங்கவடிவின் பெருமைக்குப் பூரிப்பு ஏற்பட்டது.

அன்று அந்த வீட்டில் ஒரே கலகலப்பு. அடுத்தநாள் மாலை, தில்லைநடேசரும் அவரது இரண்டு பிள்ளைகளும் யாழ்ப்பாணம் செல்ல விடைபெற்றபோது, கயிலைநாதர், சித்திரவதனி ஆகியோருக்கும் சொல்லிச் சென்றனர்.

நாட்கள் ஓடின. தனிமையிலிருந்த பாரதியிடம் தனக்கு நடந்த உண்மையை விளக்கிய சித்திரவதனியின் கண்கள் பெருகியோடும் அருவிகளாய் நின்றன.

" கல்விக் கந்தோரில் வேலைசெய்கிற ஒருவனுயிருந்தால், என் மாமாவுக்குத் தெரியவேண்டுமே ? என் மாமா மதன்மோகன் அங்குதானே எழுதுவினைஞனுய்க் கடமையாற்றுகிறுர் சித்ரா."

" இவன் பெயர் மதன்மோகனல்ல, கமலதாசன் அக்கா."

" அப்படியா."

" ஆம் அக்கா. அவனைக் கமலதாசன் என்று சொல்வதை விடக் காமதாசன் என்று சொல்வதே பொருந்தும். ஏனென்றுல் கமலத்தின் மென்மையில் ஆயிரத்தில் ஓரளவுகூட இல்லாதவன் என்பதால்."

" உண்மை சித்திரா. எனக்குப் புரிகிறது உன் நிலை," என்று பாரதி சொன்னபோது கலங்கி நின்றுள் சித்ரா.

" எத்தனையோ பெண்கள் இப்படி ஏமாற்றப்பட்டுச் சிறகொடிந்த பறவைகளாகிவிடுகிறுர்கள். இந்த ஆண்வர்க்கம் ஏனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை உணரவில்லை," என்று ஏங்கிப் பெருமூச்செறிந்த பாரதி சித்திரவதனியை ஒருவாறு தேற்றிக்கொண்ட போதும், மனதிலே நிம்மதியில்லை. சித்திரவதனியின் நிலை அவனைப் பாதித்துவிட்டது. ஒருவகைச் சலனமும் ஆத்திரமும் அவளது உள்ளத்திலே நிறம் தீட்டிக்கொண்டிருந்தபோது, தனக்கருகில் வந்து நின்ற பாலமுரளியைக்கூட அவள் கவனிக்கவில்லை.

பாலமுரளியைக் கண்டதும் மெதுவாக எழுந்துசென்றுள் சித்திரவதனி.

"நீ பேசிக்கொண்டிரு சித்ரா. வேறு வேலை இருக்கிறது எனக்கு நான் போகவேண்டும்," என்று பாலமுரளி சொல்லி முடிப்பதற்குள் தங்கவடிவின் அறைக்குள் சென்றுள் சித்திரவதனி.

"அத்தான், கதையொன்று சொல்லுகிறேன் அமருங்கள் இப்படி," என்ற பாரதியைத் தட்டிக் கழிக்கமுடியுமா பால முரளியால்.

கதை முடிந்ததும் ஆழ்ந்து யோசித்தான் பாலமுரளி. 'சித் திரவதனியை ஏமாற்றியவனை எப்படியாவது கண்டுபிடித்து அவனுக்கே திருமணம் செய்துவைக்கவேண்டும். ஆகவே மறு படியும் நான் கொழும்பு செல்லத்தான்வேண்டும் பாரதி. அடுத்த கிழமை வரை தாத்தாவும் சித்திரவதனியும் இங்கிருப்பதாக ஒத் துக்கொண்டிருக்கிருர்கள். எனவே அடுத்தகிழமை நான் கொழும்பு போனுல், உன் மாமியின் விஷயத்தையும் ஆராயலாம்" என்று சொல்லிமுடிக்கும்போது கயிலைநாதர் வந்துநின்ருர் பக்கத்தில்.

"வாருங்கள் தாத்தா. தனக்கு நடந்ததெல்லாம் பாரதியிடம் இரகசியமாகக் கூறியிருக்கிருள் சித்திரவதனி. உங்களுக்குக் கூறி வைக்க முடியாத பலதும் இன்று வெளிவந்திருக்கிறது. எல்லாம் ஆறுதலாகக் கூறுகிறேன். மற்றது, அடுத்த கிழமை நானும் உங்களோடு கொழும்பு வருகிறேன்" என்று பாலமுரளி சொல்லி முடிக்கும்போது அழுது சிணுங்கிக்கொண்டிருந்த வெண்ணிலா வைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்துச் சென்றுள் தங்க வடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தாத்தா! எங்கள் நாட்டு ஆண்கள் மட்டுமல்ல, பெண் களில்க்கூடப் பலர் அபாரமூளை படைத்தவர்களாயிருந்தும், அந்த அறிவாற்றலை நல்ல முறையிலே அவர்கள் பயன்படுத்துவதில்லை. அப்படிப் பயன்படுத்துவதற்கு அவரவர்களின் தாய் தந்தையரும் விரும்புவதில்லை. காரணம் என்ன தெரியுமா? தமது பிள்ளைகள் ஒன்றில் எஞ்ஜினியராகவோ, டொக்டராகவோ அல்லது வக்கீலாகவோ உத்தியோகத்தில் பெரும் பதவி வகிப்பவர்களாகவே வந்துவிட்டால் நாளாந்தம் உழைக்கலாம், நல்ல வருவாய் கிடைக்கும் என்பதனுல்த்தான்.

ஆனுல் என் மகள் வெண்ணிலாவை டொக்டராகவல்ல, அவளை ஓவியக்கலையில் சிறந்ததொரு மேதையாக்கப்போகிறேன். மறைந்துபோன எமது ஓவிய அற்புதங்களையும் கலைப் பொக்கிஷங்களையும் மறுபடியும் புதுப்பித்து, நம்நாட்டவர்க்கு மட்டுமல்ல, பிறநாட்டவர்க்கும் காட்டிப் புகழ்பெறும் வெண்ணிலாவாக - ஈழத்துப் பெண்மேதையாக - பாரதி பாலமுரளியின் மகளாக இவள் திகழவேண்டும், பெருமைச் சின்னமாக வளரவேண்டும் என்பதே எனது பேரவா. எனது மகளின் அபாரமான மூளை கலை சம்பந்தமானவற்றையே நாடுகிறது என்பது இப்போதே புலனுகிறது நன்ருக. பாருங்கள் தாத்தா, அவளின் கையில் எங்நேரமும் இந்தத் தூரிகை. எப்போது பார்த்தாலும் தண்ணீரில் அதைத் தோய்த்துத் தோய்த்து ஏதோ கிறுக்குவதும் துண்டுபட்ட கோடுகளை வரைவதும் அங்கங்களை அசைத்து ஆடுவதுமாகவே காணப்படுகிருள்.

"விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பார்கள். இவளையும் நான் தெரிந்துகொண்டேன். எனவே இவளை ஒரு ஓவிய மேதையாக்கி விடுகிறேன்" என்றெல்லாம் சொல்லிச் சொல்லி அந்தச் சொல்லிலே இன்பம் கண்டான் பாலமுரளி.

அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டார் கயிலைநாதர். நாட்கள் ஓடின. கொழும்பு செல்லவேண்டிய நாளும் வந்தபோது அவர்கள் பயணமாகத்தானே வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 26

**க**ல்விக் கந்தோரின் ஒரு பகுதியிலே காணப்பட்ட சாரளத்தினூடாகச் சுட்டு விரலைக் காட்டிநின்ற சித்திரவதனியின் குறிப்பைப் புரிந்துகொண்டான் பாலமுரளி. "ஆமாம், இவனை உனக்கு எப்படித் தெரியும் சித்ரா," என்ற பாலமுரளியின் கேள்விக்கு விடைசொல்லாமலிருக்கமுடியுமா சித்திரவதனியால்?

"கல்விக் கந்தோருக்கு வந்து சோதனை விண்ணப்பப் படிவங்கள் கேட்டபோதுதான் இவரின் பழக்கம் எனக்கு ஏற்பட்டது" என்றாள் சித்திரவதனி.

"இவனை எனக்கு நன்றாகத்தெரியும் தாத்தா. சித்திரவதனியை இவன் ஏமாற்றிய விபரம் முன்னமே எனக்குத் தெரிந்திருந்தால்..." என்றான் பாலமுரளி.

"யாருக்குத் தெரியும் தம்பி. இந்தக் காலத்துப் பெண்களையும் ஆண்களையும் எப்படி நம்புவதென்றே எனக்குத் தெரியவில்லை" என்றார் கயிலைநாதர்.

தற்கால நாகரீகத்தின் பெயரில் பல பெண்கள் ஏமாறுவதையும் அலசிக்கொண்டார்கள் இருவரும்.

"இளம் பெண்களைத் தன்னந்தனியனாக வெளியிலே நடமாடவிடுவதால் ஏற்படும் பிழைகளையும் விபத்துக்களையும் இப்போதுதான் உணருகிறேன். இளம் பெண்களுக்குக் கட்டுப்பாடு அவசியமிருக்கவேண்டும் என்பதை எவருமே மறுக்கக்கூடாது தம்பி."

"உண்மை தாத்தா. பெண்கள் தன்னந்தனியாகத் திரிவதாலும், தற்செயலாகப் பிறனொருவனைக் காணும்போது தேவையில்லாமல் சிரிப்பதும், அடுத்தநாளும் அதேமாதிரி நடப்பதும், அந்தப்பெண் சிரிப்பதைக்கண்ட ஆண், சந்தர்ப்பத்தைப் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி அவளைக் கற்பழிப்பதும், அதன்பின் அவள் யாருக்குந் தெரியாமல் குழந்தையொன்றைப் பெற்று அதைக் கொன்று எங்காவது புதைப்பதும், ஊரார் அவளைத் 'தாசி' என்று உலகெல்லாம் பறைசாற்றித் திரிவதும், போலிசாரின் காதுகளுக்கு எட்டி, பொலிசார் அவளுக்கு வழக்குத் தாக்கல்செய்வதும், கற்பழித்தவனின் அடையாளமே தெரியாமல் அவள் முழிப்பதும், கற்பழித்தவன் தலைமறைவாகத் திரிந்து வேறொருவனை மணம் முடிப்பதுமான அத்தனை கொடுமைகளும் தவிர்க்கப்படவேண்டுமானால், பெண்களில் சிலர் - பல கற்புள்ள பெண்களும் இருக்கிறார்கள் அவர்களை நான் குறிப்பிடவில்லை - கூடாத நடத்தையில் ஈடுபடும் சிலரைத்தான் சொல்லுகிறேன், அந்தச் சிலர் வெளியே போய்த் தனிமையில் நடமாடுவதைத் தவிர்க்கவேண்டும்; அவர்களது பெற்றோரோ பாதுகாவலரோ இதைக் கவனிக்கவேண்டும் என்று... என்ன தாத்தா நினைக்கிறீர்கள்."

"முற்றிலும் சரிதம்பி. பெண்கள் ஏமாறுகிறபடியால்த்தான் அவர்களை ஏமாற்றுகிறார்கள் இந்த ஆண்கள். ஏமாற்றும் சந்தர்ப்பத்தையும் ஆக்கிக்கொள்ளுகிறார்கள். இல்லையா தம்பி."

"ஆம் தாத்தா. புகையிலை விரித்தால்ப் போச்சு. பெண்கள் சிரித்தால்ப் போச்சு" என்பது ஏமாறும் இந்தப் பெண்களுக்குச் சரியாகத்தானிருக்கிறது. இல்லையா?"

"உண்மை பாலா. ஆனபடியால்த்தானே சித்திரவதனியும் ஏமாறப்பட்டிருக்கிறாள். இதற்கெல்லாம் காரணமாக அமைந்தவர்கள் சித்திரவதனியின் தாய்தந்தையர்தான். யாழ்ப்பாணத்தில் கட்டிய சொந்த வீட்டை வீணாக விற்றுவிட்டுக் கொழும்பில் சொந்த வீடொன்று வாங்கினபடியால்த்தானே இந்தக் கோலம்? கொழும்பிலிருந்தால் மதிப்போடு வாழலாம். சித்திரவதனிக்கும் நல்லதொரு வரனைப்பார்க்கலாம். கொழும்பிலே வீட்டோடு வளவும், கையிலே ஐம்பதினாயிரம் ரொக்கமும், பொன்னிலே ஏராளமான நகையும் கொடையாகக் கொடுத்தால், எந்த டொக்டர் அல்லது எஞ்ஜினியர் சித்திரவதனியைப் பெண்ணெடுத்து ஸ்ரீதனம் வாங்க மறுப்பார் என்று நினைத்துத்தானே கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து இந்தக் கோலத்தோடு வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அத்தோடு சித்திரவதனி படித்து ஓரளவுக்கு அறிவு பெறவேண்டுமென்பதற்காகத்தானே பாடசாலை செல்லும்படி அவளைத் தனிமையில் அனுப்பிவைக்கவும் நேர்ந்தது அப்படித் தனிமையில் இவள் சென்றபடியால்த்தானே இன்று இந்தக் கேவலம். யாழ்ப்பாணத்தில் இருந்தபடி இருந்திருந்தால்... ?"

ஆத்திரத்தைக் கூராக்கிச் சித்திரவதனியின் உள்ளத்தில் ஏற்றிவிட்டு ஆறினர் கயிலைநாதர்.

" சரி தாத்தா. நீங்கள் சித்திரவதனியைக் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போங்கள். நான் இன்றிரவு அல்லது நாளைக் காலை கட்டாயம் அங்கு வருவேன் " என்று கூறி அவர்களை வழியனுப்பிவிட்டுக் கடையொன்றுள் புகுந்தான் பாலமுரளி.

மதன்மோகனைக் கண்டு விபரமெல்லாம் கூறி ஏற்பட்டிருக்கும் சிக்கல்களில் முடிச்சவிழ்க்கவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு.

நேரம் ஓடி மாலை நாலு முப்பது காட்டியது. கல்விக் கந்தோரின் வாசலருகே வந்துநின்றான் அவன். அலுவலகத்திலிருந்து பலர் வெளியேறும் காட்சி. மதன்மோகனின் நடையிலே துரிதம் காணப்பட்டது. தான் நிற்பதைக் காட்டிக்கொள்ள விரும்பாத பாலமுரளி, ஒளித்தொளித்துப் பின்தொடர்ந்தான் மதன்மோகனை. அவனது கண்களிலே படக்கூடாதென்ற முடிவு.

மதன்மோகனின் கார் அங்கிருந்து பறந்ததுதான் தாமதம் பாலமுரளியின் ராக்ஸியும் பின்தொடர்ந்தது. மதன்மோகனின் கார்போன திசையெல்லாம் பாலமுரளியின் ராக்ஸியும் செல்ல வேண்டியதாயிற்று. பலதூர ஓட்டம். ராக்ஸிக்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்திவிட்டுக் கயிலைநாதரின் வீட்டிற்குச் சென்றான் பாலமுரளி.

" தாத்தா, சித்திரவதனியை ஏமாற்றிய ஆசாமியின் வீட்டைக் கண்டுபிடித்துவிட்டேன். சித்திரவதனிக்கு மட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சில பெண்களுக்கு டிமிக்கி கொடுத்திருக்கிருன் என்ற உண்மையும் நாளைக்குத் தெரியவரும். அதுவரை கொஞ்சம் பொறுத்திருங்கள்" என்றெல்லாம் பாலமுரளி சொன்னதும் கயிலைநாதரின் கண்களில் நீர்மல்கிநின்றது.

"இளம் பெண்களைத் தன்னந்தனிமையில் போகவிடுவதனுல் ஏற்படும் விளைவைப் பார்தம்பி. சித்திரவதனியின் நிலை அதற்குச் சான்றல்லவா?" என்ருர் கயிலைநாதர்.

பாலமுரளி தலையசைத்தான். "சில பெற்ருேர் கொடுக்கும் சுதந்திரமே இளம்பெண்கள் சிலரை இந்த நிலைக்குக் கொண்டு செல்கிறது என்பதை மறுக்கமுடியுமா?" என்ற வார்த்தைகள் அவனது வாயிலிருந்தும் வெளிவந்தன.

நேரம் உறைந்துகொண்டிருந்தது. இரவுணவை முடித்துக் கொண்டு படுக்கைசென்ற பாலமுரளி அடுத்த நாள்க் காலை பத்து மணிபோல் மட்டக்குளியா சென்ருன்.

"குடிமதிப்பு எடுக்க வந்திருக்கிறேன். விபரங்களைத் தருவீர்களா?" என்று பாலமுரளி கேட்டபோது பதில் கொடுத்தாள் வாசநாயகி.

"எனது கணவன் செந்தில்க்குமரன், எனது பெயர் வாசநாயகி, என் தாயார் செண்பகம், எனது சிறிய தாய்மார் இருவர், கனகமணி, முத்தழகி. வீட்டு இலக்கம் இரண்டு, இடம், மணலாற்று வீதி."

"உங்கள் கணவர் வேலைசெய்வது?"

"பிரத்தியேக நிறுவனமொன்றில்".

"பெயர்?"

"செந்தில் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்"

"இடம்?"

"வத்தளை".

எல்லா விபரங்களையும் குறித்துக்கொண்டான் பாலமுரளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம், இன்றிரவு வந்தால் உங்கள் கணவரைக் காண முடியுமா?"

'சொல்லமுடியாது. சில இரவுகளில் வருவார். சில இரவுகளில் கடையிலே தங்கிவிடுவார்."

"அப்படியா?"

"ஆமாம்."

"உங்கள் கணவர் வந்தால், பாரதியின் கணவர் பாலமுரளி உங்களைக் காண்பதற்காகக் கண்டியிலிருந்து வந்து போகிருர் என்று சொல்வதோடு உங்களிடமிருந்து நான் எடுத்த விபரங்களையும் அவரிடம் சொல்லிவிடுங்கள் மறக்காமல். நான் போய் வருகிறேன்."

பாலமுரளியின் நடையில் விரைவு காணப்பட்டது. நேரமோடி மாலை நாலு முப்பதாகியதும் மறுபடியும் கல்விக் கந்தோர் வாசலருகே மதன்மோகனின் வரவுக்காகக் காத்திருந்தான் பாலமுரளி.

அலுவலத்தைவிட்டு வெளிவந்த மதன்மோகனைப் பின் தொடர்ந்த பாலமுரளியை மதன்மோகனுல் காணமுடியவில்லை.

மதன்மோகனின் கார் சென்ற திசையிலே பாலமுரளியின் ராக்ஸியும் பறந்தது. முதல்நாள் சொன்னதுபோலவே "அந்தக் காரின் பின்னுல்த்தான் போகவேண்டும். அதை முந்தக்கூடாது" என்று பாலமுரளி சொல்லிவைத்தான் ராக்ஸிச் சாரதியிடம். நூற்றைம்பது இருநூறு யார் இடைவெளியில் மதன்மோகனும் பாலமுரளியும். மதன்மோகன் இறங்கிய இடத்திலிருந்து பின்னுல் நூற்றைம்பது யார் தூரத்தில்த்தான் பாலமுரளி இறங்கினுன். ராக்ஸியை அனுப்பிவிட்டு மதன்மோகனைக் கவனிப்பதற்காக நடந்துகொண்டிருந்தான் மெதுவாக.

மதன்மோகன் என்ன செய்கிருன் என்பதை நல்ல முறையிலே கவனித்துவிட்டுப் புறப்பட்ட பாலமுரளி, கயிலைநாதரின் வீட்டிலே அன்றைய இரவைக் கழித்துவிட்டுக் கண்டிசென்ருன் மறுநாள்க் காலையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 29

" ராக்ஸியை அனுப்பிவிட்டு மெதுவாக நடந்தேன். ஒரே வயல்வெளி. அதிலேயொரு வீடு. அந்த வீட்டின் அருகில் வேறு வீடுகளே இல்லை. அங்கு கட்டப்பட்ட மற்றைய வீடுகள் அந்த வீட்டுக்குப் பலதூரத்தில்க் காணப்பட்டன.

மதன்மோகனும் இளம் பெண்ணொருத்தியும் காரைவிட்டிறங்கி வீட்டுக்குள் சென்றார்கள். அவர்கள் இறங்கிய இடத்திலிருந்து நூற்றைம்பது இருநூறு யார் தூர இடைவெளி விட்டுத்தான் என்னுடைய ராக்ஸியும் நின்றது. ராக்ஸியை அனுப்பிவிட்டு நடந்தேன். அப்போதுதான் வயல்வெளியும் சுமாரான வீடொன்றும் தெரியவந்தது. அந்த வீட்டுக்குமுன்னால்க் காணப்பட்டது மதன்மோகனின் கார். காருக்குள் இருந்த பெண்ணையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்துவிட்டான் மதன்மோகன். கதவு பூட்டிக்கிடந்தது. மெதுவாகச் சென்று கதவின் வெடிப்பூடாக என் கண்களை நோட்டமிட்டும் பயனில்லாதுபோயிற்று. எதையுமே என்னால்ப் பார்க்கமுடியவில்லை.

அந்த வீட்டிற்குச் சற்றுத் தொலைவில்க் காணப்பட்ட குடிசையொன்றுள் புகுந்தேன். " அதோ, அங்கு தென்படும் அந்த வீடு வாடகைக்குக் கொடுக்கப்படுமா ? " என்றேன். நான் சுட்டிக்காட்டியது மதன்மோகன் நுழைந்த வீட்டைத்தான்.

" அது விற்கப்பட்டுவிட்டது. வாங்கியிருப்பவர் தமிழ் ஆளொருவர். இடைக்கிடையே தனது மனைவியோடு வந்து இரவில்த் தங்குவார். விடியற்காலையில்ப் போய்விடுவார், " என்று சிங்களத்தில்ப் பதிலளித்தாள் அந்தக் குடிசையின் சொந்தக்காரி.

" யார் அவர், எப்படியான தோற்றம் " என்று கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பார்ப்பதற்கு முப்பத்தைந்து முப்பத்தாறு வயதுடையவர். சிவந்த மேனி. மாம்பழ நிறம். கட்டுமஸ்தான உடல். கம்பீர மான நடை. அலாதியான உடை," என்ருள்.

" ஆமாம். அவர் வேலை செய்யும் இடத்தைச் சொல்ல முடியுமா?" என்றேன்.

"கொழும்பு என்று கேள்வி. ஆனுல் குறிப்பிட்ட வேலைத் தலம் எது என்பது எமக்குத் தெரியாது." என்ற பதில் வந்ததும் நன்றியைத் தெரிவித்துவிட்டுத் திரும்பினேன். மதன்மோகனின் வீட்டுக்கு முன்னுலிருந்த மதவுக்கடியில்க் கொஞ்சநேரம் ஒளித் திருந்து பார்க்கலாமென்றது மனம். ஒளித்திருந்தேன்.

திடீரென ஒரு சத்தம். "ஐயோ, அம்மா... அம்...மா..." அவ்வளவுதான். மெதுவாகக் கதவண்டை போய்நின்றேன். சத்தம் நின்றுவிட்டது. கதவின் வெடிப்பூடாகப் பார்த்தேன். இருள் மண்டிக்கிடந்தது. செய்வதறியாது திகைத்துநின்ற நான், அந்த வீட்டின் பின்புறத்திலுள்ள சமையலறையில் மண்வெட்டும் ஓசைகேட்டுத் திடுக்கிட்டுச் சென்றேன் பின்பக்கம்.

மணித்தியாலங்கள் கழிந்தன. வெளிக்கதவு திறக்கப்படும் ஓசை என் காதுகளில். மெதுவாக நகர்ந்தேன். மின்வேகத்தில்ப் போய்க்கொண்டிருந்தது மதன்மோகனின் கார்.

" அவனேடு வந்த பெண் எங்கே?" என்ற கேள்வி என் மனதில். பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கத்தானேவேண்டும்? வீட்டுக்குமேல் ஏறிச் சமையலறைக் கூரையின் ஓடுகள் சில வற்றைப் பிரித்து உள்ளே குதித்தேன்.

சமையலறை நிலம் சீமேந்து பூசப்பட்டதல்ல. மண்ணிலம் என்பது தெரியவந்தது. அதிலே மண்ணெடுத்து மறுபடியும் அந்த இடத்தை நிறுவியிருக்கும் பான்மையைக் கண்டு ஆச்ச ரியப்பட்ட நான் அந்த இடத்தைக் கிளறியபோது வெளிப்பட்டது ஒரு பிணம்," என்று பாலமுரளி கதையை முடிக்குமுன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அத்...தான் " என்று அவலக் குரல்கொடுத்தாள் பாரதி. அவளது கண்களிலே துன்ப மோடிக்கொண்டிருந்தது கண்ணீர். கதையைத் தொடர்ந்தான் பாலமுரளி.

' அந்தப் பிணம்தான் காரில் வந்த இந்தப் பெண் " என்ற முடிவோடு மறுபடியும் மண்ணை மூடிவிட்டு வெளியேறினேன். தாத்தாவுக்கும் சித்திரவதனிக்கும் விஷயம் சொன்னபோது கொதித்தெழுந்தார் தாத்தா.

" அவனைப் பொலிஸில் பிடித்துக் கொடுத்தால்த்தான் நிம்மதி " என்றார்.

" பொறுங்கள். நானேக்கு நானே எல்லாம் செய்துவிடுகிறேன் " என்றேன்.

" தம்பி, சித்திரவதனியின் உயிரும் இப்படித்தானே வீணாகியிருக்கும், இவளுக்குப் பைத்தியம் ஏற்படாமலிருந்திருந்தால், " என்று சொல்லித் தாத்தா அழுதபோது, சித்திரவதனி முழித்தாள்.

" அவன் என்னை அந்த வீட்டுக்குக் கூட்டிப்போகவில்லைத் தாத்தா. இந்த வீட்டுக்குத்தான் வந்தான். " என் வீட்டில் தாத்தா மட்டுந்தானிருக்கிறார். அவருக்குத் தெரியாமலே எனது அறைக்குள் நுழைந்துவிடலாம். அதன்பின் என் அறையில் நீங்கள் ஒளித்திருக்கவேண்டியதுதான். நான் மட்டும் தாத்தாவிடம் போய் என் சிநேகிதி ஒருத்தியோடு அவளின் வீட்டிற்குப் போனேன். இப்போதுதான் வரக்கிடைத்தது என்று தாத்தாவிடம் பொய்யொன்றைச் சொல்லிவிட்டால் தாத்தா நம்பிவிடுவார். எல்லாமே சரியாய்ப்போய்விடும் " என்று அவனிடம் சொன்னபடியால்த்தான் என்னை வேறெங்கும் கூட்டிப்போகாமல் அவனே இங்கு வந்துபோனான் இரவு நேரங்களில். அன்றொருநாள் வரும்போது அவன் கொண்டுவந்த வாழைப்பழங்களில் இரண்டு எனக்கும் கிடைத்தது. அறையிலிருந்து சாப்பிட்டேன். ஏதோ ஒரு மயக்கமாயிருந்தது. அவ்வளவுதான் தெரியும். அதன்பின் காங்கேசன்துறையிலுள்ள மனநோய் வைத்தியர் கணேஷலிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் வைத்திய சாலையிலிருந்து புறப்படும்போதுதான் எல்லாமே புரிந்துவிட்டது" என்றெல்லாம் சித்திரவதனி எம்மிடம் நேரடியாகச் சொல்லமறுத்த உண்மைகளைக் குறுக்குக் கேள்விகள் மூலம் பெற்றுவிட்டோம் நாம். "பெரும்பெருங் குடும்பங்களில் அதாவது பணக்காரக் குடும்பங்களில் இளம்பெண்கள் கற்பழிக்கப்பட்டால், அது மறைக்கப்படுகிறது; காலவோட்டத்தில் தானாகவே மறைந்துவிடுகிறது. அதனால் அப்பெண்களை யாருக்காவது மணம் முடித்துக் கொடுத்துவிடுகிறார்கள் சுலபமாக. ஆனால் ஏழைக் குடிசையில் வாழும் பெண்ணொருத்தி கற்பழிக்கப்பட்டால், அந்தப் பெண், சமூகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுச் சமூக விரோதி என்ற பெயரோடு தள்ளிவைக்கப்படுகிறாள். அவமானம் தாங்கமுடியாமல் உயிரையும் மாய்த்துவிடுகிறாள்" என்ற உண்மையை நான் ஊகித்துக்கொண்டேன் பாரதி. தாத்தாவுக்கு அது புலப்பட்டதோ என்னவோ, ஆனால் ஆத்திரக் கண்களை மட்டும் இமைவெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்... "என்ன தாத்தா சிந்திக்கிறீர்கள்?" என்றேன். "அந்தத் துரோகியைப் பற்றித்தான்," என்றார். "சித்திரவதனியும் குற்றத்திற்கு உடந்தையாயிருக்கும்போது மதன்மோகனை மட்டும் எதற்காகத் துரோகி என்று சொல்லவேண்டும்" என்றது எனது மனச்சாட்சி. இருந்தாலும் அவன் இழைத்திருக்கும் பல துரோகங்கள் மனித அறிவுக்கு என்றுமே ஏற்காதவை என்பது தெரியாதா எனக்கு? ஆகவே அவனைத் துரோகி என்றல்ல; அதைவிடக் கொடிய வார்த்தைகளால் அழைக்கவேண்டும் தாத்தா" என்றேன். தலையசைத்தார் தாத்தா. "வாழைப்பழத்தில் மருந்து சேர்த்துத்தான் சித்திரவதனிக்கும் கொடுத்திருக்கிறான் சண்டாளன். தனது லீலைகள் தெரிந்துவிடக் கூடாதென்பதற்காகவே தனது காமவெறிக்குப் பலியாகிய இளம்பெண்களுக்கு மருந்து கொடுத்து அவர்களைப் பைத்தியங்களாகவும் மாற்றிவிடுகிறான். பைத்தியத்துக்கு மருந்து கொடுத்த இடத்தில்த்தான் அந்தப் பெண்ணும் இறந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன் தாத்தா" என்றேன் மறுபடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி, கண்டிப்பாக அவனைத் தூக்குக்கயிற்றிலே தொங்க வைக்கவேண்டும் என்பதுதான் எனது பெரும் ஆசை" என்றார் தாத்தா. "கவலைப்படாதீர்கள். நாளை அடுத்த நாளைக்கு மதன்மோகனின் கொடுமைகளை அம்பலப்படுத்தப் போகிறேன்" என்றேன்.

"கட்டாயம் செய் தம்பி. இல்லையென்றால் நிம்மதியாக என்னால் இறக்கவே முடியாது" என்றார் தாத்தா.

பயப்படவேண்டாம் தாத்தா. எல்லாமே செய்து முடிப்பேன் கட்டாயம்," என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன் பாரதி," என்று பாலமுரளி நடந்ததெல்லாம் விளக்கியபோது பாரதியின் கண்ணீர்த்துளிகள் வெடித்து வெடித்துச் சிதறின. அதைக் கண்ணுற்றான் பாலமுரளி. "பார்த்தாயா பாரதி உன் மாமாவின் லீலைகளை? இன்னும் எத்தனை பெண்கள் இப்படிக் கொல்லப் பட்டிருப்பார்கள். எத்தனைபேர் பைத்தியங்களாய் அலைந்திருப் பார்கள் என்று எண்ணிப்பார். இப்படிப் பட்டவர்கள் இருப்பதை விட இறப்பது மேலல்லவா" என்றான் ஆத்திரத்தோடு.

"அவனை என் மாமன் என்றல்ல; காமவெறியன் என்றே அழைக்கவேண்டும்" என்றது பாரதியின் குரல்.

இருவரும் சிறிது நேரம்வரை சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர். பாலமுரளியின் ஆத்திரம் ஆறியதாயில்லை. "பாரதி! இளம் பெண்கள் சிலரைக் காணவில்லை என்று செய்தித்தாள்களில் அடிக்கடி வந்தவையும் வருபவையும் உண்மைச் செய்திகள் என்று நம்புவதற்கு உன் மாமா போன்றவர்கள்தானே ஆதாரம்," என்றான்.

"உண்மை அத்தான்."

"ஆமாம் உன் மாமனுருக்குப் பணம் ஏது இத்தகைய வீடொன்றும் கார் ஒன்றும் வாங்குவதற்கு, என்பதுதான் எனக்குப் புரியவில்லை."

"மாமியை அவர் கலியாணம் செய்ததால், ஸ்ரீதனமாக ரொக்கப்பணம் இருபத்தையாயிரம் ரூபா கொடுத்தார்கள் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில். அதில்த்தான் வாங்கியிருப்பார்." "ஆமாம். எவ்வளவு பெறும் அத்தான் அவரது வீடு?"

"சுமார் பத்தாயிரம். கொழும்பிலென்ருல் நிச்சயமாகப் பதினையாயிரம் பெறும். அதற்கு மேலல்லாமல் குறையாது. ஆனல் இது வத்தளைதானே. தனது லீலைகளுக்குச் சிறந்த இடம் வத்தளை; கிராமப்புறமாகையால் எதையும் எப்படியும் செய்யலாம் யாரும் கேட்கமாட்டார்கள் என்ற நினைப்பினுல்த்தானே கொழும் பில் வாங்காமல், போயும் போயும் வத்தளையில் வீடு வாங்கியிருக் கிருர் உன் மாமா."

"அத்தான், நீங்கள் எப்படியாவது நாளைக்குக் கொழும்பு செல்லவேண்டும். போய் அவனுடைய கொடுமைகளைப் போலி ஸிடம் அம்பலப்படுத்துவதோடு அவனைத் தூக்குக் கயிற்றிலும் மாட்டவேண்டுமென்றே அவதிப்படுகிறேன் அத்தான்."

"பாரதி, அவனைத் தூக்குக் கயிற்றில் நிறுத்த என்னல் முடியாது என்பதற்காகவா இத்தனை இரகசியங்களையும் போலிஸா ரிடம் வெளியிடாமல் வந்தேன்? அவளை நம்பிக் கலியாணம் செய்துகொண்ட ஏழைப்பெண் வாசநாயகியும், ஆறு குழந்தைக ளோடு கண்ணீர் வடித்துக் காலம் கடத்தும் உன் மாமி வளர் மதியும் அவலநிலையில் இருக்கக்கூடாதே என்பதற்காகத்தான் இதுவரை எந்த உண்மையையும் போலிஸாரிடம் தெரிவிக்காமல் வந்திருக்கிறேன். புரிகிறதா பாரதி?"

"இருந்தாலும் இவனல் இன்னும் ஏமாற்றப்படவிருக்கும் பல பெண்களைப்பற்றியும் சிந்திக்கத்தானே வேண்டும்" நினைத்துப் பாருங்கள் அத்தான்?

"உண்மைதான். இனிமேல் உன்னல் இப்படியாக எது வுமே நடைபெறக்கூடாது என்று கடிதம் எழுதி அனுப்பிவிட்டுத் தான் வந்திருக்கிறேன்."

"ஆமாம், எழுதின கையோடு மாமிக்கும் ஒன்றெழுதி யிருக்கலாமே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எழுதிவிட்டேன் பாரதி. ஆனல் இந்த உண்மைகளையல்ல. இதை அறிந்தால் உன் மாமி ஒருவேளை தற்கொலை செய்தாலும் செய்துகொள்ளலாமல்லவா ?"

" உண்மை அத்தான்."

" அதற்காகவே, வாருங்கள் வீட்டுக்கு என்று எழுதியிருக்கிறேன். இந்தக் கிழமை முடிவதற்குள் உன் மாமி இங்கு வந்தாலும் வரலாம். வந்ததும் விபரம் சொல்லலாம். சரி தானே பாரதி ?"

" சரிதான் அத்தான் "

" அத்தோடு வாசநாயகிக்கும் கடிதம் எழுதிவிட்டேன்."

" நீங்கள் கெட்டிக்காரர்தான் அத்தான்."

" கெட்டிக்காரன் என்ற படியினுல்த்தானே உனது மாமனுரின் திருவிளையாடல்களுக்கு முற்றுப்புள்ளி போட்டிருக்கிறேன். இன்றைக்கு என்னுடைய கடிதம் கிடைத்திருக்கும். அல்லது கட்டாயம் நாளைக்குக் கிடைக்கும்... படித்துப் பார்க்கட்டும் பாதகன் " என்று சொல்லிவிட்டுத் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த பாலமுரளி அன்றைய இரவு மதன்மோகனைப் பற்றி எண்ணிக்கொண்டே துயின்ருன்.

## அத்தியாயம் 30

இரண்டு இரவுகளைக் கொழும்பில்க் கழித்துவிட்டு மூன்ரும் நாள் இரவு கண்டிதிரும்பிய பாலமுரளி எழுதிய கடிதம் மதன் மோகனின் கையில் கிட்டியது. வாசித்தான் மதன்மோகன்.

" வளர்மதி, வாசநாயகி, சித்திரவதனி இவர்களையெல்லாம் ஏமாற்றிய குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறீர்கள். அதைவிட மேலாக நீங்கள் செய்த மாபெருங் குற்றமொன்று, வத்தளையி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள உங்களது வீட்டின் சமையலறையிலே இளம் பெண்ணொருத்தியை மண்தோண்டிப் புதைத்ததுதான். வெகுவிரைவில் இவையெல்லாம் பொலிஸில் வெளிவரும்," என்று பாலமுரளி எழுதியிருந்த வரிகள் மதன்மோகனின் மனதிலே அடிக்கடி எழுந்து, அவனைச் சின்னுபின்னப்படுத்தின.

நிம்மதியற்றுக் காணப்பட்ட அவனது சிந்தனையிலே பெரியதொரு கறை படிந்திருந்தது. அதைக் கழுவியெடுத்து உள்ளத்தைத் தூய்மையாக்க அவனுல் முடியவில்லை. பாலமுரளியின் கடிதத்திலிருந்த வார்த்தைகள், அத்துமீறி அவனது மனதில் ஒவ்வொரு விளுடியும் புகுந்து வேதனைப்படுத்திக் கொண்டிருந்தன.

" எப்படியோ என்னைப் புரிந்துவிட்ட பாலமுரளியின் போக்குக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்; இல்லையென்ருல் எனது காரியங்கள் அத்தனையும் கெட்டுவிடும் " என்றது அவனது மனம்.

போராடிய மனதில்ப் புகைந்துகொண்டிருந்த சஞ்சலத்தை ஒருவகையாய் அணைத்துவிட்டு எழுதத் தொடங்கினுன் கடிதங்களை. அவனது மனதிலே ஏராளம் எண்ணங்கள். "இனிமேலாவது பாலமுரளி எனது விருப்பங்களில்த் தலையிடாமலிருக்கட்டும். எனது அந்தரங்கங்களை அறிந்த பாலமுரளிக்கும் எனக்குமிருந்த தொடர்பு இன்ருேடு அறுந்துபோகட்டும். அத்தோடு எனது கந்தோர் விலாசமும் வாசநாயகியின் வீட்டு விலாசமும் தெரிந்தபடியால்த் தானே இத்தனை சிக்கல்கள். எனவே வேலையை ராஜினுமாச் செய்து விட்டால்... ? ஆம். வேலையை ராஜினுமாச் செய்வதோடு வாசநாயகியின் இருப்பிடத்தையும் மாற்றிவிடுகிறேன் சொற்ப நாட்களுள். அதன்பின்பாவது எம்மைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கட்டும். எனக்கும் என் மனைவிக்குமிருக்கும் பிணக்குகளை அறிவதற்கு இவன் யார்? " என்ற எண்ணங்களெல்லாம் வேர்விட்டுக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமோடிக் கழிந்தபோது கடிதங்களை எழுதிக் கட்டிலே சேர்த்துவிட்டுக் கந்தோரைவிட்டு வெளியேறினன் மெதுவாக. முன்பிருந்த கம்பீரமும் அலாதியும் அவனது நடையைவிட்டு அகன்றன என்றே சொல்லவேண்டும். கொடுமையான வெய்யிலிலே வாடி வடிவிழந்த இலைகள்போல்க் காட்சியளித்தான் மதன் மோகன். மழையிலே நனைந்து ஒதுக்குப்புறம் நாடும் சேவலின் நிலை.

சோர்ந்த மனதோடு வாசநாயகியிடம் சென்றால் அவள் தன்னைக் கண்டுவிடுவாள், உண்மையை ஊகித்துவிடுவாள் என்ற பயம் அவனது மனதிலே. ஆகவேதான் வத்தளை நாடவேண்டி நேர்ந்தது. அவனது கார் அவனை வத்தளை சேர்க்கும்போது இரவு எட்டு. அவனது வீட்டுக்குள் காலடி வைக்கும்போது ஒருவித பயம் அவனை ஆட்டிப்படைத்தது.

கயிற்றினல் யாரோ தன்னைக் கட்டி, ஒரு கம்பத்தோடு மோதி அடிப்பதுபோன்ற நினைவு. மனதை ஒரு வகையாகத் தைரியப் படுத்திக்கொண்டு சமையலறைப் பக்கஞ் சென்று திரும்பினன் மெதுவாக.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. மதன்மோகனின் மனதிலே நிம்மதியில்லை. எதையோ இழந்துவிட்டதொரு வெறுப்பு. அதனுல்தான் தூக்கங்கூட அவனை வெறுத்துவிட்டது. ஏதோ ஒரு ஒலி காதில் விழுவதுபோன்ற பீதி. யாரோ கதவைத் தட்டுவது போன்ற சத்தம். நடுக்கமும் பயமும் அவனை வாட்டிக்கொண்டிருந்தன. கட்டிலைவிட்டெழும்பி ஓசைவந்த பக்கம் போவதற்குக் கூட அவனல் முடியவில்லை. அத்தனை பயம். கண்களை இறுக மூடிக்கொண்டு நித்திரைபோலக் கிடந்தான். வேகமாக அடித்துக் கொண்டிருந்தது நாடி.

திடீரென யாரோ தனது அறைக்குள் நடப்பதுபோன்ற ஒரு வகை உணர்வு அவனது அங்கங்களிலே. நடுக்கத்தோடு போர்வையை நகர்த்திப் பயத்தோடு விழிகளைத் திறந்து உற்றுப் பார்த்த அவனல் எதையுமே காணமுடியாது போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையில் கேட்ட சத்தம் சிறிதுநேரத்தால் நின்றுவிட்டது என்பதை உணர்ந்தபோது மெதுவாக எழுந்து அங்குமிங்கும் பார்ப்பான். ஒன்றுமே தென்படாது. எங்கும் அமைதி நிலவிக் கொண்டிருக்கும். நிசப்தத்தின் குடியிருப்பிலே சிறிதளவு சாந்தி கிடைத்தாலும், அவனது குற்றமுள்ள மனச்சாட்சி மட்டும் அவனோடு பேசிக்கொண்டிருந்தது.

"சேச்சே என்ன தவறு செய்துவிட்டாய். உன் வாழ்க்கையில் நீ விட்ட முதல்த்தவறு எத்தனையோ தவறுகளுக்கு வேராக அமைந்துவிட்டதே உன் மனைவி வளர்மதியையும் குழந்தைகளையும் வெறுத்தாய் நீ முன்னம் திருமணம் செய்ததைச் சொல்லாமல் வாசநாயகியையும் மணந்தாய். சித்திரவதனியை ஏமாற்றிவிட்டாய். அவளது தாத்தாவுக்கும் தெரியாமல் அவளது வீட்டுக்கு இரவிரவாய்ப் போய் அவளோடு உறவாடி ஏமாற்றியதோடு அவளைப் பைத்தியக்காரியாகவும் மாற்றிவிட்டாய். காரணம்? உன்னை மற்றவர்கள் அறியாமல் இருக்கவேண்டும். உன் இச்சைகளை இப்படியே பல பெண்களோடு பூர்த்தியாக்க வேண்டும் என்பதற்காகத்தானே? அதனுல்த்தானே கமலாவைக் கூடக் கொன்று சமையலறைக்குள்ப் புதைத்தாய்" என்று குத்திக் காட்டியது மனச்சாட்சி. அதை மறுத்தான் மதன்மோகன்.

"இல்லை... வேண்டுமென்ரு கமலாவை நான் கொன்றேன்? இல்லவே இல்லை," என்ருன் மெதுவாக. ஆனுலும் மனச்சாட்சி அவனை விடுவதாயில்லை.

'கமலாவையும் பைத்தியக்காரியாக்கிவிட்டால் உன்னைக் காட்டிக்கொடுக்கமுடியாது என்பதனுல்த்தானே மருந்துகொடுத்தாய், பாலில் கலந்து. ஆனுல் நடந்தது என்ன? பைத்தியத்திற்கென்று கொடுத்த அதே மருந்துதானே அவளைக் கொன்றது. ஆகவே கமலாவைக் கொன்றது நீதான். ஐயோ, உயிரொன்றைக் கொன்றுவிட்டாயே. என்ன பரிகாரம் தேடப்போகிருய் இந்தப் பாவத்திற்கு?" என்று மறுபடியும் குற்றப் பத்திரிகை தீட்டிய மனச்சாட்சியை நிறுத்திவைக்க மதன்மோகனுல் முடியவில்லை. தன்னை உணர்ந்தான் அந்த நேரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிஞ்சு உள்ளத்தோடு சின்னப்பிள்ளையாய் இருந்திருந்தால், இத்துணை வேதனையிருந்திராதே இன்று. வளர்ந்த வேகத்திலே பொறுக்கியெடுத்து எமது உள்ளத்தோடு ஒட்டிக்கொண்ட குணங்கள்தானே எம்மை இந்த நிலைக்கு ஆளாக்கிவிடுகின்றன. ஐயோ, என் உள்ளத்திலே இந்தக் காமக் குணங்களை எதற்காக வளர்த்தேன்? பிற பெண்களைத் தீண்டிக் கெடுக்கும் உணர்ச்சிகளை வளர்த்த காலத்தில் ஏழை மக்களுக்கு உதவிசெய்யும் நல்ல பண்புகளை வளர்த்திருந்தாலாவது எத்தனை ஏழைகளுக்கு உதவியிருக்கலாம். வழுக்கி விழுந்த எத்தனை உயிர்களைத் தூக்கி உயர்த்தியிருக்கலாம்; எத்தனை நன்மைகளைப் பெற்றுக் கொடுத்து எத்தனை நல்ல பெயர் வாங்கியிருக்கலாம் நாட்டில்? ஆனல் அப்படிச் செய்தேனு? அதற்குப்பதிலாக எத்தனையோ தீய உணர்ச்சிகளை வளர்த்தேன். பல பெண்களின் உணர்ச்சிகளைத் தூண்டினேன். சிற்றின்பத்தை நிலையென்றேன். நிலைத்ததா? ஐந்து பத்து நிமிட இன்பத்திற்காக அலைந்த எனக்குக் கிடைத்த பரிசு? இத்தனை பயமும் நடுக்கமும் அமைதியின்மையுந்தானே? அதுமாத்திரமா? யார் யாருக்குத் தெரியக்கூடாதென்று நினைத்தேனே, அவர்களுக்கெல்லாம் தெரிந்துவிட்டதே" என்று தனக்குள்ளாக நினைத்து ஒருவாறு சமாளித்துவிட்டு நித்திரையாகிவிட்டான்.

அரைகுறை நித்திரை அவனை அடிக்கடி விழிக்கச்செய்தது. காலை மணி ஆறு. கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு கந்தோருக்குப் புறப்பட்ட அவனது உள்ளத்தில், பாலமுரளியின் நினைவும் வாசநாயகியின் நினைவும் வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

"இன்று மாலை வேலை முடித்துக்கொண்டு வாசநாயகியைப் போய்ப் பார்க்கவேண்டும். போனதும் போகாததுமாகப் பாலமுரளி என்பெருருவன் இங்கு வந்தானு என்று கேட்டால், எல்லாமே தெரிந்துவிடும். என்னையும் வாசநாயகியையும் இவன் எப்படி அறிந்தானே ஒருவேளை அன்று நான் தங்கியிருந்த விடுதிக்குப் போய் அமரசிங்காவிடமும் குணசேகராவிடமும் கேட்டு விஷயத்தைத் தெரிந்துகொண்டானே? சரி சரி இனிமேல் எனது விஷ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தில் பாலமுரளியும் பாரதியும் தலையிடாமலிருப்பார்கள், அப்படித்தான் இருக்கவும் வேண்டும்" என்ற நோக்கத்தோடு தானே கடிதங்கள் எழுதியிருக்கிறேன்.

இன்று காலை ஒன்பது பத்து மணிக்குப் பாலமுரளிக்கு எழுதிய கடிதம் அவனது சுந்தோருக்கும் வாசநாயகிக்கு எழுதிய கடிதம் அவளது வீட்டுக்கும் போகும். போனதும் கடிதங்களை வாசிப்பார்கள்தானே இருவரும் வாசிக்கட்டும்" என்று சொல்லிக்கொண்டே சென்றான் மதன்மோகன்.

## அத்தியாயம் 31

**கா**லை மணி எட்டாகியும் பாலமுரளி துயில் எழும்பவில்லை. கடந்த இரவு ஒரு மணி இரண்டு மணிவரை வெண்ணிலாவோடு குதித்து விளையாடிய அவனுக்கு நித்திரைவெறி அவ்வளவு சீக்கிரத்தில் முறிந்துவிடுமா ?

வெண்ணிலாவின் அழுகையிலும், சிரிப்பிலும், துடிப்பிலும், மழலையிலும் பங்குகொண்டு அவளைத் தூக்கித் தோளோடும் மார்போடும் மடியோடும் வைத்து இறுகத்தழுவி இன்பங்கண்ட பாலமுரளி கடந்த இரவு இரண்டு மணிவரை தூக்கங்கொள்ளவேயில்லை. வெண்ணிலா அழுதாள் ; பாலமுரளி அவளைத் தூக்கி அசைத்து அழுகையை நிறுத்த முயன்றான். அந்த அசைப்பு, வெண்ணிலாவை மேலும் மேலும் அழவைக்கும் என்பது அவனுக்குத் தெரியவில்லைப்போலும். குழந்தையோடு பழகும் முதல் அனுபவமல்லவா ?

ஏதோ ஒரு வகையாய்த் தேற்றப்பட்ட வெண்ணிலா சிரித்தாள் ; பாலமுரளியோ "சின்னவளே, சிந்தையில் நிறைந்தவளே" என்று பாட்டிசைத்தான் மெதுவாக. அதைக் கண்டு துடித்தாள் வெண்ணிலா ; அந்தத் துடிப்பிலே இன்பம் தோய்த்துச் சிரித்தான் பாலமுரளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் ஓடியபோது மழலைபேசிய வெண்ணிலா "அம்..." என்றும் "அப்..." என்றும் சொல்லியபோது அம்மாவின் இறுதியும் அப்பாவின் வாலும் அறுந்துவிட்டது. சோற்றைச் "சோ..." என்றும் றேடியோவைச் "சேடியோ" என்றும் அடிப்பான் என்பதை "அய்ப்பா" என்றும் பேசிய மழலையின் நிறைவிலே இன்பங் கண்டுகொண்டிருந்த பாலமுரளிக்குக் கடந்த இரவு ஓரிரு மணிவரை தூக்கமே பிடிக்கவில்லை. முதல் நாள் பகலெல்லாம் நன்றாக நித்திரை கொண்டபடியினுல் இரவிரவாக விழித்துக்கொண்டிருந்த வெண்ணிலாவோடு தானும் சிரித்திருந் தான் அவன்.

அன்றொரு காலம் தான் பேசிய அதே மழலைமொழியை இன்று தனது மகள் பேசுகிறுள் என்றுல் அவளைத் தூக்கி வைத்து இன்பம் சேர்க்காமல் இருக்க முடியுமா அவனுல்?

அன்றிரவு அதாவது கடந்த இரவு வெண்ணிலா நித்திரை செய்யும்போது, நடுநிசி ஒன்று ஒன்றரை இருக்கும் பாலமுரளி மெதுவாகப் பாடிய நீலாம்புரித் தாலாட்டில் தூங்கிவிட்டது குழந்தை.

குழந்தை தூங்கியதன்பின் கண்ணுறங்கிக் கொண்டிருந்த பாரதியைத் தட்டியெழுப்பினுன் பாலமுரளி. திடுக்கிட்டெழுந் தாள் பாரதி.

"குழந்தை உறங்கிவிட்டதா அத்தான்"

பாரதியின் கேள்விக்குப் பாலமுரளியின் கண்களிலிருந்து பதில் கிடைத்தது. அதை அறியாதவளா பாரதி?

"அத்தான், எத்தனை மாதங்களுக்கு இப்படி நான் வாழ வேண்டும்? பரிசவாதக்காரியைத்தானே போயும் போயும் பால முரளி மணம் முடித்தான் என்றுமட்டுமல்ல; பாரதி தன் கணவனை ஏமாற்றியும் விட்டாள், என்றெல்லாம் சொல்லி என்னைப் பழிக்கப் போகிறதத்தான் உலகம்," என்று பாரதி கூறியபோது அவளின் கண்ணீரைத் துடைத்தெறிந்தான் பாலமுரளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அழாதே பாரதி. கொஞ்சத் தூரமாவது எழும்பி நடக்கும் சக்தியைப் பெற்றுவிட்டாய். இன்னும் இரண்டு மாத காலங்கள். அதன்பின் நன்ருக நடக்கப் போகிருள் பாரதி என்று கூறி விட்டார் டொக்டர். உனக்கு ஏற்பட்ட பாரிசவாதம் என்னைக் கலியாணம் செய்து வெண்ணிலாவைப் பெற்றெடுத்த பின்பு தானே வந்தது. அதுவும் பெருங்குளவிகள் சில உன்னைக் கொத்தியபின்தானே? குளவி கொட்டிய விஷத்தால் உடம்பில் விஷநீர் விழுந்து வாதம் ஏற்பட்டுவிட்டது என்றுதானே டொக்டரும் சொல்லிவிட்டார். எனவே உலகம் எதைச் சொன்னுலும் நமக்கென்ன கவலை? கவலைப்படாதே பாரதி.

நீ எப்படியிருந்தாலும் என் காதலுணர்ச்சி உனக்கு மட்டும் தான். என் அன்பு முழுவதும் என் உயிரில் பாதியாயிருக்கும் உனக்கும் என் வெண்ணிலாவுக்குந்தான். புரிகிறதா பாரதி," என்று தேற்றுதல் வார்த்தைகளைக் கூறிப் பாரதியை முத்தமிட்ட பாலமுரளியைத் தூக்கம் தனது பிடிக்குள் இறுக அணைத்துக் கொண்டபடியினுல்த்தான் காலை மணி எட்டாகியும் அவனுல் எழும்பமுடியாது போயிற்று

ஒருவிதமாக அவனைத் துயில் எழுப்பினுள் பாரதி. நேரம் எட்டரை... கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு கொழும்பு புறப்பட்டான் பாலமுரளி.

" பாரதி, நான் போய்வருகிறேன். இன்றிரவு அல்லது நாளைப்பகல் வந்துவிடுவேன். முதலில் வாசநாயகியைக் கண்டு எல்லா உண்மையையும் வெளிப்படுத்தியபின், உன் மாமாவிடம் போவேன். போவதுமட்டுமல்ல, உன் மாமி நேற்றெழுதியிருந்த துன்பக் கடிதத்தையும் காட்டி அவருக்குப் புணர்வாழ்வு கொடுக் கும்படி வேண்டுகிறேன். முடியாதென்று அவர் மறுத்தால், அவ ரைப் போலிஸாரிடம் ஒப்படைக்கவேண்டியதுதான் பாக்கி. முடிவு உன் மாமாவுக்குப் பாதகமாயிருந்தால், உன் மாமிக்குப் புனர் வாழ்வு கிட்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னத்தான் சொல்லுகிறீர்கள்?" "கொலைக்குற்றத்திற்த ஆளாகி உன் மாமா உயிர் இழக்க நேர்ந்தால், உன் மாமிக்குப் 'பென்ஷன்' கிடைக்கும் நிச்சயம். வாசநாயகியை உன் மாமா மறுமணம் செய்துகொண்டது செந்தில்க்குமரன் என்ற பெயரில் என்று சொன்னேனே. ஆகவே வளர்மதிக்குத்தான் மதன் மோகனின் பென்ஷன் கிடைக்கும் என்பதே உண்மை. மாதா மாதம் வரும் அந்தப் பணந்தான் உன் மாமிக்குப் புதுவாழ்வு கொடுக்கும், பாரதி."

"அப்படித்தான் நடக்கவேண்டும் அத்தான். ஏனென்ருல் மாமியைப் பொறுத்தவரை மாமா இருந்தும் இறந்தவர்தான்."

"இனி இறைவன் சித்தம் பாரதி. நான் போய்வருகிறேன்."

தாயிடமும் தனது மகளிடமும் விடைபெற்றுக் கொழும்பு சென்ற பாலமுரளியை வரவேற்ற கயிலைநாதரும் சித்திரவதனியும் பாரதி, தங்கவடிவு வெண்ணிலா ஆகியோரின் நலம் விசாரித் தார்கள்.

பதில் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான் பாலமுரளி. நேரம் நாலு. "பயப்படாதீர்கள் தாத்தா. இந்த முறை மதன்மோகன் தப்பவே முடியாது. தனது பிழையை ஒத்துக்கொண்டு கம்பி யெண்ணவேண்டியதுதான். இல்லையென்ருல் கழுத்திலே சுருக் குப் போடவேண்டியதுதான் பாக்கி," என்று சொல்லிக்கொண்டு வாசநாயகியின் இருப்பிடம் சென்ருன் உடனடியாக.

## அத்தியாயம் 32

"புரிகிறது உங்கள் அட்டூழியம். சித்திரவதனியை ஏமாற்றி அவளைப் பைத்தியக்காரியாக்கினீர்கள். அபலைப் பெண் ணொருத்தியைக் கற்பழித்துக் கொன்று வத்தளையில் இருக்கும் உங்களது வீட்டில், இல்லை, வத்தளையில் வீடொன்று வாடகைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமர்த்தி மெடிக்கல் ஸ்ரோர்ஸ் வைத்து நடத்துகிறேன் என்று முழுப் பொய்யொன்றைச் சொன்னீர்களே எனக்கு. அந்த வீட்டிலுள்ள சமையலறையில் புதைத்தீர்கள். ஆறு குழந்தைகளுக்குத் தந்தையான உங்களது சொந்த மனைவி வளர்மதியை உதாசீனம் செய்ததையும் எனக்குச் சொல்லாமலே என்னை மறுமணம் செய்தீர்கள், அதுவும் பொய்ப் பெயரில். இப்போதுதான் புரிகிறது மதன்மோகனின் வெளிப்போர்வை" என்று சுட்டிக்காட்டிய வாசநாயகியின் குரலிலே ஆத்திரம் தொனித்துக் கொண்டிருந்தது. அந்த ஆத்திரத்தைக் கொஞ்சமும் சட்டைசெய்யவில்லை மதன் மோகன்.

"உன்னை ஏமாற்றியது உண்மைதான். ஆனுல், அப்படி நான் ஏமாற்றியது மிகமிகப் பொருத்தம் என்றுதான் சொல்லப் போகிறேன். ஏன் தெரியுமா? உன் அம்மா இருக்கிருளே செண்பகம், அவள்தான் நான் கெடுவதற்குக் காரணமாயிருந்தவள்," என்று நாக்குத் தெறிக்கப் பேசிக்கொண்டிருந்தான் மதன்மோகன்.

"வேலையை ராஜிஞமாச் செய்துவிட்டேன். இனி வரமாட்டேன். யாராவது என்னைக் காணவந்தால் அல்லது எனது முகவரியைக் கேட்டால், தெரியாது என்று மட்டும் சொல்லிவிடுங்கள்," என்று தனது கந்தோர் நண்பர்கள் பலருக்கும் சொல்லிவிட்டு மாலை நாலு மணிபோல் வாசநாயகியிடம் வந்த மதன்மோகனிடம், பாலமுரளியின் கடிதமூலம் தான் அறிந்துகொண்ட உண்மைகளை அம்பலப்படுத்திக் கொண்டிருந்தாள் வாசநாயகி. அதை அடுத்துத்தான் மதன்மோகனுக்கும் வாசநாயகிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. வாசநாயகியின் கோபம் கோபுரமேறிக் கொண்டிருந்தது.

"நீங்கள் கெடுவதற்கு என் அம்மாவா காரணம்?" என்ருள் வாசநாயகி ஆத்திரத்தோடு.

"ஆம். அன்ஞெரு காலம் நான் இருபத்துமூன்று வயதுக் காளையாக இருந்தபோது, ஏறக்குறைய இருபத்துமூன்று ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு முன், உனக்குப் பன்னிரண்டு வயது. உன் தாய் செண்பகம் அப்போது முப்பத்தேழு வயதுத் தெரிவை என்றுதான் சொல்லவேண்டும். வெடிப்புற்ற சுவருக்குள்ளே குடியிருக்கும் எறும்புக் கூட்டம்போல் உன் தாயின் காமத்திலே குடியிருந்தவர்களுள் நானும் ஒருத்தன் என்பதை நினைவுபடுத்தாமலிருக்க முடியாது இனியும். பல வாலிபர்களைத் தனது மயக்கு வலையிலே நன்றாக வீழ்த்திப் பணம் பறித்தபோது நானும் அதில் வீழ்ந்திருந்தேன்.

குப்பனித்தெருவிலே வாடகைக்கு வீடமர்த்தித் தாசிகள் பலரை வைத்துக் காசுழைத்த உன் தாய் செண்பகத்தால் நான் காசிழந்தேன். காமத்தின் பித்தனுனேன். என் காமவெறிக்கு வேரமைத்தவள் உன் தாய். என் உணர்ச்சிகளுக்கு மெருகூட்டி வைத்தவள் உன் தாய். அந்த வெறிதானே, பல பெண்கள் இன்று என்னுல்க் கற்பழிக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தது என்பதை மறுக்கமுடியுமா உன்னுல்? பெண்ணெருத்தி ஆண்மகனெருவனின் இச்சைக்கோ வெறியுணர்ச்சிக்கோ உடன்படாமலிருந்தால், உலகத்தில் எந்த ஆண்மகனும் கெடமுடியாது. கெடவும் மாட்டார்கள் என்பதை உன்னுடைய மனதிலே நிறுத்திக்கொள்." கனல் எரியும் கண்களை விழித்து விழித்துப் பேசினுன் மதன்மோகன்.

"தனது கணவனை இழந்துவிட்ட படியினுல்த்தான் வேறு வழியில்லாமல் இந்தத் தொழிலில் இறங்க முனைந்தாள் என் தாய். அது தவறு என்று உங்களுக்குப் பட்டிருந்தால், உங்களுக்கு நன்ருகத் தெரிந்த ஒருவருக்கு என் தாயாரை மறுமணம் செய்து கொடுத்திருக்கலாம். இரக்க சிந்தை உடையவராய் இருந்திருந்தால், பல புத்திமதிகளைக்கூறி, எங்காவது ஓரிடத்தில்ச் சிறியதொரு வேலைக்கமர்த்தியிருக்கலாமே என் தாயாரை. அதைச் செய்யாமல், என் தாயின் எண்ணத்திற்கு நீங்களும் உடன்பட்டு உங்கள் வெறியுணர்ச்சி இறங்கியபின்புதான், இந்தத் தத்துவங்கள் பிறந்ததோ?" ஆத்திரத்தோடு பேசி மதன்மோகனுக்குச் சாட்டை கொடுத்தாள் வாசநாயகி. ஆனுல் அவளின் பதில்கேட்டு மேலும் மேலும் ஆத்திரமடைந்தான் மதன்மோகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மனிதன் பிழைவிடும்போதுதான் தத்துவங்கள் பிறக்கின் றன," என்றான் பதிலாக. அந்தப்பதில் பிடிக்கவில்லை வாச நாயகிக்கு... மேலும் சிலவார்த்தைகளால் வைதுவிட்டாள் மதன் மோகனை. மதன்மோகன் இப்போது சினத்தின் உச்சியிலே இனி யும் பொறுப்பதற்கில்லை என்றது அவனின் மனம்...

" போதுமடி போதும் நீ ஒரு தாசியின் மகள் என்பதோடு நீ மட்டும் எப்படிக் கண்ணகியாய் வாழ்ந்திருப்பாய், பத்தினியாய் இருந்திருப்பாய் என்றும் ஞாபகப்படுத்துகிறேன்" என்றான் சினத்தோடு.

"மாதவியின் தாய் சித்ராபதிகூட ஒரு தாசிதான். அதற் காக மாதவியைத் தாசி என்று கூறுபவன் மடையனாகவே கருதப்படுவான்," என்றாள் வாசநாயகி.

அதைக்கேட்டுக் கொதித்தெழுந்த மதன்மோகனின் வாயிலே துடித்தெழுந்தது 'வாச...நா...யகி" என்ற வார்த்தை. அவ் வளவுதான். வாசநாயகியின் கன்னத்தைப் பதம்பார்த்தது மதன் மோகனின் வலதுகை. மேலும் பல அடிகள்.

அடிகள் விழுந்த ஓசைகேட்டு ஓடிவந்தனர் செண்பகமும் அவளது தங்கைமாரும். செண்பகம் ஆத்திரப்பட்டாள்.

" அட பாவி, கருவுற்றுக் கர்ப்பம் முதிர்ந்திருக்கும் ஒரு பெண்ணை அடித்து விழுத்திவிட்டாயே," என்றாள் கடுமையான வார்த்தைகளில்.

செண்பகத்தின் தங்கைமார் இருவரும் வாசநாயகியைத் தூக்கியெடுத்தனர். வாசநாயகியின் நிலைகண்டு பொறுமையிழந் தாள் செண்பகம்.

" சீ... துரோகி, அவளை நீ அடித்தாயே, தகுமா?" என்றாள் மேலும்.

"என்னை அவள் ஏமாற்றியதற்குப் பரிசுதான் இந்த அடிகள்" என்றான் மதன்மோகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன உன்னை அவள் ஏமாற்றினாளா? " செண்பகத்தின் கேள்வியிலே ஒரு ஆச்சரியக் குறி.

"ஆம். தாசி செண்பகத்தின் மகள்தான் நான்" என்று முன்னமே எனக்கு உண்மை சொல்லியிருந்தால், அவளை நான் ஏமாற்றியிருக்கமாட்டேன்."

கோபக்கீறுகள் மதன்மோகனின் முகத்திலே நிறம் தீட்டிக் கொண்டிருந்த வேளையில்த்தான் காலடிவைத்தான் பாலமுரளி. எப்படியிருக்கும் மதன்மோகனுக்கு?

"ஓகோ நீயா? என்னைப்பற்றிய உண்மைகளையெல்லாம் எழுதி வாசநாயகிக்கு அனுப்பிவைத்தது நீ தானே? மதன் மோகனைப் புரிந்துகொண்டான் பாலமுரளி.

"நான்தான். செந்தில்க்குமரன் என்றும் கமலதாசன் என்றும் பெயர் மாற்றிய மதன்மோகன் ஆறு குழந்தைகளுக்குத் தாயான வளர்மதிக்குத்தான் பதிவுக் கணவன் என்ற உண்மையை வரைந்து கடிதம் எழுதியிருந்தேன் இங்கு. அத்தோடு, இளம் பெண்ணொருத்தியைக் கற்பழித்துக் கொன்று வத்தளையிலுள்ள உங்கள் வீட்டுச் சமையலறையுள்ப் புதைத்ததையும் சுட்டிக்காட்டியிருந்தேன்" என்று அமைதியாகப் பதில் சொன்ன பாலமுரளியை ஒருமுறை விறைத்துப் பார்த்தான் மதன்மோகன்.

"ஆனல், ஒன்றுமட்டும் எழுதுவதற்கு மறந்துவிட்டாய்."

"ஒன்றென்ன, நான் காணுதவை இன்னும் எத்தனையோ இருக்கலாம். அவற்றையும் தெரிந்திருந்தால் இவற்றோடு சேர்த்திருப்பேன் கட்டாயம். சொல்லுங்கள்"

"அதைத்தான் சொல்லப்போகிறேன், கேள். என்னோடு வாழ்ந்தவள் பாரதி - உன்னுடைய மனைவி. பதினைந்து வயதுப் பெண்ணாக இருந்தபோது என் மனைவி வளர்மதிக்குந் தெரியாமல் அவளைக் கற்பழித்து,

"என்ன?"

"குழந்தையொன்றுக்கு அவளைத் தாயாக்கியவன் நான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இல்லை, இல்லவே இல்லை. என் பாரதியை என்னால் சந்தேகிக்கவே முடியாது. நீங்கள் சொல்வதெல்லாம் பொய், புரட்டு, அபாண்டம். நான் நம்பமாட்டேன்."

" நீ நம்பவேண்டாம். உன் மனைவிக்கும் உனக்கும் இன்று கிடைக்கும்படி நான் எழுதிய கடிதங்களே அதற்குச் சாட்சிகள். என் அந்தரங்கங்களை அம்பலப்படுத்தி என் சிற்றின்பத்தைக் குலைத்தாய். இப்போது பார், உன் குடும்பமே சீரழியப்போகிறது முட்டாள்."

" இல்லை... என் குடும்பத்தைப் பிரிப்பதற்கு நீங்கள் சூழ்ச்சி செய்கிறீர்கள் நான் நம்பமாட்டேன்."

" உண்மை. இப்போது நம்பவேண்டாம். இன்னும் இருக்கிறது அதன்பின் நம்பு குழந்தை பிறந்ததும் அதைக் கொன்றவள் உன் பாரதி. கொல்லவைத்தவன் நான்," என்று முடித்தான் மதன்மோகன்.

மதன்மோகன் சொன்னதைக் கேட்ட பாலமுரளி ஆத்திரப்பட்டான். மதன்மோகனை நிலத்தில் மோதி அடிக்கவேண்டும் போலிருந்தது அவனுக்கு. ஓங்கிய கைகள் மதன்மோகனின் கன்னத்தைப் பதம்பார்த்தன. ஆனால், மதன்மோகனின் எதிர்த் தாக்குதலுக்குப் பாலமுரளியால் ஈடுகொடுக்க முடியவில்லை. இரண்டுபேரும் கட்டிப்பிடித்து விழுந்து உருண்டு அடிபட்டனர். பாலமுரளிக்குக் களையெடுத்துவிட்டது பாவம். சோர்ந்து தரையில் விழுந்த நிலையில் அவன். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு எழும்பிவிட்டான் மதன்மோகன்.

" எல்லோருமாகச் சேர்ந்து என்னை ஏமாற்றப்பார்த்தீர்கள். அத்தனைபேரையும் இப்போது ஏமாற்றிவிட்டேன் நான். வாசநாயகி, இனி உனக்கொரு கணவன் இல்லையென்று நினைத்துக் கொள். வருகிறேன்," என்று கூறிக்கொண்டு வெளியேற அடியெடுத்த மதன்மோகனைத் தடுத்திநிறுத்தினாள் வாசநாயகி. அதைக்கண்டு ஆத்திரங்கொண்ட மதன்மோகன் மறுபடியும் தாக்கினான் வாசநாயகியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக்கண்டு பொறுக்க முடியுமா ஒரு நல்லவனுல்? பாலமுரளி பொறுமை இழந்தான். வாசநாயகி அடிவாங்காமல்க் காப்பாற்றப்படவேண்டும். அதிலும் அவள் நிறை கர்ப்பிணி என்பது அவனுக்குப் புலப்படாதா என்ன? திடீரென எழுந்தான், மதன் மோகனைத் தடுப்பதற்காக.

ஆனுல் அவன் எழும்புமுன்னமே செண்பகத்தின் தங்கை மாரில் ஒருத்தியான முத்தழகி அருகிலிருந்த கம்பொன்றிஞல், மதன்மோகனின் மண்டையைப் பதம்பார்த்துவிட்டாள். மேலும் பல அடிகள்.

அடியின் தாக்கத்தைப் பொறுக்கமுடியாமல் ஐயோ அம்...மா... அம்மா என்றபடி வீழ்ந்துவிட்ட மதன்மோகனின் தலையிலிருந்து பீறிட்டுப் பாய்ந்தது இரத்தம். அதைக்கண்டு ஆனந்தப்பட்டான் பாலமுரளி

"துரோகி, நீ சாகத்தான் வேண்டும்" என்றது பாலமுரளியின் ஆத்திரம். அதை ஆமோதித்தாள் முத்தழகி.

"ஆம் நீ சாகத்தான் வேண்டும். இன்னும் சில மாதங்களால்க் குழந்தையொன்றைப் பெறவிருக்கும் ஏழைப்பெண் வாசநாயகியை அடித்து வதைத்துவிட்டாயே பாவி," என்று ஆத்திரத்தொனி கொடுத்த முத்தழகியின் பரிதாபக் கண்கள் வாசநாயகியைப் பார்த்தன மெதுவாக.

வாசநாயகி தன் கணவனின் நிலையறிந்து கதறவில்லை. தாயை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உன் வாழ்க்கை இப்படி அலையும் என்று கனவுகூட நான் காணவில்லை மகளே" என்ருள் செண்பகம்.

"என்னம்மா செய்வது? ஊழ்வினையின் பயன். அதை நான் அனுபவிக்கிறேன்," என்று சொல்லித் தனது தலைவிதியை நொந்த வாசநாயகி, மதன்மோகனின் நாடியைப் பார்த்தாள். அவ்வளவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதன்மோகன் இறந்துவிட்டான் என்பதை அங்கு நின்ற எல்லோருமே அறிந்துகொண்டார்கள். எவர் கண்களிலும் செந்நீர் வடியவில்லை.

ஆனால் வாசநாயகியின் மனச்சாட்சி மட்டும் " சில தாய் மாரின் கெட்ட நடத்தையால், அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகள் எப்படி அலைகிறார்கள், மற்றவர்களால் எப்படித் தூற்றப்படு கிறார்கள் என்பதை இனியாவது உணரட்டும் இந்தச் சமுதாயம். என் தாயின் கெட்டநடத்தையால்த்தானே இதுவரை எவருமே என்னைக் கலியாணம் செய்ய முன்வரவில்லை. இறுதியாக எப் படியோ நடந்துவிட்ட இந்தத் திருமணமும் இப்படியாக முடிந்து விட்டதே " என்று பேசிமுடித்தது.

சிறிதுநேர அமைதிக்குப்பின் போவதற்கு விடைபெற்றான் பாலமுரளி. " அம்மா, போலிஸாரிடம் சொல்லிவிடுங்கள் இங்கு நடந்ததை. அத்தோடு வத்தளையிலுள்ள தனது சொந்த வீட்டின் சமையலறையில்த் தன்னால்க் கற்பழித்துக் கொல்லப்பட்ட இளம் பெண்ணின் சடலத்தைப் புதைத்திருக்கிறான் மதன்மோகன் என்ற உண்மையையும் கூறிவிடுங்கள். அதற்குச் சாட்சி கண்டியி லுள்ள டி. எஸ். சேனநாயக்கா மாவத்தையில் அமைந்த புகை யிரத ஒழுங்கையில், பதின்மூன்றின்கீழ் மூன்றும் இலக்க வீட்டி லிருக்கும் கண்டி, கச்சேரி எழுதுவினைஞன் பாலமுரளியென்று சொல்லுங்கள்," என்ற பாலமுரளியைப் பார்த்தாள் செண்பகம்.

" தம்பி இன்னும் சில மாதங்களால்க் குழந்தையைப் பெற விருக்கும் என் மகள் வாசநாயகியைக் காப்பாற்றிய உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேனோ தெரியாது " என்றது அவளது குரல்.

" என் கடமையைத்தான் செய்தேன். குழந்தையொன்றைப் பெறவிருக்கும் உங்கள் மகளை மட்டுமல்ல; இன்னும் கெட விருக்கும் பல இளம்பெண்களையுங் காப்பாற்றி இச்சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய கடமையையும் செய்துவிட்டேன். நான் இனிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேண்டும் அம்மா. என் மனைவி பாரதியை நான் பார்க்க வேண்டும். அவளின் நிலையை அறியவேண்டும் என்பதுதான் எனது ஒரே ஆசை. நான் போகுமுன் ஒன்றுமட்டும் சொல்லிச் செல்கிறேன், இனிமேல் மட்டும் இளம் பெண்களைத் தேவை யில்லாமல் வீதிசுற்ற விடவேண்டாம் தனிமையில்,'' என்று கூறி முடித்த பாலமுரளி வத்தளையிலுள்ள மதன்மோகனின் வீட்டுக் குறிப்பையும் கொழும்பிலுள்ள கயிலைநாதரின் வீட்டுக் குறிப்பை யும் கொடுத்துவிட்டு விரைந்தான் கண்டி நோக்கி.

## அத்தியாயம் 33

**பா**லமுரளியின் மனதிலே நிம்மதியில்லை. சோகம்தோய்ந்த அவனது முகத்திலே ஒரே வியர்வைத் துளிகள். நேற்றுவரை களிப்பைக் கக்கிக்கொண்டிருந்த அவனது கண்களிலே இன்றோ களங்கம் படர்ந்திருந்தது. காரிருளைக் கூட்டி மழையைப் பொழி யும் வானத்தைப்போலவே துன்பத்தைக் கூட்டிக் கண்ணீரைப் பெருக்கிநின்றன அவனது விழிகள். கடையோரத்தை உடைத்துப் பாய்ந்த நீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை அவனால். பால் வழிந்த அவனது அங்கமெல்லாம் ஒருவகைப் பயமும் பீதியும் குடிகொண்டிருந்தன.

முன்பெல்லாம் கண்டியிலிருந்து கொழும்புக்கும் கொழும்பி லிருந்து கண்டிக்கும் பயணமாகும்போது இடையிடையே தென் படும் மலைவளக் காட்சிகள் அவனுக்கு மனம்நிறை காட்சிகளா யிருந்தன. ஆனால் இன்றோ, அதே காட்சிகள் அவனது கண் களைக் கவரவில்லை; உள்ளத்தில் மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை யென்றால், அவன் அடைந்த சோகத்தின் உச்சிக்கு வேறு பல உதாரணங்களும் வேண்டுமா?

"பாரதி, நீ கற்பழிக்கப்பட்டவளா? எச்சில்ப்படுத்தப்பட்ட வளா நீ? முதன்முதல் உனது அறைக்கு நான் வந்தபோது, கொய்யாப்பழத்தின் பாதியைத் தந்து "சாப்பிடுங்கள் அத்தான்" என்றாய். "என்ன இது பாதியாயிருக்கிறதே" என்றேன். "நான்தான் எச்சிலப்படுத்தினேன் சாப்பிடுங்கள்" என்றாய். "எச்சிலக் கனிதான் சாப்பிடப்போகிறேனா" என்றேன். "கேலியை விட்டுச் சாப்பிடுங்கள்" என்றாய். சாப்பிட்டேன். நீ தந்த எச்சில்க் கனியைச் சாப்பிட்ட நான் "பாரதியும் எச்சில்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிதான் என்று கடுகளவுகூட நினைத்ததில்லையே." பாரதி! நீ எச்சில்க்கனி என்பது உண்மையா? கன்னியாயிருந்த காலத்தில், குழந்தையொன்றைப் பெற்றெடுத்து அதைக் கொன்று விட்டாய் என்பதும் உண்மைதானு? குந்திதேவி கன்னியாயிருந்த காலத்தில், கற்பிழந்து கருவுற்றுப் பெற்றெடுத்த கன்னனை உயிரோடு பேழையில் வைத்துக் கங்கையில் மிதக்கவிட்டாள் என்றுதான் கதையிருக்கிறதே தவிர, தான் பெற்ற குழந்தையைக் கொன்றதாக அத்தாயின் வரலாறு எழுதப்படவில்லையே. ஆனல் நீ...? செச்சே, உன் சொந்தக் குழந்தையைக் கொன்றது உண்மையென்ருல் அதைவிட்ட வெட்கம், அவமானம் வேறு என்னதான் இருக்கமுடியும்...? குழந்தையைக் கொல்லும்போது உன் தாய்மை எங்கே போய்விட்டது? உன் பாசம் எங்கே பறந்து விட்டது? ஐயோ, பெற்ற குழந்தையைக் கொல்லும் பெண்ணுலகமாயிருந்தால் தாய்மை என்ற வார்த்தை பெண்களுக்கு ஒருக்காலும் பொருந்தாதே. உன் குழந்தையைக் கொன்றது எவ்வளவு துரோகம். அதைவிடத் துரோகம், கன்னியில் உன் கற்பை வேருெருவனிடம் பறிகொடுத்து, அதை மறைத்து வைத்துக் காலம் வந்தபோது மற்ருெருவனை மணவாளனுக்கிக் கொண்டது. நினைத்துப்பார் பாரதி? உன் கணவனுல் நிம்மதியாக இனி வாழமுடியுமா என்று எண்ணிப்பார். குதித்துக் குதித்து விளையாடிய இந்த உயிர் இன்று தொடக்கம் துடித்துத் துடித்துச் சாகவிருப்பதை அலசிப்பார். உன் போன்ற பெண்கள் இதை முன்னமே நினைத்திருந்தால், ஐயோ என்போன்ற ஆண்களுக்கு ஏனிந்தக் கவலை...? உன் நிலையை நினைக்கும்போது என் மண்டை வெடிக்கிறதே பாரதி. அன்று நான் பயணம் செய்த புகைவண்டியில் நீயும் வந்திருந்தாய், யாரோ ஒருவன் உன்னேடு சேட்டைகள் செய்தானென்பதினுல்த்தானே அவனது கன்னத்தில் அறைந்தாய்... அன்று நினைத்தேன் உண்மையில் நீ உத்தமிதானென்று... ஆனுல்...? அது பொய்யா? என்னைக் கவர்வதற்காக நீ போட்ட வேஷமா? சொல் பாரதி" என்றது அவனது மனச்சாட்சி.

"சூடுகண்ட பூனை அடுப்பறையை நாடாது" என்று சொல்லுவார்களே. பாரதி அன்ருெருகாலம், தன்னை நன்ருக உணருமுன் மதன்மோகனின் கட்டாயத்தை மீறமுடியாமல் கற்பழிக்கப்பட்டிருப்பாள். அதன் விளைவால் ஏற்பட்ட ஆபத்தை முற்றிலும் உணர்ந்தபின் சூடுகண்ட பூனையாய் மாறியிருக்கலாமல்லவா? அதன்பிறகுதான் எந்த ஆண்மகன் தன்னைத் தொட்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் சேட்டைக்கு இடங்கொடுக்காமல் வாழ்ந்திருப்பாள் பாரதி இப்படியும் எண்ணலாம்தானே ?" என்றது அவனது அடுத்த மனச்சாட்சி. "என்னுல் எதையுமே நம்ப முடியவில்லை எதற்கும் பாரதியிடம் போகிறேன்," என்று நினைத்து முடித்தபோது நிலையத்தை அடைந்தது பஸ்வண்டி. மெதுவாக இறங்கி வீடு சேர்ந்தான் பாலமுரளி.

வீடு பூட்டிக் கிடந்தது. அடுத்த வீட்டுக்குப் போனுன். அதுவும் பூட்டு. "வீடு ஏன் பூட்டிக்கிடக்கிறது என்ற நினைப்பு அவனுக்கு ?"

தான் வைத்திருந்த மற்றச் சாவியால் ஒரு விதமாக வீட்டைத் திறந்து உள்ளே சென்ருன். கடிதமொன்று காணப்பட்டது. உடைத்து வாசித்தான். மதன்மோகனின் கடிதம். பாரதியின் பெயருக்கு வந்திருக்கிறது...

கடிதம் வருவதற்குமுன் அம்மாவும் பாரதியும் குழந்தையும் எங்கோ போயிருக்கவேண்டும். இந்தக் கடிதத்தைப் பாரதி பார்த்திருந்தால்...?"

பாலமுரளியின் எண்ணமெல்லாம் ஓடியோடி அங்குமிங்கும் இடித்து இடித்துத் திரும்பின. "மதன்மோகன் பாரதியைப்பற்றிக் கூறியவை உண்மைதானு ? இல்லையென்ருல், தன்னை நான் அம்பலப்படுத்திவிட்டேன் என்பதற்காக அவன் கையாண்ட தந்திரமா ? எதுவுமே புரியவில்லை... பாரதி இப்படிப்பட்டவள் என்று கனவுகூடக் காணமுடியாதே. ஏனிந்தச் சந்தேகம். உண்மையில் பாரதி தனது கற்பை இழந்தவளா ? மதன்மோகன் வாய்விட்டுச் சொன்ன வார்த்தைகளும் இந்தக் கடிதமும் அதற்குச் சான்ரு," பாலமுரளி சொல்லிக் கொண்டிருந்தபோதுதான் அங்கு காலடி வைத்தனர் கயிலைநாதர், சித்திரவதனி, செண்பகம், முத்தழகி, வாசநாயகி ஆகியோர். அவர்களின் பின்னுல் சில போலிஸ் உத்தியோகத்தவர்.

பாலமுரளி பயப்படவில்லை. அமைதியாகப் பார்த்தான் போலிஸ் பகுதியினரை... "இவர்தான் பாலமுரளி," என்று பாலமுரளியை அறிமுகம் செய்துவைத்தார் கயிலைநாதர். போலிஸ் உத்தியோகத்தவர் ஒருவரின் பார்வை பாலமுரளியில் விழுந்தது.

"வத்தளையிலுள்ள வீடொன்றில் கமலா என்ற இளம்பெண்ணெருத்தியை நீங்கள் கொன்று புதைத்திருப்பதாகக் கொழும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள எமது போலிஸ் நிலேயத்திற்கு மதன்மோகன் எழுதியிருந்த கடிதம் இன்று மாலே தான் எமது கையில்க் கிடைத்தது. அதன் உண்மையை விசாரிப்பதற்காகவே புறப்பட்டோம்' அதே வேளே யில் அங்கு வந்த இவர்கள் நடந்ததெல்லாம் கூறிஞர்கள். உட னடியாகவே புறப்பட்டு வாசநாயகிக்கும் மதன்மோகனுக்கும் திருமணப் பதிவுசெய்த வழக்கறிஞரின் வீட்டுக்குப்போய். இவர் கள் எடுத்த புகைப்படத்தையுங் காட்டி உண்மை தெரிந்து கொண்டபின். நேரடியாகக் கயிலேநாதரின் வீட்டுககுப்போய் அவர் களேயும் கூட்டிக்கொண்டு இங்கு வந்தோம். நீங்கள் பயப்படத் தேவையே இல்லே. ஆஞல், மதன்மோகனின் செயல்பற்றி நீங்கள் அறிந்தவற்றை எழுத்துமூலம் எடுத்துப்போகவே வந்திருக் கிறேம்,'' என்ருர் அந்தப் போலிஸ் அதிகாரி.

பாலமுரளியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதும் போலிஸ் அதிகாரி பேசிஞர். "பாலமுரளி அல்ல; மதன்மோகன் தான் கொலேகாரன், பல பெண்களேக் கெடுத்தவன்,'' என்ற உண்மை அம்பலமாவதற்கு உங்கள் வாக்குமூலம் மிக மிக முக்கியம்,'' என்றவர் சொல்லிக் கொண்டிருந்தபோது வாசலில் கால்வைத்தார் தில்லேநடேசர். அவரோடு அவரது பிள்ளேகளும் வந்திருந்தனர். அவர்களேப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந் தாள் வளர்மதி.

பாலமுரளியின் கடிதம்தான் வளர்மதியை வரச்செய்தது. தன்னந் தனியளுகப் போவதற்கு இடம் தெரியாது என்பதனு லன்றே தில்லேநடேசர் குடும்பத்தோடு வந்திருந்தாள் அவள். நேரம் இரவு ஒன்பது. யாழ்நகரிலிருந்து யாழ்தேவி எடுத்துக் குருணுகலேயில் இறங்கி, அங்கிருந்து வாடகைக்காரில் வந்த படியால்த்தான் இரவு ஒன்பதுக்கே வந்து சேர்ந்தார்கள்.

நடந்ததெல்லாம் தெரிந்துகொண்ட வளர்மதி தன் கண வனின் நடத்தையைப்பற்றிப் போலிஸாரிடம் புகார் செய்ததோடு கொழும்பிலுள்ள தனது உறவினர்கள் மதன்மோகனின் தீய நடத்தையைப் பற்றித் தனக்கு எழுதிய கடிதங்களேயும் கொடுத் தாள். "என் கணவன்தான் கொலே செய்திருப்பார் என்று உறுதியாகக் கூறுகிறேன். அதேவேளேயில் என் கணவனின் பிணத்தைப் பார்ப்பதே பாவம். ஆகையால் அந்தச் சடலம் அனுதைச் சடலமாகவே கருதப்படட்டும்,'' என்று முடித்தாள் வளர்மதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மதன்மோகனின் பிணத்தையும் அவனால் கொல்லப்பட்ட தாகக் கருதப்படும் கமலாவின் பிணத்தையும் போலிஸ் பாது காப்பில் அனுப்பிவிட்டுத்தான் இங்கு வந்தோம் பாலமுரளியின் வாக்குமூலத்தைப் பெறுவதற்கு. வந்த இடத்தில் வளர்மதியின் வாக்குமூலமும் கிடைத்துவிட்டது. எனவே நாங்கள் போய் வருகிறோம். மதன்மோகனின் பிணம் அனுதைப் பிணமாகக் கருதப்படவேண்டும் என்பது உங்கள் பிடிவாதமானால் நாம் ஒன்றுமே செய்வதற்கில்லை. ஆனால் உங்கள் வரவு ஒருவேளை அவசியமாயிருந்தால் இந்த விலாசத்திற்குத் தந்தி வரும்," என்று முடித்தார் போலிஸ் அதிகாரி.

போலிஸ் ஜீப் நகர்ந்தது... கர்ப்பிணி வாசநாயகியைக் காப் பாற்றுவதற்காக மதன்மோகனைக் கொன்ற முத்தழகி, சிறைச் சாலையில்க் குடிபுகும் நோக்கத்தோடு போய்க்கொண்டிருந்தாள் ஜீப்பில். அவளுக்கருகில் செண்பகமும் வாசநாயகியும் காணப் பட்டனர்.

வாசநாயகியின் கண்களிலே நீர் வழிந்துகொண்டிருந்தது.. தன் கணவன் இறந்ததை நினைத்தல்ல; ஆனால் தனது சிறிய தாயார் - தன்னைத் தன் மகள்போல் நேசித்த அந்த முத்தழகி சிறையில் வைக்கப்படுவதை நினைத்துத்தான். எல்லோரும் அதையே பார்த்துக்கொண்டிருந்தனர். வளர்மதியின் கண்களிலே அப்போதுதான் நீரெடுத்தது. "தம்பி பாலா, என் கணவன் கொல்லப்பட்டதையல்ல வாசநாயகி எப்படி இனி வாழப்போகிறாள் என்பதை நினைத்துத்தான் வருந்துகிறேன். எனக்காவது எனது கணவனின் பென்ஷன் கிடைக்கும் மாதாமாதம். ஆனால் இவ ளுக்கு... ? இன்னும் சில மாதங்களால்க் குழந்தையொன்றைப் பெறவிருக்கும் வாசநாயகியின் நிலை... ?" என்றாள் சோகத் தோடு.

அதைக் கேட்ட பாலமுரளி, "ஏமாறப்படுபவர்கள் இனி யாவது ஏமாறாமல் இருக்கட்டும்," என்று சொல்லி முடிக்கும் போது, பக்கத்துவீட்டுக் கனகருஜன் ஓடிவந்தான் பாலமுரளி யிடம். எல்லோருமாக கண்டியிலுள்ள பொது வைத்தியசாலைக்குச் சென்றனர்.

" அத்தான், காலை எட்டு மணிபோல், எழுந்து நடந்தேன் மெதுவாக. மலங்கழித்துவிட்டுத் திரும்பும்போது, ஏதோ ஒரு மயக்கம் என்னை ஆட்டிப்படைத்தது. திடீரென நான் தூக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெறியட்பட்டதும் குவித்திருந்த பெருமரத் துண்டுகளின்மேல் அடிபட்டு மண்டை உடைந்துவிட்டது. கால் மணி நேரம் அப்படியே கிடந்தேன். அதன்பின் என்னைக் காணவில்லையே என்ற துடிப்பாடு ஓடிவந்த மாமி அங்குமிங்கும் தேடி இறுதியில் நான் விழுந்திருந்த இடம் வந்தார் ஆனல் நான்... ? இரததமெல்லாம் வெளியேறினதால் அறிவு நினைவு இல்லாமல்க் காணப்பட்டேன். குளறி அழுதவண்ணம் அடுத்த வீட்டுக்காரரின் உதவியை நாடினுர் மாமி. வைத்தியர் விஜயரத்தினுவின் பிரத்தியேக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன்.

"கடுமையான தாக்கம். நன்ருக அடிபட்டு மண்டை உடைந்தபடியினுல் இரத்தம் ஏராளமாக வெளியேறிவிட்டது. எனவே கண்டிப் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுங்கள் என்ருர். இங்கு வந்தேன். இரத்தம் ஏற்றினுர்கள்... காலை தொடக்கம் இரவு ஒன்பது மணிவரை கண்டியிலுள்ள பொது வைத்தியசாலையில் நான். நீங்களும் இன்று கொழும்பில். எப்போது வருவீர்களோ தெரியாது என்ற நினைப்பு. இரவு ஒன்பது மணிக்குப் பிறகு என்னைக் கைவிட்டுவிட்டார்கள் வைத்தியர்கள். அதனுல் உங்களைப் பிரிகிறேன். செல்ல மனமில்லாமல் செல்கிறேன் அத்தான். ஆனல் என் குழந்தை வெண்ணிலாவை மட்டும் அன்புப் பரிசாக, எனது காணிக்கையின் அடையாளமாக, எமது உறவின் சின்னமாக விட்டுச் செல்கிறேன். அவளை வளர்த்து ஓவிய மேதையாக்கி, உங்கள் எண்ணத்தை நிறைவேற்றிவிடுங்கள். அடுத்த பிறவியொன்று இருப்பதுவும் உண்மையென்ருல் நான் கட்டாயம் உங்களுக்குத்தான். அதுவரை விடை பெறுகிறேன் போய்வருவதற்கு. விடைதாருங்கள் அத்தான்" என்றெல்லாம் பாரதியால் எழுதிவைக்க முடிந்ததா? வைத்தியசாலையிலிருந்து வீடு வந்ததும் பாரதியின் சோகக்கதையறிந்து புலம்பி அழுதான் பாலமுரளி. கயிலைநாதரும் சித்திரவதனியும் தேற்றிக்கொண்டிருந்தார்கள் பாலமுரளியை.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது பாலமுரளியும் தங்கவடிவும் ஒரு தனி மூலையில். "அம்மா" என்ருன் பாலமுரளி. "சித்திரவதனியை அன்றெனக்குத் திருமணம் செய்து தந்திருந்தால் இன்றெனக்கு இந்தக் கதி நேர்ந்திராதே" என்ருன்.

தங்கவடிவின் கண்கள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தன. "தம்பி, என்னைக் கலியாணம் செய்த உன் அப்பாவின் விருப்பப்படி கொழும்பில் வாழ்க்கை நடத்தினேம். எனக்குக் குழந்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. என் வீட்டில் ஒரு வேலைக்காரி. அழகான பெண். அவளைக் கற்பழித்துவிட்டார் உன் அப்பா. எனக்கும் தெரியாமல் நடந்த இந்த விஷயத்தை எப்படியோ அறிந்துவிட்டேன், நான்... அவளை வேறெங்காவது விட்டால் எனது கணவனுக்கும் குலத்துக்குந்தான் அவமானமென்று கருதியே என் வீட்டில் இருக்கட்டும் என்றேன். காலம் ஓடியது குழந்தையொன்றைப் பெற்றெடுத்தபின் மாண்டுவிட்டாள் அவள். அந்தக் குழந்தைதான் நீ. நீ வளர்ந்தபோது எப்படியோ விஷயமறிந்து விட்டனர் பலர். அதனுல்த்தான் உனக்குச் சித்திரவதனியைப் பெண்தர உன் மாமா மாமி மறுத்தனர். என் உறவினரும் மறுத்தனர்" என்று கூற முடிந்ததா அவளால்? பாலமுரளியின் சோகத்தோடு இதையும் சேர்த்துவிட்டால், எப்படியிருக்கும் அவனுக்கு என்பது தெரியாதா அவளுக்கு...? "காலத்தை நம்மால் வெல்ல முடியவில்லை மகனே" என்று மட்டும் சொல்லி முடித்தாள் அமைதியாக.

நேரமோடி அடுத்தநாள் மாலை ஐந்தாகிவிட்டது. மகியாவாச் சுடுகாட்டிலே பாரதியின் பிணம். கொடுமையான நெருப்பிலே வெடித்துக்கொண்டிருந்த காட்சி எல்லோர் கண்களிலும் தென்பட்டது. தில்லைநடேசரும் பாரதியின் சகோதரங்களும அதைப் பார்த்து அழுதனர் சித்திரவதனியும் வளர்மதியும் தங்கவடிவும் செய்வதறியாது சிலைகளாய் நின்றனர்.

பாலமுரளியின் பக்கத்திலே கயிலைநாதர். கண்களிலே நீர் வடித்துக் கொண்டிருந்த அவர், மெதுவாகப் பார்த்தார் பாலமுரளியை. நிலையிழந்து காணப்பட்டான் பாலமுரளி. அவனது கைகளிலே வெண்ணிலா... நெருப்பெரிவதை இமை வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தது அந்தக் குழந்தை.

அழவோ சிரிக்கவோ முடியவில்லை அவளால். எல்லோரும் நெருப்பெரிவதை மட்டும் பார்த்துக்கொண்டிருக்கும்போது அந்தக் குழந்தை மட்டும் விதிவிலக்கா? ஆகவேதான் அழுகையும் சிரிப்பும் அணுகாத முகத்தோடு காணப்பட்டாள் அவள்.

கனல்கக்கி எரிந்துகொண்டிருந்தது நெருப்பு. பெரியதொரு சுவாலை... காற்றோடு கலந்து அங்குமிங்கும் அலையடித்துக் கொண்டிருந்த அந்தக் கொடும் நெருப்பு, தனது அசுர வாய்க்குள் போட்டு விழுங்கிக்கொண்டிருந்தது பாரதியை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாரதிதான் தனது தாய் என்று தெரியுமா வெண்ணிலாவின் கண்களுக்கு... ? ஆனல் பாலமுரளிக்கு ... ? சிந்தை நொந்து மனத்திலே வேதனையைத் தேக்கி நின்ற அந்த இளம் உள்ளத்திற்கு... ?

பூவுலகின் எல்லையை விட்டுப் போய்விட்டாள் பாரதி. பொல்லாத உலகத்தைப் பிரிவதற்கு விடை கிடைத்துவிட்டது அவளுக்கு. இல்லாதவர்மேல் பொய்யும் புரட்டும் ஏற்றி, அந்த நல்லவர்களின் பெயரிலே வஞ்சனையென்ற நஞ்சைப் பரப்பும் உலகத்தைப் பிரிவதற்குக் காலம் அவளுக்கு உறுதுணையாய்க் காட்சியளித்தது. ஆகவே அவள் போய்விட்டாள். போய் விட்டாள் என்று சொல்வதைவிட, பொய்யும் புரட்டுமில்லாத வேற்று மண்ணிலே குடிபுகுந்துவிட்டாள் என்று கூறுவதே பொருந்தும்.

பாலமுரளியோடு வாழவேண்டிய சந்தர்ப்பம் கிடைத்த போது பாலமுரளியின் உடலிலே உயிராகி நின்றவள் பாரதி. பாலமுரளியின் வாழ்க்கையிலே ஒளிவீசி நின்ற வெண்ணிலாத் தான் பாரதி. ஆகவேதான் தனது அன்புப் பரிசாக, காணிக்கையின் அடையாளமாக ஒரு வெண்ணிலாவைப் பாலமுரளியிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள் வேளைக்கே

வானத்து வெண்ணிலாவில் கறை படிந்திருக்கிறது என்று வர்ணிக்கிறார்கள் மக்கள். எவ்வளவுதான் கறையோ குறையோ படிந்திருந்தாலும் வெண்ணிலா வெண்ணிலாத்தான். அது ஒளி கொடுக்கிறது, குளிர் தெளிக்கிறது. அது போலத்தான் பாரதியும். எப்படித்தான் மதன்மோகனல் குறைசொல்லப்பட்டாலும் அவள் வெண்ணிலாத்தான் என்ற நினைப்பிலிருக்கிறன பாலமுரளி, இல்லையென்றல் மதன்மோகனின் கைபட்டுக் கசங்கிய மலர்களான, சித்திரவதனி, வாசநாயகி, கமலா ஆகியோரைப் போல் தானக விரியாமல் மொட்டிலே யாரோ ஒரு கயவனல் கிள்ளப்பட்டு முகை வெடித்த மலர் என்ற எண்ணத்தில் அதாவது முகை வெடித்த மொட்டு என்ற சந்தேகத்தில்த்தான் ஆழ்ந்திருக்கிறன ?

[ யாவும் கற்பனை ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"எழுச்சியும், உணர்ச்சியும், உயர்தமிழ்ப் போற்றலும் மிக்க இந்த ஆசிரியர் நவாலியூர் நா. செல்லத்துரை, பீ. ஏ. இப்போது '**முகை வெடித்த மொட்டு**' என்ற நாவலை வெளியிட முனைந்துள்ளார். மலையகத்தோர் அவல வாழ்வினைக் கண்டு கண்ணீர் விடும் ஒருசிலரில் இவரும் ஒருவர் என்பது உண்மை.

இத்தகையாரின் இலக்கியப் படைப்பை — முதல் நாவலை தமிழார்வம் மிக்க அனைவரும் படித்துச் சுவைத்துப் பயன்பெறவேண்டும் என்பதுடன், பெருந்துணை புரியக் கடமைப்பட்டவருமாவார்கள் என்ப தும் எனது பெருவிழைவு."

**க. ப. சிவம்**
ஆசிரியர்
"மலைமுரசு"

அட்டை, சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org